தமிழ்க்கலை

தமிழியல் காலாண்டு ஆய்விதழ்

தமிழ் 1. கலை 3

செப்டம்பர் 198[illegible]

தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்-613 001
தமிழ்நாடு - இந்தியா

கட்டுரையாளர்கள்

1. திரு நீல. பத்மனாபன்
உதவி நிருவாகப் பொறியாளர் (மின் இயல்),
36/1648-1, குறியாற்றி சாலை,
மணக்காடு அஞ்சல்,
திருவனந்தபுரம் 695 009.

2.. புலவர் ப.வெ. நாகராசன்
சுவடிப் பொறுப்பாளர்,
சுவடிப்புலம் — ஓலைச்சுவடித் துறை,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர்.

3. திரு ம. பசவலிங்கம்
ஆங்கில துணைப் பேராசிரியர்,
அரசினர் கலைக் கல்லூரி,
உதகமண்டலம்

4. திரு ஆர். வீரபத்திரன்
வணிகர் தெரு,
வடசேரி,
நாகர்கோயில்

5. திரு க. அண்ணாமலை,
அறிவியலாய்வர்,
கட்டுமானப் பொறியியல் மையம்,
சென்னை.

6. திரு கே.எம். வேங்கடராமையா
பேராசிரியர்
சுவடிப்புலம் — ஓலைச்சுவடித்துறை,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர்

7. டாக்டர் இராதா செல்லப்பன்
முதுநிலை ஆய்வாளர்,
மொழிப்பெயர்ப்புத்துறை,
தமிழ்ப் பலகலைக் கழகம்,
தஞ்சாவூர்

8. திரு சி.மா. இரவிச்சந்திரன்
முதுநிலை ஆய்வாளர்
நாடகத்துறை,
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்

9. திரு க.சு. உத்தமராயன்,
185, பெரிய தெரு
திருவல்லிக்கேணி,
சென்னை 600 005

உதவி வேலைநிருவாகி—I | உதவி வேலை நிருவாகி—II துணைச் சேமிப்பாளர் | இளநிலைக் கண்காணிப்பாளர்

வேலைக் கண்காணிப்பாளர் I | வேலைக் கண்காணிப்பாளர் III | வேலைக் கண்காணிப்பாளர் IV | கூலியாட்கள் 5 பேர்கள் | எழுத்தா 10 பேர்கள்

(பழுதுபார்த்தல்) | (சோதனை செய்யல்) | காவலர் 4 பேர்கள் | சுருக்கெழுத்தர்

தொழிலாளர்கள் 20 பேர்கள் | தொழிலாளர்கள் 12 பேர்கள் | தொழிலாளர்கள் 25 பேர்கள் | தொழிலாளர்கள் 12 பேர்கள் | தட்டெழுத்தர்

மேலே குறிப்பிட்டிருக்கும் அலுவலர் பாங்கில் (staff pattern) முதல் தொகுதியில் நாள் ஒன்றுக்கு நூறும், இரண்டாவது தொகுதியில் மாதம் ஐம்பதும் பழுது பார்த்துச் சோதனை செய்து வெளியிட வேண்டும் (out turn) என்று தொழிற் சங்கமும் நிருவாகமும் ஒன்று கூடி உறுதி செய்யப்பட்டிருந்தது. ஆனால், உறுதி செய்யப்பட்ட அளவை எட்ட முடியாத தால் நேரடி உசாவல் (enquiry) செய்யப்பட்ட போது கண்டுபிடிக்கப்பட்ட காரணங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

(1) உறுதி செய்யப்பட்டதைவிடக் குறைவான ஊழியர்களே வேலை செய் கிறார்கள்.

(2) வேலை செய்கிறவர்கள தனித் திறனும் பயிற்சியும் மிக்கவர்கள் (Skilled labour) அல்லர். இரக்கம் காட்டும் காரணங் களால் (Compassionate grounds) துப்புரவு செய்வது, வண்ணமடிப்பது முதலிய வேலை களுக்கு எடுக்கப்பட்டவர்கள் நாளாவட்டத் தில் வேலை உயர்வுபெற்று பிறகு கைப் பழக்கம் வந்து தற்போது இந்த வேலைகளில் பணிக்கப்பட்டிருக்கிறார்கள். பாதிக்குமேல் ஐம்பது வயதுக்கு அதிகமானவர்கள் வேறு படிப்போ பயிற்சியோ இல்லாதவர்கள்.

(3) இதில் இருபத்து ஐந்து நூற்று விகிதம் நாள் கூலி வழங்கப்படும் நாட் கூலியாள்கள் (Casual labour). சட்டப்படி, முன்பு குறிப்பிட்ட நிலைப்பான தொழி லாளர்களைக் கையாள்களாக உதவி செய்யத்தான் இவர்கள் திட்டமிடப்பட்டி ருக்கிறார்களே ஆனாலும், நிலைப்பாகத் தொழிலாளர்கள் சோம்பல், மனமின்மை முதலிய காரணங்களால் இந்த நாட்கூலி யாள்களைக் கொண்டு எல்லா வேலையும் வாங்கிக்கொண்டு வீணே சுற்றிக் கொண்டிருந்தார்கள்.

(4) பணிமனைநேரம் காலை எட்டு மணியிலிருந்து மாலை ஐந்து மணிவரை. இடையில் பன்னிரண்டரையிலிருந்து ஒன்றரை வரை மதிய உணவு இடைவேளை. ஆனால் கண்காணிப்பாளர்கள் உட்பட ஒவ்வொருவராகக் காலையில் வந்து சேரும் போது பத்து மணி ஆகிவிடும். வந்து ஒரு மணி நேரத்திற்குள் தேநீர் அருந்த, ஒன்றுக் குப் போக என்று வெளியேறுகிறார்கள். தேநீர் பணிமனைக்குள்ளேயே வழங்கப்படும் என்று அறிவித்தும் அதற்கு இசைய அவர் கள் மறுத்தார்கள். தேநீர் அருந்தப்போகும் நேரம் போக, தொழிற்கூடத்திற்குள்ளேயே பாதி நேரம் அரட்டை; மாலையில் நாலு மணிக்கே வேலையை நிறுத்திவிட்டுக் கை அலம்புவது, சட்டை மாற்றுவது முதலிய வீட்டுக்குச் செல்வதற்கான ஏற்பாடுகளைத் தொடங்கிவிடுவார்கள். உதவி வேலை நிருவாகிகளையும், வேலைக் கண்காணிப் பாளர்களையும் எட்டு மணிக்கே வந்து வருகைப்பதிவேட்டை அடைப்பது (குளோசு பண்ணுவது), வேலை நேரத்தில் கேட்டும் கேட்காமலும் வெளியே செல்

வதற்கு இடங்கொடாமை, வேலை நேரத்தில் அரட்டை அடிப்பவர்கள் மீது நடவடிக்கை எடுத்தல் முதலிய ஒழுங்கு நடவடிக்கைகள் (Disciplinary Proceedings) ஏன் எடுக்க வில்லை என்று கேட்டபோது இதற்கு முன்பு அப்படி ஓரிருதடவை நடவடிக்கை எடுக்க முயன்றபோது தொடர்புள்ள தொழிலாளி உறுப்பினராயிருக்கும் ஆளும் 'கட்சித் தொழிற்சங்கத் தலைவர் கூப்பிட்டு மிரட்டியதாகத் தெரியவந்தது. மேலும் மேற்படி உதவி வேலைநிருவாகியும் கண் காணிப்பாளர்களும் இருபது மைல் தொலை விலிருந்து இரண்டு பேருந்து ஏறி இறங்கி வரவேண்டியிருப்பதால் என்றும் காலையில் எட்டு மணிக்குமுன் வந்து சேருவதில்லை என்றும் தெரிந்தது.

வேலை நிருவாகிக்கு இத்தனை அலுவலக, தொழிற்கூட ஊழியர்களின் சம்பளம், விடுப்பு, ப்ரோவிடண்ட் பண்ட் (Provident Fund), விடுப்பு (Leave), விடுப்புச் சம்பளம், மருத்துவச் செலவு ஈடுசெய்தல் (medical reimbursement), பொருள் கணக்கு (material account), மேலும் அரசு அலுவலகங்களுக்கான பல்வகைக் கணக்கு கள், தணிக்கை வினாக்கள் (audit queries) போன்றவைகளையும் கவனிக்க வேண்டி இருந்ததனால் முழு நேரமும் தொழிற்கூடத் தில் நின்று மேற்பார்வை இட முடியாத நிலைமை. உதவி வேலை நிருவாகிகளையும் வேலைக்கண்காணிப்பாளர்களையும் நம்பா மல் வழி இல்லை.

சற்று சிக்கலான இந்த வகை நிலை மையை (typical case) இங்கே குறிப்பிடக் காரணம் பொது நிருவாகத்தின் இருண்ட பக்கத்தை வெளிச்சம் போட்டுக்காட்ட அன்று. கற்பனையும் முன்கூட்டிமுறையான திட்டமிடலும் ஒரு நிருவாக நிறுவனத்திற்கு எந்த அளவிற்கு இன்றியமையாதன என்பதைப் புரிந்துகொள்ளத்தான்.

6. இனி நிருவாக இயலின் பொது இயல்புகளுக்கு வருவோம். எந்த அமைப் பிலும் இன்றியமையாதன மூன்று:

(i) இயங்கும் மனிதர்கள் (people)
(ii) குறிக்கோள் (objective)
(iii) ஒத்துழைப்பு (co-operation)

இதில் நிருவாகம் எங்கே வருகிறது?

குறிக்கோளை அடைய, இயங்கும் மனிதர்களின் இயக்கங்களை மேல் எல்லை அளவிலாக்கி ஒத்துழைக்கச் செய்ய, பணிப்பதற்குத்தான் நிருவாகம். மனிதன் (Man), பொருள் (material), பணம் (money), பொறி (machine) இவைகளை எந்த அளவிற்கு அதிகமாகப் பயன்படுத்த முடியுமோ அந்த அளவிற்குப் பயன்படுத்த நிருவாகம் பயன்படுகிறது என்றும் சொல்ல லாம். இன்னும் சொல்லப் போனால் பொது அறிவின் (Common Sense) அறிவியல் விரிவாக்கமே (Scientific Organization) என்றும் கூறலாம்.

ஒரு நிருவாகிக்கு வேண்டப்படும் பண்புகள் எவையெவை?

அமெரிக்காவில் யேல் (Yale) பல்கலைக் கழகப் பேராசிரியர் கிரிஃச் ஆர்கரிசு (Chrys Argyris) இத்துறையில் பல ஆராய்ச்சிகள் செய்து இறுதியில் நிருவாகிக்குத் தேவை யான பத்து இன்றியமையாத குணங்களை வரையறுத்தார். இதற்குப்பின் பீட்டர் ட்ரக்கர் (Peter Drucker) என்ற நிருவாக இயல் அறிவியலர் இப் பண்புகள் எல்லாம் அமைந்த நிருவாகிகளைத் தேடி எங்கெல் லாமோ அலைந்தார். இப்பண்புகள் எல்லாம் ஒருங்கிணைந்த யாரையும் அவரால் கண்டுபிடிக்க இயலவில்லை.

கசடறக் கற்றறிந்தவர் கற்றதை மாணவர் களுக்குக் கற்பிக்கும் ஆசிரியராகையால் வெற்றி அடையவேண்டும் என்பதில்லை. இதைப்போல்தான் தொழிற்கூட நிருவாக இயல் உறவுகளைப்பற்றி நன்றாகப் பாடம் சொல்லித் தரும் ஒரு பேராசிரியர் ஒரு தொழிற் கூடத்தில் தனி மனித நிருவாகி யாகப் (Personal Manager) பணியாற்றும் போது தோல்வி அடைந்துவிடக்கூடும். நிருவாக இயலைப்பற்றிப் பயிற்சி அளிக்கும் சில பெரிய நிறுவனங்களின் செயல்முறை யில்கூட நிருவாக இயல் தத்துவங்கள் பயன் படுத்தப்படாமலிருந்துவிடலாம்.

பொருளியல், தொழில் துறைகளில் வெற்றிபெற்ற எத்துணையோ நிருவாகி களைக் காண இயலும். சிலர் எப்போதும் வளவளவென்று பேசிக்கொண்டே இருப் பார்கள். 'வித்துவானுக்கு அணிகலன் மௌனம்' என்று சிலர் அளவாய்ப் பேசுகிற வர்களாக இருப்பார்கள். சிலரைக் கிறுக்கர்

கள் என்று ஏனையோர் எண்ணலாம். பொறுமை இழந்தவர்கள், தூங்கு மூஞ்சிகள், அன்போடு பழகுகிறவர்கள், சினங்கொள்வோர், குடிப்பழக்கம் உள்ளவர்கள் என இப்படி எத்துணையோ வகையானவர்கள். இப்படிப் பார்க்கும்போது திறமையான நிருவாகிகளை எடைபோடுவதற்காகப் பொது இயல்புகளைச் சுட்டிக்காட்டுவது எளிதன்று. இருந்தும் நிருவாக இயலில் வெற்றிபெற்ற நல்ல நிருவாகிகளுக்குச் சில பொதுப் பண்புக்கூறுகள் இருக்க வேண்டுமே. அவற்றில் சிலவற்றைப் பார்ப்போம்.

(1) ஒழுங்குத்தன்மை; அலுவலகத் தொடர்பிலும் தனிவாழ்விலும் உயர்ந்த பண்புடனும் ஒழுக்கமுடனும் இயங்குதல்.

(2) அகத்தூய்மை.

(3) எந்த எரிச்சல் ஊட்டுதலிலும் (Provocation) நடுநிலை இழக்காதிருத்தல்.

(4) வேலைபார்க்கும் நிறுவனம், சமூகம், நாடு இவைகளிடம் பரிவு, பற்று.

(5) விநயம்.

(6) ஒவ்வொருவர் செய்கையிலும் அதிகத்திறமையை வெளிக்கொணர வைக்கும் அடங்காத ஆர்வம்.

(7) வேலைசெய்வது என்பதற்குமேல் நிறுவனத்திற்கு மேலும் சிறப்பாய்த் தன்னால் என்ன சேவை செய்ய இயலும் என்ற முழுநேர நினைவு.

(8) ஏனையோர்கள் — உடன் ஊழியர்கள், தொழிலாளர்கள், பொது மக்கள் இவர்களின் குறைபாடுகளைப் பெரிதுபடுத்திக் காட்டாமல் அவர்களின் கண்ணுக்குப் புலனாகாமல் கிடக்கும் திறமைகளைப் (hidden talents) புரிந்துகொண்டு அவைகளை வெளிக் கொணர்ந்து பயன்படுத்துவதற்கான பக்குவம்.

நிருவாகத்தின் (Management) செயல் முறைக் கொள்கைகள் (Principles) நிருவாகம் செய்யப்படுகிறவர்களுக்கும் புரிந்து செயல்படும் முறையில் அமைந்திருக்க வேண்டும். செயல்படுத்தும்போது அதற்குத் தலைமைதாங்கும் (Leadership) வலு மிக இன்றியமையாதது. நோக்கங்களை (objectives) நடைமுறைக்குக் (function) கொணரும்போது யார் யாருக்கு என்னென்ன பணி என்ற அதிகார ஒப்படைப்புக்கு (delegation of duties) இருக்கும் இன்றியமையாமை கொஞ்சநஞ்சமல்ல. நிருவாகக் கட்டுப்பாட்டின் எல்லை, அதிகார வரம்பு (Span of Control) கட்டுப்பட்டிருப்பது, வரையறுக்கப்பட்டிருப்பது தான் சாலச் சிறந்தது. ஒருங்கிணைந்து செல்லும்போது (Co-ordination) ஆணைகளைச் (directions) செயலாற்றத் தேவையான கட்டுப்பாடு (Control) மேற்பார்வை (Supervision) ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்க வேண்டும். ஊழியர்களின் ஆய்வு முயற்சிகள், கண்டுபிடிப்புகள், ஆராய்ச்சிகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கப்பட வேண்டும். மொத்தத்தில் நிருவாகம் நெகிழ் திறத்துடன் (Elasticity) இருப்பது நடைமுறைச் செயலாற்றலுக்கு அதிகப் பயன் விளைவிக்கும்படி அமையும்.

நிருவாக உத்திகளில் (Management techniques), பயன் ஆய்வு (Value analysis), அமைப்பு ஆய்வு (System analysis) என்று பல இருக்கின்றன. ஆனாலும் மனித உறவுகளை (human relations) தட்டிக்கழித்துவிட முடியாது. ஊழியர்களின் இயலாமையைப் பரிவுடன் புரிந்துகொள்ளும் பொறுமை, மற்றவர்களது கருத்துக்களுக்குச் செவிசாய்க்கும் குணம், எல்லோருடமும் இரக்கத்துடன், அடக்கத்துடன் பழகும் பண்பு இவையெல்லாம் மனிதர்களிடம் தொடர்புகொள்ளும் போது இருக்க வேண்டும். மனிதர்களை நண்பர், பகைவர் என்று பாகுபடுத்தலாகாது. பகைவனாக இருந்தாலும் நண்பனாக இருந்தாலும் நேர்மை உணர்வுடன், நடுவுநிலைமையுடன் ஒழுகவேண்டும். ஒரு மனிதன் என்னதான் புத்திகூர்மையும் நுண்ணறிவும் படைத்த பேரறிஞனாக இருந்தாலும் மனிதர்களிடம் நல்லுறவு இல்லாவிடில் அவன் தோல்வியுறுகிறான். இதற்கு நேரான அணுகல் (positive approach) மிகவும் இன்றியமையாதது (vital).

ஒரு நிருவாகியின் பொறுப்புக்களும் கடமைகளும் என்னென்ன?

(1) திட்டமிடுதல்: தான் அமைந்து வேலைபார்க்கும் நிறுவனத்தின் குறிக்கோளைப்பற்றி நிவாகிக்கு முழு அறிவு இருத்தல் வேண்டும். குறிக்கோளை அடையத் தேவையான திட்டங்களைத்

தீட்ட வேண்டும். குறிக்கோளை நிறைவேற்று வதில் தன் பங்கு பற்றியும், ஏனைய ஊழியர் களின் பங்கு பற்றியும் தெரிந்திருக்க வேண்டும்.

(2) அமைப்பு: திட்டமிட்டபின் அதைச் செயலாற்றத் தேவையான அமைப்பை உருவாக்க வேண்டும். நிறுவனத்தின் அமைப் பில் ஏதாவது மாற்றம் தேவை என்றால் அதற்குத் தேவையான ஆலோசனைகள் வழங்குதல்.

(3) பணியமர்த்தல் பயிற்சி: திட்ட மிட்டவைகளைச் செயலாற்ற, தனக்கு உதவத் தகுதியானவர்களைத் தேர்ந் தெடுத்துப் பயிற்சி அளித்துச் செயல் வல்லவர்களாக்குவது.

(4) கட்டுப்பாடு: தன்கூட உள்ளவர் களின் செயல்களைச் சரியாகக் கண்காணித்துக் கட்டுப்படுத்த வேண்டும். ஒவ்வொருவரும் அவரவர் கடமைகளைப் புரிந்து கொண்டிருக்க வேண்டும். அந்தக் கடமை களைச் செய்யத் தேவையான வழிவகைகள் வகுத்துச் செயலில் ஈடுபடுத்தவேண்டிய வரும் நிருவாகிதான்.

(5) புதிய கருத்துக்களின் வெளியீடு: நிருவாகி எப்போதும் தன் வேலையை எல்லாக் கோணங்களிலும் காண்பதுடன் அதைப்பற்றி ஆழமாக நினைந்து தேவை யான சீர்திருத்தங்களையும் மாற்றங்களையும் நடைமுறையில் கொண்டுவர வேண்டும். நிருவாகியின் வேலை, இருப்பதை அப்படியே தொடர்ந்து மேற்கொள்ளும் பொறியியக்கம் போன்ற ஆட்சி முறையல்ல. மாறாக, படைப்பாற்றலுடைய மாறுதல் கள், கண்டுபிடிப்புகள் முதலியவைகளில் கவனம் செலுத்திச் செய்யும் முன்னேற்றம் மிக்க பணியாகும்.

(6) மனித உறவுகள்: நிறுவனத்திற்குள் இயங்கும் எல்லா மனிதர்களையும் ஒருங் கிணைத்து முன்னால் இட்டுச் செல்வதற் குள்ள திறமை நிருவாகிக்கு இருத்தல் வேண்டும். தன்னாளுமை மிக்க வழிகளைச் சாராமல் மக்களாட்சி முறையில் மனிதர் களின் கூட்டுறவைப் பெறுவதற்குள்ள திறனும் தேவை. நிறுவனத்திற்கு வெளியே உள்ள மனிதர்கள், மக்கள் சார்பாளர்கள் இவர்களிடமும் நல்லுறவு கொள்ள நிருவா கிக்கு இயல வேண்டும்.

(7) கருத்துப்பரிமாற்றம் (Communication): தப்பாகப் புரிந்துகொள்ளாத முறையில் மிகவும் திறமையாகக் கருத்துப் பரிமாற்றம் செய்ய முடிய வேண்டும். நமது உள்ளத்துக் கருத்துக்களைப் பிறரிடம் வெளியிடுவது, பிறர் கருத்துக்களை நாம் வாங்கிக் கொள்வது இவை இரண்டும் இதில் அடங்கும்.

பொது இயல்புகளில் குறிப் பிட்டவைகள், குறிப்பிடாதவைகள் சில வற்றைச் சற்றுக்கூடவே நெருங்கிப் பார்த்து மேலும் சிந்திப்பது பயனளிக்கக் கூடும்.

பொதுமக்கள் தொடர்பு (Public Relationship):

மக்கள் தொடர்பு என்பது உணர்ச்சிச் சேர்க்கைக் (report)கான கருவி அல்லது உத்தி. நிறுவனத்தின் செயலாற்றலை மக்களுக்குப் பரிமாற்றம் செய்கிறது இது. நிறுவனம் மக்களிடம் எட்டுவதே இதன் மூலம்தான். நிருவாகம், மக்கள், ஊழியர்கள் இந்த மூன்று நோக்கிலும் (Point of view) வெவ்வேறான சிக்கல்கள் மக்கள் தொடர்புக்கு எழ வழியுண்டு. வலியச் சண்டைக்குச் செல்லும் தன்மை (agressive), ஆட்சியாதிக்கக் கொள்கை (authoritarian), பெருந்தகவின்மை (impolite), வேண்டா வெறுப்பு (indifference), நகைச்சுவையின்மை (lack of humour), வெறுப்பு மனப்பான்மை (Cynicism), அசைந்து கொடுக்காதிருத்தல் (imperturbility) இவையெல்லாம் மக்கள் தொடர்புக்குத் தடைகள் (barriers) ஆகும்.

மக்கள் தொடர்புக்கு என்னென்ன தேவை?

(1) உங்களுக்காக நான் என்ன செய்ய வேண்டும் என்று உதவிடும் மனப்பாங்கு;

(2) உங்களை நினைத்து நான் பெருமை கொள்கிறேன் என்ற பிறர் திறமையை ஒப்புக் கொள்ளும் உள்ளம்;

(3) நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்று பிறர் கருத்தை அறிந்து அவர்களை யும் சேர்த்திணைத்துச் செல்லும் தன்மை ஆகியவை வேண்டும்.

'என்நாடு எனக்குக் கோயில், என்நாட்டு மக்கள் எனது கடவுள், செய்யும் வேலையே வழிபாடு' என்ற சுவாமி விவேகானந்தரின் பொருள் பொதிந்த சொற்கள் இங்கே

நினைவு கூரத்தக்கவை.

நடத்தை: நிருவாகத்தில் மனிதர்களிடம் பழகும்முறை (behavioural aspect) க்கு மிகச் சிறப்பிடம் உண்டு. இது ஓர் அறிவியல் பிரிவாய் (behavioural Science) வளர்ந்திருக் கிறது. நிருவாகி என்பவன், மற்றவர்களின் மனிதத்திறன் (Man Power) ஒழுகி விரைய மாகிவிடாது முழுமையாக நிறுவனத்துக்குப் பயன்படும் வகையில் அவர்களை வேலை வாங்க வேலை செய்கிறவன் என்பதை நினை வில் நிறுத்திக்கொண்டு பார்க்கும்போது இந்தப் பழகும் முறையின் சிறப்பு மேலும் புலப்படும். மற்றவர்களை வேலை வாங்கத் தெரியாமல் அவர்கள் செய்யவேண்டிய வேலைகளையும் தானே செய்வது, கொடுக் கும் வேலையைச் சோம்பல் இல்லாமல் செய்து முடிக்கிறவன் என்பதால் அது போன்ற மனிதர்களுக்கு மேலும் மேலும் அலுவல்களைக் கொடுத்துக் கொண்டிருந்து விட்டு, சும்மா இருப்பவர்களை மேலும் சோம்பிக்கிடக்கும்படி அசட்டை செய்வது இவையெல்லாம் பழகும்முறை தெரியாத நிருவாகிகள் செய்துகொண்டிருக்கும் மன்னிக்க முடியாத பாவங்கள்.

மனிதத்திறன் என்பது — இதில் உடல் வலிவும், மூளை வலிவும் அடங்கும். எல்லோரிடத்திலும் ஒன்றுபோல் இது இருக்கும் என்பதில்லை. சிலர் ஒருமணி நேரத்தில் செய்து முடிப்பதை வேறு சிலர் செய்து முடிக்க நான்குமணி நேரமாகலாம். சிலர் செய்யாமலேயே இருந்துவிடலாம். இதில்கூட இரண்டுவகை மனிதர்கள் உள்ளனர். சிலருக்குத் தாமாகவே சில கருத்துக்களை வாங்கிக்கொள்ளவும், செயலில் காட்டவும் காலம் அதிகம் வேண்டப்படலாம். சிலர் வேண்டுமென்றே தூங்குவதாக நடிக்கலாம். இதைப் பிரித்தறிந்து கொண்டு உளவியல் முறையில் பொறுமை இழக்காது வேலை வாங்கத் தெரிய வேண்டுமானால் ஒவ்வொரு ஊழிய னுடைய குணத்தையும் சரிவரப் புரிந்து கொண்டு, அந்தந்த முறையில் பழக வேண்டியிருக்கும், ஆடுகிற மாட்டை ஆடிக் கறப்பதுபோல்.

நிருவாகி இடும் ஆணைகள் அதிகார நிலையினதாகவும் (authoritative) அதே வேளையில் நடைமுறைக்கு உகந்ததாகவும் (practical), பொறுப்பு வாய்ந்ததாகவும் (responsibility), ஒத்துப்போகும் இயல் புடையதாகவும் (accommodative) இருத்தல் வேண்டும். ஊழியர்களை எப்படி வேலை செய்யத் தூண்டுவது என்பதும் எப்படி அவர்கள் இலக்கை அடையச் செய்வது என்பதும் இன்றியமையாதனவாகும். அரைகுறை மேற்பார்வை என்பது மேற் பார்வை இல்லாதிருத்தலைவிடக் கெடுதி யானது. முடிவுகள் எடுக்கும்போது கூடிய மட்டும் ஏனையோரது கருத்துக்களையும் கேட்டுக் கூட்டான தீர்மானம் எடுப்பது நல்லது.

8. செயல் முறை நிருவாகம் (Project Management): பொருளியல் அம்சத்தை (Finance aspects) விருத்தி பண்ணும் வழி வகைகளை இது ஆய்கிறது. அவை:

(1) விலையையும் (cost) பயனையும் (benefits) இனம் காண்பது.

(2) விலையையும் பயனையும் மதிப் பிடுவது.

(3) விலையையும் பயனையும் ஒப்பீடு செய்வது.

விலையை மதிப்பிடும்போது குறிப் பிட்ட செலவுக்கு முன்னும் பின்னுமுள்ள பயனை முன்கூறாய் எடைபோட்டு உணர வேண்டும். அமைப்பின் மொத்தச் செலவு, அதிலிருந்து கிடைக்கவிருக்கும் வரவு இவைகளைக் கணக்கிட்டுப் பார்ப்பதில் மிகுந்த கவனம் செலுத்தப்படுகிறது. திட்டத்தைச் செயலாற்ற பெர்ட் (PERT — Programme Evaluation and Review Technique) போன்ற வரை படங்கள் பெரிதும் துணை செய்கின்றன.

9. பொதுத்துறை (Public Sector)

நிறுவனங்களின் நிருவாகம் மேலும் சிக்கல்கள் நிறைந்தது. தனியார் துறையில் (Private Sector) நிகர வருவாயையும் நிதியையும் அதிகபட்சமாக்க வேண்டு மென்ற குறிக்கோள் மட்டும் என்றால், பொதுத்துறையில் நிகர வருவாய், நிதி, இவைகளில் சமுதாய நன்மை கூடச் சேர்ந்து கொள்கிறது. ஆனால், பொதுத்துறையில் ஏற்றுக் கொள்ளப்படும் நிறுவனங்களில் பல அதன் கருவிலேயே வலுவற்றவை; நோய் வாய்ப்பட்டவை. நிருவாகச் சிக்கல்களும்

சேரும்போது இந்நிறுவனங்களின் இழப்பு மேலும் கூடுவதில் வியப்பதற்கில்லை. அரசு, வாரியம், இயக்குநரின் செயலாட்சித் துறை-இம்மூன்றும் இங்கே மிக இன்றியமையாதவை. இம்மூன்றின் ஒருங்கிணைந்த செயலின்மை, வாரியத்தின் அமைப்பில் விளையும் தவறுகள், இப்படி விளையும் சிக்கல்கள் பல, பயனை முன்நிறுத்தி ஆழ்ந்து எடுக்கவேண்டிய முடிவுகளுக்கு மாற்றாகக் கோப்புக்களை (files) உருவாக்கும் தன்மையிலும் வெறும் தற்காப்பு உணர்விலும் சுருங்கிப் போய்விடுவது பொதுத்துறையில் சிக்கல்கள் விளையக் காரணமாகின்றன.

10. நிதிநிலை நிருவாகம் (Financial Management). மூலப்பொருள் நிருவாகம் (Management of material), கால அளவு நிருவாகம் (Time Management) இவை எல்லாம் நிருவாக இயலின் வெற்றிக்கு வேண்டப்படுபவை. காலத்தைத் திறமையுடன் நாம் நிருவாகம் செய்து வெல்லாவிடில், காலம் அதன்பாட்டுக்கு இயங்கி நிருவாகத்தைக் கையடக்கி நம்மை மீறிச் சென்றுவிடும். வெற்றிகள் திடுதிப்பென்று வானத்திலிருந்து குதித்து விடுவதில்லை. காலத்தை வீணாக்காமல் செயல் திறனுடன் பயன்படுத்த வேண்டும். திட்டமிடாதிருத்தல் (Lack of Planning) முன்பின் உணர்வு இல்லாமை (Lack of priorities), வேண்டாத வம்பளப்புக்கள் இப்படிக் கால அளவு நிருவாகத்தில் தடைகளை அடுக்கிக் கொண்டே போகலாம்.

11. நிருவாக இயலில் விற்பனை ஆராய்ச்சி (Marketing Research), கணிப்பொறி மூலமுள்ள தகவல் முறை (Management-Information System-M.I.S.) இப்படி எத்துணையோ அம்சங்கள் மேலும் உண்டு. நிறுவனத்திற்கு வெளியில் இருந்துள்ள தகவல்கள், அதோடு அதன் உள் இயக்கத்திற்கான உண்மைகள் இவைகளைத் திரட்டி, பயனுள்ள தகவல்காளாக வேண்டப்படும் நொடியில் நிறுவனத்திற்கு வழங்கும் M.I.S - ஐ இன்று ஒதுக்கிட முடியாது.

நிருவாக இயல் பற்றிய சில புத்தகங்கள்

1. Management Tasks - Resonsibilities - Practices - Peter Drucker, New York, Harper & Row 1974.
2. Management: Theory & Practice, Ernest Dale, McGraw Hill Book Co, New York, 1965.
3. Concept of the Corporation - Peter Drucker - New York, John Day Co, 1946.
4. The Practice of Management - Peter Drucker New York, Harper & Row 1954.
5. Managing for Results - Peter Drucker, New York, - Harper & Row 1954.
6. Personnel Management and Industrial Relations Dale Youder, Prentice Hall of India Pvt. Ltd., New Delhi - 1967.
7. Modern Management Methods - Ernest Dale & Michelon World Publishing Company, New York, 1966.
8. Management Thinkers - Edited by A. Tillett, Kempuer & Wills Penguin Books, Middlefox, U.K. 1970.
9. Written Communication & Results - N.H. Atthreya, MMC School of Management ; Bombay, 1971.
10. Management Information System - Radley G.W.

சேலம் செழியதரையர்கள் — ஒரு சிற்றாய்வு

ப.வெ. நாகராசன்

தற்போது சின்ன சேலம் என வழங்கப் படும் ஊரில் 17, 18 ஆம் நூற்றாண்டுகளில் செழியதரையவர்கள் என்ற பட்டப்பெயர் பூண்ட ஒரு குடிவழியினர் தலைமை பூண்டி ருந்தனர். இக் குடியினரைப் போற்றித் தாலந் தீர்த்த செழியன் மஞ்சரி, தாகந்தீர்த்த செழியன் பிள்ளைத் தமிழ், செழியதரையன் கோவை, செழியதரையன் வண்ணம், செழியதரையன் நன்னெறி, செழியதரையன் திரு—வாணி வாது, செழியதரையன் பஞ்ச தந்திரம் என்னும் தமிழ் இலக்கியங்கள் தோன்றியுள்ளன. இவற்றுள் முதலிற் கூறப் பட்ட மஞ்சரி மட்டும் சென்னைப் பல்கலைக் கழகத்தின் அரையாண்டிதழாகிய தமிழ் ஆய்வில் பேராசிரியர் உயர்திரு மு. சண்முகம் பிள்ளை அவர்களால் சிறந்த முன்னுரை யுடன் 1978-ஆம் ஆண்டு பதிப்பிக்கப் பட்டுள்ளது. மற்றவை இதுகாறும் அச்சான தாகத் தெரியவில்லை.

இச்செழியதரையர்கள் வாழ்ந்திருந்த பகுதியாகிய குகையூரைச் சேர்ந்தவரும், தமிழ்ப் பல்கலைக் கழக ஓலைச்சுவடித்துறை யின் சிறப்புநிலை இணைப் போராசிரியரும் ஆகிய உயர்திரு அடிகளாசிரியர் அவர்கள் முன் கூறப்பட்ட நூல்கள் அனைத்தும் அடங்கிய ஓலைச்சுவடிகளைத் தமிழ்ப் பல்கலைக்கழகச் சுவடி நூலகத்திற்கு நன் கொடையாக வழங்கியுள்ளார். அச்சுப்பதிப் பாகிய மஞ்சரியையும் மற்ற சுவடிகளிலுள்ள நூல்களையும் அடிப்படையாகக் கொண்டு செழியதரையர்களைப் பற்றி அறியக்கூடிய செய்திகள் அனைத்தையும் தொகுத்து ஆய்வதே இக் கட்டுரையின் நோக்கம்.

இச்சிற்றிலக்கியங்களுள் பாட்டுடைத் தலைவராக விளங்குபவருள் மஞ்சரியின் தலைவன் ஆகிய தாலம்தீர்த்த செழியனே மூத்தோன் ஆதலின் அதைக் கொண்டு இந்த ஆய்வு தொடங்கப்படுகிறது. அந்தாலம் தீர்த்தான் என்ற பெயர்க் காரணம் பற்றி மஞ்சரியின் பதிப்பாசிரியர், ''இது அந்த காலம் தீர்த்தான் என்பதன் மரூஉ ஆகும்'' என்பார். இவன் தான்வாழ்ந்த நிலப்பகுதிக்கு (உலகத்திற்கு) வந்த தீங்கைப் போக்கிய தனால் அந்தகாலம் தீர்த்தான் என்று பெயர் பெற்றான். அந்தகாலம் என்றால் முடிவு காலம் போன்று அழிவு நேர்ந்த பெரும் பஞ்ச காலம் என்று கொள்ளலாம். அவன் ஆட்சிக்குக் கீழுள்ள நிலப்பகுதிக்கு, அப் பகுதி வாழ் மக்களுக்கு நேர்ந்த பெருந் தீங்கைப் போக்கியமை குறித்து யாவரும் அந்தகாலந்தீர்த்தான், அந்தாலந்தீர்த்தான் என்று பேசலாயினர். அந்தகாலந்தீர்த்தான், அந்தாலந்தீர்த்தான் என்பது சுருங்கித் தாலந் தீர்த்தான், அந்தாலன் என வழக்குப் பெறுதல் இயல்பே'' என்கிறார்.

இப்பெயர்க் காரணம் முற்றிலும் சரி யாகவே காணப்பட்டபோதிலும் இவ்வாறு அந்தகாலத்தைத் தீர்த்தவன்தான் இம்மஞ்சரி

யின் பாட்டுடைத் தலைவனா என்ற ஓர் ஐயம் ஏற்படுகிறது. இம்மஞ்சரியின்,

''ஆரியராய் மிக்கா ரமுதத் தமிழ்மாலைச்
சீரிய ராய செழியனையும் — மாரியுடன்
மாகத் தருவெருவ மாழை மழைபொழிந்த
தியாகப் பிரமன் செழியனையும் - மாகலியின்
நொந்தயரா வண்ணம் நுவலும் உலகளித்த
முந்தயராப் பெற்ற முதன்மையான்''

(கண்ணி 158-160)

என்ற பகுதி பெரும் தீங்கினால் உலகம் அழியாவண்ணம் காத்தவன் இவன் முன்னோனே எனத் தெளிவாக்குகிறது. இக் குடியின் முன்னோன் ஒருவனின் சிறப்புப் பெயர் இவனுக்கு இயற்பெயராக இடப் பட்டது. அந்தகாலம் தீர்த்தான் என்பது இவன் சிறப்புப் பெயரென்றால் வேறு இயற் பெயர் ஒன்று இருந்திருக்க வேண்டும். இவன் பெயர் நூல்களில் அந்தாலன் என்றே வழங்கப்படுகிறது. வேறு பெயரே இடம் பெறவில்லை.

''சிவநேயன் அந்தாலத் தீர்த்தான்
(மஞ்சரி 215)

''அந்தாலன்உதவு தாகந்தீர்தத செழியன்
(பிள்ளைத்தமிழ் — அம்புலி 1)

''அந்தாலன் மைந்தா'' *(நன்னெறி 6,11).*

இவைகளால் இவன் முன்னோருள் ஒருவனின் சிறப்புப் பெயரே இவனுக்கு இயற் பெயராக அமைந்தது என்க். இதுவும் அன்றி இப்பாட்டுடைத் தலைவன் காலத்தில் ஒரு மிகப் பெரிய துன்பம் ஏற்பட்டு அதனை இவன் நீக்கியிருப்பானேல் இவன் புகழ் பரப்பும் இந்த மஞ்சரி அவ்வரலாற்றை உறுதியாக விரித்துக் கூறியிருக்கும். தலைவனின் தசாங்கம், குடிவழி, உலாச் சிறப்பு அனைத்தையும் கூறும் நூல் அவன் பெயருக்கே முதற்காரணமாக ஒரு நிகழ்ச்சி அமைந்திருக்குமாயின் அவ்வரலாற்றைக் கூறாதிராதென்பது ஒருதலை.

இதனால் சேலம் செழியதரையர்களின் முன்னோன் ஒருவன் அந்தகாலம் தீர்த்த செழியன் என்பது உறுதியாகிறது. இனி அடுத்து இவர்களுக்குச் செழியன் என்ற பட்டப்பெயர் வந்த காரணத்தை அறிய முனைவோம்.

செழியன் என்பது பாண்டியர்களுக்கே உரிய குடிப்பெயர். நடுநாட்டின் மேற்குப் பகுதியாகிய மகத மண்டலத்தின் ஆட்சித் தலைவர்களுக்குப் பாண்டியர்களுக்கு உரிய குடிப்பெயர் எவ்வாறு வந்தது என்பது ஒரு பெரிய வினா. இதற்கு இருவகையான காரணங்களை ஊகிக்கலாம். இவர்கள் பாண்டியர் மரபில் அரசுரிமை அற்ற இளைய குடிவழியில் தோன்றியவர்களாக இருக்கலாம் என்பது ஒன்று. மற்றொன்று இவர்களுடைய முன்னோர்கள் பாண்டியரிடம் படைத் தலைவர்களாகவோ அமைச்சர்களாகவோ சிறப்புடன் பணியாற்றி அந் நாளைய மரபிற்கேற்பச் செழியதரையன் என்று பட்டம் பெற்றிருக்கலாம். இனி இவ்விரு கருத்துகளுக்கும் இந் நூல்களில் ஏதேனும் சான்றுகள் கிடைக்குமா எனக் காண்போம்.

முதலாவது இவர்கள் பாண்டிய மரபினரே என்னும் நாட்டத்தோடு தொடங்குவோம். மஞ்சரி, இவன் குடி வழியை,

''எத்திசைக்கும்,
ஆரியராய் மிக்கா ரமுதத் தமிழ்மாலைச்
சீரிய ராய செழியனையும் - மாரியுடன்
மாகத் தருவெருவ மாழை மழைபொழிந்த
தியாகப் பிரமன் செழியனையும் - மாகலி
யின்
நொந்தயரா வண்ணம் நுவலும் உலகளித்த
முந்தயராப் பெற்ற முதன்மையான்''

(கண்ணி 158-160)

எனக் குறிப்பிடுகிறது. மஞ்சரியின் பதிப்பாசிரியர் இக்கண்ணிகளில், ''அந்தாலந் தீர்த்த செழியனுக்கு மூதாதையராகத் தமிழ் மாலைச் செழியன், தியாகப் பிரமச் செழியன் என இருவர் குறிக்கப்படுகின்றனர்'' எனக் கருதுகிறார். 158-ஆம் கண்ணியை மேலும் சற்றுக் கூர்ந்து நோக்கினால் அது ஒருவரைக் குறிக்காமல் பன்மையில் அமைந்துள்ளது தெரிகிறது. ''எத்திசைக்கும் ஆரியராய், மிக்காரமுதத் தமிழ்மாலைச் சீரியராய'' என்பதுவரை பன்மையாக வந்து செழியனையும் என ஒருமையில் முடிகிறது. அது செழியரையும் என இருத்தலே சாலப் பொருத்தமாம். ஏடெழுதுவோரால் இத்தகைய பிழைகள் நேர்வது இயல்பே. எத்திசைக்கும் ஆரியராய், வரலாற்று முற்காலந்தொட்டுத் தமிழ் வளர்த்து அதனால் சிறப்படைந்த பாண்டிய மரபினரையே இக்கண்ணி குறிப்பிடுவதாகக்

கொள்ளலாம். அங்ஙனம் கொண்டால் அடுத்த கண்ணியில் உள்ள தியாகப்பிரமன் செழியனே அந்தகாலந் தீர்த்தவனாக இருக்க லாம். அவன் மரபில் வந்தவனே நம் அந்தாலன் என்னும் தாலந்தீர்த்த செழியன்.

''வாழிச் செழியன் வளர்த்தெடுத்த
தென்னூல் வளர்க்கும் செழியன்எனும்
அந்தால்ந் தீர்த்தான்''

(கண்ணி 280)

என்ற மஞ்சரிப்பகுதி, இதன் ஆசிரியர் பாண்டியர்களைத் தமிழோடு தொடர்புபடுத்திச் செழியன் என அழைக்கும் போக்கைப் புலப்படுத்துகிறது. மேலும் 318ஆம் கண்ணியில், ''வடநாட்டு ஒரு செழியன் வந்தான்'' எனக் கட்டியங் கூறப்படுகிறது. தென்னாட்டில் உள்ள பாண்டியர்களின் நினைவால் எழுந்த தொடர் இது. மேலும் செழியதரையன் கோவை 20ஆம் செய்யுளில், ''தமிழ்நேயம் மிக்க சீர்மாறன் பாலைப் பதித்தாகந்தீர்த்த செழியன் வெற்பில்'' என்ற தொடர் வருகிறது. இங்கும் பாண்டியர்களுக்குரிய மாறன் என்னும் மற்றோர் பெயர் இடம் பெற்றுள்ளது.

இக் காரணங்களால் இச்செழியதரையர்களைப் பாண்டிய மரபினராகக் கொள்ள இடமிருக்கிறது. இனி இவர்கள் பாண்டிய மரபினர் அல்லர்; அவனால் பட்டமளித்துப் பாராட்டப் பெற்றவரே என்ற நாட்டத்தில் காண்போம்.

ஆய்வுக்கு எடுத்துக் கொண்டுள்ள சிற்றிலக்கியம் எதிலும் இவர்கள் பாண்டியர்களால் பாராட்டப் பெற்றவர்கள் என்பதற்குரிய நேர்முகச் சான்றுகள் இல்லை. இவர்கள் பாண்டிய மரபினர் அல்லர் என எதிர்மறை முகத்தால் நிறுவி, அதனால் செழியன் என்ற பட்டம் பெற்றவர்களாக லாம் எனக் கருத்துணர வேண்டும். அம்முறையில் முயல்வோம்.

சேலம் செழியதரையர்கள் பாண்டியர் மரபினர் என்றால் அவர்கட்குரிய சந்திர குலம், வேம்புமாலை, கயற்கொடி கூறப் பட்டிருக்க வேண்டும். ஆனால் இந் நூல்களில்,

''சடைமகுடக் கோதைக் கடவுட்
குலத்தினோன் (மஞ்சரி 213)
''உன்குலத்துக்கு ஆதிஅன்றோ ஒண்
கங்கை'' (மஞ்சரி 371) எனக் கங்காகுலமும்,
''செங்குவளை மாலைத் திருமார்பன்''
(மஞ்சரி 152)
''கல்லார மாலைப் புயத்து இவன்''
(பிள்ளைத். அம்புலி 3)
''காவித் தொடலைக் கருணைக் கடலே''
(பிள்ளைத். சிறுபறை 3)
''வெறி ஆரும் ஆய்தார் குவளைச்
செழியா'' (நன்னெறி. 13) எனக்
குவளைமாலையும்,
''மேழிக் கொடியான்'' (மஞ்சரி 155)
''மேழிக் கொடியினான்'' (வண்ணம்)

என மேழிக் கொடியும் கூறப்பட்டுள்ளன. இவையாவும் வேளாளர்களுக்கே உரியன வாகும்.

இவைகளைத் தம் சின்னமாகப் பெற்ற செழியதரையர்கள் சிறப்புமிக்க வேளாளர்கள் ஆவதன்றிப் பாண்டியராதல் எங்ஙனம்? மேலும் செழியர்களைப் பாண்டியரின் பகைவர்கள் என்றே கொள்ளுமாறு சில குறிப்புகள் உள்ளன.

''பாய்புலிமீன் வில்லின் கொடிவணங்கு
மேழிக் கொடியான்'' (மஞ்சரி 155)
''முற்றும், வழுதி கிரியும் வடகிரியும்
மேழி எழுதி மரபுநிலை
யிட்டோன்'' (மஞ்சரி 202)
''பூவான் அதிர வழுதியைவென்று
அன்றொரு பாணற்கு மதுரை
அரசளித்த மன்னன்'' (மஞ்சரி 209)
''உறந்தைப் பதியோ புகார் நகரோ
கோப்பாண் டியர்தம் மதுரையோ
கொற்கைப் புரியோ குமரியோ
சேரக் குலத்தார் மலாடுகொலோ
சிறியேம் சிற்றில் சிதையேலே.''
(பிள்ளைத். சிற்றில் 7)
''சென்னிசேரன் தென்னன் பாமாலை
ஆர் செழியன்'' (கோவை 68)

இச் சொற்றொடர்கள் செழியதரையர்களை மூவேந்தரின் வேறானவர் எனக் காட்டும்போது இவர்களை அவருள் ஓரினத்தவராகக் கொள்ள முடியுமா? முடியாது. எனவே இவர்கள் பாண்டிய மரபினர் அல்லர். எனவே செழியதரையன் என்ற சிறப்புப் பெயர் இவர்களின் மூதாதையருள் ஒருவனுக்குப் பாண்டியர்களால் கொடுக்கப் பட்டிருக்க வேண்டும்.

இனி இவ்விரு வேறுபட்ட கருத்துகளையும் நடுநின்று நோக்கி ஒரு முடிவு காண்போம்.

செழியதரையர்கள் பாண்டிய மரபினர் அல்லர் என்பதற்குக் கூறிய காரணங்கள் அனைத்தையும் ஏற்றுக் கொள்வோம். இக் குறிப்புகள் ஏன்; எந்தச் சூழ்நிலையில் எழுந்தன எனச் சிந்திக்க வேண்டும். பாண்டிய மரபின் ஒரு குடிவழி—அது நேராக அரசுரிமை அற்ற பாண்டியர்களின் தாயத் தார் ஆகவும் இருக்கலாம்—வடக்கே இடம் பெயர்ந்து மகதமண்டலத்தில் நிலை கொண்டது. காலத்தாலும், தொலைவாலும் இக்குடிவழி மதுரைப் பாண்டியர்களின் தொடர்பில் இருந்து விடுபட்டு விட்டது. மாறன், செழியன் என்னும் பெயர்களைத் தவிர இவர்கள்பால் வழுதியர்குலத் தொடர்பு இருக்கவில்லை. மேலும் இவர்கள் ஒருநாளும் முடியுடை மூவேந்தருள் ஒருவராக அரியணை ஏறவுமில்லை. இந்த நிலையில் சேலம் செழியர்களுக்கு மதிக்குலம். வேம்புமாலை, மீன்கொடி போன்ற பிரதான அரச வழியினரின் சின்னங்கள் கூறப்படாததில் புதுமையேதுமில்லை. மேலும் இவர்களுடைய சிறப்புகளாகக் கூறப்பட்டவை பலவும் வேளாண்குலத்தைச் சேர்ந்த பண்டையோரின் சிறப்புகளே ஆகும். செழியதரையன் பிரபந்தங்களில் மட்டுமன்றித் திருக்கை வழக்கம், கொங்கு மண்டல சதகங்கள், தொண்டை மண்டல சதகம், சோழமண்டல சதகம் ஆகிய பிற நூல்களிலும் வேளாண்குடிப் பெரியார் களின் சிறப்புகள் இடம் பெற்றுள்ளன. முன்னோரின் அரிய செயல்களையும் பின்னோரின் மேல் ஏற்றிக்கூறும் இலக்கிய மரபு பற்றி இவை இங்கும் போற்றப் பெற்றுள்ளன; அவ்வளவே. அவ்வாறன்றிச் செழியதரையர்களுள் எவரேனும் ஒருவர் மூவேந்தரில் யாருடனாவது போரிட்டு வென்றிருந்தால் அதற்கேற்ற வரலாற்றுச் சான்றுகள் ஏதேனும் இருந்தாக வேண்டும். அப்படி ஒன்றுமே இருப்பதாகத் தெரியவில்லை. எனவே, பொதுவாக இலக்கிய மரபிற்கேற்பக் கூறப்படும் முகமன் மொழிகளைக் கொண்டு நேராகக் குடிவழி கூறும் பகுதியை விட்டுவிடுதல் நடுநிலைமை ஆகாது.

எனவே தக்க சான்றுகள் கிடைக்கும் வரையில் சேலம் செழியதரையர்களைப் பாண்டிய மரபினராகவே கொள்ளலாம். இங்கு ஒரு தனிப்பாடல் கவனிக்கத்தக்கது. அது வருமாறு:—

சேலநக ரேமதுரை சீர்ச்செழிய னேசெழியன்
சாலவதில் உள்ளோரே சங்கத்தார் - சீலமிகும்
கம்பால தேவன் கடம்ப வனவாசர்
தம்பாரி மீனாட்சித் தாய்.

(திரு கா. இராமசாமி நாயுடு உரையுடன் சென்னை வித்யாரத்நாகர அச்சுக் கூடத்தில் *1933*-ஆம் ஆண்டில் பதிப்பிக்கப்பட்ட தனிப்பாடல்திரட்டு இரண்டாம் பாகம், பக்கம் *74*, பாடல் *187*).

இவ்வெண்பா யாரால், எப்போது இயற்றப்பட்டது என்பதை அறியக்கூட வில்லை. இதில் சேலம் செழியனைப் பாண்டியனாகக் கருதும் புலவரின் உள்ளம் தெரிகிறது.

இதுகாறும் கண்டவற்றால் பாண்டிய மரபைச் சேர்ந்த ஒரு குடி மகதநாட்டில் சிறப்புப் பெற்றதென்பதும், அக்குடியின் முதல்வனாகிய தியாகப் பிரமன் செழியன் அந்தகாலத் தீர்த்தான் என்ற சிறப்புப் பெயர் பெற்றவன் என்பதும் அச்சிறப்புப் பெயரின் மரூஉ மொழியாகிய அந்தாலன் என்பதைத் தன் இயற்பெயராகக் கொண்டவனே மஞ்சரியின் பாட்டுடைத் தலைவன் எனவும் ஒரு முடிவு காணலாம்.

இம்மஞ்சரியில் இருந்தும் பிற நூல்களின் துணையாலும் சேலம் செழியதரையர்களின் குடிவழியை இவ்வாறு அமைக்கலாம்.

சேலம் செழியதரையர்களின் குடிவழி



★இக் கொடி வழியில் ஈற்றில் உள்ள மூவரையும் பற்றிய சரியான குறிப்புகள் ஆய்வில் உள்ள நூல்களில் காணப்பட வில்லை. மஞ்சரியின் முன்னுரையில் திரு அடிகளாசிரியர் தந்த குறிப்பு என இடம் பெற்றவை அப்படியே ஏற்றுக் கொள்ளப் பட்டன.

இக் கொடிவழி மஞ்சரி நூல் தரும் கொடி வழியில் இருந்து சிறிது மாறுபடு கிறது. மஞ்சரி அந்தாலந் தீர்த்தானுக்கு வினை தீர்த்தான், தாகந் தீர்த்தான், திருவேங்கடவன், இருள்நீக்கினான் என நான்கு மக்கள் இருப்பதாக (நிகழ்காலத்தில்) கூறுகிறது. முன் காட்டப்பட்ட கொடிவழி யில் வினைதீர்த்தான் இடம் பெறவில்லை. தாகந்தீர்த்தான் முதலிய மூவரொடு சட்டை யான், தீர்த்தான் செழியன் என இருவர் புதியதாக இடம் பெற்றுள்ளனர். இந்த ஒன்றைத் தவிர மஞ்சரி காட்டும் குடிவழி மரபிற்கும் மேலே நாம் கொண்டதற்கும் வேறு மாறுபாடு இல்லை. இம்மாறு பாட்டைப்பற்றி ஆய்வோம்.

இந்த அந்தாலனின் புதல்வனாகிய தாகந்தீர்த்த செழியனைப் போற்றுவது பிள்ளைத் தமிழ். அச் சிற்றிலக்கியத்தின் ஈற்றில் பின்வரும் வாழ்த்துச் செய்யுள் இடம் பெற்றுள்ளது.

“தார்வாழி உலகுய்ய வந்தகா லக்கொண்டல்
அந்தகா லந்தீர்த்தவன்
தந்ததா கந்தீர்த்த செழியனும் இவர்க்குயிர்த்
தம்பிதிரு வேங்கடவனும்
ஏர்வாழி மற்றிவற்கு இளவலாம் இருணீக்கும்
எம்பிரான் வாழிஇவனுக்கு
இனியவநு சன்சட்டை யான்வாழி யிங்கி
வற்கு இளையதீர்த் தவனும்வாழி

சீர்வாழி ஐவர்க்கும் உற்றதுணை யாம்திருப்
பொன்பரப் புநாதனும்
தினம்வாழி சேலம்தி ருப்பாலை உலகைச்
செழும்பதி செழித்துவாழி''

இப்பாடல் அந்தாலனின் மக்கள் ஐவரையும் பெயர், முறை தவறாமல் சுட்டிக் காட்டித் தொகை கூறி முற்றும்மையோடு முடிக்கிறது. இவ்வைவரில் வினைதீர்த்தான் இடம் பெறவில்லை. ஆனால், மஞ்சரி இவனைக் குறிப்பிடுகிறது. மஞ்சரியில் கூறப் படாத சட்டைச் செழியனும், தீர்த்தானும் பிள்ளைத் தமிழில் அந்தாலன் மக்களென ஐயத்திற்குச் சற்றும் இடமில்லாமல் அறிவிக்கப்பட்டுள்ளனர். இந்த இரு வேறு பாடுகளையும் ஒவ்வொன்றாக ஆய்வோம்.

அந்தாலனுக்குச் சில குழந்தைகள் பெறப் பெற இறந்து விட்டன. பிறகு பிள்ளைத் தாகத்தைத் தீர்த்தவனாகத் தாகந்தீர்த்த செழியன் பிறந்தான். (இது பற்றித் தாகந் தீர்த்தனானைப் பற்றிய பகுதியில் விளக் கப்படும்) எனவே, தனக்குச் சந்ததி இல்லையே என்ற ஏக்கத்தில் அந்தாலன் தன் தமையன்மார் மூவருள் யாரோ ஒருவனின் புதல்வனாகிய வினை தீர்த்தானைத் தன் மகன்போல் வளர்த்து வந்திருக்கக்கூடும். அந்தாலனின் சொந்த மக்கள் பெரியவர் களாகும்வரைகூட அவ்வினைதீர்த்தான் அவர்களுடனேயே வளர்ந்திருப்பான். அந்தாலனால் வளர்க்கப்பட்டதாலும், அவனுடைய அண்ணன்மகன் என்பதாலும் மஞ்சரியாசிரியர் அவனையும் மூத்த மகனாகக் கூறுகின்றார். இத்தகைய நிகழ்ச்சி குடும்பங்களில் இன்றைக்கும் இயல்பானதே. ஆனால், தாகந்தீர்த்த செழியனைப் போற்றும் பிள்ளைத் தமிழ் அவனுடைய சொந்தச் சகோதரர்களை மட்டும் குறிப்பிட்டுப் பெரிய தந்தையார் மகனை விட்டுவிட்டது.

அடுத்து மஞ்சரி சட்டைச் செழியன், தீர்த்தான் செழியன் எனும் இருவரைக் குறிப்பிடாதது ஏன் எனில் அந்நூல் தோன்றும்போது அவர்கள் பிறக்காததா லேயாம். மஞ்சரி அந்தாலன் நடுவயதின னாக இருக்கும்போது பாடப்பட்டிருக்கும். பிறகு நான்காவது ஐந்தாவது மக்கள் பிறந்தனர். எனவே, மஞ்சரி காட்டும் குடி வழி மரபிற்கும் பிள்ளைத் தமிழ் வழியே கொள்ளும் மரபிற்கும் வேறுபாடோ குழப்பமோ இல்லை.

இவ்வாறாகச் சேலம் செழியதரையர் களின் குலத்தையும், குடிவழி மரபினையும் ஒருவாறாக உறுதியிட்டுக் கொண்டு மற்ற சில அரிய செய்திகளையும் நோக்குவோம்.

''திரிபதகை குல திலகன் வருகவே''
(பிள்ளைத். வருகை 2)

''இணைஇல் திரிபுதகை மரபு
திகழவரும் சதுரன்'' (வண்ணம்)

''திரிபதகை குலசேகரன்'' (அந்தகக் கவியின் சீட்டுக்கவி. பெருந்தொகை *1247*) என்பனவற்றால் இச்செழிய்தரையர்களின் குலம் திரிபதகை குலம் என்பது தெளிவா கிறது.

செழியர்களைப் பற்றிய நூல்கள் அவர் களுக்குரிய நாடாக,

''தென்மகதை நாட்டினான்'' *(மஞ்சரி 143)*
''மகதைத் திருநாடன் வந்தான்'' *(மஞ்சரி 319)*
''தென்மகத நாடாளன்'' (பிள்ளைத். வருகை 5)
''மகதைத் திருநாடா'' (பிள்ளைத். சிறுபிறை 3)

எனக்கூறுகின்றன. இம்மகதநாட்டு மன்னர் களான வாணர்கள் பெரும்புகழ் பெற்றவர் கள். வாணகோவரையன், வக்கபாகை ஆட்கொண்டான் ஆகிய இருவரையும் பற்றிப் பல தனிப்பாடல்கள் உள்ளன. வில்லிபுத்தூராரைக் கொண்டு பாரதம் செய்வித்தவன் ஆட்கொண்டான். இவனை வில்லிபுத்தூராழ்வார், ''மாகதக் கொங்கர் கோமான்'' என்கிறார். நடுநாட்டின் மேற்குப்பகுதி மகதநாடு எனப்பட்டது. இன்றைய தென் ஆர்க்காடு, சேலம், திருச்சி மாவட்டங்களின் சில பகுதிகள் இணைந்த நிலப்பரப்பு இது. வடக்கில் ஒரு மகதம் இருப்பதால் அதனின்றும் பிரித்துக் கூற இந்நாடு தென்மகதை எனப்பட்டது.

இம்மகத நாட்டில் பாலை, சேலம், உலகாபுரி என்ற மூன்று ஊர்கள் செழியர் களுக்குச் சிறந்த நகரங்களாகக் கூறப் பட்டுள்ளன.

மஞ்சரியின் **145, 146** ஆம் கண்ணிகளில்

''பாலையான்'' எனவும், 'தென்பாலை சேலம் புரந்த தாகந் தீர்த்த செழியா'' (பிள்ளைத். வருகை 2) ''பாலைப்பதித் தாகந்திர்த்த செழியன்'' (கோவை 20, 26, 34, 36, 44, 52) என்பன போன்றும் பாலை யூர் பேசப்படுகிறது.

''சேலத்து உலகாபுரிக்கு அரசே''
(பிள்ளைத். சிற்றில் 6)
''சேலத்தான்'' (மஞ்சரி. 147, 148)

என்ற இடங்களில் சேலம் கூறப்படுகிறது. சேலம் என்பது இன்றைய சின்னசேலத்தை.

''உலகையான்'' (மஞ்சரி 149, 150, 151)
''புரிசை உலகாபுரிப் புரவலன்''
(பிள்ளைத். சிறுதேர் 7)
''மின்மாளிகை உலகைச் செழியர்''
(நன்னெறி 26, 34).

என உலகாபுரி குறிக்கப்பட்டுள்ளது. இவ்வூரைப்பற்றித் திரு-வாணி வாது,

''கருவிலி ஆறு என்று உய்ந்தோர்
கருதியே உரையா நிற்கும்
திருநதி வடபால் மேவத்
தென்கரை வைகும் அவ்வூர்'' (11)

''சிந்தையில் நினைத்த யாவும்
சித்தியாம் திருப்போர் ஓதின்
முந்தெழில் உலகை என்ன
உரைப்பார்கள் மூது ணர்ந்தோர்'' (12)

''உவமைஇல் நலத்தது அந்த உலகினில் வலிய ஊரில்'' (14) எனக் கூறுகிறது. இவ்வூர் தற்போது தென் ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள உலக நல்லூர் ஆகும்.

பிள்ளைத் தமிழின் வாழ்த்துப் பாடல்,

''சேலம் திருப்பாலை உலகைச் செழும்பதி செழித்து வாழி'' என இம்மூன்று ஊர்களையும் சேர்த்துக் கூறுகிறது.

இவ்வுலக நல்லூரில் நம் தாலந்தீர்த்தான் ஒரு சிவாலயத்தைக் கட்டினான். அதில் எழுந்தருளியுள்ள இறைவரின் திருப்பெயர் பொன்பரப்பீசர் என்றும், அம்மையின் திருநாமம் பெரிய நாயகி என்றும் தெளிவாகத் தெரிகிறது. அந்தாலனின் இந்தத் திருப்பணியைத் திருவாணி வாது விளக்கமாகக் கூறுகிறது.

''உவமைஇல் நலத்தது அந்த
உலகினில் வலிய ஊரில்
சிவனடி மறவாது ஏத்தும்
செழியன்அந் தாலந் தீர்த்தான்
நவமணி யால்இ ழைத்து
நன்குசெய் மண்ட பத்தில்
குவலயம் புகழ ஈசன்
கோளரி யணையில் உற்றான்'' (14)

என்பது அப்பாடல். மஞ்சரியும்,

''புல்கிய நம்பெரிய நாயகிக்குப் பொற்பாகம்
நல்கியநம் பொன்பரப்பு நாதற்குத் -
தொல்கண்ண
சாயகற்குத் தென்னுலகைச் சங்கரற்கு
நால்வேத
நாயகற்குப் பொன்பரப்பு நாதற்குச் -
சேயதிருக்
கோபுரமும் மாமதிலும் கோயிலும்
மண்டபமும்
மாபுரமும் தேரும் மணிமறுகும் - தீபமும்
நந்தா வனமும் நளினத் திருக்குளமும்
கந்தா அளகக் கணிகையரும் —.நந்தா
விழாவும் சிறப்பும் விமானமும் செம்பொற்
குழாமும் பிறவும் கொடுத்து - வழாமொழியும்
சீரும் திருமுகமும் செந்தமிழும் சந்ததியும்
மாறாப் பெருவாழ்வும் வாங்கினோன்''
(கண்ணி. 183-188)

என இத்திருப்பணியை விரிவாகக் குறிப்பிடு கிறது. இவைகளேயன்றித் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் ஓலைச்சுவடி நூலகத்தில் உள்ள ஓர் ஒற்றை ஏட்டில் ''உலகில் வலிய நல்லூர் கோபுரத்தில் எழுதினது'' என்ற குறிப்புடன் ஒரு தனிப்பாடல் உள்ளது. அது வருமாறு:-

''எளியவர் கைப்பொரு ளேவலி
யோர்கொள்வது என்று மண்ணில்
ஒளியவைப் பார்கள் உலகத்துள்
ளோர்கள்: உளந்தனிலே
தெளியும் செழியனுக்கு உண்டான
கைப்பொருள் தென்உலகை
வெளியில் வைத்தான்நீதி கண்டறி
யோம்இந்த மேதினிக்கே''

இச்செய்யுள் அக்கோபுரத்தில் பொறிக்கப்பட்டுள்ளதா என்பது தெரிய வில்லை. (தமிழ்ப் பல்கலைக் கழகச் செய்தி மலர். மலர் 1, இதழ் 4. 14-7-1982)

இவ்வந்தாலன் பெரு வீரன் என்றும் பகைவர்களை வென்றவன் என்றும் பொது வாகக் கூறப்படினும் குறிப்பான எந்த ஒரு போரைப்பற்றிய வரலாற்றுச் செய்திகளும் இந்நூல்களில் இடம்பெறவில்லை.

அந்தாலந்தீர்த்த செழியன் என்னும் அந்தாலனைப்பற்றித் தற்போது நமக்குக் கிடைத்துள்ள வரலாற்றுக் குறிப்புகள் இவ்வளவே. இனி அடுத்து அவன் மூத்த புதல்வனாகிய தாகந்தீர்த்தானைப் பற்றி நோக்குவோம்.

தாகந்தீர்த்தான் என்ற பெயர் வந்த வரலாறு பற்றி மஞ்சரியின் முன்னுரையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. ''தாகந் தீர்த்தான் என்னும் பெயர் வந்த வரலாறு பற்றி அந்தப் பரம்பரையினர் கூறும் சுவை யான செய்தி ஒன்று உள்ளது. அந்தாலனுக் குச் சில குழந்தைகள் பெறப்பெற இறந்து விடவே, தாகந்தீர்த்தான் தாய் வயிற்றில் கருவுற்றிருக்கும்போதே, அத்தாயைப் பக்கத் தில் உள்ள ஓர் ஊருக்கு அனுப்பிவைத்து அங்கேயே குழந்தை பிறக்க வழி செய்தன ராம். அங்குப் பிறந்த இந்தக் குழந்தை தங்கவே தனக்குப் பிள்ளை வேண்டும் என்னும் தாகத்தைத் தீர்த்தான் என்பது கருதித் தாகந்தீர்த்தான் என்று பெயர் வைத்தனராம். இது குறித்துத் திரு அடிகளா சிரியர் வரைந்துள்ள செய்தி வருமாறு:

''தாகந்தீர்த்தான் என்னும் பெயர்க் காரணம் (அப்பரம்பரையினர் என்னிடம் கூறியது)

செழியதரையன் பரம்பரையினர் இன்னும் சின்னசேலத்தில் உள்ளனர். அவர்கள் பிற்காலத்தில் பாளையக்காரராய் மாறிவிட்டனர். 'நயினார்' என்று பட்டப் பெயரை மாற்றிக் கொண்டனர்.

அந்தாலந்தீர்த்த செழியனுக்கு மகவுகள் பிறந்து பிறந்து உயிரோடு இராமல் இறந்து கொண்டே வந்தன. தன் மனைவி கருவுற் றிருந்த காலத்தில் தன் ஆட்சிக்குட்பட்ட கலடியாபுரம் என்னும் ஊரில் கொண்டு போய் அங்கே பிரசவத்திற்குத் தங்கச் செய்தான். அங்குப் பிறந்த குழந்தை சாகாமல் இருந்தது. தங்கட்குப் புத்திரர் இல்லை என்ற தாகத்தைத் தீர்த்ததால் அக்குழந்தைக்குத் 'தாகந் தீர்த்தான்' என்று பெயர் சூட்டினர். அந்தக் குழந்தை பிறந்த ஊருக்குத் தாகந்தீர்த்தான் புரம் என்று பெயர் வைத்து வழங்கலாயினர்''. (மஞ்சரி முன்னுரைபக். 11.12)

இப்பெயர்க் காரணம் அநேகமாகச் சரியாகவே இருக்கலாம். பிள்ளைக்கலி தீர்க்கவந்தவன் என்ற உலக வழக்கும், நம்மாழ்வாருக்கு இதே காரணம் பற்றித் தாயவலம் தீர்த்தான் என்னும் ஒரு திரு நாமமுண்மையும் இதனை வலியுறுத்து கின்றன. மேலும் இப்பெயர்க் காரணமே இத்தாகந்தீர்த்தான் அந்தாலனின் மூத்த மைந்தன் என்றும், வினைதீர்த்தசெல்வன் அல்லன் எனவும் தெளிவாக்குகிறது. ஏன் எனில் மூத்தவன் ஒரு மைந்தன் ஏற்கெனவே இருக்கப் பின்பிறந்தானைச் சிறப்பாகத் தாகந் தீர்த்தான் எனக் கூறவேண்டியது இல்லையன்றோ? எனவே, இவனே அந்தால னின் முதல் மைந்தன் என்பது உறுதி.

மஞ்சரிப் பிரபந்தத்தின் *183* முதல் *188* வரையான கண்ணிகளை நோக்குமிடத்து அந்தாலன் உலகையில் சிவாலயம் கட்டியது கூடத் தனக்கு ஒரு பிள்ளை வேண்டும் என்பதற்காகத்தானோ எனத் தோன்றுகிறது.

''விழாவும் சிறப்பும் விமானமும் செம்பொற்
குழாமும் பிறவும் கொடுத்து-வழா மொழியும்
சீருந் திருமுகமும் செந்தமிழும் சந்ததியும்
மாறாப் பெருவாழ்வும் வாங்கினோன்''
(கண்ணிகள் *183-188*)

என்ற பகுதி சிவாலயத்தைக் கட்டிய பிறகு சந்ததியைப் பெற்றான் என்னும் பொருள் பட அமைந்துள்ளது. இவைகள் அனைத் துமே தாகந்தீர்த்த செழியனின் பெயர்க் காரணத்தை உறுதி செய்கின்றன. என்றாலும் இங்கும் ஓர் ஐயம் எழுகிறது.

இருள்நீக்கும் செழியனின் மூன்றாவது மகனும், அந்தாலனுக்கு நேர் மூத்தவனும் (எனவே இத்தாகந்தீர்த்தானுக்குப் பெரியப்பனும்) ஆகிய ஒருவன் தேவேந் திரன் தாகந்தீர்த்தான் என அழைக்கப்படு கிறான். எனவே தாகந்தீர்த்தான் என்ற பெயர் இக்குடிவழியில் முன்பே இருந்திருக் கிறது. மூன்றாவது மகனாகிய தேவேந்திர தாகந்தீர்த்தானைப் புத்திரதாகம் தீர்க்க வந்தவனாகக் கொள்ள முடியாது. ஆகவே ஏதோ ஒரு காரணம் பற்றித் தாகம் தீர்த்தான் என்ற பெயரும் இம்மரபில் வழங்கி வர அது இவனுக்கு இயைபுடைமை பற்றி இயற் பெயராக இடப்பட்டது எனக் கொள்ள

லாம். மற்றொன்றும் சிந்தித்தற்கு உரியது. அத்தேவேந்திரன் தாகந்தீர்த்தானின் மூத்தவன் ஆகிய சூரப்பவாணனுக்கு எந்துயரம் தீர்த்தான் என்ற பெயர் வழங்கியுள்ளது. (மஞ்சரி கண்ணி 171). நம் தாகந் தீர்த்தானின் கடைசித் தம்பியும் தீர்த்தான் செழியன் எனக் கூறப்படுகிறான். இவற்றையெல்லாம் நோக்குமிடத்து இம்மரபினர் தீர்த்தான் என்ற பெயரை அதிகம் பயன்படுத்தினர் என்ற உண்மை வெளியாகிறது.

இக் கட்டுரையில் ஆங்காங்கே இடம் பெறும் பிள்ளைத் தமிழ் இவன்மீது பாடப் பட்டதே ஆகும். அப்பிள்ளைத்தமிழ்ச் சுவடியின் ஈற்றுக் குறிப்பில் இருந்து இது 'வாத்தியார் அண்ணாமலைத் தம்பிரான்' என்பவரால் பாடப்பட்டிருக்குமோ எனத் தோன்றுகிறது. என்றாலும் உறுதியாகத் தெரியவில்லை. இவன் பெருவள்ளலாகத் திகழ்ந்திருப்பான் என்பதற்கையமில்லை. அந்தகக்கவி வீரராகவர் இவனுக்கு அனுப்பிய ஒரு சீட்டுக்கவியும், ஒரு தனிப் பாடலும் பெருந்தொகையில் இடம் பெற்றுள்ளன. அவை வருமாறு.

செழியதரையனுக்கு அந்தகக் கவி வீரராகவ முதலியார் விடுத்த சீட்டுக்கவி:

ஏடாயி ரங்கோடி யெழுதாது தன்மனத்
தெழுதிப் படித்தவிரகன்
எதுசொலினு மதுவேயெ னச்சொலுங்
கவிவீர ராகவன் விடுக்குமோலை;
சேடாதி பன்சிரம்அ சைக்குங்க லாகரன்
திரிபதகை குலசேகரன்
தென்பாலை சேலஞ்செ னித்ததா கந்தீர்த்த
செழியனெதிர் கொண்டு காண்க.
பாடாத கந்திருவம் எறியாத கந்துகம்
பத்திகோ ணாதகோணம்
பறவாத கொக்குஅனற் பண்ணாத
கோடைவெம்
படையாய்த்தொ டாதகுந்தம்
சூடாத பாடலம் பூவாத மாவொடு
தொடுத்துமுடி யாதசடிலம்
சொன்னசொற் சொல்லாத கிள்ளையொன்
றெங்குந்
துதிக்கவர விடவேணுமே. (பெருந்தொகை
1247).

செழியதரையன் பரிசில் கொடுத்தனுப்பிய போது மேலும் சில பொருள் வேண்டி மேற்படி புலவர் பாடியது:

சாலப் பழுத்த மரம்பார்த் தெறிவர்தண்
ணீர்சுரக்கும்
ஞாலத் தகழ்வர் கறக்கின்ற வாவைநற்
கால்தளைவர்
நீலக் கடல்விட்டுப் பாலாழி மத்திட்டு
நிற்பர்இந்நீர்
சேலத்து வேந்தன் அகத்தாகந் தீர்த்த
செழியனுக்கே.

(பெருந்தொகை 1248)

அந்தகக்கவிராயரின் காலம் 17ஆம் நூற்றாண்டாதலின் இவன் காலமும் அதுவேயாயிற்று. இதைக்கொண்டே இச்செழிய தரையர்களின் காலம் 17, 18ஆம் நூற்றாண்டுகள் என முன்னர்க் கூறப் பட்டது. இந்த ஒரு சிறு குறிப்பை அன்றி இவர்கள் ஆண்ட காலத்தைத் துல்லியமாகத் தீர்மானிக்கத் தற்போது வேறு சான்றுகள் கிடைக்கவில்லை.

இப்பிள்ளைத் தமிழேயன்றிச் 'செழிய தரையன் கோவை' என்னும் அகப்பொருட் கோவையும் இந்தத் தாகந்தீர்த்த செழியன் மேல் இயற்றப்பட்டதே ஆகும். தமிழ்ப் பல்கலைக் கழகச் சுவடி நூலக ஏட்டில் இக்கோவையின் 74 பாடல்களே உள்ளன. இவற்றால் கிடைக்கும் குறிப்புகள் மிகச் சிலவே. அவை அந்த ஆய்வில் ஆங்காங்கு காட்டப்பெற்றன.

அடுத்து இவன் தம்பியாகிய திருவேங்கடச் செழியனை முன்னிலைப் படுத்தி நீதிகளைக் கூறுவதாக அமைந்தது செழியதரையன் நன்னெறி என்ற நூல். இது காப்பு உட்பட 43 கட்டளைக்கலித்துறை களாலானது. அனைத்துப் பாடல்களும் ''செழியா திருவேங்கடமே'' என்ற விளியுடன் முற்றுப் பெறுகிறது. இது ஒரு நீதி நூலாதலின் வரலாற்றுக் குறிப்புகள் ஒன்றும் இடம்பெறவில்லை. இயற்றிய ஆசிரியர் பெயரும் அறியக்கூடவில்லை.

அடுத்து செழியதரையன் வண்ணம் என்ற ஒரு சுவடி உள்ளது. அதிலிருந்து இவ்வண்ணம் யார்மீது பாடப்பட்டதென்று அறியமுடியவில்லை. ஆனால், திரு அடிகளாசிரியர் அதனைத் ''திருவேங்கட செழியனின் புதல்வர்களுள் முதல்வனாகிய

கங்காதர செழியனைப் பற்றியது'' எனக் குறித்துள்ளார் (மஞ்சரி, முன்னுரை பக். 14). ஆனால், தமிழ்ப் பல்கலைக் கழகச் சுவடி நூலக ஏட்டின் துணை கொண்டு இதனை உறுதி செய்ய முடியவில்லை.

அடுத்த சுவடி கங்காதர செழியன்மேல் பாடப்பெற்ற திரு-வாணி வாது என்பதாகும். உலகை நல்லூர்த் தலத்தில், அந்தாலன் கட்டிய திருக்கோயிலில், கங்காதரச் செழியன் அமைத்த மண்டபத்தில் பொன்பரப்பீசர் பெரிய நாயகியுடன் எழுந்தருளியிருந்தபோது அவரைத் தொழ வந்த அலைமகளும், கலைமகளும் தம்முள் வாதம் செய்வதாக 104 பாடல்களால் ஆனது அச்சிற்றில க்கியம். திருமகள் செல்வமே சிறந்தது எனவும், கலைமகள் கல்வியே சிறந்தது எனவும் வாதிடுகின்றனர். இவர்கள் வாதத்தில் திருக்குறளும் நாலடியாரும் அப்படி அப்படியே மேற்கோள் காட்டப்படுகின்றன. இறுதியில் பெரிய நாயகியாகிய மலைமகள், ''உலகில் தோன்றிய அனைவருக்கும் இருவினையொப்பு, மலபரிபாகம் பெறும்வரையில் கல்வி, செல்வம் என்ற இரண்டுமே இன்றியமையாதன என்றும், இறைவனே அவற்றை அவரவர்கள் முன்வினைக்கேற்ப அருளுகிறான் என்றும், இவ்விரண்டில் எது சிறந்தது என வாதிடுதல் பயனற்ற செயல் எனவும் எடுத்துக்கூறி அலைமகள், கலைமகள் ஆகிய இருவரையும் கங்காதரனிடம் பொருந்தி வாழுமாறு கட்டளையிடுகிறாள். இதுவே நூற்சுருக்கம்.

இந் நூலில் உலகை கருவிலி ஆற்றின் தென்கரையில் அமைந்துள்ளது எனக் கூறும் பாடலும் (11), அக்கோயில் அந்தாலனால் கட்டப்பெற்றது என்பதும் (14) முன்னர்க் காட்டப் பெற்றன. உலகநல்லூரில் உள்ள அக்கோயிலில் ஒரு மண்டபம் புதியதாகக் கங்காதரனால் கட்டப்பட்டதென்பது இந் நூல் தரும் புதிய செய்தி. அது வருமாறு:-

''பூண்பல அணிந்த பின்பு
பொன்பரப் பீசன் அன்பால்
சேன்பயில் அமரர் பூவில்
சிறந்திடும் அன்பர் ஆனோர்
மாண்பொடு வணங்கக் கங்கா
தரன்மணித் தூண்கள் நாட்டிக்
காண்புற இனிதுஅ மைத்த
காவணங் கருதி வந்தான் (16)

திருவாணி வாது என்ற இந்நூலில் கங்காதரனின் நாட்டைப்பற்றிக் குறிப்பிடும்போது,

''கோலமார் இனிய கல்லைக்
குறிச்சிநல் நாட தன்பேர்'' (10)

என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே இன்றைய கள்ளக்குறிச்சியைச் சூழ்ந்துள்ள ஒரு நிலப்பகுதி இவன் ஆளுகையில் இருந்திருக்கலாம் எனத் தெரிகிறது. இந் நூலிலும்,

சேரலர் செந்நீர் உண்டு
சிரங்களை அலகைக்கு ஈந்துஅங்கு
ஆருயிர் பிரித்துங் கூற்றுக்கு
அளித்திடும் இலைகொள் நிவேலான்
மாறியாற் றவனங் கங்கா
தரனெனும் மன்னர் மன்னன்
ஏர்திகழ் கவிகை நீழல்
இனிதுவாழ் திருநன் நாடு'' (9)

எனப் பகைவென்றமை கூறப்பட்டுள்ள போதிலும் வரலாற்றாராய்ச்சிக்குப் போதுமான அளவு எத்தகைய குறிப்பும் கிடைக்கவில்லை.

பெருந்தொகையில், 'தீத்தான் சங்கீதத்தைக் கேட்டு அந்தகக்கவி பாடியது' என்ற தலைப்பின் கீழ்ப் பின்வரும் பாடல் தொகுக்கப்பட்டுள்ளது,

''வாவிய பொற்பரி யாவூரில் வீரையன் மைந்தபஞ்ச
காவியந் தேர்கின்ற தீத்தானின் கீதத்தில் காவலர்தம்
ஓவிய சாலைஎல் லாம்கொல்லி யாஉள் உருகும்ரத்னம்
மேவிய கூடமெல் லாந்திரி கூடத்தின் மேற்படுமே''. (1259)

இதில் கூறப்பட்டுள்ள பொற்பரியாவூர் வீரையன் மைந்தனாகிய தீத்தானுக்கும் இச்செழியர்களுக்கும் ஏதாவது தொடர்பு இருக்க முடியுமோ என்பது ஆராய்ச்சிக் குரியது.

இதுவரை கிடைத்திருக்கும் நூல்களிலிருந்து சேலம் செழியதரையர்களைப் பற்றி நாம் அறிந்து கொள்வன இவ்வளவே. இனி மேலும் சான்றுகளைத் தொகுத்து முறைப்படி ஆய்வுசெய்தால் இவர்களைப் பற்றிய பல அரிய வரலாற்றுண்மைகள் வெளியாகக் கூடும்.

பிற்சேர்க்கை

இவ்வாய்வுக் கட்டுரையில் பயன் படுத்தப்பெற்றவை:

அச்சு நூல்கள்

1. சேலம் தாலந்தீர்த்த செழியன் மஞ்சரி. பதிப்பாசிரியர் உயர்திரு மு. சண்முகம்பிள்ளை. சென்னைப் பல்கலைக் கழக வெளியீடு 1978.
2. பெருந்தொகை — தொகுத்தோர் இராமநாதபுரம் உயர்திரு மு. இராகவையங்கார், மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு 1935-36.
3. தனிப்பாடல் திரட்டு, பாகம் 2, 1933-ம் ஆண்டு.

ஏட்டுச் சுவடிகள்:

1. சேலம் திருவேங்கட செழியதரையன் நன்னெறி. தமிழ்ப்பல் கலைக் கழகச் சுவடி நூலகம், சுவடி எண் 196 (அ)
2. செழியதரையன் வண்ணம். (குறைநூல்) தமிழ்ப் பல்கலைக் கழக சுவடி நூலகம். சுவடி எண் 196 (ஆ)
3. தாகந்தீர்த்த செழியன் பிள்ளைத் தமிழ். தமிழ்ப் பல்கலைக் கழகச் சுவடி நூலகம், சுவடி எண் 197
4. கங்காதரச் செழியன் மீதில் திரு-வாணி வாது. தமிழ்ப் பல்கலைக் கழகச் சுவடி நூலகம். சுவடி எண். 198
5. தாகந்தீர்த்த செழியதரையன் கோவை. (குறைநூல்) தமிழ்ப் பல் கலைக் கழகச் சுவடி நூலகம், சுவடி எண் 200.

கடம்பர் யாவர்?

ம. பசுவலிங்கம்

தமிழகத்துப் பழங்குடி மக்களென நான்கு குடிகளை எடுத்துக் காட்டுவர் மாங்குடி கிழார் என்ற பாண்டி நாட்டுப் புலவர்.

> ''துடியன் பாணன் பறையன் கடம்பன் என்று
> இந்நான்கு அல்லது குடியும் இல்லை''
> (புறம்.355)

என்பது அவர்தம் அரிய பாடல். வரகு, தினை, கொள், அவரை ஆகிய தானியங் களையே இந்நான்கு குடிகளும் உண்டு வாழ்ந்தனர் என்ற குறிப்பினையும், அவர்தம் பாடலில் காண்கிறோம்.

துடி என்னும் பறை அடித்தவரே துடியர் எனப்பட்டனர் என்பது தெளிவு. துடிப் பறையினை உடுக்கை எனவும் வழங்குவர். இதனை எறிகோல் என்னும் குறுந்தடி கொண்டு அடித்து ஒலியெழுப்புவர் (புறம் 287). கோட்டானின் குரலுக்குத் துடியோசை உவமை (புறம். 370). துடி அடிப்பவரைப் புலையர் என்றல் மரபு. ''துடியெறியும் புலைய'' என்று சாத்தந் தையார் கூறுதல் (புறம். 287) காண்க. இப்புலையனைத் தாழ்ந்த குலத்தவனாகக் கருதுதல் சங்ககாலத்திலேயே நிலவிய வழக்கம் என்பதை,

> ''இழிபிறப் பாளன் கருங்கை சிவப்ப
> வலிதுரந்து சிலைக்கும் வன்கட் கடுந்துடி''
> (புறம். 170)

என்ற புறப்பாடலால் அறியலாம். இப்புலை யனே துடியன் எனப்பட்டமை வெள்ளிடை மலை.

பாணன் எனப்பட்டோன் பாடினியின் கணவன் எனப் புறப்பாடல்கள் (11, 242, 364) கூறுதலின், பாடுந்தொழில் வல்லோரே பாணர் எனப்பட்டமை விளங்கும். பாணரை ''இன்னிசைகாரர்'' என்று சேந்தன் திவாகரம் கூறுகின்றது. பாட்டுக்குப் 'பாணி' என்ற பெயர் இருந்ததை, ''விருந் தின் பாணி கழிப்பி'' என மலைபடுகடாம் (539) கூறுதல் கொண்டு அறியலாம். சீறியாழ் மீட்டிப் பாடல் இசைப்பது பாணர் மரபு என்ற செய்தியினை,

> ''ஐதுஅமை பாணி வணர்கோட்டுச் சீறியாழ்க்
> கைவார் நரம்பின் பாணர்க்கு ஒக்கிய''
> (புறம். 302)

> ''பாணர், கைவல் சீறியாழ் கடனறிந்து இயக்க''
> (புறம். 398)

> ''தீந்தொடைச் சீறியாழ்ப் பாணன்''
> (புறம். 285)

முதலிய புறப்பாடல்கள் காட்டுகின்றன. பேரியாழும் இவர்கள் மீட்டியதைப் பதிற்றுப்பத்து 57-ஆம் பாடலால் அறிகிறோம்.

ஒவ்வொரு நாள் அதிகாலையும் அரசர்களை நாடிச் சென்று, யாழிசைத்துப் பாடி மகிழ்வித்து, உணவும் பரிசில்களும் பெறும் பாணர் மரபினைச் சங்கப் பாடல்கள் (*புறம். 29, 33; பொருநர். 149-173; பெரும் பாண். 485-490* முதலியன) தெளிவுறுத்துகின்றன.

''மனைமரத்தான் மீன்சீவும் பாண்சேரி''
என மதுரைக் காஞ்சி (*268-269*)யும்,

''பாணர் பசுமீன் சொரிந்த மண்டை
போல''
எனக் குறுந்தொகையும் (*169*),

''மீன்சீவும் பாண்சேரி'' எனப் புறநானூறும் (*348*) குறித்துள்ளமையின், பாணர்க்கு மீன் பிடித்தலும் தொழில் என்பது விளங்கும். இக்காரணத்தினாலேயே பாணரும் இழி குலத்தினராகப் பிற்காலத்தில் கருதப்பட்டனர்.

இனி, பறையர் வகுப்பினைப் பற்றிய செய்திகளைக் காண்போம். 'பறை' என்ற தோல் வாச்சியத்தைப் பற்றிச் சங்கப் பாடல்கள் (*புறம் 68, 371; அகம். 45, 321, 364; குறுந்.15*) பலமுறை பேசுகின்றன. அகுதை என்ற குறுநில மன்னனின் நாளவைக்குள் செல்லும் பொருநர் என்போர், பறை அடித்ததாகப் பரணர் (அகம்.76) கூறியிருக்கிறார்.

தடாரி என்ற கிணைப்பறையினை இவர்கள் இசைத்ததாகப் புறப்பொருள் வெண்பாமாலை (*218-ஆம் பாடல்*) உரையால் அறிகிறோம்.

''முழவுத்தோள் முரண்பொருநர்'' என மதுரைக்காஞ்சி (*99*) கூறுவதை நோக்க, இப்பொருநர், கல்வியறிவால் சிறந்த வரல்லர் என்பது பெறப்படும். பொருநர், விடியற்காலத்தே சென்று தடாரிகொட்டிப் பாடுதலும் அதைக் கேட்ட அரசர்கள் அப்பொருநர்க்கு வேண்டியவற்றை அளித்தலும் பண்டைய வழக்கம் ஆம்.

(புறப்பொருள் வெண்பாமாலை — *206*)

''பகரியா'' என்னும் வடமொழிச்சொல், மலைமனிதன் எனப்பொருள்படும் என்றும், அதுவே தமிழில் பொறையன் என்றும் பறையன் என்று திரிந்து வழங்குவதாகவும் திரு எம். சீனிவாச ஐயங்கார் அவர்கள் தமது ''தமிழ் ஆராய்ச்சி'' (Tamil Studies)என்ற நூலில் கூறியுள்ளார். எயினரே பறையர் என்பதும் அவர்தம் கருத்து. இக்கூற்றினை மெய்ப்பிக்கும் சான்றுகள் சங்க நூல்களில் காணப்படவில்லை என்பது இங்கே குறிக்கத் தக்கதாம்.

இதுகாறும் கூறியவற்றால், துடியன், பாணன், பறையன் எனவரும் மூவகையினரும் இசைத்தமிழ் வளர்த்த வித்தகர் என்பது தெள்ளிதின் புலனாகும். இவ்விதமிருக்க, இவர்களோடு சேர்த்துக் கூறப்பட்டுள்ள கடம்பரை மட்டும் மேல்கரைக் கடற்கொள்ளையர் என்று எண்ணுவது எத்துணைப் பேதமை என்பது, சொல்லாமலே விளங்கும். கடம்பர் என்ற கடற்கொள்ளையர் பண்டைத் தமிழகத்தில் நிலவியதாகச் சங்கநூல்களில் சிறுகுறிப்பேனும் இல்லை.

''வயவர் வீழ வாளரில் மயக்கி
இடங்கவர் கடும்பின் அரசுதலை பனிப்ப
கடம்புமுதல் தடிந்த கடுஞ்சின வேந்தே''
(பதிற்.12)

''கடம்புமுதல் தடிந்த கடுஞ்சின முன்பின்
நெடுஞ்சேரலாதன்'' (பதிற். 20)

முதலிய பதிற்றுப்பத்துப் பாடல்களில் கடம்ப மரத்தைப் பற்றிய குறிப்பு காணப்படுகிறதேயொழிய, அதனைக் காவல் மரமாக உடையவர் கடம்பர் என்று சொல்லப் படவில்லை. காவல் மரத்தால் குலப்பெயர் ஏற்படுவதாயின், சேர சோழ பாண்டியர்க்குப் பனையர், ஆத்தியர், வேம்பியர் என்ற பெயர்கள் வழங்கியிருத்தல் வேண்டு மன்றோ? கடம்பர் என்ற கடற்கொள்ளையர் இருந்திருப்பின் அக்கடம்பரைச் சங்கப் புலவர்கள் குறிக்காது ஒழிவார்களா?

கடம்பர் என்பார் கடம்பக்கூத்து நிகழ்த்தி, நாடகத்தமிழ் வளர்த்த பழந் தமிழ்ப் பண்பாளர் என்று கூறுதற்கு வேண்டிய சான்றுகள் உள்ளன. பதினோராடல்களுள் ஒன்று ''கொட்டி'' எனப்படும்.

''கொட்டி கடம்பமர்ந்தான் ஆடல்''
என்று யாப்பருங்கலவிருத்திச் சூத்திரஉரை மேற்கொள் காட்டுதலின், கொட்டியாடலே கடம்பக்கூத்து என்பது அங்கை நெல்லிக்

கனியென விளங்கும். இக்கூத்து முருகனுக் குரியதென்பதைக்,

''கொட்டியும் குடையும் குமர னாடல்''

என்று சேந்தன் திவாகரம் குறித்துள்ளது. முருகனை நினைந்து வெறியாடும் வேலன், கடப்பமாலை சூடியிருத்தலைக்,

''கார்நறுங் கடம்பின் கண்ணி சூடி
வேலன் வேண்ட வெறிமனை வந்தோய்
கடவுள் ஆயினும் ஆக
மடவை மன்ற வாழிய முருகே''
(நற்றிணை 34)

என்று பிரமசாரி என்ற புலவர் பாடியிருக் கிறார். கடம்பு, முருகனுக்குரிய மரம் என்பதனைக்

''கார்நறுங் கடம்பின் பாசிலைத்
தெரியல்
சூர்நவை முருகன் சுற்றத் தன்ன''
(புறம்.23)

எனவரும் கல்லாடனார் பாடல் காட்டு கின்றது.

இச்செய்திகளை நோக்க, முருகனை வழி பட்டு, கடம்புசூடி, வெறியாடிய படிமத் தோனாகிய வேலனே ''கடம்பன்'' எனப் பட்டமை விளங்கும். ''தாழாது செறுத்த செய்யுள்'' பாடும் புலவன் இயற்றமிழ் வளர்க்க, துடியிசைக்கும் துடியனும், யாழ் மீட்டிப்பாடும் பாணனும் இசைத்தமிழ் பரப்ப, முருகனின் கடம்பு சூடி வெறிக் களத்தே நடனமாடும் வேலன் (கடம்பன்) நாடகத் தமிழுக்கு உரமூட்டினான் என்பது எளிதில் போதரும். இங்ஙனம், முத்தமிழ் வளர்த்த குடிகளே, பழந்தமிழ் இனத்தோ ராக மாங்குடிகிழாரால் விதந்து ஓதப் பட்டனர் என்க.

புறஞ்சேரியில் நிகழ்ந்த புதுமை

ஆர். வீரபத்திரன்

'முப்பால் மணிமாலை' எனப் போற்றத் தகும் சிலப்பதிகாரத்தில் ஒவ்வொரு காதை மணியும் ஒவ்வொரு வகையில் முதன்மை வாய்ந்ததாகும். 'கானல் வரி' கதை நிகழ்ச் சிக்கு ஒரு திருப்பு மையமாக அமைந்த சிறப்பு உடையதென்றால், புறஞ்சேரி இறுத்த காதை கோவலன் கொலை நிகழ்ச் சியை உருவாக்கிய புதுமை வாய்ந்ததென்று கூறலாம். இக்கருத்தின் உண்மையை இங்கு விளக்குவோம்.

கோவலன் கண்ணகியின் சிலம்பை மதுரையில் கொண்டு விற்பதற்காக, கடலாடு விழா நிகழ்ந்ததன் மறுநாள், அதி காலைப் பொழுதில், கண்ணகியை அழைத்துக் கொண்டு புகாரிலிருந்து புறப் பட்டுக் கவுந்தியடிகள் துணையுடன் செல் கிறான். ஏறக்குறைய ஐந்து கிழமைப் பயணத்தின் பின் மூவரும் மதுரையின் மதிற் புறத்ததாகிய புறஞ்சேரிக்கு வந்து சேர் கின்றனர்.

புறஞ்சேரி இறுத்த காதைக்கு அடுத்த காதை ஊர்காண் காதையாகும். அதில், கோவலன், கண்ணகியைக் கவுந்தியடிகளின் பாதுகாவலில் வைத்துவிட்டு, மதுரை நகருக் குள் புகுந்து, அங்குப் பற்பல காட்சிகளைக் காணுறும் செய்தி கூறப்படுகிறது. இவ் ஊர்காண் காதையும் காலை வண்ண னையோடு (1-14) தொடங்குகிறது.

புறஞ்சேரி இறுத்த காதை இறுதியும், அதனையடுத்த ஊர்காண் காதையின் தொடக்கத்திலுமாக அடுத்தடுத்து ஈரிடங் களில் காலைப் பொழுது வண்ணிக்கப் பட்டுள்ளது. ஒவ்வொரு வண்ணனையும் பதினான்கு வரிகளில் கூறப்பட்டிருக்கும் ஒற்றுமை நயம் இறும்பூது பயப்பதாகும். இரு வண்ணனைகளிலும் சிவன் கோயிலி லும் மன்னவன் மாளிகையிலும் காலை முரசங்கள் ஒலிக்கும் செய்தி பொதுவாக வந்துள்ளது.

இளங்கோ இவ்வாறு காலை வண்ண னையை இருமுறை அடுத்தடுத்துக் கூறுவ தேன்? நூலினுள் அதன் காரணம் குறித்து எதுவும் கூறப்படவில்லை. ஆயினும், அது பற்றிக் கவனங்கொள்ளும் பொழுது ஓர் உண்மை நமக்குப் புலனாகிறது. இரு காலை வண்ணனைகளும், ஒரு நாளுக்குரியனவல்ல என்றும் அடுத்தடுத்த இரு நாள்களுக் குரியனவே என்றும் அவ்விரு வண்ணனை களுக்கும் இடைப்பட்ட நாளில் கோவலன், கண்ணகி, கவுந்தியடிகள் ஆகிய மூவரும் புறஞ்சேரியில் ஒருநாள் தங்கியிருந்த செய்தியைஇளங்கோ வெளிப்படையாகக் கூறாமல் இங்ஙனம் இருகாலை வண்ணனை களை அடுத்தடுத்துக் கூறுவதன் மூலம் குறிப்பால் பெற வைக்கிறார். மூவரும் இவ்வாறு ஓரிடத்தில் தங்கி இளைப் பாறுவது அவர்கள் இதுகாறும் செய்துவந்த

பயண முறைக்கும் ஒத்ததேயாம். அவர்கள் காவிரியின் தென் கரையில் ஒரு பூம் பொழிலில் தங்கிக் களைப்பு நீங்கிய செய்தி நாடுகாண் காதையிலும், உறையூரில் அருகன் பள்ளியிலுள்ள முனிவர்களிடையே தங்கி யிருந்த செய்தி காடுகாண் காதையிலும், ஐயைக்கோட்டத்தில் பகல் முழுவதும் தங்கி இளைப்பாறிப் பின்னர் இரவில் மீண்டும் பயணத்தை மேற்கொண்ட செய்தி 'வேட்டுவ வரி' யிலும் கூறப்பட்டுள்ளன. முன்பு நாடுகாண் காதையுள் இளங்கோ,

வரியிடை யிட்ட நாடுடன் கண்டு
காவத மல்லது கடவா ராகிப்
பன்னாள் தங்கிச் சென்னாள்
(ஊர்காண் 153-5)

என்று கூறியதும், அவர்கள் ஆங்காங்கே பல இடங்களில் தங்கி இளைப்பாறிச் சென்ற செய்தியையே குறித்துள்ளது.

புறஞ்சேரியில் கோவலனும் கண்ணகியும் ஒரு நாளிலும் அதிகமாகத் தங்கியிருந்தார் கள் என்று எண்ணுதற்கில்லை. ஏனெனில், புகாரிலிருந்து புறப்பட்டு ஐந்து கிழமை வழிப்பயணத்தின்பின் மதுரையை அணுகிய கோவலன், சிலம்பு விற்க வந்த தனது நோக்கத்தை விரைவில் முடித்துக் கொண்டு தான் எண்ணிய ''உலந்த பொருள் ஈட்டும்'' முயற்சியில் தலைப் படுதலே இயற்கை. அங்ஙனமன்றி, அதிக நாள்களை வீணிற் கழிக்க அவன் விரும்பியிருக்க மாட்டான். எனவே, களைப்பு நீங்குவதற்குத் தேவை யான குறைந்த அளவு ஒரு நாள் மட்டுமே அவன் அங்குத் தங்கியிருக்கக்கூடும். மேலும் கவுந்தியடிகளும் கோவலன் கண்ணகியர்க்கு மதுரைவரையிலும் வழித்துணையாக வந்த தமது கடமை நிறைவேறியபின் தாம் வந்த நோக்கமான

மறவுரை நீத்த மாசறு கேள்வியர்
அறவுரை கேட்டாங்கு அறிவனை ஏத்தும்
(நாடுகாண்: 56-7)

செயலில் ஈடுபடவே விரும்புவார். அதிக மான நாள்களைக் கோவலன் கண்ணகிய ருடன் கழிக்க எண்ண மாட்டார். மற்று மோர் செய்தியையும் நாம் கருத வேண்டும். புறஞ்சேரி துறவிகள் தங்குவதற்குரிய இடம் என்பது,

அறம்புரி மாந்த ரன்றிச் சேராப்
புறஞ்சிறை (195-9) - எனப் புறஞ்சேரி

இறுத்த காதையுள்ளும்,

'அறத்துறை மாக்கட் கல்லதை இந்தப்
புறஞ்சிறை இருக்கை பொருந்தாதாக
லின் (107-8)

என அடைக்கலக் காதையுள்ளும் கூறப் பட்டுள்ளது. இல்லறத்தாராகிய கோவல னும் கண்ணகியும், தம்முடன் செய்த வழிப் பயணத்தின் முடிவில் களைப்பு நீங்குதற் பொருட்டு ஒரு நாள் மட்டும் தம்முடன் அங்குத் தங்கியிருத்தலைக் கவுந்தியடிகள் ஏற்றிருக்கக்கூடுமேயன்றி அதிக நாள்கள் தங்குதலை உடன்பட்டிருக்கமாட்டார். இக்காரணங்களால் கோவலனும் கண்ணகி யும் அடிகளுடன் புறஞ்சேரியில் ஒரு நாள் மட்டுமே தங்கியிருந்தார்கள் எனத் துணிவது பொருத்தமேயாம்.

புறஞ்சேரியில் கோவலனும் கண்ணகியும் ஒரு நாள் தங்கியிருந்த வேளையில் மிக முக்கியமான நிகழ்ச்சி ஒன்று நடைபெறு கிறது. அன்றைய இரவின் கடையாமத்தில் கோவலன் கனவொன்று காண்கிறான். இச்செய்தியை இளங்கோ பறஞ்சேரியிறுத்த காதையில் கூறாமல் பூட்டகமாக வைத் திருந்து பின்பு அதன் அடுத்த காதைக்கும் அடுத்த அடைக்கலக் காதையுள் கோவலன் வாயிலாக வெளிப்படுத்துகிறார்.

நனவு போல நள்ளிருள் யாமத்துக்
கனவு கண்டேன் கடிதீங் குறுமென
(அடைக். 105-6)

இவ்வாறு முக்கிய கதை நிகழ்ச்சிகளை அவை நடைபெற்ற உடனேயே அவற்றிற் குரிய இடம், காலங்களில் வைத்துக்கூறாமல் வைத்திருந்து, பின்னர்த் தேவையான இடங்களில், காலங்களில் அந்நிகழ்ச்சி களோடு தொடர்புடையார் வாயிலாக வேனும், காவியத்தில் வரும் பிற உறுப் பினர்கள் வாயிலாகவேனும் இளங்கோவடி கள் வெளியிடுவதைச் சிலப்பதிகாரக் காவியத்துள் பல இடங்களில் காணலாம். சான்றாக ஓரிடத்தை மட்டும் சுட்டுவோம்.

கோவலனுக்கு மாதவியிடம் மணி மேகலை என்னும் மகள் பிறந்ததும் அம்மக வுக்குப் பெயர் வைத்த நாளில் அவன் பொன்னை வாரி அறஞ்செய்த வேளையில்

ஐயமேற்க வந்த மறையவன் ஒருவனைக் களிற்றினிடமிருந்து காத்ததும், கீரிப் பிள்ளையைக் கொன்ற பார்ப்பனியின் பாவத்தைத் தன் அறச் செயலால் போக்கி அவளை அவள் கணவனோடு கூட்டுவித்த தும், பொய்க்கரி கூறிப் பூதத்தின் கையகப் பட்ட தீயோனின் தாயையும் சுற்றத்தையும் பசிப்பிணி அறுத்துப் பல ஆண்டுகள் புரந் ததும் ஆகிய அந்நிகழ்ச்சிகளை அவற்றிற் குரிய வெவ்வேறு இடங்களிலும் காலங் களிலும் வைத்து விளக்காமல், நெடு நாளைக்குப் பின்னர், மதுரையை அடுத்த புறஞ்சேரியில் வைத்து மாடல மறையோன் வாயிலாக நமக்கு அறிவிக்கிறார். காவியம், நிகழ்ச்சிகளை முறைப்படுத்திக் கூறும் வரலாற்று நூல் போன்றிராமல் நாடகவியல் புடன் கூடிக் கவர்ச்சியுடையதாக அமை வதற்கும், கதையின் முன்னிகழ்ச்சிகளைப் பின்வரும் குறிப்புகளால் கற்பவர்கள் உய்த்துணர்ந்து மகிழ்வதற்கும், பாத்திரங் களின் பண்பு நலன்களை வேண்டப்படும் இடங்களில் விளக்கமுறச் செய்வதற்கும் காவியக் கலைஞர்கள் இவ்வுத்தியைக் கையாளுகிறார்கள்.

இனி, கோவலன் கண்ட கனவை இளங்கோ பின்வருமாறு வண்ணிக்கிறார்:

.... ஓர்குறு மகன் தன்னால்
காவல் வேந்தன் கடிநகர் தன்னில்
நாறைங் கூந்தல் நடுங்குதுய ரெய்தக்
கூறைகோட் பட்டுக் கோட்டுமா ஊரவும்
அணித்தகு புரிகுழல் ஆயிழை தன்னொடும்
பிணிப்பறுத் தோர்தம் பெற்றி யெய்தவும்
மாமலர் வாளி வறுநிலத் தெறிந்து
காமக் கடவுள் கையற் றேங்க
அணிதிகழ் போதி அறவோன் தன்முன்
மணிமே கலையை மாதவி அளிப்பவும்
(அடைக், 95-104)

இக்கனவால் தனக்குச் சாக்காடும், கண்ணகிக்குப் பெருந்துன்பமும், தன் அன்பு மகள் மணிமேகலைக்குத் துறவும் அண்மை யில் நேரப் போவதைக் கோவலன் எண்ணிய போது அவனை அச்சம் ஆட்கொண்டது; அவன் உள்ளம் கலங்கித் தத்தளித்தது.

முன்பே கோவலன் தன் குன்றனைய செல்வத்தை இழந்திருந்ததும், பல ஆண்டு கள் காதலித்து இன்ப வாழ்வு நடத்திய மாதவியை அவள் அன்பில் ஐயுறவு கொண்டு பிரிந்ததும், கண்ணகியின் அணிகளுள் இறுதியாகவுள்ள காற்சிலம்பை விற்க நேர்ந் ததும், அதற்காகத் தன் குலமரபுக்கு மாறாக அவளை மதுரைக்கு அழைத்து வந்து துன்பம் இழைத்ததும், வழிப்பயணத்தின் போது நெடுந்தொலை நடந்ததும்; தக்க உணவின்றி அல்லலுற்றதும் அவனைத் துன்பத்துள் ஆழ்த்தி அவனது மன அமைதியைக் குலைத்திருந்தன. இப் பொழுது கண்ட கனா, அமைதி இழந்த உள்ளத்தில் அச்சத்தையும் திகிலையும் உண்டு பண்ணி அவனை நிலைகுலையச் செய்து விட்டது. முன்பின் அறியாத ஊரில் உற்றார் உறவினர்களைப் பிரிந்து இருக்கும் நிலையில், பெரிய தீங்கொன்று நெருங்கித் தன்னை அழித்துவிடப் போவதாக அவன் உறுதியாக எண்ணினான். அச்சமும் திகிலும் ஆட்கொண்டபோது மனமொழி மெய்கள் தடுமாற்றமுற்று முன்னைய இயல்புக்கு மாறாகச் செயல்படத் தொடங்கின.

கடையாமத்தில் கனவு கண்டு விழித்த கோவலனுக்கு அதன்பின் உறக்கம் வந் திராது. அவன் பொழுது விடிவதை எதிர் நோக்கியிருந்திருப்பான். அதிகாலையில் கோயில்களில் காலை முரசொலி கேட்டதும் அவன் கவுந்தியடிகளைக் காணத் துடித்தான். புறஞ்சேரியிலே அடுத்துள்ள வேறோரிடத் தில் தங்கியிருந்த கவுந்தியடிகளைச் சென்று கண்டான். ஆனால், அவன் அடிகளிடம் தான் கண்ட தீக்கனவையும், அதனால் தன் உள்ளம் நடுங்குவதையும் பற்றி ஏதும் கூற வில்லை. அவன் கூறாமல் இருந்ததற்கு அவனது மனக்கலக்கமே காரணமாதல் வேண்டும்.

கோவலனுக்குத் தான் கண்ட கனா பலித்துத் தானும் மெல்லியலாளாகிய தன் மனைவியும் துன்பத்துக்குள்ளாக நேர்ந்தால், அந்நேரத்தில் தமக்குத் துணையாவாரை, கவுந்தியடிகள் தம்மைவிட்டுப் பிரியு முன்பே, நாடி அடைந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. அப்போது அவனுக்கு மதுரையிலுள்ள தன் இனத்தவர் களைப் பற்றிய நினைவு வந்தது. தன் தந்தை மாசாத்துவானை அறியாதவர்கள் மதுரைப் பெருங்குடி வணிகருள் எவரும் இருக்க மாட்டார்கள் என்றும், தான் யார் என்பதை அவர்கள் அறிய நேரின் அரும்பொருள்

பெற்றாற் போன்று தன்னையும் கண்ணகியையும் விருந்தெதிர் கொள்வர் என்றும் அவன் நம்பினான். கண்ணகியைக் கவுந்தியடிகளின் பாதுகாப்பில் வைத்து விட்டுத் தான் மட்டும் மதுரை நகருக்குள் சென்று தன் குல வணிகர்களைக் காண எண்ணினான். அதிகாலையில் கவுந்தியடி களைக் கண்டு பேசிய போது அவன் இவ் வெண்ணத்தை அடிகளிடம் கூறுகிறான். அவன் அதைக்கூறும்போது அதனுடன் வேண்டப்படாத வேறு சில செய்திகளையும் கலந்து சொல்லிவிடுகிறான். சொல்லத் தொடங்கும்போதே தனது கழிந்த காலப் பரத்தமை வாழ்க்கையை அடிகளிடம் வாய் சோர்ந்து கூறுகிறான்.

நெறியின் நீங்கியோர் நீர்மையே னாகி
(ஊர்காண்.17)

என்று கூறுவதில்

வம்பப் பரத்தரொடு வறுமொழி யாளரொடு

கூடிக் களித்ததுடன் மாதவியுடன் கூடி வாழ்ந்த கூடாவொழுக்கத்தையும் குறிப்பிடு கிறான் என்பதில் ஐயமில்லை. இச் செய்தியை அவன் தூய வாழ்க்கையுடைய கவுந்தியடிகளிடம் கூற வேண்டியதில்லை. அடிகளோ அவனது கழிந்த கால வாழ்க் கையைக் குறித்து ஏதும் அறியாதவர். அடிகள் கோவலனையும் கண்ணகியையும் ஒப்புயர் வற்ற மேன்மக்களாகவே மதித்துப் போற்றி வருகிறார். அவர்களை முதன் முதலாகக் கண்டபோதே,

உருவும் குலனும் உயர்பே ரொழுக்கமும்
பெருமகன் திருமொழி பிறழா நோன்பும்
உடையீர்!
(நாடுகாண். 46-8)

என்று பெருமையாக அழைக்கிறார். அழைத்து அவர்கள் வீட்டைவிட்டுப் புறப் பட்டு வந்த காரணம் யாதென்று வினவிய போது, கோவலன் விரும்பினால், அதன் விடையாகத் தனது தீயொழுக்கம் குறித்த செய்தியை அடிகளிடம் கூறி மனஅமைதி அடைந்திருக்கலாம். அந்நேரம் சொல்லி யிருந்தால், அது தேவையற்றதாயினும், அப்பொழுதிருந்த மனநிலையில் அவன் அவ்வாறு சொல்லிவிட்டதாக அதற்கொரு பொருத்தத்தையும் அமைதியையும் நாம் கண்டு கொள்ளலாம். ஆனால், கோவலனோ,

''உரையாட்டில்லை உயர் தவத்தீர்'' என்று தான் உரைப்பதற்கு ஒன்றுமில்லை என்று கூறி, தனது தீயொழுக்கத்தை அடிகள் அறியாமல் மறைவாக வைத்துக் கொள்கிறான்.

பின்னர் மூவரும் மதுரைக்குச் செல்லும் வழியில் கானுறை தெய்வம் ஒன்று மாதவி யின் தோழியாகிய வயந்தமாலையின் வடிவில் கோவலன் முன் தோன்றித் தன்னைப் பற்றியும், மாதவியைப் பற்றியும் கூறுகிறது. இந்நிகழ்ச்சியை இளங்கோ கவுந்தியடிகளின் முன்னிலையில் நடந்த தாகக் கூறாமல், கோவலன் நீர் பருகுவதற் காக ஒரு பொய்கைக் கரைக்குச் சென்று அங்குத் தனித்து நிற்கும் வேளையில் நடை பெற்றதாகக் கூறி, கோவலனுக்கும் மாதவிக்குமுள்ள தொடர்பைக் கவுந்தியடி கள் அறியாதபடி மறைத்துவிடுகிறார்.

இதுபோலவே மூவரும் மதுரையை நெருங்கிய வேளையில், மாதவியால் ஓலையுடன் அனுப்பப்பட்ட கோசிகன் என்னும் அந்தணன் கோவலனைக் கண்டு உரையாடும் நிகழ்ச்சியையும் கவுந்தியடி களின் முன்னிலையில் நிகழ்ந்ததாகக் கூறாமல் அவன் அடிகளையும் கண்ணகி யையும் விட்டகன்று ஒரு நீர்நிலைக்கண் தனித்து நிற்கும் வேளையில் நடைபெற்ற தாகவே இளங்கோவடிகள் கதை அமைக் கிறார். எனவே, கோவலன் மாதவியுடன் ஒழுகிய பரத்தமை ஒழுக்கத்தைக் கவுந்தியடி கள் அறிதற்கு இதுகாறும் வாய்ப்பே நேர வில்லை. இங்ஙனம் கோவலனது குறைகள் எவற்றையும் அறியாமல், குணங்களை மட்டுமே தெரிந்து அவனை ஒரு சான்றோ னாக மதித்துப் போற்றும் தூய வாழ்க்கை யுடைய பெண் துறவியிடம், பயணம் முடிந்து அவர்கள் ஒருவரை ஒருவர் விட்டுப் பிரியும் வேளையில், கோவலன் வலிதிற் சென்று 'நெறியின் நீங்கியோர் நீர்மை யேன்' என்று தன்னை இழிவுபடுத்திக் கூறுகிறான்.

இனி, சிலர் மேற்சொன்ன கோவலனது கூற்றில், அவன் எந்த ஒரு நிகழ்ச்சியையும் குறிப்பிட்டுச் சொல்லாமல், 'நெறியின் நீங்கி யோர் நீர்மையேன்' எனப் பொதுப்படக் கூறியதனால், அவனுக்கும் மாதவிக்குமுள்ள பரத்தமையுறவு கவுந்தியடிகளுக்குப்

புலனாக மாட்டாது என வாதத்தின் பொருட்டு எதிர் மறுத்துக்கூறக் கூடுமாயி னும், அவன் கூறிய சொற்கள், கோவலனது வாழ்க்கையில் ஏதோ பெரும் பிழை ஒன்று நேர்ந்து, அதற்காக அவன் இங்ஙனம் தனக் குத்தானே இரக்கப்படுகிறான் என்ற உணர்வைக் கவுந்தியடிகளுக்கு உண்டு பண்ணி, அந்த அளவுக்கு மதிப்பதற்கு இடமளிக்கின்றன என்பதை மறுப்பதற் கில்லை. இவ்வாறு கவுந்தியடிகளின் நன்மதிப்பிலிருந்து வீழ்ச்சியுறும் வகையில் கோவலன் அடிகளுடன் உரையாடுவது அவன் உள்ளம் அப்பொழுது கலக்க முற்றிருந்ததையே வெளிப்படுத்துகிறது.

இதுமட்டுமா? கோவலனுக்குத் தனது வணிக குல மக்களைக் காணவேண்டும் என்ற எண்ணமும் இதற்கு முன்பு எழுந்ததில்லை. கோவலன் கண்ணகி அளித்த இரு சிலம்புகளையும் பெற்ற வேளையில் அவற்றை மதுரையில் கொண்டு விற்று, கிடைக்கும் பொருளை முதலாக வைத்து வாணிகம் செய்து இழந்துவிட்ட அணிகலன் களையும், அழிந்துபோன செல்வத்தையும் ஈட்ட விரும்புவதாகவே அவளிடம் கூறினான்.

சிலம்பு முதலாச் சென்ற கலனொடு
உலந்த பொருள் ஈட்டுத லுற்றேன் மலிந்தசீர்
மாடமதுரை யகத்துச் சென்று
(கனாத்திறம் 74-6)

என்று அவன் கூறுதல் காண்க. கவுந்தியடிகள் முதன்முதலாகச் சந்தித்த வேளையிலும், அடிகள் கோவலனும் கண்ணகியும் ஊரை விட்டு வருவதன் காரணம் யாதென்று வினவியதற்கு விடையாக,

மதுரைமூதூர் வரைபொருள் வேட்கை யேன் — (நாடுகாண். 51) என்றே கோவலன் கூறுகிறான். இவற்றிலிருந்து மதுரையிற் சென்று சிலம்பை விற்று வாணிகம் செய்து பொருளீட்டுதலே அவனது நோக்கமாக இருந்ததன்றி, அங்குள்ள மன்னர்பின்னோர் களான குல வணிகர்களைக் காணும் எண்ணம் முன்பு அவனுக்கு இருந்ததில்லை என்பது தெளிவாகிறது. எனவே, அவ் வெண்ணம் அவன் புறஞ்சேரியில் கனவு கண்டு கலங்கியதன் விளைவாகப் பின்னர்த் தோன்றியதேயாம் என்று எளிதில் உணரலாம்.

மதுரையிலுள்ள வணிகர்களைத் தான் காண விரும்பிய செய்தியைக் கோவலன் கவுந்தியடிகளிடம் கூறும்போது, அவர் களைக் கண்டுவிட்டு மீளும்வரையிலும் கண்ணகியைத் தம் பாதுகாவலில் வைத்துக் கொள்ளும்படி அடிகளை வேண்டுகிறான்.

தொன்னகர் மருங்கின் மன்னர் பின்னோர்க்கு
என்னிலை யுணர்த்தி யான்வருங் காறும்
பாதக் காப்பினள் பைந்தொடி யாகலின்
ஏத முண்டோ அடிகள் ஈங்கு —
(ஊர்காண். 21-4)

'அடிகாள்! மதுரை வணிகர்களுக்கு எனது நிலைமையைக் கூறி யான் வருந் துணையும் கண்ணகி உங்கள் பாதங்களாகிய காவலையுடையாள்; இவ்விடத்தில் இவளுக்குத் தீங்கு உண்டாகுமோ' என்று கூறுகிறான். இவ்வாறு கூறுவதிலும் அவனது மனத்தடுமாற்றம் புலனாவதைக் கூர்ந்தறியலாம். இதனை அறிதற்பொருட்டு, கண்ணகி கோவலர்களிடம் கவுந்தியடிகள் வைக்கும் ஆழ்ந்த அன்பினை நினைவு கூர் வோம்.

கவுந்தியடிகள் கோவலனையும் கண்ணகியையும் தம் தவப்பள்ளியில் வைத்து முதன்முதலாகக் கண்டபொழுதே அவர்களது உரு, குலம், ஒழுக்கம், நோன்பு இவற்றால் கவரப்பட்டு அவர்கள் மீது ஈடில்லாத அன்பும் அருளும் காட்டுகிறார். இருவரும் மதுரைக்குச் செல்வதை அறிந்த தும் அவர்களுக்குவழித்துணையாக இருக்க விரும்பி, மதுரையிலுள்ள ஆருகத சமயத் துறவியர்களிடம் அறவுரை கேட்கவேண்டு மென்று தாம் முன்பு எண்ணியிருந்ததை அப்பொழுது நிறைவேற்றிக் கொள்ள முடிவு செய்து அவர்களுடன் புறப்படுகிறார். வழிப்பயணத்தின்போது கண்ணகியைப் பெற்ற தாயினும் பரிந்து பேணுகிறார். கோவலனது கவலையுற்ற மனத்திற்கு ஆறுதல் அளிக்கிறார். புறஞ்சேரிக்கு வந்த பின்னரும், கோவலனையும் கண்ணகியை யும் அடைக்கலமாகக் கொள்ளத்தக்க தகுதி யுடையோர் கிடைத்து அவர்களிடம் அளிப் பது வரையிலும், இல்லறத்தார் தங்குதல் கூடாத அப்புறஞ்சேரியுள் அவ்விதியையும் மீறித் தம்முடன் ஒருநாள் தங்கவைத்துப் பாதுகாக்கிறார். மாதரியைக் கண்டு அவளது அருங்குணங்களையும் தகுதியையும்

எண்ணி அவளிடம் அடைக்கலமாக அளித்த தோடு, அவர்களை இன்னவாறு பேண வேண்டும் என்பதையும் தம் அன்பின் மிகுதி யால் விளக்கிச் சொல்லி, மாதரி அவர்களை அழைத்துச் செல்வதைத் தம் கண்ணாற் கண்ட பின்னரே தாம் வந்த

மறவுரை நீத்த மாசறு கேள்வியர்
அறவுரை கேட்டாங்கு அறிவனை
(நாடுகாண். 56-7)

ஏத்தும் காரியம் குறித்து நினைக்கிறார்.

அடிகளாரின் இத்தகைய பேரன்பினை யும், கைம்மாறு கருதாத உதவியையும் பயண நாள்கள் முழுவதும் கண்ணாற் கண்டும், அவற்றின் பயனைத்துய்த்தும் வந்த கோவலன் மதுரை நகருக்குள் தான் செல்ல எண்ணிய நோக்கத்தைக் கவுந்தியடிகளிடம் அறிவித்து அவர் இசைவைப் பெற்றுக் கொள்ளுதல் ஒன்றே போதுமானது. அடி களின் பாதுகாவலிலும் அரவணைப்பிலும் இப்பொழுதும் இருந்து வரும் கண்ணகியை ஒரு புதிய ஆளைக் குறித்துச் சொல்வது போல 'யான் வருங்காலும் பாதப் காப்பி னள்' என ஒம்படை கூறுவது மிகையே யாம். தான் கூறாமலே அடிகள் தொடர்ந்து பாதுகாத்து வருவார் என்பதில் கோவலனுக்கு நம்பிக்கை இருக்க வேண்டும். கோவலனுடைய பேச்சிலிருந்து அந்த நம்பிக்கை அவனிடம் இருந்ததாகத் தெரிய வில்லை. கண்ணகியைப் பாதுகாத்துக் கொள்ளும்படி அடிகளிடம் கூறிவிட்டு அதைத் தொடர்ந்து கண்ணகிக்கு இங்கு ஒரு தீங்கு உண்டாகுமோ எனக் கோவலன் கூறு வது கவுந்தியடிகளின் பாதுகாவலிலும் கண்ணகிக்கு ஏதும் வந்துவிடுமோ என்று அவன் கூறியதை எதிர்மறை வினாவாக்கிக் கொண்டு 'ஏதம் இல்லை' என்ற பொரு ளையே அவன் கருதினான் என்று கூறக் கூடுமாயினும், 'ஏதம் வந்துவிடுமோ' என்று முதலில் அவன் எண்ணி அஞ்சியதை மறுப் பதற்கில்லை. அங்ஙனம் தோன்றிய அச்சத்தை அதுதோன்றிய பொழுதே முன்னையப் பட்டியலை நினைந்து பார்த்து, 'ஏதம் வராது' எனத் துணிந்து கோவலன் அகற்றியிருக்க வேண்டும். அதனை அடி களிடம் போய்க் கூறும் வேண்டற் பாடில்லை. கோவலன் எண்ணிக் கூறினும், எண்ணாமற் கூறினும் அவனது வாய்ச் சொற்களிலிருந்து கவுந்தியடிகளின் பாது காவலிலும் கண்ணகிக்கு ஏதம் வந்து விடுமோ என அவன் மனம் அஞ்சிக் கலங் கியதைக் கூர்ந்து நோக்குவார் உணர்வார்.

இத்தகைய கலக்கமுற்ற உள்ளத்துடன் மதுரை நகருள் புகுந்த கோவலன், அங்கே பல தெருக்களையும், சதுக்கம், மன்றம், கவலை, மறுகு முதலிய இடங்களையும் கண்டுவிட்டு, தான் எண்ணிச் சென்ற தன்குல வணிகர்களைக் காணுதலாகிய செயலை மறந்தவனாய்ப் புறஞ்சேரிக்கு மீண்டு வந்தான். மாதரி அளித்த உதவியில் கண்ணகி ஐயையின் துணையுடன் உணவு சமைத்துக் கோவலனுக்கு அளிக்கிறாள். உணவு உண்டபின் கோவலன் கண்ணகியை அருகழைத்து, அவளுடன் சிறிது நேரம் உரையாடுகிறான். அவ்வுரையாடல் கதை நிகழ்ச்சிக்கு மிக முக்கியமானது. அதன். வாயிலாகக் கோவலனது மன நிலையை இளங்கோ நமக்குப் புலப்படுத்துகிறார் அதனைப் புலப் படுத்தும்பொருட்டே அவ்வுரையாடலை அவர் காதையுள் அமைத்துள்ளார் எனக்கருதல் வேண்டும். கோவலன் கண்ணகியைக் கற்கள் நிறைந்த காட்டு வழியே அவள் மெல்லடி நோவ அழைத்து வந்ததற்காகத் தனது பெற்றோர் கள் எத்தகைய துன்பத்தை அடைந்தார் களோ என்று எண்ணிக் கவல்கின்றான். அங்ஙனம் எண்ணியபோது அவன் மனத் துள் எழுந்த பெருந்துயரத்தை அவனால் தாங்க முடியவில்லை. உள்ளம் கலங்கிப் பேதுற்ற நிலையில்,

மாயங் கொல்லோ வல்வினை
கொல்லோ
யானுளங் கலங்கி யாவதும் அறியேன்
(கொலைக். 61-2)

என்று தன் மனம் குழப்பமுற்றிருப்பதைத் தானே வாய்விட்டுக் கூறுகிறான். மாதவியை விட்டுப் பிரிந்ததுமுதல் நிகழ்ந்தவை அனைத்துமே அவனுக்கு மாயம் போன்று தோன்றுகிறது. தனக்கு வரும் துன்பங் களுக்குத் தான் முற்பிறப்பில்செய்த தீவினை காரணமாக இருக்குமோ என்று எண்ணி வருந்துகிறான். தன் உள்ளம் கலக்கமுற்றிருப் பதையும் அவன் உடன்பட்டுக் கூறிவிடு வான். இங்கு இளங்கோ கோவலனது மன நிலையை அவனைக்கொண்டே கூற வைக்

கிறார். எனவே, அதனை மெய்ப்பிப்பதற்கு வேறு சான்றுகள் வேண்டா. கோவலன், கண்ணகியது உயர்ந்த பண்புகளை உணர்ந்து, அத்தகைய அருங்குணத்தாளைத் துன்பத்திற்கு ஆளாக்கியதற்காகத் தன்னை நொந்து கொள்கிறான். அவளது நற்குணங் களைப் பாராட்டி,

> பொன்னே கொடியே புனைபூங்
> கோதாய்
> நாணின் பாவாய் நீணில விளக்கே
> கற்பின் கொழுந்தே பொற்பின் செல்வி
> (கொலைக். 89-91)

என்று அவளைப் பரிவுடன் அழைத்து அவளது சிலம்புகளில் ஒன்றைத் தான் விற்று வரப் போவதாகவும், திரும்பி வரும் வரை யிலும் அவள் கலங்காதிருக்க வேண்டும் எனவும் கூறுகிறான்.

இங்கே கோவலன் இரு சிலம்புகளையும் விற்பதற்கு எடுத்துச்செல்லாமல் ஒன்றை மட்டும் எடுத்துச் செல்வதாகக் கூறுவதும், கவனத்திற்குரியதாகும். புகாரிலிருந்து புறப் படும்போது இரு சிலம்புகளையும் விற்கும் நோக்கத்துடன் இரண்டையும் எடுத்து வருகிறான். இப்பொழுது அவற்றை விற்கக் கொண்டு செல்லும் நேரத்தில், கண்ணகியு டன் உரையாடி விடைபெற்றுப் பிரியும் வேளையில் ஒன்றை மட்டும் விற்றுவரப் போவதாகக் கூறுகிறான். சிலம்புகள் இரட்டையாகவே அணிதற்குரியன. இரட்டையாக விற்பதும் கொள்வதுமே மரபு. இரண்டாக விற்றால் மட்டுமே விற் பவர்களுக்கு நல்ல விலை கிடைக்கும்; வாங்குபவர்களுக்கும் பயன்படும். சிலம்பை விற்று வாணிகம் செய்ய விரும்பிக் கோவலன் அதனை இரட்டையாக விற்க எண்ணுவதே பொருத்தமானது. ஒற்றையாக விற்கும்போது அதிலுள்ள பொன், மணி இவற்றின் விலை மட்டுமே கிடைக்கும். இரட்டையாக விற்றால் அணிவதற்குப் பயன்படுதலில் இரு மடங்குக்கும் அதிக மான விலை கிடைக்கும். இது யாவரும் அறிந்த உண்மை. வணிககுலத்தில் தோன்றிய கோவலன் இதனை அறியாமல் இருக்க முடியாது. அங்ஙனமிருக்கவும், அவன் ஒரு சிலம்பையே விற்றுவரப் போவதாகக் கண்ணகியிடம் கூறுவதும், அதன்படி ஒன்றையே எடுத்துச் செல்வதும் அவன் யான் உளங்கலங்கி யாவதும் அறியேன்' என்று கூறியதையே மெய்ப்பிக்கின்றது.

(கோவலன் இரு சிலம்புகளையும் விற் பதற்கு எடுத்துச் சென்றிருந்தால் பொற் கொல்லனது சூழ்ச்சி வலைக்குள் விழ நேர்ந்திராது. அரண்மனைச் சிலம்புள் ஒன்றைக் கவர்ந்து அப்பழியைச் சுமத்து வதற்கு ஆளைத்தேடி அலையும் பொற் கொல்லனது வஞ்சனைக்கும் அவன் ஆளாகி இருக்கமாட்டான். மன்னனது காவலரைப் பொய்சொல்லி ஏமாற்றி அவரைக் கொண்டு கோவலனைக் கொல்வித்தலும் பொற் கொல்லனுக்கு இல்லாமற்போயிருக்கும்).

கோவலன் சிலம்பை எடுத்துக் கொண்டு மறுகில் வந்ததும் அரண்மனைப் பொற் கொல்லனைக் கண்டு அவனிடம் தனது சிலம்பைப் பொதியவிழ்த்துக் காட்டு கிறான். சிலம்பைக் கண்ணுற்ற பொற் கொல்லன் சூழ்ச்சி ஒன்றை உட்கொண்டு கோவலனைத் தன் சிறு குடிலில் இருக்கு மாறு கூறிவிட்டு, சிலம்பின் செய்தியை அரசனுக்கு அறிவிப்பதற்காக அரண்மனை நோக்கிச் செல்கிறான். கோவலன் நுண்மதி யுடையவனாக இருந்தால், சிலம்பைத்தானே அரசனிடமோ அரண்மனை அதிகாரி யிடமோ காட்டுவதாகக் கூறி பொற் கொல்லனுடன் அரண்மனைக்கே சென்றிருப் பான். ஆனால், கோவலனுக்கு அக்கருத்து எழவில்லை. பொற்கொல்லன் மன்னனையும் தன் சூழ்ச்சிக்கு உள்ளாக்கித் தன் சொல்லை அவன் நம்பும்படி செய்து, கள்வனைக் கொன்று சிலம்பைக் கொணருமாறு அவனிடமிருந்து ஊர்காப்பாளருக்கு ஆணையும் பிறப்பித்து அவ் ஆணையை நிறைவேற்றுவதற்காக அக் காவலரைக் கோவலனிடம் அழைத்து வருகிறான். தன் சிலம்பைக் குறித்து அரசனிடம் அறிவித்து வருவதாகக் கூறிச் சென்ற பொற்கொல்லன் ஊர்க் காவலர்களுடன் திரும்பி வருவதை யும், அவர்களிடம் சிலம்பைக் காட்டுமாறு தன்னிடம் கூறுவதையும் தெரிந்தவுடனேயே கோவலன் இதில் ஏதோ பூட்டகம் இருக் கிறது என்பதைக் குறிப்பால் உணர்ந்து கொள்ள வேண்டும். பொற்கொல்லன் காவலர்களைத் தனியாக அழைத்துச் சென்று அவர்களிடம் மறைமுகமான எதையோ பேசிக் கொண்டிருப்பதிலிருந்து

சூழ்ச்சி ஒன்று தனக்கு எதிராக உருவாகிறது என்பதைக் கோவலன் கூர்ந்து உணர்ந்து, தானே அவர்களிடம் சென்று அவர்கள் பேசிக் கொள்வது யாதென்பதைத் தெரிந்து தன்து மெய்ம்மையைக் காவலர்களிடம் விளக்கியிருக்க வேண்டும். அங்ஙனம் விளக்கியிருந்தால் காவலர்களுள் கல்லாக் களிமகன் ஒருவனால் கோவலன் கொலைப் படும் நிகழ்ச்சி தவிர்க்கப்பட்டிருக்கும். ஆனால், கோவலனோ சிந்திக்கும் திறன் அற்றவனாகவும், பகுத்தறிவைப் பயன் படுத்த இல்லாதவனாகவும், பித்துப்பிடித்த வன் போல பேசாநிலை கொண்டிருக் கிறான். இந்தப் பேதமையும் செயலறவும் கனவு கண்டு மயங்கிய அவனது மனத்தின் வெளிப்பாடுகளேயாம் என்பதில் ஐய மில்லை.

மாடலமறையோன் குறிப்பித்தவாறு ஆண்மை, வீரம், தியாகம் ஆகிய பண்புகள் நிரம்பி, எந்தத் துன்பத்தையும் எதிரேற்கும் ஆற்றலுடைய தலைமகனாகிய கோவலனை வஞ்சப் பொற்கொல்லன் ஒருவன் சிறிய சூழ்ச்சி ஒன்றால் மிக எளிதாகக் கொன்று விட்டான் என்ற காப்பிய அமைப்பைப் பொருத்தமுடையதாக அறிஞர் உலகம் ஏற்றுக் கொள்ளுமா என்று அயிர்த்த இளங்கோவடிகள் அம் முடிவு அவனுக்கு நேர்வதற்கு முன்பே அதற்குரிய நெறியிலே அவனது உள்ளத்தைப் பக்குவப்படுத்து கிறார். அதற்காகவே 'புறஞ்சேரி இறுத்த காதை' ஒன்றைப் படைத்து, வழி நடந்த களைப்பு அகல ஓய்வு கொள்ளும் காரணத்தை முன்னிட்டு, கவுந்தி, கண்ணகி, கோவலன் ஆகிய மூவரையும் ஒருநாள் அங்கே தங்கச் செய்து, அன்றிரவின் கடைடையாமத்தில் கோவலனைக் கனவு காண வைத்து, அதனால் ஏற்கெனவே கவலையுற்றிருக்கும் அவன் உள்ளத்தில் அச்சத்தையும் திகிலையும் உண்டாக்கி, புகலிடமாக மதுரை வாணிகரை அவன் அடைய எண்ணியதையும் இடையே மறக்க வைத்து, முடிவில் மாதரி வீட்டிற்கு அடைக்கலமாக அனுப்புகிறார். அங்கே உணவுண்ட கோவலனைச் சிலம்பு விற்கச் செல்லுமுன் கண்ணகியுடன் சிறிது நேரம் உரையாட வைத்து, அவ் வேளையில் அவன் தனது முன்னயக்கூடாவொழுக்கத்தையும், கண்ணகியின் அருங்குணங்களையும் அவள் வாழ்க்கை தன்னால் பாழானதையும் நினைந்து ஆறாத்துயரத்துள் ஆழும்படி செய்து அத்துயர மிகுதியில் உள்ளம் கலங் கிப் பேதுற்றுச் செயலறும் வண்ணம் அவனைச் சமைத்து, அந்நிலையில் பொற் கொல்லன் வைத்த கண்ணியில் அவன்தானே சென்று வீழ்ந்து மடியும்படி செய்துவிடு கிறார்.

காப்பியத் தலைவனாகிய கோவலனை அவனுக்குரிய உயர்ந்த பண்புகளிலிருந்து வேறுபடுத்தி, கொலை நிகழ்ச்சிக்குப் பக்குவம் செய்யும் புதுமையை இளங்கோ புறஞ்சேரியிறுத்த காதையுள் விளைப்பதை இதனால் அறியலாம்.

செங்கற் சுவர்களில் ஏற்படும் விரிசல்களும் தவிர்க்கும் வழிகளும்

க. அண்ணாமலை

சுவர்களில் விரிசல்கள் ஏற்பட்டால் உடனடியாகச் சுவர் விழப் போவதில்லை என்றாலும் குடியிருப்போருக்கு இவ் விரிசல்கள் அச்சத்தைக் கொடுக்கக் கூடியனவாக இருக்கின்றன.

சுவர்களில் ஏற்படும் விரிசல்கள் பழைய சுவர்களைவிட, புதிதாகக் கட்டப்படும் சுவர்களில் அதிகமாகக் காணப்படுகின்றன. புதியமுறைக் கட்டுமான உத்திகளாலும், செங்கற் சுவர்களை அதிகமாக வளைந்து கொடுக்கும் கற்காரையிலான (Reinforced Concrete) உத்திரங்களுடனும், தூண்களுடனும் சேர்த்துக் கட்டுவதாலும் இவ் விரிசல்கள் உண்டாகலாம். ஈரத்தினாலும், தட்பவெப்ப நிலை மாறுதல்களாலும் செங்கற் சுவர்களில் ஏற்படும் தன்மைகளைப் பல கட்டடப் பொறியாளர்கள் சரியாகத் தெரிந்து கொள்ளாமல் இருக்கிறார்கள். கற்காரையில் கட்டப்படும் கட்டடக் கூரைகளும், தளங்களும் பளுவின் காரணமாக வளைவதாலும், சுற்றுப்புற வெப்பத்தினால் சுருங்குவதாலும் தங்களைத் தாங்கிக் கொண்டிருக்கும் சுவர்களில் பொதுவாக எதிர்பார்க்காத விளைவுகளை ஏற்படுத்துகின்றன. பாராந்தாங்கிச் சுவர்களாகத் (load bearing walls) தற்காலத்தில் கட்டாமல், கற்காரையிலான தூண்களுடனும் உத்திரங்களுடனும் தடுப்புச் சுவர்களாக மட்டும் கட்டும் முறையினால் (Non load - bearing walls) இச் சுவர்கள் புதிய சுமைகளைச் சமாளிக்க வேண்டியுள்ளன. அத் திறன்களில் குறைபாடு இருந்தால், அவற்றில் விரிசல்கள் உண்டாகத் தொடங்குகின்றன.

நில நடுக்கோட்டுக்கு அருகில் உள்ள வெப்ப மண்டல நாடுகளில் ஒன்றான இந்தியாவில், தட்பவெப்ப நிலைகளிலும் ஈரத்தன்மைகளிலும் (Humidity) மிகுந்த வேறுபாடுகள் தோன்றுகின்றன. இதனால், சுவர்களின் விரிசல்களைத் தடுப்பது மிகவும் தேவை. இக் கட்டுரை விரிசல்களுக்கான காரணங்களையும் அதனைப் போக்கும் வழிகளையும் விளக்குகின்றது.

மிகு வெப்பத்தால் செங்கற் சுவர்களில் ஏற்படும் விளைவுகள்

செங்கற் சுவர்களில் வெப்பத்தால் ஏற்படும் நீள அதிகரிப்பு எண் (Coefficient of linear expansion) $5\times10^{-6}/^{\circ}C$ என்று விதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இந்தியத் தர விதிப்பீடு நிறுவனம் (ISI) இந்த நீள அதிகரிப்பு எண் (5 முதல் 7)/$10^{-6}/^{\circ}C$ என்று வரையறுத்துள்ளது. ஆனாலும், இந்த அளவையைச் செங்கற் சுவர்களுக்கு மிகவும் திட்டவட்டமாக விதிப்பீடு செய்ய இயலாது. வெப்பத்தினால் ஏற்படும் நீள அதிகரிப்பு சிறிது

வெப்பம் குறைந்தால், நீளமும் குறையும் என்பது தருக்க முறையில் நடக்கக் கூடும். ஆயினும், இது சுவரில் செங்கற்களுக்கு இடையில் உள்ள இடைபாடுகள் (friction) மற்றும், சில காரணங்களால் நடைமுறையிற் குறைவதில்லை. இதுபோன்ற காரணங்களால் அமெரிக்கா போன்ற நாடுகளில் நீள அதிகரிப்பு எண், வரையறுக்கப்பட்ட அளவைவிட 50 நூற்று வீதம் கூடுதலாக்கப்பட்டுள்ளது. வெப்பத்தால் ஏற்படும் நீள மாறுதல்கள் சுவர் கட்டப்பட்ட நேரத்தில் நிலவிய வெப்பம், சுவரின் திறம், அமைந்துள்ள திசை, சுவர் கட்டப்பட்டுள்ள செங்கல்லின் தன்மை, காற்றின் விசை ஆகியவற்றைப் பொறுத்து அமையும். செங்கல்லின் நீளவாட்டில் ஏற்படும் நீளக் குறைவினால் செங்கல்லுக்கும் கலவைக்கும் உள்ள ஒட்டுதல் (bond) குறைவதால் இரண்டு செங்கற்களுக்கும் இடையில் உள்ள இணைப்பில் (heat joint) விரிசல் விடத் தொடங்குகிறது.

காற்றில் உள்ள ஈரப்பசையால் செங்கற் சுவர்களில் ஏற்படும் விளைவுகள்

சூளைகளில் வேகவைத்தபிறகு, செங்கற்களை ஆறவைக்கும்போது செங்கற்கள் சுற்றுப்புறக் காற்றில் உள்ள ஈரப்பசையை ஈர்த்து நீளவாட்டில் நீளத் துவங்குகிறது. இந்த நீள அதிகரிப்பு உடனடியாக அதிக அளவிலும் பின்னர் நீண்ட காலத்திற்குச் சிறிய அளவிலும் தொடர்ந்து நிகழ்கிறது. காற்றில் உள்ள ஈரப்பசையால் செங்கற் சுவர்களில் ஏற்படும் நீள அதிகரிப்பு மிகவும் அண்மைக் காலத்தில்தான் இங்கிலாந்து நாட்டில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இங்கிலாந்திலுள்ள கட்டட ஆராய்ச்சி நிறுவனம் (Building Research Station, U.K.) மேற்கூறிய காரணத்தால் எட்டு ஆண்டுகளில் ஒரு செங்கற் சுவர், ஒரு மீட்டருக்கு 1 மில்லிமீட்டர் அளவு (1 in 1000) அதிகரிப்பதாகவும், இந்த அளவில் பாதி, முதல் கிழமையிலேயே (வாரத்திலேயே) நிகழ்வதாகவும் ஆராய்ந்து கண்டுபிடித்துள்ளது. இந்த அளவு, முறையாக வேக வைக்காத செங்கற்களைக் கொண்டு கட்டும் சுவர்களுக்கு இன்னும் அதிகமாகப் பெருகும். நம் நாட்டில் செங்கற்கள் பொதுவாக நாட்டுப் புறச் சூளைகளில் (Country Kiln) வேக வைக்கப்படுவதால் 1 மீட்டருக்கு 2 மில்லி மீட்டர் வரை இந்த நீள அதிகரிப்பு அமையலாம். இங்கே விளக்கியுள்ள காரணத்தால், சூளையிலிருந்து வேகவைத்து எடுத்த உடனேயே செங்கற்களைச் சுவர் கட்டுவதற்குப் பயன்படுத்தலாம் என்று கொள்ளக்கூடாது. 2 கிழமையாவது காற்றில் ஆறிய பின்தான் சுவர் கட்டுவதற்குப் பயன்படுத்த வேண்டும். நகர்ப்புறங்களில் செங்கற்களின் தேவை அதிகமாக இருப்பதால், செங்கல் விளைவிப்போர் சூளையிலிருந்து எடுத்த உடனேயே பொதுமக்களுக்குக் கொடுத்து விட வாய்ப்புண்டு. ஈரப்பசையால் ஏற்படும் நீள அதிகரிப்பு, முதல் ஒரு கிழமையில் அதிக அளவில் இருப்பதால், இச் செங்கற்களை உடனடியாகப் பயன்படுத்தினால் செங்கற் சுவர்களில் விரிசல்கள் ஏற்படலாம்.

வேறுபட்ட நீள அதிகரிப்பால் (Differential Thermal Expansion) சுவர்களில் ஏற்படும் விரிசல்கள்

சுவர்களினது குறைந்த நெகிழ்வுத் தன்மை ஏற்றத் தாழ்வுடனும் (Modulus of Elasticity) குறைந்த உயர / பரும அளவுகளுடனும் இருப்பதால் சற்றுக் கடினத் தன்மை (rigid) வாய்ந்தவையாக உள்ளன. எனவே குறைந்த அளவுள்ள உருவ மாற்றங்கள் அதிக அளவில் அழுத்தங்களை (stresses) உருவாக்கி, தடுக்காவிடில் சுவர்களில் விரிசல்களை ஏற்படுத்துகின்றன. எடுத்துக் காட்டிற்குப் படம் 1-இல் கட்டடத்தை எடுத்துக் கொள்வோம்.



படம்-1

நீளச் சுவர் 7 மீட்டர் நீளமுடையது. அதில் 1.4 மீ × 1.4 மீ. அளவுடைய இரண்டு சாளரங்கள் அமைந்துள்ளன. இரண்டு சாளரங்களுக்கு இடையேயுள்ள 1.5 மீட்டர் பகுதியை 'அ' என்றும், 1.35 மீட்டர் ஓரப்பகுதிகளை 'ஆ' என்றும் கொள்வோம். இருபுறமும் சமமாக இருப்பதால் 'அ' பகுதியில் எவ்வித மாற்றமும் ஏற்படாது. 'ஆ' பகுதி சுவர்களில் வேறுபட்ட நீள அதிகரிப்பு படம் 2-இல் காட்டப்பட்டுள்ளதுபோல் அமையும்.



படம்-2

வேறுபட்ட நீள அதிகரிப்பு 'ஆ' பகுதிச் சுவர்களை மட்டம் (Shear) அல்லது வளைவு (Flexure) அழுத்தத்திற்கு உள்ளாக்கி, படம் 1-இல் கண்டது போன்ற விரிசல்களை ஏற்படுத்துகிறது. இதே கட்டடத்தின் மேல் ஒரு மாடி கட்டினால்; சுவரில் வரும் பளு அழுத்தம் அதிகமாகி மட்ட அழுத்தத்தின் விளைவைக் குறைக்கும். அதனால், கீழ்மாடியில் இந்த வகை விரிசல் ஏற்படாது. ஆனால், இந்த விரிசல் மேல் மாடிச் சுவரில் ஏற்படலாம்.



படம் – 3

பெரிய சுவரில் ஒரு பகுதி வெளிப்புற வெப்பத்திலிருந்து படம் 3-இல் காட்டியுள்ளபடி சிறிய அறை அமைந்துள்ளதால் மறைக்கப்படலாம். இதனால், ஒரே சுவர் பல வகையான வெப்ப அளவுகளுக்கு உள்ளாக்கப்படுவதால், வேறுபாடான நீளப் பெருக்கம் ஏற்பட்டு முன்னர் விளக்கியபடி சாய்வு விரிசல்கள் வரும். இம் மாதிரியான சூழ்நிலைகளில் பல்வேறு வெப்பங்களுக்கு உள்ளாகும் இடங்களில் சுவரில் விரிவைக் குறைக்கும்படியான இணைப்புகளை (Expansion Joints) அமைக்க வேண்டும்.

கற்காரைத் தளங்கள் சுருங்குவதால் அதைத் தாங்கிக் கொண்டிருக்கும் சுவர்களுக்கு ஏற்படும் விளைவுகள்

கற்காரையினால் ஆகிய மேல் தளங்கள் வெப்பத்தினால் சுருங்கும்போது குறுக்கு வாட்டில் உள்ள சுவர்களை வளைவு (Flexure) அழுத்தத்திற்கும், நீளவாட்டில் உள்ள சுவர்களை வளைவு அல்லது மட்ட (Shear) அழுத்தத்திற்கும் உள்ளாக்குகின்றன (படம் 4). தளங்களைச் சுவர்களுடன் கெட்டியாக இணைப்பதாலும், சுவர்களுக்கும் தளங்களுக்கும் கரடுமுரடான இணைப்பை (Rough joint) ஏற்படுத்துவதாலும் இவ்வழுத்தங்களின் அளவு அதிகமாகி, சுவர்களில் படம் 4-இல் காட்டியுள்ளபடி விரிசல்கள் ஏற்படுகின்றன.



படம் - 4

தளங்களுக்குப் பயன்படுத்தும் கற்காரையின் சுருங்கும் தன்மையை (drying shrinkate) 0.046 இருந்து 0.065%க்குள் அமையுமாறு செய்தால் இவ் விரிசல்களைக் குறைக்க முடியும்.

கற்காரைத் தளங்களின் வளைவினால் (Deflection) சுவர்களுக்கு ஏற்படும் விளைவுகள்.



படம்-5

படம் 5-இல் பளுவின் காரணமாகக் கற்காரைத் தளங்கள் வளைவினால் சுவர் களுக்கு ஏற்படும் விளைவுகளைக் காண லாம். பளு 'W' தளத்தின் மேல் வருவதாகக் கொள்வோம். 'இத் தளத்தை மேல் கூரைத் (Roof) தளமாகக் கொண்டால், சுவருக் குத் தளத்தின் மூலம் தவிர வேறு எந்தப் பளுவும் வராது. தளம் வளையும்போது தளத்தின் கீழ்மட்டத்திற்கும் சுவரின் மேல் மட்டத்திற்கும் இடையில் விரிசல் ஏற்படும்.

செங்கற்சுவர்கள் மிகக் கெட்டித் தன்மை (Rigid) வாய்ந்தவையாதலால் மிகவும் சிறிய நகர்வைக்கூட தாங்கிக் கொள்ள முடியாது. இதனால் விரிசல்கள் தளத்திற்கும் சுவருக்கும் இடையில் நீளவாட்டில் காணப் படுகின்றன (படம் 6). ஆனால், இவ்வகை விரிசல்கள் மேல் கூரைத் தள மட்டங்களில் தான் பொதுவாகக் காணப்படும்.

படம்.6

பளு தாங்கும் சுவர்கள் (Load - bearing walls) ஒரு வீட்டில் எல்லாப் பகுதிகளிலும், ஒரே அளவு கனமும், ஒரே பொருளைக் கொண்டதாகவும் ஒரே வகையான கலவையைக் கொண்டும் கட்டப்பட வேண்டும். இல்லையென்றால் கட்டடத்தில் பல்வேறு பகுதியில் உள்ள சுவர்கள் ஒவ்வொன்றும் வெவ்வேறு அளவு சுவர் நகர்வுகளுக்கு (Deformational strain) உள்ளாக நேரிடலாம். இச் சமயங்களில் குறுக்குச் சுவர்கள் ஒன்றையொன்று இணைப்பதால், அவை மட்ட நகர்வுக்கு உள்ளாகிப் படம் 7-இல் காண்பித்துள்ளபடி விரிசல்களை உண்டாக்கும். எடுத்துக்காட்டாக இந்



படம் - 7

நான்கு மாடிக் கட்டடத்திற்கு அமைந்த வெளிச்சுவர் கற்காரைக் கூடு வடிவமான கல்லைக் (Hollow concrete block) கொண்டும் உட்புறச் சுவர் செங்கல்லைக் கொண்டும் கட்டப்பட்டதாக . வைத்துக் கொள்வோம். கற்காரைச் சுவரும், செங்கற் சுவரும் வெவ்வேறு விதமாக அமுங்குவதால் அவைகள் இரண்டையும் இணைக்கும் சுவர் கள் வெடிப்புக்குள்ளாகின்றன. எனவே, கட்டடங்களில் ஒரு மட்டத்தில் ஒரே மாதிரியான கற்களையும், கலவையையும் கொண்டு கட்டினால் இதைப் போன்ற விரிசல்களைத் தவிர்க்கலாம்.

நில நகர்வுகளால் சுவர்களில் ஏற்படும் விரிசல்கள்

சில வீடுகளைக் கீழ்த்தரை மட்டம் வரை கருங்கற் சுவர்களாகவும், மட்டத்திற்குமேல்

செங்கற் சுவர்களாகவும் கட்டுகிறார்கள். முன்பு விளக்கிய காரணங்களால் — வெப்ப மாற்றத்தினாலும் காற்றிலுள்ள ஈரப்பசை யினாலும் செங்கற் சுவர்கள் கருங்கற் சுவர் களைவிட நாளடைவில் நீளத்தில் அதிகரிக் கின்றன. ஆனால், செங்கற் சுவருக்கும் கருங்கற் சுவருக்கும் கலவைப் பிடிப்பு இருப்பதால் இந் நீள வேறுபாடு சுவர் மூலை களில் ஒருங்கிணைந்து படம் 8-இல் காண் பித்துள்ளபடி விரிசல்களை உண்டாக்கு கிறது.



படம் - 8

களிமண், மழைக் காலங்களில் விரி வடையும் தன்மையும் (swelling) கோடைக் காலங்களில் சுருங்கும் தன்மையும் (Shrinkate) கொண்டது. குறிப்பாக அடிப்படைகள் (Foundations) இந்த வகைக் களிமண் பூமியின்மேல் போடப்பட்டால் வீட்டின் பல பாகங்கள் வேறுபட்ட முறை யில் உயரவாக்கில் நகர்கின்றன. (Differential Vertical Settlement) இதனால் சுவர்களின் கீழ்மட்டங்களில் குறிப் பாகச் சாளரங்களுக்குக் கீழ் விரிசல்கள் ஏற்படுகின்றன (படம் 9). இவ் வகை


படம் 9

விரிசல்கள் சில போது சாளரங்களின் கீழ் உள்ள சுவருக்கும் சாளரங்களின் பக்கத்தில் உள்ள சுவருக்கும் இடையே உள்ள பளு வேறுபாடுகளினாலும், வெப்ப வேறுபாடு களினாலும் ஏற்படக் கூடும்.

அறைகளின் மூலைச் சுவர்களில் ஏற்படும் விரிசல்கள்

கற்காரைத் தளங்கள் சுருங்கும்போதும் வளையும்போதும் வெளிப்புறச் சுவர்கள் தளங்களுடன் சேர்ந்து வளைந்து சுருங்கு கின்றன. ஆனால், மூலைகளில் ஒரு சுவரும் இன்னொரு சுவரும் ஒன்றுடன் ஒன்று இணைந்திருப்பதால் அவைகள் எளிதாகச் சுருங்கா. இவ்வித உள் எதிர்ப்பு வலிமை யால் இடைப்பட்ட சுவர்கள் வளைந்தும், மூலைச் சுவர்கள் வளையாமலும் படம்-10 -இல் காண்பித்துள்ளபடி இருக்கின்றன. இதனால், மூலைக்கு இரு பக்கங்களிலும் உயரவாட்டத்தில் விரிசல்கள் ஏற்படக் கூடும்.

படம்-10

கம்பியினால் வலுவூட்டிய கற்காரை யினாலான தூண்களுக்கும் உத்திரங் களுக்கும் இடையில் கட்டப்படும் சுவர்களில் ஏற்படும் விரிசல்கள்

தற்காலத்தில் பொதுவாக அலுவலகக் கட்டடங்களும் அடுக்கு மாடி வீடுகளும் சட்டகக் கட்டுமான முறையில் (R.C. Framed Construction) அதிகமாகக் கட்டப்படுகின்றன. இச் சட்டகங்களைக் கட்டிவிட்டு இடைப்பட்ட பகுதியில் செங்கற் சுவர்களைக் கொண்டு நிரப்புகிறார் கள். கற்காரையில் ஆன 'சட்டகங்கள்' எளிய பளுவினாலும் வெப்பத்தினாலும்

உருமாற்றம் அடையும் போதும் அதிக நாள்கள் நிகழும் படருதல் (Creep) போன்ற தன்மைகளாலும் தன்னுடன் சேர்த்துக் கட்டப்படும் சுவர்களை அழுத்த ஆரம்பிக்கின்றன. கற்காரையினாலான சட்டகங்கள் இவ்வகை நகர்வுகளைத் (Movements) தங்களுக்கே உரித்தான நெகிழ்வுத் தன்மையால் (Flexible) ஒரு விரிசலும் வராமல் சமாளிக்கின்றன. ஆனால், சுவர்கள் கெட்டித் தன்மை (Rigid) கொண்டதால் சட்டகங்களுடன் இணைந்து நகரமுடியாமல் வெடிக்கத் தொடங்கி விடுகின்றன. இச்சுவர்கள் எப் பளுவையும் எடுக்காததால் உத்திர மட்டத்தில் சிறிது இடைவெளி விட்டு, அதைச் சுண்ணாம்புக் கலவை போன்ற மென் பொருளைக் கொண்டு அடைப்பதால் இச் சுவர்களின் விரிசல்களைக் குறைக்கலாம்.

செங்கற் சுவர்களில் ஏற்படும் விரிசல்களைக் குறைப்பதற்கு வேறு சில வழிமுறைகள்

விரிவைக் குறைக்கும் இணைப்புகளை (Expansion Joints) உயரவாட்டத்திலும் நீள வாட்டத்திலும் அமைப்பதால் செங்கற் சுவர்களில் உள்ள விரிசல்களைக் குறைக்கலாம். இவ் விணைப்புகள் 15 மீட்டருக்கு ஒருமுறை அமைந்தால் மிக நல்லது. இணைப்பின் இடைவெளி 15 மில்லி மீட்டர் கனத்திற்குக் குறையாமல் இருக்க வேண்டும் (படம் 11). இவ்விணைப்பில் அடைக்கக் கூடிய அடைப்பான் (Sealant) 50 நூற்று விகிதம் சுருங்கி விரியும் நெகிழ்ச்சித் தன்மையுடையதாக இருக்க வேண்டும்.



படம் 11

சுவருக்கும், மேற்கூரைத் தளத்திற்கும் இடையே உள்ள இணைப்பை, நெகிழ்ச்சித் தன்மை (Flexible) உடையதாகச் செய்ய வேண்டும். தளத் தகடைக்குக் (சிலாபிற்கு) கீழ் படம் 12-இல் காட்டியுள்ளபடி தார்த் தாளின் இரண்டு வரிகள் அடுக்கலாம். அல்லது 25 மில்லி மீட்டர் கனத்திற்குச் சுண்ணாம்புக் கலவையையோ 'பிளாஸ்ட்டர் ஆப் பாரிசு' (Plaster of Paris) கலவையையோ அவற்றின் மேல் பூசி, பின்னர் தளத்தைப் போடலாம்.



படம் - 12

கூரைத் தளங்களின் அளவை, கூடுமான வரை 5 மீட்டருக்கு மேல் போகாமல் பார்த்துக் கொள்வது நல்லது. களிமண் நிலத்தில் வேண்டிய அளவு வலுச் செய்யப்பட்ட கற்காரையினாலோ இரண்டு குமிழ்களுடன் கூடிய பூமிக்குள் துளைத்துச் செல்லும் தூண்களாலோ (Under-reamed piles) அடிப்படை அமைந்து அதன்மேல் செங்கற் சுவர்களைக் கட்டலாம். பெரிய சாளரங்களைச் சுவரின் மூலைகளுக்கு அருகில் அமைக்காமல் இருத்தல் நலம்.

முற்காலத்தில்கட்டிய கட்டடங்களை விட தற்காலக் கட்டடங்களில் அதிக விரிசல்கள் ஏற்படுவதற்கு மிக இன்றியமையாத காரணம், நாம் சுவர்க் கலவையில் சுண்ணாம்பைச் சேர்க்காததுதான். புதினக் காலத்தில்கூட மேல்நாடுகளில் சுவர் கட்டுவதற்குப் பயன்படுத்தும் சிமெண்டுக் கலவையில் சிறிதளவு சுண்ணாம்பு சேர்த்துத்தான் கட்டுகிறார்கள். சுண்ணாம்பு மட்டும் சேர்த்துக் கட்டடச் சுவர்களைக் கட்டிய நாம் தற்போது சிமெண்டுக் கலவையைப் பயன்படுத்துவதால், சுவர்களின் கெட்டித் தன்மையை (Rigidity) இன்னும் கூட்டுகிறோம். சுண்ணாம்பு சேர்த்தால் அது சுவரைக் கொஞ்சம் மிருதுவாக்குவதோடு

முன் கூறிய பல காரணங்களால் கட்டடத்தில் ஏற்படும் அசைவுகளைத் தானே வயப்படுத்துக் கொள்கிறது. நாம் தற்போது பயன் படுத்தும் சிமெண்டு: மணல் *1:5, 1:6, 1:8* என்ற கலவை விகிதங்களுக்குப் பதிலாக முறையே சிமெண்டு: சுண்ணாம்பு: மணல்- *1:1:6; 1:2:9; 1:3:12* என்கிற கலவை விகிதத்தைப் பயன்படுத்தினால் பெரும்பாலான கட்டட விரிசல்களைக் கூடுமானவரை குறைத்து விடலாம்.

நன்றியுரை:

இக்கட்டுரை, கட்டுரை ஆசிரியரின் ஆங்கிலக் கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டது. இக்கட்டுரையைத் தமிழில் வெளியிடுவதற்கு ஒப்புதல் தந்த இயக்குநர், டாக்டர் எம். இராமையா, கட்டு மானப் பொறியியல் மையம் (Structural Engineering Research Centre) சென்னை, அவர்களுக்கு நன்றிகூற கடமைப் பட்டுள்ளேன்.

சப்பான் நாட்டில் திராவிட மொழி ஆராய்ச்சியை விரிவு படுத்துவதற்காக நடந்த சொல்லாடற் குறிப்புகள்

நாள்: ஆகட்டு 18, 1981
நேரம்: இரவு 9-00 மணி
இடம்: கெய் உசோனோமி குன்றுப்பகுதி, சப்பான்

சொல்லாடலில் பங்கேற்றோர்:

(1) டாக்டர் நோபோரு கராசிமா
- அ) தோக்கியோப் பல்கலைக் கழகத்தில் வரலாற்றுத் துறைப் பேராசிரியர் (இலக்கியப் புலம்)
- ஆ) சென்னைப் பல்கலைக் கழகத்தில் மாணவராகப் பதிவு செய்யப் பட்டுள்ளவர்
- இ) திருவனந்தபுரத்தில் உள்ள அனைத்து நாட்டுத் திராவிட மொழியியல் இதழின் பதிப்பாசிரியர் குழு உறுப்பினர்
- ஈ) அனைத்து நாட்டுத் திராவிட மொழியியல் பள்ளியின் ஆட்சிக் குழு உறுப்பினர்
- உ) தஞ்சாவூர் கழிமுக நிலப் பகுதியைப் பற்றி ஆராய்ச்சி செய்துள்ளவர்

(2) டாக்டர் தொகு நாகா
- அ) இருக்கு மறையில் ஆர்வர்டு பல்கலைக் கழகத்தில் பி.எச்.டி. பட்டம் பெற்றவர்
- ஆ) தமிழ் இலக்கணம் பற்றிய நூலின் ஆசிரியர்
- இ) தற்பொழுது கிபு பல்கலைக் கழகத்தில் இணைப் பேராசிரியராகப் பணி புரிகின்றார்
- ஈ) அண்மைக் காலமாகத் தென் நாடுகளில் பயணம் செய்தவர்

(3) டாக்டர் சின்சி சிகமாட்சு
- அ) துணைப் பேராசிரியர்
- ஆ) சென்னைப் பல்கலைக் கழகத்தில் பணிபுரியும் பேராசிரியர் டி.வி. மகாலிங்கத்தின் மாணவர்
- இ) அதிக அளவில் பயணங்கள் செய்தவர்
- ஈ) தமிழியல் மீது ஆர்வம் உடையவர்

(4) டாக்டர் வ.அய். சுப்பிரமணியம்
- அ) மேல்நிலை ஆய்வாளர்
- ஆ) சப்பானில் அறிவியல் நிறுவனத்தின் அழைப்பில் சப்பான் நாட்டில் ஆய்வு செய்ய வந்தவர்

வ.அய்.சு: கலந்துரையாடலில் பங்கேற்க வந்த அனைவரையும் நான் வரவேற்கின் றேன். சப்பானில் திராவிட மொழி ஆராய்ச்சியைப் பரப்புவதற்கு மூன்று வழி முறைகளைக் காண்கின்றேன்.

1) திராவிட மொழி ஆராய்ச்சிக்காகப் புதிய துறைகளை ஏற்படுத்த வேண்டும்.
2) தற்போது உள்ள துறைகளில் திராவிட மொழி ஆராய்ச்சியைப் புகுத்த வேண்டும்.
3) திராவிடர் வாழும் பகுதிகளில் சில ஆராய்ச்சித் திட்டங்களை நடைமுறைப் படுத்த வேண்டும். முடிவில் திருவனந்த புரத்தில் உள்ள சர்வதேச திராவிட மொழியியல் பள்ளி நிறுவனத்தில், சப்பானிய மொழி, பண்பாடு ஆகியவை பற்றி ஆராய்ச்சி செய்வதற்கான வாய்ப்புகளையும் நான் சொல்லாட நினைக்கிறேன்.

நோ.க.: சப்பானில் திராவிட மொழி ஆராய்ச்சி நடைபெறாமல் இருப்பதற்குக் காரணம், பன்மொழிக் கல்வி முறை மக்களி டம் அதிக அளவில் அறிமுகம் ஆகாமல் இருப்பதே ஆகும். மேலை நாடுகளில் சமற் கிருதத் துறையைச் சார்ந்த இரண்டு முது நிலைப் பேராசிரியர்கள் திராவிட, சமற்கிருத மொழிகளை ஒப்பிட்டுப் பயிலும் முறையில் நூல்கள் பலவற்றைப் படைத் திருப்பினும் சமற்கிருதத் துறைகள் திராவிட மொழி ஆராய்ச்சிக்கு ஆர்வம் காட்ட வில்லை.

தொ.நா.: சமற்கிருதத் துறையின் பெயரை இண்டாலசி (இந்தியப் பண்பாட்டுத்துறை) என்று மாற்றித் திராவிடப் பண்பாட்டைப் பற்றியும் ஆராயலாம்.

நோ.க.: பெயரை மாற்றுவது மிகவும் கடினம்.

தொ.நா.: அதனுடைய உட்கருத்தையாவது மாற்றி அமைக்கலாம். தற்போதைக்கு அதுவே பெரிய முயற்சியாகும்.

சி.சி.: உலகில் உள்ள திராவிட மொழி ஆய்வுத் துறைகள் பற்றி ஏதேனும் அறிந் துள்ளீர்களா?

தொ.நா.: போலந்தில் இருப்பதை நான் அறிவேன்.

சி.சி.: மலேயா பல்கலைக் கழகத்தில் திராவிட மொழி ஆராய்ச்சித் துறையை ஏற்படுத்தத் திட்டம் ஒன்று இருந்தது. அரசியலின் வல் ஆளுமையால் அத் துறையை இந்திய மொழி ஆராய்ச்சித் துறையாக மாற்றிவிட்டார்கள். அங்கு வேலை பார்ப்பவர்களில் பெரும்பாலோர் தமிழ் ஆய்வாளர்கள். அவர்கள் தங்களால் திராவிட மொழி ஆராய்ச்சியைப் பின்பற்ற இயலவில்லை என்றும் இந்தியப் பண்பாட்டு ஆய்வு மட்டும்தான் பின்பற்ற இயலும் என்றும் கூறுகின்றனர்.

நோ.க.: மலேயாவிலும், சிங்கப்பூரிலும் குடியேறிய மக்களில் பெரும்பாலோர் தமிழர் கள் என்றாலும் சூழ்நிலை வியப்பிற்குரிய தாகவே உள்ளது.

சி.சி.: அதனால்தான் அவர்கள் குறை கூறு கின்றனர். மேலும் தமிழ் மொழி ஆராய்ச்சி யோடு தென்கிழக்கு ஆகிய நாடுகளிலுள்ள அனைத்து இந்திய மொழிகளைப் பற்றியும் அவர்கள் ஆராய வேண்டும்.

நோ.க.: இதற்கு மாற்றாகக் கழகங்களை ஏற்படுத்த வேண்டும். இதனால்தான் ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு தோக்கியோவில் சப்பான் கழக அமைப்பினை தென் இந்திய மொழிகளுக்காக நான் ஏற்படுத்தினேன். சப்பானில் திராவிட மொழி ஆராய்ச்சிக் காக ஒரு துறையையோ மையத்தையோ ஏற்படுத்துவது என்பது கடினம். தொகு நாகா கூறியதுபோல் திராவிட மொழி ஆராய்ச்சியில் ஆர்வமுள்ள ஆசிரியர் களைப் பணியில் அமர்த்துவதோடு அல்லாமல், அவர்களுடைய பணியில் சில மாற்றங்களையும் செய்ய வேண்டும். மேலும் ஆராய்ச்சி செய்யும் முறையையும் மாற்றி அமைக்க வேண்டும். அது திராவிட மொழி ஆராய்ச்சி மக்களிடையே பரவுவதைப் பொறுத்து அமைந்துள்ளது. தென் இந்திய மொழிகளுக்காக அமைந்துள்ள சப்பான் கழகம் பல சிறந்த உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. அவர்களுள் சிலர், தொகு நாகா, சிங்கமாட்சு, தாக்கா காசி (தற்போது மதுரையில் உள்ளார்கள்). மிசு சிமா "கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டில் பாண்டிச்சேரி" என்னும் தலைப்பில் முதுநிலைக் கல்வியில் கட்டுரை எழுதியுள்ளார்). தென் இந்திய மொழி ஆராய்ச்சியில் முதலில் நாம் நம்மை ஈடுபடுத்திக் கொண்டு, அதில் சிறந்து

விளங்கிய பின்பு, மாணவர்களுக்கு அத் துறையில் ஆர்வம் உண்டானதும் சிறிது சிறிதாகத் தனித்தனித் திராவிட மொழி ஆராய்ச்சித் துறைகளை ஏற்படுத்தலாம்.

வ.அய்.சு.: தற்பொழுதுள்ள நிலைமையில் உடன் செய்ய முடிவது என்னவென்றால் ஆய்வாளர் மத்தியில் திராவிட மொழி ஆராய்ச்சியை மற்ற மொழிகளோடு அறிமுகப்படுத்த வேண்டும். முற்றிலும் திராவிட மொழி ஆராய்ச்சியாக இல்லாமல் ஒரு துணைப்பாடமாக அமைத்து இளைஞர் களிடம் பரப்பினோம் என்றால், முடிவில் தனித்தனித் துறைகளை உருவாக்க முடியும். திராவிட மொழி ஆராய்ச்சியாளர்களுக்கு வேலை வாய்ப்புகள் இருந்தால்தான், அவர்கள் திராவிட மொழி ஆராய்ச்சியில் தங்களை ஈடுபடுத்துவார்கள். அவர்களுக்கு வேலை வாய்ப்புகள் இல்லையென்றால் திராவிட மொழி ஆராய்ச்சியின் கருத்துக் கள் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்திருந் தாலும் அவற்றில் அவர்களின் நாட்டம் செல்லாததோடு, திராவிட மொழி ஆராய்ச்சியும் வளராது.

தொ.நா.: இந்திய வரலாற்றுத்துறையில் எனக்குப் பயிற்சி இருப்பதால் நான் இதைக் கூறலாம் என்று நினைக்கின்றேன். சப்பானில் பௌத்த மத ஆய்வுத் துறைகள் போதுமான அளவில் உள்ளன. அவர்கள் தங்களுடைய ஆர்வத்தைப் பௌத்த மத ஆராய்ச்சியி லிருந்து, இந்திய மொழி ஆராய்ச்சிக்குத் திருப்பினார்களேயானால், அதுவே ஒரு படி முன்னோக்கிச் சொல்வதோடு, போதுமான தாகவும் இருக்கும். பிறகு ஆய்வாளர்கள் இயற்கையாகவே திராவிட மொழி ஆராய்ச்சியில் ஆர்வம் கொள்வார்கள். ஏனெனில், இந்திய மொழியில் ஆராய்ச்சி செய்யும்பொழுது திராவிட மொழியை விட்டுவிட முடியாது.

நோ.க.: காலம் செல்லச் செல்ல அவ்வாறு நடக்கலாம்.

தொ.நா.: இந்தியமொழியில் ஆராய்ச்சி செய்வதிலும், இந்தியாவின் மீதும் அவர் களுக்கு ஆர்வம் ஏற்பட்டால் திராவிட மொழி ஆராய்ச்சியை அவர்கள் விட மாட்டார்கள்.

நோ.க.: அது மிகவும் இன்றியமையாத தாகும். முற்காலத்தில் இந்தியப் பண்பாட்டுத் துறை வல்லுநர்கள் சப்பானில் இந்தியத் தத்துவத்திற்கும், இந்திய இலக்கியத்திற்கும் இதழ்கள் பலவற்றை வெளியிட்டிருந்தாலும் கூட, திராவிட மொழி ஆராய்ச்சிக்கு எந்த வித இன்றியமையாமையையும் கொடுக்க மாட்டார்கள்.

தொ.நா.: இது பௌத்தமத ஆராய்ச்சியால் ஏற்பட்டது. இந்திய வரலாற்றில் அல்லது தத்துவத்தில் அவர்களுக்கு உள்ள ஆர்வம் பௌத்த நூல்களைப் படித்ததால் உண்டானது. 'டிக்னகா' மற்றும் சில தருக்க நூல் வல்லுநர்கள் தத்துவத்தில் உள்ள பல துறைகளைப் பற்றி சொல்லாடும் பொழுது, தங்களுடைய அணுகு முறைகளையும் சொல்லாடல் முறைகளையும் மாற்றி அமைத்துக் கொண்டார்கள். பௌத்த மத ஆய்வாளர்களுக்கு இது மிகவும் இன்றியமை யாததாகும். அதிலும் நியாயா, வைசேடிக ஆய்வாளர்களின் விதி முறைகளுக்கு இது அவசியமானதாகும். சப்பானில் இவ்வித ஆய்வு முறை மிகவும் குறைந்துள்ளது. மேலும் அவர்கள் மற்ற விதிகளைப் பற்றி அக்கரை காட்டுவது கிடையாது. இந்திய மக்களின் நினைவோட்டங்களில் அவர்கள் ஆர்வம் செலுத்துவது கிடையாது.

வ.அய்.சு.: பௌத்த மத ஆராய்ச்சி சப்பானில் சிறந்த முறையில் நடைபெற்று வருகின்றதென்று இதன் மூலம் நான் அறிந்து கொள்ளலாமா?

நோ.க.: தலைமுறை தலைமுறையாக அவ்வாறுதான் நடந்து கொண்டு வருகிறது. அதுவே இந்தியப் பண்பாட்டு ஆராய்ச்சி யின் தொடக்க நிலையாகும்.

வ.அய்.சு.: ஆய்வாளர்கள் பலர் அவ்வா ராய்ச்சியில் ஈடுபட்டுள்ளார்களா?

நோ.க.: ஆய்வாளர்கள் பலர் அவ்வா ராய்ச்சியில் ஈடுபட்டுள்ளார்கள். தள்ளிப் போடப்பட்ட கூட்டத்திலும் நகோயா பௌத்த மத ஆய்வாளர்கள் பலரைச் சந்தித்தார் என்றால், அதுவே தலைமுறை யியத்தை விரும்பும் ஆய்வாளர்கள் பலர் பௌத்த மத ஆய்வில் ஈடுபாடு கொண்ட தற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். (சப்பானில் இரண்டு நாள்கள் நடந்த கூட்டத்தில் எளிதாக அறிந்து கொள்ள முடியாத ஆய்வுக்கட்டுரைகள் 2000 பக்கங் களைக் கொண்டிருந்தன. அவைகளின் தகுதி

யும் குறைவாகவே இருந்தது. இது நான் நகோயாவில் இருந்தபோது அறிந்த பழைய செய்தியாகும்).

வ.அய்.சு.: நாம் கையாளக்கூடிய ஒரு வழி: தமிழ் மொழி, இந்தியாவில் பௌத்த மத நூல்களைச் சமற்கிருதத்திற்கும், பாலி மொழிக்கும் அடுத்த படியாகக் கொண்டிருக்கிறது. இரண்டாவதாகத் தேரவாத பௌத்தர்கள் இலங்கையில் தமிழ் நாட்டின் மூலம் பரவியுள்ளனர். புத்தகோசர் போன்ற பௌத்த மத அறிஞர்கள் பலர் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள். (திருநெல்வேலி, மதுரை, முதலிய இடங்கள்). ஆகவே, இலங்கைப் பௌத்த மதத்தை அறிவதற்கு தென்னிந்திய ஆராய்ச்சியும் இன்றியமையாதது. ஓரளவே கிடைத்துள்ள விம்பிசார கதை, மணிமேகலை காப்பியம் மற்றும் சமற்கிருதத்தையும், தமிழ்த் தலைமுறையியத்தையும் ஒருங்கிணைக்க, புதிய முறையைக் கையாளும் வீரசோழிய இலக்கணம் முதலியவை பௌத்தர்களால் எழுதப்பட்டனவாகும். வீரசோழியத்தில் கல்வெட்டு மொழி காணப்பட்டது என்ற செய்தியைக் கூறும் பொழுது, வரலாற்று வல்லுநர் என்ற முறையில் உங்களுக்கு அதில் ஆர்வம் இருக்கும் என்று நினைக்கின்றேன். ஆகவே, பௌத்த மொழியில் ஆராய்ச்சி செய்யும்பொழுது தென்னாட்டு மொழிகளைப் பற்றிய ஆராய்ச்சியை விட்டுவிட முடியாது.

தொ.நா.: சப்பானில் உள்ள பௌத்த மத ஆய்வாளர்கள் திராவிட மொழியைப் பற்றியும், பௌத்த மொழி ஆராய்ச்சிக்குத் திராவிட மொழி ஆராய்ச்சியின் இன்றியமையாமை பற்றியும் அறியாதவர்களாக இருக்கிறார்கள். சப்பானிய இந்தியப் பண்பாட்டுத் துறை வல்லுநர்கள் மேற்கத்திய இந்திய ஆராய்ச்சி முறைகளால் வெறுப்படைகின்றனர். பௌத்த மத ஆய்வாளர்கள் மேற்கத்திய முறைகளையே அதிகமாகப் பின்பற்றுகின்றனர்.

நோ.க.: அது முற்றிலும் உண்மையானது. ஆரிய மற்றும் பௌத்த மத ஆராய்ச்சிகள் அனைத்தும் மேற்கத்திய முறைகளிலேயே அமைந்துள்ளன.

வ.அய்.சு.: அது ஒரு சிறந்த கருத்தாகும். சப்பானிய ஆய்வாளர்கள் சமற்கிருத மற்றும் பௌத்தத் துறைகளில் ஐயோப்பாவில் பயிற்சி பெற்றார்கள் என்று நான் நினைக்கின்றேன். பிற்காலத்தில்தான் இளைஞர்கள் இந்தியாவில் பயிற்சி பெற்றார்கள். ஆகவே, சப்பானில் சமற்கிருதம் இந்தியா மூலமாக வரவில்லை. மேற்கத்திய நாடுகள் மூலமாகவே வந்தது.

தொ.நா.: சப்பானில் உள்ள பௌத்த மொழி ஆய்வாளர்கள் இந்தியாவைப் பற்றி மேற்கத்திய ஆய்வாளர்கள் மூலம்தான் அறிகிறார்கள்.

நோ.க.: வரலாற்று வல்லுநர்களான நாங்கள் இந்தியாவோடு நேரடித் தொடர்பு கொண்டுள்ளோம். களப்பணி செய்வதற்காகவும், செய்திகள் தொகுக்கவும் நாங்கள் இந்தியாவில் தங்கியிருந்ததனால் இந்தியாவை நாங்கள் அணுகும் முறை முற்றிலும் மாறுபட்டது. மைசூர், சென்னை, தஞ்சைப் பகுதிகளில் மூன்று ஆண்டுகளுக்கு மேல் தங்கியிருக்கின்றேன். சிகமாட்சு சென்னைப் பல்கலைக் கழகத்தில் இரண்டரை ஆண்டுகளுக்கு மேல் இருந்திருக்கின்றார். ஆகவே, நாங்கள் எவ்வித மாறுபட்ட கருத்துக்களையும் கொள்ளவில்லை. இலங்கையில்கூட களப்பணி ஆய்விற்காக ஒரு திட்டம் வைத்திருப்பதால் இந்தியாவின் செம்மையான உண்மை நிலைமையை எங்களால் எடுத்துக்கூற முடிகிறது.

வ.அய்.சு.: பௌத்த மத ஆய்வாளர்கள் குறிப்புக்களோடு கூடிய பாடப் புத்தகங்களைப் பதிப்பு செய்து வெளியிடுவதில் ஆர்வம் உள்ளவர்கள் என்று நான் புரிந்து கொள்ளலாமா? பௌத்த தருக்கசாத்திரத்தில் அவர்களுக்கு ஆர்வம் உண்டா? தற்போது வழக்கத்தில் உள்ள பௌத்த மதம், சிற்றூர்களில் கையாளப்பட்டு வரும் பௌத்த மதம் யாவும் பௌத்த மத ஆய்வாளர்களால் பயின்று வரப்படுகின்றன. அவர்களுக்குக் களப்பணி ஆய்வில் விருப்பமில்லையா?

தொ.நா.: பௌத்த தருக்க சாத்திரம் சிறப்பாக டிக்னகாவின் கோட்பாடுகளில் கவனத்தைச் செலுத்துகிறது. ஆனால், சப்பானியர்கள் பௌத்த மத நினைவோட்டங்களில் மட்டும் கவனம் செலுத்துகின்றனரேயன்றி, அவற்றின் பின்னணியிலோ, சுற்றுப்புறச்சூழ்நிலைகளிலோ,

வரலாற்று அமைப்பிலோ தங்கள் கவனத்தைச் செலுத்துவது கிடையாது.

வ.அய்.சு.: பௌத்த தருக்க சாத்திர வரலாற்றில் சப்பானியர்கள் கவனம் செலுத்துவார்களேயானால், அவர்கள் இயற்கையாகவே, பௌத்த மதம் அமைவதற்கான சூழ்நிலையைப் பற்றியும் பௌத்த மதம் உருவாக முயற்சி செய்தவர்களைப் பற்றியும் அறிய முயல்வார்கள்.

நோ.க.: தென் இந்தியக் கல்வி ஆய்விற்காக ஏற்படுத்தப்பட்ட சப்பான் கழகத்தில் உறுப்பினராக இருந்த தத்துவத்துறையில் சிறந்த பயிற்சி பெற்ற ஆய்வாளர் ஒருவர், இராமானுசரின் எண்ணங்கள் பற்றிச் சிறந்த கட்டுரை ஒன்று எழுதியிருந்தார். ஆனால், அவரிடம் இராமானுசருடைய காலத்தில் நிலவியிருந்த அரசியல் மற்றும் சமூக நிலைமையைப் பற்றிய வினாக்களைக் கேட்ட பொழுது அவரால் அவற்றிற்கு விடை கூற முடியவில்லை. அவர் சிறந்த ஆய்வாளராக இருந்த போதிலும், அவரால் அவர் படித்த பாடத்தைத் தவிர, மற்றவற்றில் அவருக்கு ஈடுபாடு இல்லை. அதனால்தான் தொகுநாகா போன்ற இளைய ஆய்வாளர்கள், ஆய்வு நடத்தும் பொழுது வரலாற்று நிகழ்ச்சிகளையும் கருத்தில் கொள்ள வேண்டும் என்று அவர்களின் ஆர்வத்தைத் தூண்டுகின்றேன்.

வ.அய்.சு.: தத்துவத்திலும் இரண்டு வகைகள் புகழ்பெற்று உள்ளன. அவற்றில் ஒன்று ஆவணங்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு; மற்றொன்று மக்களால் கையாளப்பட்டு வரும் பௌத்த மத வழக்கங்கள். அது களப்பணி ஆராய்ச்சியைத் தன்னுள் கொண்டது.

நோ.க.: இங்கே இரண்டு வினாக்கள் தொடர்பு கொண்டுள்ளன.

1) சமற்கிருத மொழி ஆராய்ச்சிக்கும் மற்ற மொழி ஆராய்ச்சிக்கும் உள்ள இடைவெளி.
2) சப்பானில் திராவிட மொழி ஆராய்ச்சி பற்றி அறியாதிருப்பது. தோக்கியோ பல்கலைக் கழகத்தில் நாங்கள் இந்திய வரலாற்று இலக்கியத் துறையையும், ஆசிய வரலாற்றுப் பண்பாட்டுத் துறையையும் கொண்டுள்ளோம். வரலாற்று ஆசிரியர்கள் பரந்த மனப்பான்மை உடையவர்களாதலால் எதையும் பலவகைக் கோணங்களில் ஆராய்வார்கள். ஆனால், மொழி, இலக்கியத் துறைகள் ஒரு குறிப்பிட்ட பகுதியை மட்டும் விரிவாக ஆராய்கின்றன. பல நோக்கு ஆராய்ச்சியைச் சப்பானில் உருவாக்க வேண்டும். திராவிட மொழி ஆராய்ச்சியை விரிவடையச் செய்து, திராவிட சமற்கிருத மொழி ஆராய்ச்சிகளுக்கு இடையேயுள்ள பிளவினைக் குறைக்க வேண்டும். பல நோக்கு ஆய்வு முறையைப் பரவச் செய்தால் சமற்கிருத திராவிட மொழி ஆய்வுகளுக்கு இடையேயுள்ள பிளவு தானாகவே குறைந்து விடும் என்று நினைக்கின்றேன்.

வ.அய்.சு.: திராவிட மொழி ஆராய்ச்சியைப் பரவச் செய்வது பற்றி நீங்கள் கூறினீர்கள். ஆங்கிலத்தில் அல்லது சப்பானிய மொழியில் இதழ்கள் அல்லது புத்தகங்களை வெளியிட்டுத் திராவிட மொழி ஆய்வினைப் பரவச் செய்யலாம்.

நோ.க.: சப்பானிய மொழியில்தான் இதழ்களை வெளியிட வேண்டும். ஏனெனில் ஆங்கில மொழியை ஆய்வாளர்கள் பலர் விரும்பமாட்டார்கள்.

வ.அய்.சு.: சப்பானிய மொழியிலும், ஆங்கில மொழியிலும் திராவிடர்களைப் பற்றிப் புத்தகங்கள் வெளியிடப்பட்டு, அதன்றால் திராவிட மொழிகளும், திராவிட நாகரிகமும் மக்களிடையே புகழ் அடைந்துவிட்டால் பல்கலைக் கழகங்கள் திராவிட மொழிக்காகத் தனித்துறையை உருவாக்குமா? பொது மக்களுடைய தேவைகளைப் பல்கலைக் கழகங்கள் நிறைவு செய்யுமா?

நோ.க.: எதிர்காலத்தில் இத்தகைய உணர்வுகள் மக்களிடையே உண்டாகலாம். தற்போது இங்கே உள்ள கல்வித் துறைகள் பழையவிதி முறைகளைக் கையாளுகின்றன. திராவிட மொழித் துறையில் இருபது ஆண்டுகளுக்கு மேல் நான் இருக்கின்றேன். தென்னிந்திய மொழிகளையும், தென்னிந்தியப் பண்பாட்டையும் நான் விரும்புகின்றேன். இருந்தாலும், திராவிட மொழி ஆராய்ச்சிக்கென்று தனித் துறையை உருவாக்குவது சிறந்தமுறை

அல்ல என்று நான் நினைக்கின்றேன். திராவிட மொழி ஆய்வுக்கு நாம் ஊக்க மளிக்க வேண்டிய திருந்தாலும் அதனைத் தென் ஆசிய மொழி ஆய்வுத் துறை களிலேயே ஊக்குவிப்பதற்கு வாய்ப்புகள் பல உள்ளன.

தொ.நா.: திராவிட மொழி ஆய்விற்குச் சமற்கிருத மொழி ஆராய்ச்சி அவசியம். மற்ற இந்திய ஆரிய மொழிகளில் ஆராய்ச்சி செய்யச் சமற்கிருத மற்றும் திராவிட மொழிக்கல்வி இன்றியமையாதது என்று கூறி கியோட்டியோவில் வ.அய். சுப்பிரமணியம் தனது உரையை முடித்தார். அவருடைய இந்தத் திட்டம் பொருத்த மானதுதான்.

சி.சி.: டாக்டர் கராசிமா நினைத்ததென்ன வென்றால் இந்தியப் பண்பாட்டு ஆய்வுத் துறை, இந்திய—ஆரிய சமற்கிருத மற்றும் திராவிடத் துறைகளையும் தன்னகத்தே கொண்டிருக்க வேண்டும் என்பதாகும். தருக்க சாத்திரத்திற்கும் திராவிட பௌத்த மதத்திற்கும் தென்னிந்திய மொழிகள் பல வகைகளில் நன்மைகள் புரிந்திருப்பதைக் கருத்தில் கொண்டு திராவிட மொழி ஆராய்ச்சியை இந்தியப் பண்பாட்டுத் துறையில் அல்லது பௌத்த மதத்துறையில் புகுத்த வேண்டும் என்று சப்பானில் தொடக்கத்தில் நினைத்தார்கள்.

தொ.நா.: சமற்கிருத ஆய்வுத்துறைகள் இருப்பதால், சப்பானில், திராவிட மொழி ஆராய்ச்சித்துறையை யும் நாம் கொண் டிருக்க வேண்டும்.

நோ.க.: தோக்கியோ பல்கழைக் கழகத்தில் தற்போது சமற்கிருத இலக்கியத்துறையின் பெயரை, இந்திய இலக்கியத் துறை என்று மாற்றம் செய்துள்ளனர்.

தொ.நா.: உண்மையாகவா?

நோ.க.: அது உண்மையாகவே அண்மையில் ஏற்பட்ட மாற்றமாகும். அது இப்பொழுது இந்தியத் தத்துவத் துறையாகவும், இந்திய இலக்கியத் துறையாகவும் செயல்படுகிறது.

தொ.நா.: அது ஒரு பெரிய முயற்சியாகும். இதனால் சமற்கிருதம் என்ற பெயர் மறைந்து விடுகிறது. அதுவே, ஒரு படி முன்னோக்கிச் செல்வதைக் காட்டுகிறது.

நோ.க.: அந்தத் துறையில் இரண்டு பேராசிரியர்களின் ஆளுமை நடைபெறு கிறது. நான் வெளிப்படையாகக் கூறுவது என்னவென்றால் ஆரிய மொழிகளுக்கு ஒருவரும் திராவிட மொழிகளுக்கு மற்றொருவரும் பொறுப்பாளராக இருக்க வேண்டும் என்பதே.

தொ.நா.: இதுவும் ஒரு வகையில் நாம் எடுக்கும் முயற்சியில் ஒரு படி முன்னோக்கிச் செல்வதைத்தான் குறிக்கின்றது.

வ.அய்.சு.: இந்திய இலக்கியத் துறையில் சமற்கிருத மொழியும் இந்தி மொழியும்தான் பேராசிரியர்கள் கற்பிப்பார்கள் என்று கூறினீர்கள். மற்ற மொழிகள் எதையும் அங்கு கற்றுத்தர மாட்டார்கள் என்று நினைக்கின்றேன். திராவிட மொழிகளைக் கற்ற பேராசிரியர் அங்கு இருந்தாரே யானால் திராவிட மொழி கற்பிப்பதும், திராவிட மொழியில் சிறந்த ஆராய்ச்சி களும் அங்கு நடைபெறும். திராவிட மொழியைக் கற்பிக்க இந்திய இலக்கியத் துறை மட்டும் போதும் என்ற உங்கள் கருத்தை இந்த முறையில் நாம் பார்க்க வேண்டும். திராவிட மொழி ஆராய்ச்சிக் கென்று தனியாக ஒரு பேராசிரியரை அமர்த்த வேண்டும் என்ற உங்கள் கருத்து வரவேற்கத்தக்கது. ஆராய்ச்சியாளர்களின் மையங்கள் அமைக்கப்பெற்று, சிறந்த நூல் களைக் கொண்ட நூல் நிலையங்களும் அமைக்கப் பெற்றால், அவையே திராவிட மொழி ஆராய்ச்சி புகழடையச் செய்ய உதவும். தோக்கியோவில் உள்ள நூல் நிலையங்களையும் மற்ற இடங்களையும் சுற்றிப் பார்த்தபொழுது, உங்களுடைய (நோ.க.) தனிப்பட்ட பயனுக்குள்ளபுத்தகங் கள் பல உள்ளன. அப்புத்தகங்களைத்தான் நான் இங்கு தங்கியிருக்கும்பொழுது பெற்றுக் கொண்டேன். அப்புத்தகங்கள் எனக்கு இங்கு கிடைக்கவில்லையென்றால் நான் சில இடையூறுகளுக்கு ஆளாகியிருக்க வேண்டும். திராவிட மொழிகளைப்பற்றியும், திராவிடர்களின் பண்பாட்டைப் பற்றியும் விவரிக்கும் நூல்கள் இங்கே உள்ள மற்ற நூல் நிலையங்களில் மிகக் குறைந்த அளவிலேயே உள்ளன கியோடோ பல்கலைக் கழகத்தில் தான் தமிழ்ப் பேரகராதி உள்ளது. நூல் நிலையத்தைப் பற்றிய என்னுடைய கருத்துக் கள் சில திருத்தி அமைக்கப்பட வேண்டும்.

தொ.நா.: தமிழ் அகராதியை இப்போது நான் நூல் நிலையத்திலிருந்து என்னுடைய மேசைக்கே கொண்டு வந்துவிட்டேன்.

வ.அய்.சு.: நூல் நிலையத்தை விரிவு படுத்துவது திராவிட மொழி ஆராய்ச்சியைப் புகழடையச் செய்வதற்கு முதற்படியாகும். திராவிட மொழியியல் கழகம் வெளியிட்ட நூலின் படியை விலையின்றியோ குறைந்த விலைக்கோ உங்களுக்கு அனுப்பும்படி பரிந் துரைக்கின்றேன். ஒரு புத்தகம் இலவயமாக அனுப்பப்பட்டால் ஆய்வாளர்கள் அதற்குச் சிறப்பிடம் கொடுக்கமாட்டார்கள். சப்பானில் உள்ள நிலைமை என்னவென்று எனக்குத் தெரியாது.

நோ.க.: விலையில்லாமல், இலவயமாகக் கிடைக்கும் புத்தகங்களுக்கு நாங்கள் சிறப் பிடம் கொடுப்போம் என்று நினைக் கின்றேன்.

வ.அய்.சு.: நீங்கள் இலவயமாகக் கிடைக்கும் புத்தகங்களுக்கு மதிப்புக் கொடுப்பீர்கள் என்றால் திராவிட மொழியியல் கழகம் தங்கள் படிகளை ஆறு அல்லது ஏழு மையங் களுக்கு அதாவது தோக்கியோ பல்கலைக் கழக இலக்கியப்புலம், கியோடா பல்கலைக் கழக இலக்கியப்புலம் பிற இலக்கியப் புலம் முதலிய இடங்களுக்கு அனுப்பு மாறு பரிந் துரைக்கின்றேன். இதைத்தவிர மற்ற நூல் நிலையங்களுக்கு அக்கழகம் தன் படிகளை அனுப்பலாம். அவ்வாறு அனுப்பினால் நூல் நிலையங்கள் திராவிட மொழி பயிலத் தேவையான குறிப்பேடுகளைக்கொண்டு விளங்கும். அஞ்சல் செலவையும் நாங்களே ஏற்றுக் கொள்கிறோம்.

நோ.க.: சப்பானிலும், தோக்கியோ, கியோடோ பல்கலைக் கழகங்களிலும் கல்வி கற்பிக்கும் முறையை நீங்கள் அறிவீர்கள். நானும், தாக்காகாசி போன்ற மற்றவர்களும் தோக்கியோ பல்கலைக் கழகத்தின் மாணவர் கள். தொகுநாகாவும், சிகமாட்சுவும் கியோடோ பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த வர்கள். தோக்கியோ, கியோடோ பல்கலைக் கழகங்களைத் தேர்ந்தெடுத்து அவற்றிற்கு உங்கள் புத்தகங்களைப் பரிசளித்த உங்கள் செயல் முறையானதாகும்.

வ.அய்.சு.: தென்னிந்தியாவில் நாம் கொண்டு வர நினைத்திருக்கும் திட்டம், ஒன்றை மற்றொன்றோடு ஒப்பிட்டுப் பார்த்துப் பயிலும் முறையாகும். ஒரு சிற்றூரைப் பற்றிப் படிக்க வேண்டுமானால், அச்சிற்றூரை இலங்கை அல்லது மேற்கு வங்காளத்தோடு ஒப்பிட்டுப் பார்த்துப் பயிலலாம். ஆனால், எனக்குத் தெரிந்த வரையில் மொழிப்புலம் பற்றிய ஆய்வு இன்னும் நடைபெறவில்லை. கிழக்கத்திய மொழிகளைப் பற்றி உங்களிடம் ஏதாவது திட்டம் உள்ளதா? உங்களுடைய திட்டத்தில் மொழியியல் ஆய்வினையும் மொழியிய லறிஞர்களையும் சேர்த்துள்ளீர்களா?

நோ.க.: இந்தியாவில் இப்பொழுது நடை பெற்றுக் கொண்டு வரும் திட்டத்திற்குத் தோக்கியோ பல்கலைக் கழகத்தின் அயல் நாட்டுக் கல்வித் துறை பொருள் உதவி செய்கிறது. ஏனெனில் தோக்கியோ, கியோடோ பல்கலைக் கழகங்கள் இவ்வித ஆய்வுத் திட்டங்களுக்குப் பொருள் ஒதுக்கீடு செய்யவில்லை. இத்திட்டம், நிலவருவாய் மற்றும் பண்பாடு தழுவிய மொழி ஆய்வு ஆகியன பற்றி இருப்பதால் இத்திட்டத்திற்கு இதுவரை சிறப்பிடம் கொடுக்கப்பட வில்லை என்று நினைக்கின்றேன். இத் திட்டத்திற்கு மொழியியல் ஆய்வு உதவியாக இருப்பினும் இதை நாம் காலம் கடந்து உணர்கின்றோம். எதிர்காலத்தில் இத் திட்டத்தைப் பற்றிச் சிறந்த முறையில் ஆராயலாம்.

வ.அய்.சு.: சப்பானில் மொழிப்புலத்துறை சிறந்து விளங்கவில்லை என்று நினைக் கின்றேன்.

நோ.க.: ஆனால், சப்பானில் உள்ள மொழிப்புலக் கழகத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் உள்ளனர்.

வ.அய்.சு.: அக்கழகத்தின் உறுப்பினர்களில் அதிகமானவர்கள் ஆங்கிலம், செர்மன் ஆகிய மொழிகளைக் கற்பிக்கும் ஆசிரியர் கள் ஆவர். 'சப்பான் டைம்சு' என்ற பத்திரி கையின் பதிப்பாசிரியருக்கு அவர்கள் தாங்கள் மொழிப்புல வல்லுநர்கள் என்று கூறிக்கொண்டு எழுதிய கடிதங்கள் பலவற்றை நான் பார்த்தேன். சில இளம் மொழி இயல் வல்லுநர்கள் அமெரிக்காவில் உள்ள சிறந்த பல்கலைக் கழகங்களில் பயிற்சி பெற்றிருந் தாலும் கூட, தங்களுடைய கருத்துகளை வெளியிடாமல் தங்கள் வேலையில் மட்டும் ஈடுபடுகின்றனர். பிற மொழிகளைப் படித்து

அவற்றில்ஆய்வு நடத்தவேண்டும். அவ்வாராய்ச்சி செய்யும்பொழுது ஏற்படும் மகிழ்ச்சியில் திளைக்க வேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்குக் கிடையாது. இக்குறை பாட்டைச் சப்பானில் குறுகிய காலத்தில் நீக்க முடியாதென்று நினைக்கின்றேன்.

நோ.க.: இக்குறையை எதிர்காலத்தில் விரைவிலேயே செம்மைப்படுத்த முடியாது.

தொ.நா.: சப்பானில் சிறந்த மொழி இயல் வல்லுநர்கள் மிகக் குறைந்த அளவிலேயே உள்ளனர். அவர்களுடைய தகுதியும் சிறந்ததாக இல்லை. அவர்கள் வெளிநாட்டு முறைகளையே கையாளுகின்றனர்.

நோ.க.: சே சாம்ஃச்கி சொல்வதைப் போலத்தான் இம்மொழியில் உள்ளது. மொழியை ஆராய்ந்து பார்த்தால்தான் சே சாமஃச்கி சொல்வது உண்மையென்று தெரிகிறது.

தொ.நா.: அவர்கள் இறக்குமதி செய்யப் பட்ட பொருட்களை விற்பனை செய்யும் வணிகர்களைப் போன்றவர்கள்.

வ.அய்.சு.: சப்பானியர்களுக்காக, மொழிப் புல வல்லுநர்களால் இயற்றப்பட்ட இலக்கணங்கள் மொழியை அதிக அளவில் புகழ்ந்து கூறுகின்றன. உயர்நிலைப் பள்ளிகளில் வகுப்பில் பயிற்றுவிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் இலக்கணப் பாட நூல்கள் தலைமுறை வழியைக் கையாளும் ஆய்வாளர்களால் மொழியைக் கருத்தில் கொண்டு எழுதப்பட்டவை ஆகும். இந் நாட்டில் மொழிப் புல வல்லுநர்கள் தங்கள் கருத்துக்களை வெளியிடும் கழகம் உள்ளது. அவற்றைத் தலைமுறை வழியைப் பின் பற்றும் சப்பானிய ஆய்வாளர்கள் வரவேற்பார்கள். தொன்றுதொட்டு வழங்கி வரும் இலக்கணங்களுக்கு விளக்கங்கள் கொடுத்து அவற்றை உறுதிப்படுத்தவோ அவற்றிற்கு எதிர்ச் சொல்லாடவோ அவர்களால் முடியும்.

தொ.நா.: மேற்கத்திய முறைகளைப் பின் பற்றாமல் மொழிப் பல வல்லுநர்கள் தங்களுடைய பாடத்தில் ஆர்வம் உடையவர்களாக இருப்பார்களேயானால், அவர்களுக்கு இந்திய மொழியில் உள்ள இந்தியத் தத்துவ நினைவுகளில் ஆர்வம் உண்டாகும்.

நோ.க.: சமற்கிருதப் புலவர்கள் சிலர் இப்பகுதியை விவரித்திருக்கிறார்கள். இல்லையா?

தொ.நா.: சமற்கிருதப் புலவர்கள் பொழிப் புல ஆய்வில் கவனம் செலுத்துவதில்லை. என்னுடைய ஆசிரியர் ஒருவர் அண்மைக் காலத்தில் சிறந்த நூல் ஒன்றை எழுதி யிருந்தார். டி. சுசுயர்சு கோட்பாட்டிலும், பௌத்த அபோகா கோட்பாட்டிலும் அவர் தம் கவனத்தைச் செலுத்த வேண்டும் என்று நான் அவரிடம் கூறினேன். அவ்விரண்டு கோட்பாடுகளும் ஒன்றை ஒன்று ஒத்திருக் கின்றன. டி. சுசுயர்சு விடுபட்டதாகக் கூறும் கருத்துக்கள் பிற்காலத்தில் டிக்னகா எழுதிய நூல்களில் ஒத்திருக்கின்றன. சப்பானிய மொழிப்புல வல்லுநர்கள் இத்தகைய ஒற்றுமைகளை அறிந்திலர்.

வ.அய்.சு.: சப்பானில் நடைபெறும் திராவிடமொழி ஆராய்ச்சியையும் அவற்றோடு தொடர்பான பிற மொழி களைப் பற்றிய ஆராய்ச்சியை யும் இதுவரை சொல்லாடினோம். தென் இந்தியாவில் சப்பானிய மொழி ஆராய்ச்சியை நீங்கள் கொண்டுவருவது பற்றிய திட்டங்களில் என் கவனத்தைச் செலுத்தலாமா? (சப்பானிய நண்பர்கள் யாவரும் சிரித்து மகிழ்ந்தார் கள்)

வ.அய்.சு.: நாம் பிறருக்கு எதையாவது கொடுத்தால்தான் நாம் பெற முயன்றதை அடையமுடியும் என்ற கருத்து வணிக, நிருவாக மற்றும் கல்வித் துறைகளிலும் ஒப்புக்கொள்ளப்பட்ட கருத்தாகும். இந்தியாவில் சவகர்லால் நேரு பல்கலைக் கழகம் சப்பானிய மற்றும் இந்திய மொழிகளைப் பயிற்றுவிக்கின்றது. அது அதிக அளவில் சப்பானிய மொழியையே பயிற்றுவிக்கின்றது. தில்லிப் பல்கலைக் கழகமும் இந்த வாய்ப்பைக் கொண்டுள்ளது.

தொ.நா.: பூனா மற்றும் சாந்திநிகேதன் பல்கலைக் கழகங்கள் இந்த வாய்ப்புகளைக் கொண்டுள்ளன.

வ.அய்.சு.: பாதுகாப்புத்துறை, சப்பானியர் களுக்குப் பயிற்றுவிக்கத் தேவையான வாய்ப்புகளைக் கொண்டுள்ளது.

நோ.க.: சிறிது காலத்திற்குத்தான் அவ் வாய்ப்பு இருந்திருக்கும். இப்பொழுது

அவ்வாய்ப்பு இல்லை என்று நினைக்கின்றேன். சப்பானிய மொழியைப் பயிற்றுவிப்பது கல்கத்தாவில் வெளிநாட்டுத் தூதரக அலுவலகத்தின் மூலம் ஓரளவே நடைபெற்றது.

வ.அய்.சு.: பெரும்பாலான கல்வி நிலையங்கள் சப்பானிய மொழியையே பயிற்றுவிப்பதால் முன்னுரை அடங்கிய பாடப்புத்தகங்களை அவை உருவாக்கியுள்ளனவா?

நோ.க.: சவகர்லால் நேரு பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் திருமதி சாவித்திரி விசுவநாதன் அவர்கள் 'சப்பான்' என்ற புத்தகத்தைத் தேசிய நூல்கள் பண்டசாலை மூலமாக வெளியிட்டார். சப்பானிய மக்களின் பண்பாடு, பொருளியல், முதலியவற்றை அந்நூல் விவரிக்கிறது. ஆனால், சப்பானிய மொழியைப் பற்றி அதிகமாக விளக்க வில்லை.

வ.அய்.சு.: இரண்டு சப்பானிய ஆய்வாளர்களும் அங்கு உள்ளார்கள். அவர்கள் டாக்டர் நாரிகிகோ உச்சியா, செல்வி கீதா ஆர். அய்சிடா.

நோ.க.: அவர்களைத் தவிர செல்வி பாலம்மாள், செல்வி இராசலெட்சுமி முதலானோர் சவகர்லால் நேரு பல்கலைக் கழகத்தில் உள்ளனர். முதல்வர் விரிவுரையாளராகவும், இரண்டாமவர் கல்லூரி ஆசிரியராகவும், சவகர்லால் நேரு பல்கலைக் கழகத்தில் பணியாற்றுகின்றனர். அவர்கள் அனைவரும் தென்னிந்தியர்கள். செல்வி இராசலெட்சுமி இரண்டு ஆண்டுகள் சப்பானில் தங்கியுள்ளார்.

வ.அய்.சு.: சப்பானிய மக்களுக்குப் பயிற்றுவிப்பதற்காக ஏதாவது சில கருத்துக்கள் எழுதப்பட்டு அச்சடிக்கப்பட்டுள்ளனவா?

நோ.க.: கல்வியைப் பயிற்றுவிக்கத் தேவையான புத்தகங்கள், படிகள் எடுக்கப் பட்டுத் தனிப்பட்ட முறையில் மக்களிடையே அனுப்பப்பட்டு வருகின்றன. சவகர்லால் நேரு பல்கலைக் கழகத்தில் சப்பானிய மொழி கற்கும் பல மாணவர்கள் உள்ளனர்.

வ.அய்.சு.: அலயன்சு பிரான்கென்சு மேக்சுமுல்லர் பவன் செய்ததைப் போல சப்பான், சப்பான் மக்களைப் பயிற்றுவிக்கிறது.

நோ.க.: அந்த வகையில் சப்பான் வளர்ச்சி அடையவில்லை. சப்பானிய அரசு சப்பானிய மொழியைப் பயிற்றுவிக்கப் பள்ளிக்கூடங்களையோ பிற வாய்ப்புகளையோ உண்டாக்கவில்லை.

வ.அய்.சு.: பேராசிரியர் கராசிமா, சப்பானிய மொழியைப் பயிற்றுவிக்க வாய்ப்புகள் இருப்பதைப் பற்றிக் குறிப்பிட்டார்கள்.

நோ.க.: ஓர் ஆண்டு தங்கியிருந்த டாக்டர் சந்திர முதலியார் சென்னைப் பல்கலைக் கழகத்தில் கீழ் சப்பானியக் கல்வியைக் கொண்டுவர முயற்சிகள் செய்தார்.

வ.அய்.சு.: திருவனந்தபுரத்திலுள்ள அனைத்நாட்டுத் திராவிட மொழியியல் பள்ளி நிறுவனத்தில் டாக்டர் உச்சிடா முதுநிலை ஆய்வாளராக உள்ளார். சப்பானிய ஆய்வு முறை மூலமாகச் சிறந்த மையமாக அமைக்கப்பட்டு விட்டால், சப்பானில் திராவிட மொழி ஆராய்ச்சியை விரிவுபடுத்துவதற்கு எந்தெந்தத் திட்டங்களை வகுக்கப் போகிறீர்கள்? உதாரணமாக, சப்பானிய மொழியில் திராவிட மொழியைப் பற்றிப் பயிற்சி அளித்தல், அல்லது டாக்டர் உச்சிடாவைத் திராவிட மக்களைப் பற்றி முகவுரை ஒன்று எழுதச் சொல்லி அதைச் சப்பானில் வெளியிட்டு அதன் பின்பு அதைச் சப்பானிய மொழியில் எழுதச் சொல்லலாம்.

நோ.க.: இதில் எந்த வகையும் பொருத்தமானதாகத் தோன்றவில்லை. டாக்டர் உச்சிடா இந்திய மொழிகளைப் பற்றிய ஆய்விற்கு இசைவாரா? ஏனென்றால், அவர் இந்திய மொழிகளைப் பற்றிய ஆராய்ச்சியில் சில காலம் இருந்துள்ளார்.

இந்நேரத்தில் பதிவு செய்யும் நாடா தீர்ந்து விட்ட படியாலும், பங்கு கொண்டவர்கள் பதிவு செய்யும் கருவி தடையாக உள்ளது என்று நினைத்ததாலும் பிற பகுதிகள் பதிவு செய்யும் பொறியில் பதிவு செய்யப்படவில்லை. பின்வரும் இன்றியாமையாத குறிப்புகள் ஐ.எசு.டி. எல்லின் பயன்பாட்டிற்காக டாக்டர் வ.அய். சுப்பிரமணியம் அவர்களால் பதிவு செய்யப்பட்டன.

டாக்டர் உச்சிடாவிற்கு ஆர்வமிருந்தால் அவர் சப்பானிய மொழியில் திராவிட

மொழியைப் பற்றிச் சிறு முகவுரையாகப் பயிற்சி அளிக்கலாம் என்று டாக்டர் கராசிமா நினைத்தார். அல்லது அவர் திராவிடக் கலைக் களஞ்சியத்தை மொழி பெயர்க்கலாம். அதை வெளியிடுவதற்கு, அச்சடிக்கும் அலுவலகங்களுடன் நாம் பேசலாம். திராவிடக் கலைக் களஞ்சியம் ஆங்கிலத்தில் வெளியிட்டால் சப்பானில் 30 படிகளே விற்கும். சப்பானிய மொழியில் வெளியிட்டால் படிகள் விற்பது மிகவும் கடினம். முடிவில் டாக்டர் கராசிமா இன்றையச் சொல்லாடல் தொய்வுபடுத்து வதாக இருந்தாலும், நாளை நடக்கவிருக்கும் சொல்லாடலே திராவிட மொழி ஆராய்ச் சியை வளர்ப்பதற்கு ஊக்கமளிக்கும் என்று கூறினார்.

மறு நாள் சிகமாட்சு விரைவிலேயே அவ்விடத்தை விட்டுச் சென்று விட்ட படியால் நான், தொகுநாகா, கராசிமா மூன்று பேரும் தொடர்ந்து சொல்லாடி னோம்.

1983இல் நடைபெறவிருக்கும் கிழக்கத்திய பேரவையோடு தோக்கியோவில் மூன்று நாள்களும், கியோடோவில் மூன்று நாள் களும் தென்னிந்தியக் கல்வி முறையைப் பற்றிய கருத்தரங்கு நடைபெறும். அதில் இருபது அல்லது அதற்கும் அதிகமானோர் பங்கேற்பார்கள். அதற்குத் தேவையான பாடங்கள் முடிவு செய்யப்பட்டுவிட்டாலும் இக்கருத்தரங்கினை அதோடு சேர்த்துக் கொள்ளலாம் என்று நோபுரு கராசிமா கூறினார்.

சப்பானிய அறிவியல் நிறுவனத்தை உருவாக்கிய கல்வி இலாகா அமைச்சர வையைத் தவிர, வெளிநாட்டுத் தொடர் பான அமைச்சரவை, சப்பான் அற நிறுவனங்கள் மற்றும் தனியார் அறக் கட்டளைகள் பொருள் உதவி அளிக்கின்றன. முட்சுபாசி அற நிறுவனமும் அவருடைய கல்வெட்டுக்களின் அட்டவணையை வெளியிட பண உதவி செய்கிறது. சர்வதேசப் பள்ளிக்கூடத்துடன் இணைந்து நடத்தக் கூடிய திட்டங்களை அவர் வகுப்பார்.

தோக்கியோ பல்கலைக் கழகத்தின் வெளிநாடு பற்றிய கல்விப்புலம் ஆஃச்திரேலியா, ஆப்பிரிக்கா போன்ற நாடுகளில் திட்டங்களைக் கொண்டு வந்தால் அத்திட்டத்தை ஆறு மாதங்களுக்கு முன் வெளியிட்டால் ஆய்வு மையம் செலவுகளை ஏற்றுக் கொள்வதோடு, ஒரு மொழிப்புல வல்லுநரையும் அமர்த்தும் என்று வ.அய். சுப்பிரமணியம் கூறினார். ஆய்வு மையம் ஆய்வாளருக்கு ஊதியத்தை அளிக்கும். இக்கருத்தினை ஒத்துக் கொண்டதோடு, இதைச் செயலில் கொண்டு வரத் தமக்குச் சில காலங்கள் தேவை என்று கூறினார்.

சிவாசி வெங்காசிக்கு எழுதிய கடிதங்கள்.

கே.எம்.வேங்கடராமையா

வரலாற்றுக் குறிப்பு

தஞ்சை மராட்டிய மன்னர்களில் முதல் மன்னராகிய ஏகோசி எனப்பெறும் வெங்காசிக்குச் சிவாசி எழுதிய கடிதங்களில் இரண்டு, பூனே நகரில் 'மராட்டிய வரலாற்று அருங்காட்சியக'த்தில் உள்ளன. அவ்விரு கடிதங்களும் ''தஞ்சாவூர்சே மராத்திராசே'' என்று மராத்தி மொழியில் எழுதப்பெற்ற நூலில் அச்சிடப் பெற்றுள்ளன. அச்சிட்ட நூலில் உள்ள அவ்விரு கடிதங்களின் நிழற்படங்கள் பூனேயிலிருந்து பெறப்பட்டுத் தமிழாக்கம் செய்யப் பெற்றுள்ளன.

அவ்விரு கடிதங்களுள் முதல் கடிதக் குறிப்பிலிருந்து அதற்கு முன் சிவாசி ஓரிரு கடிதங்களை எழுதியிருத்தல் கூடும் என்று கருதலாம்.

சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில் பம்பாய் இராணுவத்தின் இந்தியக் காலாட்படையின் முதற்படைக்குத் தலைமை பூண்டவரும், சதாராவில் ரெசிடெண்ட் ஆக இருந்தவரும் ஆகிய சேம்சு கிராண்டு டஃப் (James Grant Duff) என்பார் ''மராட்டியர் வரலாறு'' என்ற நூலை எழுதியுள்ளார். இதன் மூன்றாவது பதிப்பு கி.பி. 1873-க்குரியது. இந்நூல் பக்கம் 127இன் அடிக்குறிப்பில்,

''சிவாசி வெங்காசிக்கு நான்கு கடிதங்கள் எழுதினார். அக்கடிதங்களின் மூலப்படி சதாரா அரசரின் வழியில் வந்த சிட்னிசு எனும் தனி அலுவலரிடம் உள்ளன. இப்பொழுதுள்ள சிட்னிசு அவர்களின் பாட்டனார், இரகுநாத் நாராயண் அனுமந்தே என்பவரின் வழியில் வந்தவரிடம் இருந்து பெற்றுப் பாதுகாத்து வந்தார். அவற்றை நான் ஆய்ந்து பார்த்தேன்; சிவாசியின் சிட்னிசு, பல்லாசி ஆவுசீ என்பவரின் கையெழுத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தேன். இக்கடிதங்கள் உண்மையானவையே என்று கொள்ளல் தகும்''

என எழுதியுள்ளார்.

இக்குறிப்பினால் அவ்விரு கடிதங்களின் உண்மைத் தன்மை புலப்படுவதோடு முதற் கடிதம் எழுதப்பெற்றதற்கு முன் மேலும் இரண்டு கடிதங்கள் சிவாசி அனுப்பினார் என்பது போதரும்.

வெங்காசி அல்லது ஏகோசி என்பார் சாகசி(Shahaji) புதல்வருள் ஒருவர்;சாகசியின் இரண்டாவது மனைவியாகிய துக்காபாயி மோகிதேயின் வயிற்றில் பிறந்தவர். சத்திரபதி சிவாசியோ சாகசியின் முதல் மனைவி சீசாபாயின் மகன் ஆவர்.

சாகசிக்கு வெங்காசியிடம் மிகுந்த அன்பு இருந்தமையால் சாகசி தன் நாடுகளை வெங்காசிக்கு அளித்து, அவர்க்கு உதவியாக

இருக்குமாறு தன் அமைச்சர்கள் இரகுநாத் நாராயண், சனார்த்தன நாராயணன் ஆகிய இருவரையும் அனுப்பி வைத்தார்.

சாகசி 1664இல் இறந்ததும் பீசப்பூர் சுல்தான் சாகசி இடத்திருந்த சாகீர்களை வெங்காசிக்கு உரிமையாக்கினார்.

கி.பி. 1675-இல் வெங்காசி தஞ்சை அரசர் ஆனார். வெங்காசிக்கும் இரகுநாத்துக்கும் மனவேற்றுமை உண்டாயிற்று. ஆகவே, இரகுநாத் பந்த் வெங்காசியை விட்டுச் சிவாசியை அடைந்தார்; சிவாசி தென்னாட்டின் மேல் படையெடுத்தபோது சிவாசிக்கு உதவியாயிருந்தார்.

சிவாசி தென்னாட்டுப் பகுதிகளைத் தமக்கு அடங்கியதாக ஆக்க விழைந்தமையோடு, தம் இளவலாகிய வெங்காசியிடம் இருந்த தம் தந்தையின் சாகீர்கள், செல்வங்கள், யானை, குதிரைகள், அணிகலன்கள் ஆகியவற்றுள் தமக்குப் பாதிப் பங்கு சேர வேண்டும் என்று விரும்பினார்; தந்தை இறந்தபின்னர் 13 ஆண்டுகள் வரையில் பொறுத்திருந்தார். கி.பி.1677-இல் தென்னாட்டின்மேல் படையெடுத்த பொழுது ஆரணியை முற்றுகையிட்டுத் திருவதியில் தங்கியிருக்கையில் சிவாசி வெங்காசிக்குக் கடிதம் எழுதினார். அதில், தம் தந்தை இறந்தது முதற்கொண்டு தம் தந்தைக்குரியதாயிருந்த எல்லா நாடுகளும் 13 ஆண்டுகளாக வெங்காசியிடமே இருக்கின்றன என்றும், அவற்றுள் பாதிப்பங்கு தமக்கு உரிமையுண்டு என்றும், கோவிந்த பட், காசிபந்த், நீலோநாயிக், இரகுநாத் நாயிக், தோமாசி ஆகியவர்களைத் தன்னிடம் அனுப்பி வழக்கினைத் தீர்த்துக் கொள்ளவேண்டும் என்றும் எழுதினார்.

வெங்காசி நன்கு சிந்தித்தபிறகு, சிவாசியைக் காண்பதற்குத் திருவதிக்குச் சென்றார். சிவாசி அரசநிலைக்கு ஏற்ப வெங்காசியை வரவேற்றார். பல நாள்கள் விவாதங்கள் நடந்தன; விருந்துகளும் நடைபெற்றன. சிவாசியின் கருத்துக்கு வெங்காசி சிறிதும் விட்டுக்கொடுக்கவில்லை. சிவாசி வெங்காசியை அனுப்பிவிட்டார்.[1]

இத்திருவதியில் சிவாசியைப் பார்த்ததாகக் கூறாமல் கொள்ளிடக்கரையில் உள்ள திருமழபாடியில் சிவாசியை வெங்கோசி கண்டதாகவும், சிவாசி 3/4 பங்கு சாகீர்களைத் தமக்கு அளிக்குமாறு கேட்டார் என்றும், வெங்காசி மறுத்தமையோடு, சிவாசியின் சினத்துக்கு அஞ்சி, ஐந்து குதிரை வீரரோடு ஒரு கட்டுமரத்தின் உதவியால் கொள்ளிடத்தைக் கடந்தார் என்றும், சகந்நாத பந்த், கோனேரி பந்த், சிவாசி பந்த், நீலோசி நாயக் ஆகியோரைச் சிவாசி சிறையில் வைத்தார் என்றும் கூறப்படுகிறது.[2] இதனையே ஆர். சத்யநாத ஐயர் அவர்களும் தம் ''மதுரை நாயக்க மன்னர்கள்'' என்ற நூலில் கூறுவர் (பக்கம் 282).

மோடி தமிழாக்கக் குறிப்பில், திருமழபாடியில் சிவாசியைக்காண ஏகோசி சென்றார் என்றும், இருவருக்கும் வேறுபாடு முற்றியதென்றும், ஏகோசி கொள்ளிடத்தைக் கடக்கும்பொழுது பாபாசி என்பவர் ஏகோசியைத் தன் முதுகில் தூக்கிக்கொண்டு கரையேற்றினார் என்றும் காணப்பெறுகின்றன.[3] மகாராட்டிரத்தில் மகாராட்டிர அரசர் வரலாறு எழுதிய ஆசிரியர் கூற்றிலும், தமிழ் நாட்டில் மகாராட்டிர வரலாறு எழுதிய ஆசிரியர் கூற்றிலும் வெங்காசியும், சிவாசியும் சந்தித்த இடம்பற்றி வேறுபாடு காணப்படுவது சிந்தித்தற்குரியது.

மோடி எழுத்தில் இச்செய்தி 7-12-1847—இல் இடம் பெற்றது; ஏறத்தாழ இச்சந்திப்பு நிகழ்ந்த 70 ஆண்டுகளுக்குப் பிறகு எடுத்தாளப்பெற்றது; தம் முன்னோர் ஏகோசிக்குச்செய்த உதவியைச் செவி வழியாக அறிந்து கூறுவது. இதில் இருவரும் சந்தித்த இடம் திருமழபாடி என்று உள்ளது. இதுவே சரியாக இருக்கக்கூடும்.[4]

சிவாசியின் கடிதத்திலேயே தந்தை சாகீர்கள் முதலியவற்றில் அரைப்பங்கு கேட்பதாகக் கூறியிருக்கக் ''கர்நாடகத்தில் மராத்தியர் ஆட்சி'' என்ற நூலில் சிவாசி முக்கால் பங்கு கேட்டார் என்று கூறியிருப்பதற்குரிய ஆதாரம் 'வெளிநாட்டார் குறிப்புக்களே' ஆகும்.[5]

வெங்காசி திரும்பிய பிறகு, கொள்ளிடக் கரைக்கு வடக்கிலுள்ள நாடுகளைத் தன் வயப்படுத்தி, சாந்தாசி என்பவரை ஆட்சி புரியுமாறு நியமித்து, இரகுநாத்

திருவதி என்பது திருவதிகையாகும். தென்னார்க்காடுமாவட்டத்தில், பண்ணுருட்டி புகைவண்டி நிலையத்துக்கு அருகில் உள்ளது.

நாராயணை அமைச்சராக்கி, அம்பீர்ராவ் என்பவரைப் படைத் தலைவராக்கிச் சிவாசி வடபுலம் நோக்கிச் சென்று பன்காலாவை அடைந்தார்.

இதற்குள்ளாக, வெங்காசி மதுரை, மைசூர் அரசர்களது உதவியை நாடினார். அன்னோர் உதவவில்லை. இதனையறிந்த சாந்தாசி கொள்ளிடத்தைக் கடந்துவந்தார். 26-11-1677-இல் பெரும்போர் நடந்தது. ஏகோசி வென்றார். ஆயினும், அன்றிரவே சாந்தாசி வெங்காசியின் படையைச் சிதற அடித்தார்.

இச் செய்திகளையறிந்ததும் சிவாசி பெரிய கடிதத்தை (கடிதம் I) எழுதினார்.

அதில், சிவாசி அதுகாறும் நிகழ்ந்துவந்த செய்திகளையெல்லாம் சுருக்கமாக எடுத்துரைத்தார். வெங்காசியின் நாடுகளையெல்லாம் தாம் வென்றிருப்பதாகவும், முகமதியர்களின் பேச்சைக் கேட்டதனால் வெங்காசிக்கு இழப்பு ஏற்பட்டது என்றும், தாம் இருவரும் மனமொத்து வாழ்வதே சிறப்பு உடையது என்றும், தம் தந்தையின் சாகீர்கள் முழுவதும் தமக்குக் கொடுத்தால் பனகலாவில் வெங்காசிக்கு நாடு கொடுக்கப்படும் அல்லது குதுப் சாகேப் இடம் இருந்து 3 இலட்சம் வராகன் வருவாய் தரக்கூடிய நிலம் வாங்கித் தரப்படும் என்றும், இந்தக் கடிதம் கண்டதும் இரகுநாத் நாராயண் இடம் தொடர்பு கொள்க என்றும் சிவாசி எழுதியிருந்தார்.

வெங்காசி மிகவும் வேண்டிக்கொண்ட பின்னரே இரகுநாத் நாராயண் அனுமந்தே வந்தார். அவர் சொற்படி சிவாசி கேட்டவற்றைக் கொடுத்தார். இரகுநாத் நாராயணைத் தமது அமைச்சராகவும் வெங்காசி ஏற்றுக் கொண்டார். பின்னர் வெங்காசி அமைதியுடன் ஆட்சிபுரியலானார்.

கி.பி.1680-இல் தஞ்சையும் தாம் வென்ற பிறநாடுகளும் சிவாசிக்கே உரியன என்று பீசப்பூர் சுல்தான் சிவாசிக்குச் 'சன்னது' செய்து கொடுத்தார். இது வெங்காசிக்குக் கலக்கத்தை விளைவித்தது. இதனால் தம் உரிமை பறிக்கப்பட்டது என்று வெங்காசி நினைத்தார்.[6] வாழ்க்கையில் வெறுப்புற்றார்; அரச காரியங்களைக் கவனித்தலை நீக்கினார்; ஒரு துறவிபோல் ஆனார். வெங்காசியின் இச் செயல்களை இரகுநாத் சிவாசிக்குத் தெரிவித்தார். சிவாசி வெங்காசிக்கு மீண்டும் ஒரு கடிதம் எழுதினார்.[7] (அது இங்குக் கண்ட இரண்டாம் கடிதம் ஆகும்) வெங்காசியின் மனநிலை மாறியுள்ளதையும், ஒரு துறவி போன்று இருத்தலையும் குறிப்பிட்டு அங்ஙனம் இருத்தல் அரசனுக்கு அழகன்று என்றும், எப்பொழுதும்போல் மகிழ்ச்சியுடன் இருக்கவேண்டும் என்றும், காலத்தை வீணாக்கக் கூடாது என்றும், தம்மைச் சார்ந்தவர்கட்கு வேலை கொடுத்து மக்கட்குச் சேவை செய்து புகழீட்ட வேண்டும் என்றும், இரகுநாத்பந்த் சொற்படி நடத்தல் வேண்டும் என்றும் நல்லறிவு கூறினார்.

இந்தக் கடிதமே சிவாசியின் கடைசிக் கடிதம் ஆதல் கூடும்.[8] சின்னாள்களுக்குப் பிறகு 5-4-1680-இல் சிவாசி இறந்தார். வெங்காசி அச்சமின்றித் தஞ்சையில் ஆட்சிபுரியலானார்.

சிவாசி வெங்காசிக்கு எழுதிய கடிதங்கள்: கடிதம் எண் I

ஆயிரம் ஆண்டுகள் வாழ்பவரும், திருமகள் பொருந்திய பட்டத்தரசிகளுடன் கூடிய அரசச் செல்வம் பொருந்தியவருமான ஏகோசி அரசர் அவர்கட்குச் சிவாசி அரசரின் வாழ்த்து. நலம். நலம் அறிந்து தங்கள் நலத்தை எழுதுக. மேலும் ''கைலாசவாசி'' சாகிப் அவர்கள் இறந்துபட்டு இப்பொழுது 13[1] ஆண்டுகள் கழிந்தன. பேரரசரின் செல்வம், பிற பொருள்கள், யானை, குதிரை விருதுகள் முதலியன யாவும் கொடுத்து இரகுநாத்பந்த் உங்களை அரசாட்சியில் அமரச்செய்து எல்லா அரசையும் தங்கள் கையில் ஒப்புவித்தார். இங்ஙனம் என் பாதிப்பங்கினையும் 13 ஆண்டுகளாகத் தாங்களே நுகர்கிறீர்கள். நானோ எனக்குச் சேரவேண்டிய பங்கைக் கேட்க முடியாமல் மிகத் தொலைவில் இருக்கிறேன். நல்ல பேச்சால் தாங்கள் கொடுக்கமாட்டீர்கள் என்று கருதிப் பதின்மூன்று ஆண்டுகள் தள்ளிக்கொண்டு வந்துவிட்டேன். நானும் 'போனது போகட்டும்; தாங்களும் பேரரசின் மைந்தர்தானே! உண்கிற வரையில் உண்ணட்டும்' என்று மனத்தில் கொண்டு, நான் இப்பொழுது செல்வச் செழிப்புடன்

இருக்கிறேன்; என் பங்கை எப்பொழுது பெற வேண்டுமோ அப்போது வழக்கிட்டுப் பெறலாம் என்று இருந்தேன். அரசு வேலையின்பொருட்டு, நான் 'குதுப்சகாவை'ப்[2] பார்த்தற்காகப் பாகா நகருக்குச் சென்றேன்; அங்கிருந்து கருநாடகத்துக்குச் சென்றேன்; அங்கிருந்து செஞ்சியை[3] அடைந்து செஞ்சியைக் கைப்பற்றினேன்; அங்கிருந்து[4] வேலூர்ப் பகுதியையும் கைப்பற்றிக் கொண்டேன். மற்றும் சதர்கானைப்[5] போரில் தோல்வியுறச் செய்து கூட்டத்தைச் சேர்த்துக் கொண்டேன்; சதர்கானிடத்தில் இருந்த அதிகாரத்தைக் கைப்பற்றினேன். பின்னர்க் காவிரிக்கரைக்கு வந்தேன். அங்கிருந்து தங்கட்குக் கடிதம் எழுதலானேன். கோவிந்தபட்டு கோசாமி, காகாசி பந்த், நீகோபாநாயக், ரங்கோபா நாயக், திம்மாசியச்சார்ராவ் போன்ற நல்லவர்களை நம்மிடம் அனுப்புக என்று பல முறைகளில் கடிதம் எழுதி அனுப்பினேன். அதற்குமேல் தாங்கள் அந்நல்லவர்களை என்னிடம் அனுப்பினீர்கள். அந்த நல்லவர்களிடத்தில் நம்முடைய குடும்பச் செய்திகள் யாவும் கூறி நமக்குரிய பாதிப்பங்கை நமக்குப் பங்கிட்டுக் கொடுக்குமாறு சொல்லுங்கள் என்று கூறி அனுப்பினேன். அவர்களோடு பாளன்பட்டு பட்டுகோசாமி, கிருட்டிண சோதிசி, கிருட்டிணாசி, சேக்சி போன்றவர்களைத் தங்களிடத்தில் அனுப்பி வைத்தேன். அன்னோர் தங்களிடத்தில் நல்ல முறையில் பேசி, "வீட்டுப் பூசல் வேண்டாம்; தம் பாதி உரிமைப் பங்கைத் தானே கேட்கிறார்; அதைக் கொடுத்து விடுங்கள்" என்று கூறினர். தாங்கள் வஞ்சகமாக (கபடமாக) இருந்தீர்கள். இப்பொழுது நான் பேரரசனாக இருக்கிறேன். தாங்களாகவே வந்து என்னைக் காண வேண்டும்; எனக்கு மரியாதை காட்ட வேண்டும். தாங்கள் என். பங்கைக் கொடுக்காமல் மோசம் செய்யப் போகிறீர்களா? பதின்மூன்று ஆண்டுகள் அரசச்செல்வம் யாவும் எடுத்துக் கொண்டீர்களே! மேலும் தங்கட்கே எல்லாப் பங்கும் வரவேண்டும் என்ற கெட்ட எண்ணங்கொண்டு பங்கு கொடுக்க ஒப்பந்தம் செய்து கொள்வது போல் நேராகத் தாங்கள் என்னைக் காண வந்தீர்கள். இருவரும் கண்டு பேசினோம். என்னுடைய பாதிப் பங்கைக் கொடுங்கள் என்று கேட்டேன். தாங்கள் என் பங்கைக் கொடுப்பதாகவே இல்லை. தாங்கள் என் இளவல்; தாங்களாகவே என்னைக் காண வந்தீர்கள். இந்நிலையில் தங்களைப் பிடித்துக்கொண்டு பங்கு கேட்பது என் பெருந்தன்மைக்கு அழகல்ல. ஆகவே, தங்களைத் தஞ்சாவூர்க்குப் போகவிட்டேன். தாங்களும் தஞ்சாவூர்க்குச் சென்றீர்கள். இனியும் வீட்டுப் பூசலை வளர்க்க விடாதீர்கள். அப்படி வளர்த்ததால் முன்னாளில் பாண்டவர்களும் கௌரவர்களும் தொல்லைகளை அடைந்தனர். பாரதக் கதைகள் யாவும் மனங்கொண்ட பிறகும் வீட்டுப் பூசலை வளர்த்தீர்கள் என்றால் இரண்டு பேருக்கும் தொல்லைகள் ஏற்படும். இதனை எண்ணி மறுமுறையும் சாம்சிநாயக், கோனேரிபந்த் மற்றும் சிவாசிசங்கர் ஆகிய இவர்களைத் தங்களிடத்தில் அனுப்பி நாமிருவரும் மீண்டும் மனமொத்து வாழ வேண்டும் எனச் சொன்னோம். ஆனால், தாங்கள் துரியோதனன் போல் கெட்ட எண்ணத்துடன் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுக்காமல் போர் செய்யவேண்டும் என்ற எண்ணங்கொண்டு இருந்தீர்கள். இந்நிலையில் எனக்கு இராய்கட்[6] பகுதியில் அதிக வேலையிருந்தது. அதனால் சந்தாசி[7], ராசியசீ பந்த், ரகுநாத பந்த், கம்பீரராவ் போன்றவர்களை நம்முடைய நாட்டில் இருக்கச் செய்து "தோர்களா" என்ற பகுதிக்குச் சென்றோம். தாங்கள் துருக்கர்களின் கெட்ட அறிவுரையால் என் படைகளுடன் போரிட வேண்டும் என்று நினைத்துப் பெரிய படையை என்னைச் சார்ந்தவர்கள் மேல் ஏவினீர்கள் என்று கேள்விப்பட்டேன். அந்தப்படை பால்கோண்டபுரத்துக்கு[8] வந்தது; அங்கு தங்கள் படையுடன் எங்கள் படை கடுமையாகப் போர் செய்தது; தங்கள் படை தோல்வியுற்றது.[9] பிரதாப்சி, பீவசி, சிவாசி டபீர் — இம்மூவர் பிடிபட்டனர்; மற்றும் பலர் கொல்லப்பட்டனர்; பலர் ஓடிவிட்டனர்; பெரும் பரபரப்பு உண்டாயிற்று. இச்செய்திகளையும் கேள்வியுற்றேன்; வியப்பு அடைந்தேன். தாங்களோ "கைலாசவாசி" பேரரசரின் உரிமை மகனாவீர்; மிகப் பெரிய மனிதரும் ஆவீர். இப்படி இருக்க எதையும் நினைத்துப் பார்க்காமல், அறம் மறம் ஆகியவற்றையும் நினைத்துப் பார்க்காமல், இப்படி வீணாகத் துன்

புறுவது வியப்புத் தருவதல்லவா? எதைப் பற்றி நினைப்பது என்று தாங்கள் கேட்கலாம். 'நாம் அறத்திற்கு மாறாகப் பதின் மூன்று ஆண்டுகள் அரசச் செல்வம் எல்லாவற்றையும் நுகர்ந்தோம். இப்போது பாதிப் பங்குதானே கேட்கிறார்; அவருடையதை அவர்க்குக் கொடுத்துவிட்டு நலமாக இருக்கலாம் என்று தாங்கள் நினைக்க வேண்டும். ஆனால், தாங்கள் அதற்கு மாறாக நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள். தங்கட்கு இறைவன், இறைவி ஆகியோருடைய அருள் முழுமையாக இருக்கிறது. நான் கெட்ட துருக்கர்களைக் கொல்கிறேன். ஆனால், தங்கள் படையில் துருக்கர்கள் இருப்பதால், தங்களுக்கு வெற்றி எங்ஙனம் உண்டாகும்? துருக்கர்கள் தங்கள் பிழைப்பையே நினைக்கிறார்கள். இதனைத் தாங்கள் நினைத்துப் பார்க்க வேண்டும். போரில் குதித்துத் துரியோதனனைப்போல் அறிவுகெட்டுக் குடிமக்களைக் கொன்றீர்கள். நடந்தது நடந்து விட்டது. இனியும் விடாப்பிடி வேண்டாம். பதின்மூன்று ஆண்டுகள் நீங்கள் எல்லாவற்றையும் நுகர்ந்தீர்கள். அதன் பிறகு நான் சில நாடுகளை வென்றிருக்கிறேன். ஆரணி, பெங்களூர், கோலார், அஃச்கோட், கார்கோன் மற்றும் தஞ்சாவூர் போன்ற அப்பகுதிகள் உங்கள் கையில் இருக்கின்றன. அவற்றை மக்கள் கையில் விட்டு விடுவது நல்லது. மற்றும் தாங்கள் சேர்த்த நிலையியற் பொருள், யானை, குதிரை முதலியவற்றுள் பாதிப்பங்கு கொடுத்துவிடலாம் என்ற எண்ணத்துடன் என்னைக் காண வாய்ப்பு ஏற்படுத்திக் கொள்ளுங்கள். தாங்கள் என்னைக்கண்டு பேச வாய்ப்பு உண்டாக்கிக் கொண்டால் தங்கட்குத் துங்கபத்திரைப் பக்கத்தில் பான்கால் என்ற பகுதியில் மூன்று இலட்சம் வராகன் மதிப்புள்ள நாட்டைக் கொடுப்பேன்.[10] என்னிடம் உள்ள நாடுகள் தங்களுக்கு வேண்டாம் என்று நினைப்பதாயின் குதுப்சா[11] அவர்களிடம் வேண்டிக் கொண்டு தங்கட்கு 3 இலட்சம் வெகுமதி கொடுக்கச் செய்வேன்.[12] இந்த இரண்டு விதமான எண்ணங்களைத் தங்கட்குத் தெரிவித்து இருக்கிறேன். இவ்விரண்டில் ஏதாவது ஒன்றை ஏற்று நடத்த வேண்டியது. விடாப்பிடி வேண்டாம். நம்மில் நாம் பூசல் புரிந்து கொண்டு வருந்துவதால் பயன் இல்லை. இதற்குப் பிறகாவது என்னைக் கண்டு பேச வேண்டும் என்ற நல்லெண்ணம் கொண்டு, பாதிப்பங்கினைக் கொடுத்துத் தாங்கள் நலனுடன் இருக்கலாம். குடும்பத்தில் உட்பூசல் நல்லதன்று. நான் தங்கட்கு மூத்தவன் என்ற வகையில் இதுகாறும் சொல்லிவந்துள்ளேன். இப்பொழுதும் சொல்கிறேன். கேட்டால் நல்லது; நலம் பெறுவீர்கள். கேட்கவில்லையெனில் தாங்களே வருந்துவீர்கள். நான் என்ன செய்யப் போகிறேன்? மேலும் என்ன எழுதுவது?[13]

கடிதம் எண் II

செல்வமும் நீண்ட ஆயுளும் உடையவரும், திருவுடைய பட்டத்தரசிகளைப் பொருந்தியவரும், அரசச் செல்வம் பொருந்திய வருமாகிய பேரரசர் வெங்கோசி அரசர் அவர்களுக்குச் சிவாசி அரசரின் வாழ்த்து. அங்குள்ள நலன்களுக்கு மடல் எழுதுவீராக.

செய்தி: பல நாள்களாகத் தங்களிடம் இருந்து மடல் இல்லை. இதனால் மனம் அமைதியுறவில்லை. திரு இரகுநாத் பந்த்[14] அவர்கள் மடல் எழுதியுள்ளார். 'தாங்கள் மனம் வெறுப்படைந்து இருக்கின்றீர். தாங்கள் முன்போல உடல் நலத்தில் மனம் செலுத்துவதில்லை. பண்டிகைகள் திருவிழாக்கள் போன்றவற்றைக் கொண்டாடுவதில்லை. தங்களிடம் படைகள் நிறையவுள்ளன. ஆனால், அவற்றைச் செயல்படுத்தவில்லை. பற்றற்ற நிலையை மேற்கொண்டிருக்கிறீர்கள். ஏதாவது ஒரு ''தீர்த்தக்கரையில்'' அமர்ந்து பொழுதை வீணடிக்கிறீர்கள் — என்று எனக்குத் தெரியவருகிறது. இச்செய்தி எனக்குப் பெரிதும் வியப்பைத் தந்தது. 'கைலாசவாசி'யான சுவாமி[15] அவர்கள் எப்படி எப்படி நடக்கவேண்டும் என்று அறிவுரை வழங்கியுள்ளார். முன்பு யவனரிடத்தில் பணிபுரிந்து தாங்கள் பெருமையடைந்து இருக்கிறீர்கள். பிறகு நன்முறையில் செயல் புரிந்திருக்கிறீர்கள். இவை யாவும் தாங்கள் அறிந்தனவே. முகம்மதியர்கட்கு உதவியாக இருந்து தங்கள் அறிவுக் கூர்மையால் அவர்களிடத்தினின்று நிறையப் பொருள் பெற்றீர்கள். நாமும் மிகுந்த முயற்சியால்

அரசைப் பெருக்கிக் கொண்டிருக்கிறோம். இதனைத் தாங்கள் பார்த்துக் கொண்டு வருகிறீர்கள். இத்தருணத்தில் என்ன நேர்ந் துள்ளது? தங்கள் இல்லறத்துக்குரிய அற நெறிகளைப் போற்றி நடக்காமல், பற்றற்ற நிலை மேற்கொண்டு, (நமக்குரிய வீரச்) செயல்களால் விளையும் பயனை நுகராமல், படைகளுக்கு வேலை கொடுக்காமல் வீணாக அவர்கட்கு ஊதியம் கொடுத்துத் தங்கள் செல்வத்தை வீணடிக்கிறீர்கள். உடலை வருத் திக் கொள்வது அறிவின் தன்மையா? இது என்ன முறை? உங்களுக்கு மூத்தவன் ஆகிய நான் இருக்க, வீணாகக் கவலைப்படுவது ஏன்? இனிப் பற்றற்றநிலை கொள்ளாமல், மனக்கவலையைப் போக்கி, தங்கள் நேரத்தை நல்லவழியில் செலுத்தவேண்டும். பண்டிகைகள், திருவிழாக்கள் ஆகியவற்றை முன்போல் நடத்தித் தங்கள் உடல் நலத்தை யும் நன்கு பேணுதல் வேண்டும். தங்களைச் சார்ந்தவர்களுக்கு உரிய பணிகளை நல்கிப் பயனுள்ள செயல்களைச் செய்து அவற்றின் வழி, மக்கட்குப் பணிபுரிந்து, மிக்கபுகழ் ஈட்டுதல் வேண்டும். தாங்கள் அப்பக்கத்தில் தங்கள் வீரம் புலப்படுமாறு செய்து மகிழ் வுடன் இருந்தால், எங்கட்கு 'எம் உடன் பிறந்தான் வீரத்தோடு திகழ்கிறான்' என்று மனம் அமைதி அடையும். அரசச் செல்வ முடைய இரகுநாத பண்டித்ர் அந்தப் பக்கத் தில் இருக்கிறார். அவர் தங்கட்கு வேற்றவர் அல்லர்; தங்கட்கு மிக்க நாள்களாகப் பழக்கம் உள்ளவர்; தாங்கள் எந்தமுறையில் நடக்க வேண்டும் என்பதை அறிவுறுத்தத் தகுதி உடையவர். என்னை மதிப்பதைப்போல் தங்களையும் அவர் மதிக்கிறார். நான் அவரிடத்தில் மிகவும் அன்பும் நம்பிக்கை யும் வைத்திருக்கிறேன். அது போன்று தாங் களும் அவரிடத்து நம்பிக்கை வைத்துப் பயனுள்ள செயல்கள் புரிந்து, இருவர்க்கும் நன்மை பயக்கும் செயல்களுக்கு வழிகோல வேண்டும். வீரமின்றிப் புகழின்றி, வீணாக இருந்து, மக்களின் செல்வத்தை வீண்செலவு செய்து, காலத்தை வறிதே போக்குதல் வேண்டாம். காலத்தைப் பயன் உள்ள வழியில் செலுத்த வேண்டிய நேரமிது. இறுதிக் காலத்தில் 'வைராக்கியம்' துறவு பூண்பது பொருந்தும்; இப்பொழுது கடமை களைச் செய்து நமக்கு ஊக்கத்தைக் காண் பிக்க வேண்டியது. மேலும் என்ன எழுதுவது? தாங்கள் அறிவுடையவராய் இருக்கிறீர்கள்.

குறிப்பு:—

1. 1664 + 13 = 1677

2. குதுப்சாகிப்-அப்துல் குதுப் சா-இவர் கோல்கொண்டாவின் நவாப் ஆவர். இவர் 1672-இல் இறந்தார். அவருடைய மருமகன் அபுகுசேன் அரசர் ஆனார். (A Histrory of the Maratha People - KINSAID. P.252)

3. கி.பி. 1678-இல் சிவாசி செஞ்சியைக் கைப்பற்றினார்.

4. சதர்கான் - செர்கான்லோடி (Maratha Rule in the Carnatic - p.158, 159) C:R. Srinivasar

5. திருமழபாடியாகலாம்; திருவாதி என்று சிலர் கருதுவர்.

6. 1677 நவம்பர்த் திங்களில் இராய்கட் என்ற இடத்துக்குச் சிவாசி சென்றார்.

7. தென்னாட்டில் சிவாசி வென்ற பகுதி களை மேற்பார்வை செய்ய சிவாசியால் நியமிக்கப்பட்டவர் சந்தாசி; இவருக்கு அமைச்சர் இரகுநாத்பந்த்; படைத்தலை வராக இருந்தவர் கம்பீரராவ்.

8. வாலிகண்டபுரம் ஆக இருக்கலாம். (p.240 New History of the Marathas Vol. I by G.S Sardesai (1946)

9. இந்தப் போருக்குப் பிறகு இந்தக் கடிதம் எழுதப்பட்டிருக்கலாம்.

10. பாதிப்பங்கு கொடுத்தால் 'பான்கால்' பகுதியில் மூன்று இலட்சம் வராகன் மதிப் புள்ளவற்றைக் கொடுப்பதாகச் சிவாசி எழுதினார் என்று (பக்கம் 129இல்) கிராண்டு டஃப் குறித்தார். ஆனால் கின் செயிட், 'தஞ்சையினின்று ஏகோசியை வன்மையாய் நீக்கிப் பன்காலாவில் நிலம் தருவதாகச் சிவாசி எழுதினார்' என்று தம் நூலில் எழுதியுள்ளார். (பக்கம் 259)

11. குறிப்பு 2 காண்க.

12. மூன்று இலட்சம் வராகன் வருவாய் நிலங்களைத் தரச்செய்வேன் என்று எழுதிய தாக டஃப் கூறுவார்.

13. இதன்பிறகு வெங்காசி, தன் மனைவி தீபாபாயின் சொற்படி இரகுநாத் பந்த் அவர்கட்கு எழுதி, அவரைத் தஞ்சைக்கு வரச்செய்து, அவர்வழி சிவாசியுடன் சமாதானம் செய்துகொண்டார்.

14. இரகுநாத் பந்த்: இவர் வெங்காசியின் தந்தையாகிய சாகசியின் அமைச்சர்களுள் ஒருவர். இரகுநாத் நாராயண் அனுமந்தே என்பது முழுப்பெயர். சாகசி தம் மகன் வெங்காசி சிறப்பாக அரசு நடத்தற்கு இவ்வமைச்சரை அளித்தார். வெங்காசி *1675*இல் தஞ்சையைக் கைப்பற்றிய பிறகு இவரும் தஞ்சையில் அமைச்சராக இருந்தார். இருவருக்கும் ஒருசமயம் மன வேறுபாடு ஏற்பட்டமையால், இவர் தஞ்சையை விட்டுச் சிவாசியிடம் போய் விட்டார். பிறகு சிவாசியோடு வெங்காசி சமாதானம் ஏற்படுத்திக் கொள்வதற்காக, இரகுநாத்பந்த் மீண்டும் தஞ்சைக்கு வருமாறு அழைக்கப்பெற்றார். சிவாசியின் இசைவின் பேரில் இரகுநாத் தஞ்சைக்கு வந்தார். (A History of th Maratha People - KINCAID Pages 254, 259)

15. கைலாசவாசியான என்பது இறந்த என்று பொருள்படும். அதாவது இறந்து போன சாகசியைக் குறிக்கும். இவர் கி.பி. *1664* சனவரித் திங்களில் இறந்தார்.

குறிப்பு:*(1)* இதிற் கண்ட இரண்டாவது கடிதம் எழுதிய சூழ்நிலை:

தஞ்சையும், சிவாசி தென்னகத்தில் வென்றுகொண்ட அனைத்து நாடுகளும் சிவாசிக்கு உரியனவாக்கி *1680*-இல் பீசப்பூர் சுல்தான் சிவாசிக்குச் 'சன்னது' செய்து கொடுத்தார். இது வெங்காசிக்குக் கலக்கத்தை விளைவித்தது. இதனால் தன் உரிமை பறிக்கப்பட்டது என்று வெங்காசி நினைத்தார்;*. வாழ்க்கையில் வெறுப்புக் கொண்டார்; அரச காரியங்கள் கவனித் தலை நீத்தார்; துறவிபோல் ஆனார்; வெங்காசியின் இந்நிலையை இரகுநாத்பந்த் சிவாசிக்குத் தெரிவித்தார். சிவாசி தன் இளவலுக்கு ஊக்கம் தந்து இக்கடிதம் எழுதினார்.

குறிப்பு *2:*

இவ்விரண்டாவது கடிதம் முழுவதும் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. கிராண்டு - டஃப் என்பார் எழுதிய மராட்டியர் வரலாறு பக்கம் *132* அடிக்குறிப்பு காண்க.

---

*"இரகுநாத் பந்த் ஏகோசிக்கும் சிவாசிக்கும் நல்லுறவு ஏற்பட ஓர் ஒப்பந்தத்தை ஏற்படுத்தினார். அதில் *19* சரத்துக்கள் இருந்தன. *16*-ஆவது சரத்தில் சிவாசிதான் தஞ்சையையும், சுற்றுப்புற நாடுகளையும் வெற்றிகொண்டதாகவும், அவற்றை மனப் பூர்வமாக ஏகோசிக்குக் கொடுப்பதாகவும் கண்டுள்ளது. இதனால் தன் சுயேச்சை பறிக்கப்பட்டது என்று ஏகோசி (வெங்கோசி) நினைத்தார்" என்று சர்தேசாய் கூறுவர். (Pages 241, 242 'New History of the Marathas' by G.S. Sardesai (1946).

---

1. History of the Maratha People - Kincaid & Parasnis-pages 256-257 S. Chan & Co. Delhi. 1968.
   History of the Marathas-Grant Duff p.125 III Edition; 1873.
2. Maratha Rule in the Carnatic-C.K. Srinivasan; pages 160-161
3. 3-105; 7-671
4. "Sivaji encamped at Tirumalwadi on the Coleroon about 10 mile north of Tanjore--: p.237; New History of the Marathas Vol.I by G.S. Sardesai (1946)
5. Maratha Rule in the Carnatic-C.K.Srinivasan p.160 foot-note 3 (Annamalai University, 1944)
6. இக்கட்டுரையின் இறுதியில் கண்ட அடிக்குறிப்பைக் காண்க.
7. கிராண்ட் டஃப் அவர்கள் எழுதிய நூலில் *131*ஆம் பக்கத்தின் அடிக்குறிப்பில் இக்கடிதம் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துத் தரப்பெற் றுள்ளது.
8. This letter was amongst the last that Shivajee ev dictated-Grant Duff.p.131.

கலைச் சொல்லாக்க முயற்சி — இதுவரை....

— இராதா செல்லப்பன்

அறிவியலைத் தமிழில் தருவதில் கலைச்சொற்கள் இன்றியமையாத பங்கை வகிக்கின்றன. ஏறத்தாழ 1830-ஆம் ஆண்டிலிருந்தே தமிழிலே அறிவியல் கருத்துக்களைக் கூறும் முயற்சி மேற் கொள்ளப்பட்டதாகத் தெரிகிறது. இதுபற்றி டாக்டர் இராம. சுந்தரம் 'தமிழில் கலைச் சொல்லாக்க முயற்சிகள்' என்ற தலைப்பில் 'தமிழ்க்கலை' இதழில் முதல் தொகுதி முதல் மலரில் விரிவாகக் கூறியுள்ளார்.

அறிவியலைத் தமிழில் கூறும் அறிவியல் கட்டுரைகளிலும் நூல்களிலும் அவற்றில் பயன்படுத்தப்பட்ட கலைச்சொற்கள் பின்னிணைப்பாகக் கொடுக்கப்பட்டன. 'தமிழர் நேசன்' 'ஜஸ்டிஸ்' செய்தி இதழ் ஆகியவை தமிழ்க் கலைச்சொற்களை வெளி யிட்டு அறிவியல் தமிழ் வளர்ச்சிக்கு ஊக்கம் அளித்தன. இவை கலைச்சொல்லாக்க முயற்சிகளின் முதல் காலகட்டத்தை குறிப் பவை. செய்தி இதழ்கள் வாயிலாகவும் நூல்களின் பின்னிணைப்பாகவும் பரவிய கலைச்சொற்கள் 1932 முதல் கலைச் சொல் தொகுதிகளாக வரத் துவங்கின. 1932-இல் சென்னை அரசு முதன்முதலில் கலைச்சொற் களைத் துறை வாரியாகப் பிரித்துப் பல தொகுதிகளாக வெளியிட்டது. அதனைத் தொடர்ந்து பல தமிழ்ச் சங்கங்கள், கலைச் சொற்குழுக்கள், தனியார் நிறுவனங்கள் போன்றவை கலைச் சொல்லாக்கத்தில் ஈடுபட்டுப் பல கலைச்சொல் தொகுதிகளை வெளியிட்டன. அண்டை நாடான இலங்கை யிலும் கலைச் சொல்லாக்க முயற்சிகள் 1849-ஆம் ஆண்டிலிருந்தே நடைபெற்று வருவதாகத் தெரிகிறது. பல துறைகளிலு மாகச் சுமார் 50 கலைச்சொல் தொகுதிகள் இதுவரை வெளியிடப்பட்டுள்ளன.

அறிவியல் கருத்துக்களைத் தமிழிலே கூற முன்வரும் அறிவியலார், போதிய கலைச் சொற்கள் தமிழில் இல்லையே என்று ஒரு கணம் திகைத்து நிற்கின்றனர். அவர்தம் சிறப்புத் துறையில் முன்னர் தமிழ்க் கலைச் சொற்கள் ஆக்கப்பட்டுள்ளனவா? இல்லையா? என்ற செய்தியையும் அறிய அவருக்கு வாய்ப்பில்லை. எனவே, முன்னர் வெளிவந்துள்ள கலைச்சொற்களைக் கண்ட ிந்து அறிவியலார் பயன்பெற வேண்டுமென்ற நோக்கத்தில் கலைச் சொற்களின் புள்ளி விவரத் தொகுப்பு உருவாக்கப்பட்டது. பெரும்பாலான கலைச் சொல் தொகுதிகளில் ஆங்கிலம்-தமிழ்க் கலைச்சொற்களே தொகுக்கப்பட்டுள்ளன. ஒருசில பட்டியல்கள் தமிழ்-ஆங்கிலம் முறை யில் உள்ளன. அவை மட்டும் அடைப்புக் குறிக்குள் (தமிழ்-ஆங்கிலம்) என்று குறிக்கப் பட்டுள்ளன. இப்பட்டியலில் ஒவ்வொரு துறைக்கும் அண்டையில் அடைப்புக் குறிக் குள் கொடுக்கப்பட்டுள்ள எண் அத்துறைச்

சொற்கள் இடம்பெறும் கலைச்சொல்லக ராதிகளின் எண்ணிக்கையைக் குறிக்கும். ஒவ்வொரு துறையிலும் காணப்படும் ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்கள் தோராயமாக இவ்விவரப் பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக எட்டு அகராதிகளில் வேதியியல் கலைச்சொற்கள் உள்ளன. அவற்றில் பல சொற்கள் மறித்து வரும் நிலையும், பல சொற்கள் அதிகமாகக் காணப்படும் நிலையும் உள்ளன. எனவே, மறித்து வரும் சொற்களை நீக்கி வேதியியல் சொற்கள் 6000 என்று தோராயமாகக் கணக்கிடப்பட்டு மொத்த எண்ணிக்கை கொடுக்கப்பட்டுள்ளது. தமிழ்ப் பல்கலைக்கழகம் பொறியியலில் மூன்று தொகுதிகளையும் (கட்டடவியல், எந்திரவியல், மின்னியல் மற்றும் மின்னணுவியல்) மருத்துவத்தில் இரண்டு தொகுதிகளையும் தொகுத்து உருட்டச்சு செய்துள்ளது. பொறியியலில் 68 ஆதாரங்களிலிருந்தும் மருத்துவவியலில் 38 ஆதாரங்களிலிருந்தும் சொற்கள் தொகுக்கப்பட்டுள்ளன. இவ்வாதாரங்கள் நீங்கலாக ஏனைய பொறியியல் மருத்துவக் கலைச்சொல் தொகுதிகள் மட்டும் இங்கு பொறியியல், மருத்துவம் என்ற தலைப்பு களின் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

வேதியியல் (9)

			சொற்கள்
Chemistry	1932	சென்னை அரசு	1043
இயைபு நூல்	1936,	சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம்	1018
இரசாயனம்	1947	சென்னை அரசு	1284
இரசாயனவியற் சொற்றொகுதி	1955	தன்மொழியலுவலகம், இலங்கை	3850
வேதிப்பொது அறிவு	1960	கல்லூரித் தமிழ்க்குழு, சென்னை அரசு	846
வேதியியல்	1968	பூ.சா.கோ. அறநிலைய வெளியீடு	3960
வேதியியல்	1971	தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்	1500
வேதி யல்	1972	தமிழியக்கப் பாசறை, காரைக்குடி	359
சேதனவுறுப்புச் சொற்றொகுதி.	(ஆண்டு ?)	இலங்கை	1225
(மறித்து வரும் சொற்களை நீக்கி)		ஏறத்தாழ	6000 சொற்கள்

பௌதீகம் (10)

Physics	1932,	சென்னை அரசு	983
பூதநூல், பொருள்நூல்	1936,	சென்னை மாகாணத் தமிழ் சங்கம்	981
பௌதீகம்	1947,	சென்னை அரசு	1559
பௌதீகவியற் சொற்றொகுதி	(ஆண்டு ?)	இலங்கை வெளியீடு	11250
பௌதீகம்	1960,	கல்லூரித் தமிழ்க்குழு, சென்னை அரசு	571

பௌதீக விஞ்ஞானம்,	1960,	(தமிழ்—ஆங்கிலம்) அரச கரும மொழித் திணைக்களம், இலங்கை	19250
பௌதீக வியல்,	1968,	பூ.சா.கோ. அறநிலைய வெளியீடு	3,600
இயற்பியல்,	1971,	தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்	1,750
பூதவியல்	1972,	தமிழியக்கப் பாசறை, காரைக்குடி	625
பௌதீகவியற் சொற்றொகுதி	1975,	கல்வி வெளியீட்டுத் திணைக்களம், இலங்கை	5,670
(மறித்து வரும் சொற்களை நீக்கி		ஏறத்தாழ	20000 சொற்கள்

கணிதவியல் (8)

Mathematics	1932,	சென்னை அரசு	755
கணக்கியல், கணிதம்,	1936,	சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம்	807
கணிதம்	1947,	சென்னை அரசு	1046
தூய கணிதமும் பிரயோக கணிதமும்	1956,	தன்மொழியலுவலகம், இலங்கை	3150
கணிதம்	1965,	அரச கரும மொழித் திணைக்களம், இலங்கை	8,750
கணிதம்	1971,	தமிழ் நாட்டுப் பாடநூல்	2700
எண்ணியல்	1972,	தமிழியக்கப் பாசறை, காரைக்குடி	175

கலைச்சொற்கள்: கே.ஆர். இராசகோபாலன் இந்தியக் கணித வரலாறு, 1979
எஸ். கோவிந்தராசு கிறித்துவ இலக்கியச் சங்கம்
அப்துல் அக் (பின்னிணைப்பு) ... 100

(மறித்து வரும் சொற்களை நீக்கி) ஏறத்தாழ 10000 சொற்கள்

புள்ளியியல் (5)

	சொற்கள்
புள்ளியியல், 1960, கல்லூரித் தமிழ்க் குழு, சென்னை அரசாங்கம்	415
புள்ளிவிவரவியற் சொற்றொகுதி, 1965, அரச கரும மொழித் திணைக்களம், இலங்கை	3430

புள்ளியியல், 1971, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்	658
புள்ளியியல், 1972, தமிழியக்கப் பாசறை, காரைக்குடி	150
சிறப்புச் சொற்கள் துணை அகராதி, 1974, புள்ளியியல் துறை, தமிழ்நாடு அரசு	1728
(மறித்து வரும் சொற்களை நீக்கி) ஏறத்தாழ	4000

வான நூல் (1)

1960, கல்லூரித் தமிழ்க் குழு, சென்னை அரசாங்கம்	324

செடிமவியல் (7)

Natural Science, 1932, சென்னை அரசாங்கம்	333
பயிர் நூல், 1936, சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம்	295
இயற்கை விஞ்ஞானம், 1947, சென்னை அரசாங்கம்	1009
தாவரவியற் சொற்றொகுதி, 1957, அரச கரும மொழியலுவலகம், இலங்கை	2275
தாவரவியற் சொற்றொகுதி 1963, அரச கரும மொழித் திணைக்களம், இலங்கை	8050
தாவரவியல், 1971, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்	1382
பயிரியல், 1972, தமிழியக்கப் பாசறை, காரைக்குடி	173
(மறித்து வரும் சொற்களை நீக்கி) ஏறத்தாழ	9000 சொற்கள்

வேளாண்மையியல் (2)

பயிர்ச் செய்கைச் சொற்றொகுதி, 1958, அரச கரும மொழியலுவலகம், இலங்கை	4,620
சிறப்புச் சொற்கள் துணை அகராதி 1963, வேளாண்மைத்துறை, தமிழ்நாடு அரசு	3,000

உயிரியல் (6)

விலங்கு நூல், 1936, சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம்	171
விலங்கியல், 1957, அரச கரும மொழித் திணைக்களம், இலங்கை	2,100
உயிர் நூல், 1960, கல்லூரித் தமிழ்க் குழு, சென்னை அரசு	510
விலங்கியல், 1971, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்	1,406
விலங்கியல், 1972, தமிழியக்கப் பாசறை, காரைக்குடி	140
(உயிரியல் விஞ்ஞானம் (தமிழ்-ஆங்கிலம்) 1961, அரச கரும மொழித் திணைக்கள வெளியீட்டுப் பிரிவு, இலங்கை)	3,500
(மறித்து வரும் சொற்களை நீக்கி) ஏறத்தாழ	4000 சொற்கள்

பொறியியல் (16)

மோட்டார்ப் பொறி நுட்பவியற் சொற்றொகுதி (Motor Mechanism) 1958, அரச கரும மொழியலுவலகம், இலங்கை.	2,225
சிறப்புச் சொற்கள் துணை அகராதி, 1962, நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை, தமிழ்நாடு அரசு	1,600
சிறப்புச் சொற்கள் துணை அகராதி, 1962, பொறியியல் பாசனத்துறை, பொறியியல் பாசனத்துறை வெளியீடு	210
சிறப்புச் சொற்கள் துணை அகராதி, 1963, பொறியியல் பணித்துறை(பொது கட்டிடம்) தமிழ்நாடு அரசு	500
அளவையியற் சொற்றொகுதி (Surveying) 1964, அரச கரும மொழித் திணைக்களம், இலங்கை	3,500
மின்னெந்திரவியற் சொற்றொகுதி, 1965, அரச கரும மொழித் திணைக் களம், இலங்கை	4,025
குடிசார் எந்திரவியற் பொறிமுறை எந்திரவியற் சொற்றொகுதி 1966, அரச கரும மொழித் திணைக்களம், இலங்கை	10,500
இரசாயன எந்திரவியற் சொற்றொகுதி (Chemical Engineering) 1967, அரச கரும மொழித் திணைக்களம், இலங்கை	8,800
கட்டட அமைப்புக் கலை, 1967, கல்வி வெளியீட்டுத் திணைக்களம், இலங்கை	3,570
கலைச்சொல் தொகுப்பு நூல், 1971, தமிழ் மன்றம், அழகப்பா பொறியியல் கல்லூரி, காரைக்குடி	634
சிறப்புச் சொற்கள் துணை அகராதி, 1974, அரசு தலைமை மின் ஆய்வாளர் அலுவலகம், தமிழ்நாடு அரசாங்கம்	297
சிறப்புச் சொற்கள் துணை அகராதி, 1976, பொதுப்பணி (நிலநீர்)த் துறை, தமிழ்நாடு அரசாங்கம்	330
சிறப்புச் சொற்கள் துணை அகராதி, 1976, நெடுஞ்சாலை ஊரகப் பணித்துறை, தமிழ்நாடு அரசாங்கம்	1,330
சிறப்புச் சொல் துணை அகராதி, 1982, தொழில் நுட்பக் கல்வித் துறை, தமிழ்நாடு அரசாங்கம்	3,162
கலைச்சொற்கள், 1983, பொறியியல் I கட்டடவியல்	2,800
II எந்திரவியல்	5,000
III மின்னியல், மின்னணுவியல்	5,000
(68 ஆதாரங்களிலிருந்து தொகுக்கப்பட்டவை) உருட்டச்சு செய்யப் பெற்றது, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.	
கலைச்சொற்கள், 'கணிப்பொறி அறிமுகமும் 'பேசிக்' மொழியும், (உருட்டச்சு செய்யப் பெற்றது), கணிப்பு மையம், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.	400
(மறித்துவரும் சொற்களை நீக்கி) ஏறத்தாழ	35,000 சொற்கள்

மருத்துவம் (19)

Physiology & Hygiene 1932, சென்னை அரசு	327
உடலியலும் நலவழியும், 1936, சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம்	392
உடலியலும் சுகாதாரமும், 1947, தமிழ்நாடு அரசு	798
உடற்றொழிலியலும் உடனலவியலும், 1957, அரச கரும மொழித் **திணைக்களம்**, இலங்கை	2,625
சிறப்புச் சொற்கள் துணையகராதி 1962, பொதுச் சுகாதாரத்துறை, தமிழ்நாட்டரசு	1,100
சிறப்புச் சொற்கள் துணையகராதி 1963, மருத்துவத் துறை, தமிழ்நாடு அரசாங்கம்	1,750
சிறப்புச் சொற்கள் துணையகராதி 1964, பொதுச் சுகாதாரப் பொறியியல்; நகராட்சிப் பணித்துறை, தமிழ்நாடு அரசாங்கம்	500
மருந்தியல் விஞ்ஞானச் சொற்றொகுதி, 1965, அரச கரும மொழித் திணைக்களம், இலங்கை	2,100
நோயியற் சொற்றொகுதி, 1965, அரச கரும மொழித் திணைக்களம், இலங்கை	2,100
மருத்துவம், 1971, கல்வி வெளியீட்டுத் திணைக்களம், இலங்கை	6,975
உடற்றொழிலியலும் உயிரிரசாயன்வியலும், 1965, அரச கரும மொழித் திணைக்களம், இலங்கை	4,375
பொது உடனலச் சொற்றொகுதி, 1965, அரச கரும மொழித் திணைக்களம் இலங்கை	2,275
பற்றீரியவியற் சொற்றொகுதி, 1966, அரச கரும மொழித் திணைக்களம், இலங்கை	1,855
உடலமைப்பியலும் இழையவியலும், 1965, அரச கரும மொழித் திணைக்களம், இலங்கை	3,850
சட்ட மருத்துவச் சொற்றொகுதி, 1965, அரச கரும மொழித் திணைக்களம், இலங்கை	1,470
உடலியக்கவியல், 1972, தமிழியக்கப் பாசறை, காரைக்குடி	150
சிறப்புச்சொல் துணையகராதி, மருத்துவக் கல்வித்துறை, மருத்துவப் பணி மற்றும் குடும்ப நலத் துறை, 1976, தமிழ்நாடு அரசாங்கம்	2,160
சிறப்புச் சொற்கள் துணை அகராதி, மருத்துவப் பணி மற்றும் குடும்ப நலத்துறை (குடும்பநலப் பிரிவு) 1977, தமிழ்நாடு அரசாங்கம்.	351
மருத்துவம், பகுதி I & II (உருட்டச்சு செய்யப்பெற்றது) 1983 (38 ஆதாரங்களிலுள்ள கலைச் சொற்களின் தொகுப்பு) தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.	10,500
(மறித்து வரும் சொற்களை நீக்கி) ஏறத்தாழ	15,000 ஏறத்தாழ

புவியியல்(8)

Geography, *1932*, சென்னை அரசாங்கம்	*969*
புவியியற் சொற்றொகுதி *1956*, தன்மொழியலுவலகம், இலங்கை	*69*
தரை நூல், *1936*, சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம்	*4,200*
புவியியற் சொற்றொகுதி(உயர் பிரிவு) *1958*. அரச கரும மொழித் திணைக்களம்,இலங்கை	*2,345*
புவியியல்,*1960*, கல்லூரித் தமிழ்க் குழு, சென்னை அரசாங்கம்	*1,388*
புவிச்சரிதவியல், *1968*,கல்வி வெளியீட்டுத் திணைக்களம்,இலங்கை	*5,600*
மண்ணியல், *1972* தமிழியக்கப் பாசறை, காரைக்குடி	*112*
புவியியல், *1973*, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்	*1,543*
(மறித்து வரும் சொற்களை நீக்கி) ஏறத்தாழ	*6000* சொற்கள்

வணிகவியல் (5)

Commerce, *1932*, சென்னை அரசாங்கம்	*818*
வர்த்தகம், *1947*, சென்னை அரசாங்கம்	*990*
வணிகவியல், *1960*, கல்லூரித் தமிழ்க்குழு, சென்னை அரசாங்கம்	*1,600*
வணிகவியல், *1972*, தமிழியக்கப் பாசறை, காரைக்குடி	*315*
சிறப்புச் சொல் துணையகராதி, *1982*, அரசு வணிகத் திட்டத் துறை, தமிழ்நாடு அரசு	*128*
(மறித்து வரும் சொற்களை நீக்கி) ஏறத்தாழ	*2000* சொற்கள்

உளவியல் (3)

உளவியல், *1960*, கல்லூரித் தமிழ்க்குழு, சென்னை அரசு	*956*
கல்வியும் உளவியலும், *1962*, அரச கரும மொழித் திணைக்களம் இலங்கை	*2,625*
உளவியல், *1971*, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்	*1,296*
(மறித்து வரும் சொற்களை நீக்கி) ஏறத்தாழ	*3000* சொற்கள்

வரலாறு, பொருளியல் நூல், ஆட்சி முறை, அரசியல், ஊராட்சி முதலியன (17)

History, Economics, Administration, Politics & Civics	*2,080*
வரலாறு, பொருளியல் நூல், ஆட்சி முறை, அரசியல், ஊராட்சி, *1936* சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம்	*2,095*
சரித்திரம், பொருளாதாரம், நிர்வாகம், அரசியல், குடிமை நூல், *1947*, சென்னை அரசு	*1,151*

அரசாங்கப் பகுதிகள், உத்தியோகப் பதவிப் பெயர்கள் நாமாவலி, 1955, இலங்கை அரசாங்க அச்சகம்.	2,800
பொருளியற் சொற்றொகுதி, 1957, அரச கரும மொழியலுவலகம், இலங்கை	2,100
குடிமையியலும் ஆட்சியியலும், 1958, அரச கரும மொழித் திணைக்களம், இலங்கை	2,100
பொருளாதாரம், 1960, கல்லூரித் தமிழ்க்குழு, சென்னை அரசாங்கம்	1,453
வரலாறுகள், 1960, கல்லூரித் தமிழ்க்குழு, சென்னை அரசாங்கம்	2,450
அரசியல் பொதுத் துறை ஆட்சியில், 1960, கல்லூரித் தமிழ்க்குழு, சென்னை அரசாங்கம்	880
வரலாறும் தொல்பொருளியலும், 1970, கல்வி வெளியீட்டுத் திணைக்களம், இலங்கை	1,820
அரசியல், 1971, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்	857
வரலாறு, 1971, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்	1,818
வரலாறும் அரசியலும், 1972, தமிழியக்கப் பாசறை, காரைக்குடி.	210
பொருளியல், 1972, தமிழியக்கப் பாசறை, காரைக்குடி	210
சிறப்புப் சொற்கள் துணை அகராதி, உள்ளாட்சித் துறை, 1973, தமிழ்நாடு அரசு	375
சிறப்புச் சொற்கள் துணை அகராதி, உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, 1974, தமிழக அரசு	240
ஆட்சிச் சொல்லகராதி, 1983, நான்காம் பதிப்பு, தமிழ்நாடு அரசாங்கம்	9,792
(மறித்து வரும் சொற்களை நீக்கி)ஏறத்தாழ	10,000 சொற்கள்

சட்டவியல் (3)

சட்டச் சொல்லகராதி, 1968, தமிழ்நாடு எழுதுபொருள் அச்சக இயக்குநர், சென்னை	1,692
வணிகவரிச் சட்டங்களில் பயன்படுத்தப்படும் ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களின் துணை அகராதி, 1976, தமிழ்நாடு அரசாங்கம்	780
சட்டச் சொல்லகராதி, 1979, தமிழ்நாடு அரசாங்கம்	7,350
(மறித்து வரும் சொற்களை நீக்கி) ஏறத்தாழ	8000 சொற்கள்

சமூகவியல் (4)

சமூக விஞ்ஞானம் (தமிழ்-ஆங்கிலம்) 1961, அரச கரும மொழி வெளியீட்டுக் கிளைப் பிரசுரம், இலங்கை	10,850
சமூகவியல் சொற்றொகுதி 1966, அரச கரும மொழித் திணைக்களம், இலங்கை	3,745
சிறப்புச் சொல் துணையகராதி, சமூகநலத் துறை (ஆண்டு?) தமிழ்நாடு அரசாங்கம்	120

சிறப்புச் சொல் துணையகராதி, 1979, அரிசன மற்றும் பழங்குடியினர் நலத் துறை, தமிழ்நாடு அரசாங்கம்	153
(மறித்து வரும் சொற்களை நீக்கி) ஏறத்தாழ	11,000

ஏனைய துறைச் சொற்கள் (73)

கணக்குப் பதிவியற் சொற்றொகுதி, 1957, அரச கரும மொழியலுவலகம், இலங்கை	1,925
கைப்பணிச் சொற்றொகுதி — 1, நெசவுத் தொழிலும் வனைதற்றொழிலும் (Weavy & Pottery) 1956, தன்மொழியலுவலகம், இலங்கை	1,400
கைப்பணிச் சொற்றொகுதி — 11 மர வேலையும் அரக்கு வேலையும் (Wood work & Lacquer work) 1956, அரச கரும மொழியலுவலகம், இலங்கை	1,400
கைப்பணியும் கைத்தொழிலும் (தமிழ்-ஆங்கிலம்) (Arts & Crafts) 1962, அரச கரும மொழித் திணைக்களம், இலங்கை	1,750
உடற்கலைச் சொற்றொகுதி (Physical Education) 1963, அரச கரும மொழித் திணைக்களம், இலங்கை	2,030
உலோக வேலை (Metal Work) 1957, அரச கரும மொழியலுவலகம், இலங்கை	3,150
மனையியற் சொற்றொகுதி (Home Science) 1960, அரச கரும மொழித் திணைக்களம், இலங்கை	9,350
ஐரோப்பியத் தத்துவ சாத்திரம், 1960; கல்லூரித் தமிழ்க்குழு, சென்னை அரசாங்கம்	525
மெய்யியல் - 1 ஒழுக்கவியல், அளவையியல், அறிவியல் (Philosophy-I ethics, logics & epistemology) 1960, அரச கரும மொழித் திணைக்களம், இலங்கை	1,050
கல்வியும் உளவியலும் (Education & Psychology) 1962, அரச கரும மொழித் திணைக்களம், இலங்கை	2,625
சிறப்புச் சொற்கள் துணை அகராதி, 1962, கூட்டுறவுத் துறை, தமிழ்நாடு அரசாங்கம்	280
சிறப்புச் சொற்கள் துணை அகராதி, 1977, கூட்டுறவுத் துறை, தமிழ்நாடு அரசாங்கம்	960
சிறப்புச் சொற்கள் துணை அகராதி, 1962, வனத்துறை, தமிழ்நாடு அரசு	550
சிறப்புச் சொற்கள் துணை அகராதி 1962, தமிழ்நாடு அரசினர் அலுவலர் தேர்வுக்கழகம், த்மிழ்நாடு அரசாங்கம்	200
சிறப்புச் சொற்கள் துணை அகராதி 1964, தமிழ்நாடு அரசாங்கத் தேர்வுகளின் ஆணையாளர் அலுவலகம்	325
சிறப்புச் சொற்கள் துணை அகராதி 1974, அரசுத் தேர்வு ஆணையகம், தமிழ்நாடு அரசாங்கம்	390
சிறப்புச் சொற்கள் துணை அகராதி 1962, நில அளவு, நிலப் பதிவேடுகள் துறை, தமிழ்நாடு அரசாங்கம்	1,200
சிறப்புச் சொற்கள் துணை அகராதி 1962, வருவாய்த் துறை (உணவு உற்பத்தி) சென்னை அரசாங்கம்	50
சிறப்புச் சொற்கள் துணை அகராதி 1982, வருவாய் நிருவாகத் துறை, தமிழ்நாடு அரசாங்கம்	750
சிறப்புச் சொற்கள் துணை அகராதி 1962, அரசினர் போக்குவரத்துத் துறை,தமிழ்நாடு அரசாங்கம்	300

சிறப்புச் சொற்கள் துணை அகராதி *1963*, போக்குவரத்துத் துறை, தமிழ்நாடு அரசாங்கம்	*600*
திறப்புச் சொற்கள் துணை அகராதி *1977*, போக்குவரத்துத் துறை, தமிழ்நாடு அரசாங்கம்	*665*
சிறப்புச் சொற்கள் துணை அகராதி *1962*, உள்ளாட்சித் துறை தமிழ்நாடு அரசாங்கம்	*480*
சிறப்புச் சொற்கள் துணை அகராதி *1963*, பத்திரப் பதிவுத் துறை, தமிழ்நாடு அரசாங்கம்	*350*
சிறப்புச் சொற்கள் துணை அகராதி *1963*, கைத்தறித் துறை, தமிழ்நாடு அரசாங்கம்	*120*
சிறப்புச் சொற்கள் துணை அகராதி *1975*, கைத்தறித் துணி நூல் துறை, தமிழ்நாடு அரசாங்கம்	*330*
சிறப்புச் சொற்கள் துணை அகராதி *1963*, இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, தமிழ்நாடு அரசாங்கம்	*700*
சிறப்புச் சொற்கள் துணை அகராதி *1963*, சீர்திருத்தப்பள்ளி, மகளிர் ஒழுக்கக் கண்காணிப்புத் துறை, தமிழ்நாடு அரசாங்கம்	*240*
சிறப்புச் சொற்கள் துணை அகராதி *1973*, சீர்திருத்தப்பள்ளி விழிப்புத் துறை, தமிழ்நாடு அரசாங்கம்	*512*
பிறப்புரிமையியல்—குழியவியல்—கூர்ப்பு (Genetics, Cytology, Evolution) *1964*, அரச கரும மொழித் திணைக்களம், இலங்கை	*2,450*
சிறப்புச் சொற்கள் துணை அகராதி, *1964*, சின்கோனாத் துறை, தமிழ்நாடு அரசாங்கம்	*280*
சிறப்புச் சொற்கள் துணை அகராதி, *1977*, சின்கோனாத் துறை, தமிழ்நாடு அரசாங்கம்	*390*
சிறப்புச் சொற்கள் துணை அகராதி, *1964*, தமிழ்நாட்டுத் தொல்லேட்டு அலுவலகம், தமிழ்நாடு அரசாங்கம்	*510*
சிறப்புச் சொற்கள் துணை அகராதி, *1965*, தொல் பொருட்கலைத்துறை, தமிழ்நாடு அரசாங்கம்	*640*
ஒட்டுண்ணியியல் (Parasitology) *1965*, அரச கரும மொழித் திணைக்களம், இலங்கை	*1,400*
அச்சியற் சொற்றொகுதி (Printing terms) *1965*, அரச கரும மொழித் திணைக்களம், இலங்கை	*2,800*
சிறப்புச் சொற்கள் துணை அகராதி, *1965*, தீ அணைக்கும் துறை, தமிழ்நாடு அரசாங்கம்	*1,200*
சிறப்புச் சொற்கள் துணை அகராதி, *1975*, தீயணைப்புத் துறை, தமிழ்நாடு அரசாங்கம்	*1,225*
விலங்கு உடற்றொழிலியல் (Veterinary Physiology) *1966*, அரச கரும மொழித்திணைக்களம், இலங்கை	*1,750*
விலங்கு உடலமைப்பியல் சொற்றொகுதி (Veterinary Anatomy) *1966*, கரும மொழித் திணைக்களம், இலங்கை	*3,150*
நுட்பச் சொல்லகராதி, *1966*, தமிழ்நாடு அச்சுத் தொழில் நெறியாளர், சென்னை	*131*
கலைச்சொற்பட்டி, பொது வழக்காறு, *1972*, தமிழியக்கப் பாசறை, காரைக்குடி	*177*
விலங்கு வேளாண்மைச் சொற்றொகுதி (Animal husbandry) *1973*, அரச	

கருமமொழித் திணைக்களம், இலங்கை	*1,400*
சிறப்புச் சொல் துணையகராதி, 1973, ஆவணப் பதிவுத் துறை தமிழ்நாடு அரசாங்கம்	*216*
சிறப்புச் சொல் துணையகராதி, 1973, தொழிலாளர் துறை (தொழிற் சாலைப் பிரிவு) தமிழ்நாடு அரசாங்கம்	*432*
சிறப்புச் சொல் துணையகராதி, 1974, நில அளவை பதிவுருக்கள் துறை, தமிழ்நாடு அரசாங்கம்	*675*
சிறப்புச் சொல் துணையகராதி, 1974, இட வசதிக் கட்டுப்பாட்டு அதிகாரி அலுவலகம், தமிழ்நாடு அரசாங்கம்	*1,350*
தனிச் சொல் துணை அகராதி(ஆண்டு?) இட வசதிக் கட்டுப்பாட்டுத் துறை, தமிழ்நாடு அரசாங்கம்	*103*
சிறப்புச் சொல் துணை அகராதி, 1974, கருவூலக் கணக்குத் துறை, தமிழ்நாடு அரசாங்கம்	*1,190*
சிறப்புச் சொல் துணை அகராதி, 1974, வேளாண்மை வருமான வரித் துறை, தமிழ்நாடு அரசாங்கம்	*66*
சிறப்புச் சொல் துணை அகராதி, 1974, வேலைவாய்ப்புப் பயிற்சித் துறை தமிழ்நாடு அரசாங்கம்	*675*
சிறப்புச் சொல் துணை அகராதி, 1974, பிற்பட்டோர் நலத் துறை, தமிழ்நாடு அரசாங்கம்	*198*
சிறப்புச் சொல் துணை அகராதி, 1974, பால் பெருக்குத் துறை தமிழ்நாடு அரசாங்கம்	*92*
சிறப்புச் சொல் துணை அகராதி, 1974, சிறைத் துறை, தமிழ்நாடு அரசாங்கம்	*168*
சிறப்புச் சொல் துணை அகராதி, 1975, மறுவாழ்வுத் துறை, தமிழ்நாடு அரசாங்கம்	*162*
சிறப்புச் சொல் துணை அகராதி, 1975, காவல் துறை தமிழ்நாடு அரசாங்கம்	*566*
சிறப்புச் சொல் துணை அகராதி, 1975, கல்வித் துறை தமிழ்நாடு அரசாங்கம்	*455*
சிறப்புச் சொல் துணை அகராதி, 1976, உணவுப் பொருள் வழங்கு துறை, தமிழ்நாடு அரசாங்கம்	*216*
சிறப்புச் சொல் துணை அகராதி, 1976, தொழிலாளர் துறை தமிழ்நாடு அரசாங்கம்	*655*
சிறப்புச் சொல் துணை அகராதி, 1976, அருங்காட்சியகம், சென்னை தமிழ்நாடு அரசாங்கம்	*1,792*
சிறப்புச் சொல் துணை அகராதி, 1977, மீன் துறை, தமிழ்நாடு அரசாங்கம்	*2,343*
சிறப்புச் சொல் துணை அகராதி, 1977, நகரமைப்புத் துறை, தமிழ்நாடு அரசாங்கம்	*378*
சிறப்புச் சொல் துணை அகராதி, 1977, ஆவணக் காப்பகம், தமிழ்நாடு அரசாங்கம்	*270*
சிறப்புச் சொல் துணை அகராதி, 1977, கல்லூரிக் கல்வியியக்ககம், தமிழ்நாடு அரசாங்கம்	*270*
சிறப்புச் சொல் துணை அகராதி, 1977, கால்நடைப் பராமரிப்புத் துறை தமிழ்நாடு அரசாங்கம்	*210*
சிறப்புச் சொல் துணை அகராதி, 1978, வருவாய் வாரியம் (மது விலக்கு மற்றும் ஆயத் தீர்வை)	*75*

சிறப்புச் சொல் துணை அகராதி, *1979*, தமிழ்நாடு துறைமுகத் துறை, தமிழ்நாடு அரசாங்கம்	*1,820*
சிறப்புச் சொல் துணை அகராதி, *1982*, ஊரக வளர்ச்சித் துறை, தமிழ்நாடு அரசாங்கம்	*1,050*
சிறப்புச் சொல் துணை அகராதி, *1982*, எழுது பொருள் அச்சுத் துறை, தமிழ்நாடு அரசாங்கம்	*990*
சிறப்புச் சொல் துணை அகராதி, (ஆண்டு ?), நகராட்சி நிருவாகத் துறை, தமிழ்நாடு அரசாங்கம்	*550*

துணை நின்றவை

சுந்தரம், இராம. *1983*, தமிழில் கலைச் சொல்லாக்க முயற்சிகள், தமிழ்க்கலை, தொகுதி I தமிழ்ப் பல்கலைக் கழகம்.

மாதையன், பெ. *1978*, ‘அகராதி அடைவு’, தமிழாய்வு — தொகுதி 7, தமிழ்த் துறை, சென்னைப் பல்கலைக் கழகம்.

இராதா, பா. *1982*, அறிவியல் தமிழாக்கம், பிஎச்.டி. ஆய்வேடு, சென்னைப் பல்கலைக் கழகம்.

தமிழ்நாட்டுப் பொம்மலாட்டம்

களஆய்வுத் தகவல்கள்

சி.மா. இரவிச்சந்திரன்

தமிழகத்தில் கும்பகோணம், மயிலாடுதுறை, சேலம் பகுதிகளில் வாழ்ந்து வரும் பொம்மலாட்டக் கலைஞர்கள் பற்றியும், அவர்களது நிகழ்ச்சிகள் பற்றியும் கள ஆய்வில் தொகுக்கப்பட்ட செய்திகளின் விவரத் தொகுப்பே இக் கருத்துரையாகும்.

கருத்துரையின் முதல் பகுதியில் கும்பகோணம், மயிலாடுதுறைப் பகுதிப் பொம்மலாட்டம்பற்றியும் இரண்டாம் பகுதியில் சேலம் பகுதிப் பொம்மலாட்டம் பற்றியும் விளக்கப்பட்டு இறுதியில் இரு பகுதிகளிலும் உள்ள வேறுபாடுகள் சுட்டப்பட்டு, இந்த ஆய்வில் மேற்கொண்டு செய்யப்படவேண்டிய பணிகளும் குறிக்கப்பட்டுள்ளன.

1 கும்பகோணம், மயிலாடுதுறைப் பகுதிகளில் பொம்மலாட்டம்

கும்பகோணம், மயிலாடுதுறைப் பகுதிகளில் (1) கும்பகோணம் மங்களகான பொம்மலாட்ட சபா (2) ஸ்ரீகணநாதர் பொம்மை நாடக சபா (3) ஸ்ரீமுருகன் சங்கீத பொம்மலாட்ட சபா ஆகிய மூன்று சபாக்கள் குறிப்பிடத்தக்கவையாக உள்ளன[1] இச்சபாக்களின் பொம்மலாட்ட பாணிகள் ஒன்றோடு ஒன்று நெருங்கிய தொடர்புடையனவாகக் காணப்படுகின்றன.

மூன்று சபாக்கள்:

கும்பகோணம் பகுதியிலுள்ள[2] பொம்மலாட்ட சபாக்களின் தோற்றம் குறித்தும், அவற்றுள் எந்தச் சபா பழமையானது என்பது குறித்தும் அறிவது இன்றியமையாததாகும்.

1. கும்பகோணம் மங்களகான சபாவின் உரிமையாளர் திரு சீனிவாசனிடம் பேசிக்கொண்டிருந்தபோது தனது தாத்தா குடவாசல் அய்யாவய்யரும், புதுக்குடி சாமிநாதக் குருக்களும், திருப்பனந்தாளில் உள்ள சிக்கல் நாயக்கன்பேட்டை நாணு அய்யங்காரும் சேர்ந்து இச்சபாவைத் தொடங்கினார்கள் என்றும், அப்போது நாணு அய்யங்கார் பொம்மைகளைச் செய்ய, அய்யாவய்யர் பொம்மைகளை இயக்க, சாமிநாதக் குருக்கள் பாடகராக இருந்தார் என்றும் தெரிவித்தார். அத்துடன் திரு சீனிவாசனின் தாத்தாவான அய்யாவய்யரின் காலத்திற்குப் பின்பு அவரின் இருபுதல்வர்களாகிய திரு மணி அய்யரும் திரு கிருட்டிணமூர்த்தி அய்யரும் சாமிநாதக் குருக்களிடமிருந்து பொம்மைகளை விலைக்கு வாங்கி இச்சபாவைத்

தொடர்ந்து நடத்தியதாகவும் அவர்களின் மறைவுக்குட் பின்பு திரு கிருட்டிணமூர்த்தியின் மகனாரான இவர் (திரு சீனிவாசன்) தற்போது இச்சபாவைத் தொடர்ந்து நடத்தி வருவதாகவும் உரைத்தார்.

திரு சீனிவாசன் கூறிய செய்திகளை உறுதிசெய்து கொள்ளும் பொருட்டு, அவரது சபாவோடு தொடர்புடைய வேறு இருவரிடம் [3] உசாவியபோது திரு சீனிவாசனின் பெரியப்பா திரு மணி அய்யர் ஒரு பள்ளி ஆசிரியர் என்றும் அவர், திரு சாமிநாதக்குருக்கள் என்பவர் பொம்மலாட்டத்தைத் தொடர்ந்து நடத்த இயலாமல் தன் பொம்மைகளைக் கௌமேசுவரர் கோயிலில் ஒரு நவராத்திரி அன்று அடுக்கி வைத்தபோது அதனை விலைக்கு வாங்கிப் பொம்மலாட்டம் நடத்தத் தொடங்கினார் என்றும் உரைத்தனர். அத்துடன் திரு மணி அய்யருக்குப் பொம்மலாட்டக் கலை வழி வழியாக வந்ததாக இவர்களால் உறுதியாகச் சொல்ல இயலவில்லை. எனவே, கிடைத்த செய்திகளைக் கொண்டு கும்பகோணம் மங்களகான சபாவானது, திரு சீனிவாசன் உரைப்பதுபோல் இவர் தாத்தா அய்யாவய்யரின் காலத்தில் இருந்து இயங்கி வருகிறது என்று கூறுவதைவிட, திரு சீனிவாசனின் தகப்பனார் காலத்தில் இருந்து, ஏறத்தாழ ஐம்பது ஆண்டு காலமாகப் பொம்மலாட்ட நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது என்று உறுதியாகச் சொல்ல முடியும்.

மேலே, திரு சீனிவாசன் குறிப்பிட்ட நாணு அய்யங்கார், சாமிநாதக் குருக்கள் ஆகியோருடைய பரம்பரையினரின் இருப்பிடத்தினை அறிந்துகொள்ளும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இம்முயற்சி வெற்றி பெற்றால் அவர்களிடம் இதுபற்றி நேரில் பேசிக் கும்பகோணம் மங்கள கான சபாவின் தோற்றம் பற்றி மேலும் உறுதியான முடிவுக்கு வர இயலும். பொம்மலாட்டம்பற்றி வெளி வந்துள்ள தொடக்க காலக் கட்டுரைகளில் திரு மணி அய்யரின் பொம்மலாட்ட முறையே மாதிரிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு விளக்கப் பட்டுள்ளது.[4] எனவேதான், இச்சபாவின் தோற்றம்பற்றிய செய்திகளைத் தொகுக்கும் முயற்சிக்குச் சிறப்பு அளிக்கப்படுகிறது.

2. மயிலாடுதுறை ஸ்ரீகணநாதர் பொம்மை நாடக சபாவின் உரிமையாளர் திரு ஏ.எசு. மாணிக்கவாசகம் அவர்களிடம் உரையாடியபோது தமிழகத்தில் புகழ்பெற்ற "ஃச்பெசல்" நாடக நடிகராக இருந்த வேலு நாயரின் குடும்பத்தில் மணஉறவு கொள்ளு முன்னர்த் தமக்குப் பொம்மலாட்டக்கலை பற்றி எதுவும் தெரியாது என்றும் வேலு நாயரின் மருமகன் இராமன்குட்டி நாயர் இச்சபாவை முதலில் தொடங்கினார் என்றும் அதையே தாம் தொடர்ந்து நடத்தி வருவதாகவும் உரைத்தார். இச்சபா, ஏறத்தாழ முப்பது ஆண்டு காலமாக நிகழ்ச்சிகளை நடத்தி வருவதாகக் கூறினார். இவருக்கும், இராமன்குட்டி நாயருக்கும் பொம்மைகளை இயக்குவது பரம்பரைத் தொழிலாக இல்லை. தற்போது இச்சபாவில் பொம்மை ஆட்டுபவர் கும்பகோணம் மங்கள கான சபாவில், மணி அய்யர் காலத்தில் பொம்மைகளை ஆட்டிக் கொண்டிருந்த கண்ணுசாமி மழவராயர் மகன் உடையார் பாளையம் இராதாகிருட்டிண மழவராயரே ஆவார். இவரும் சிறிது காலம் கும்பகோணம் மங்கள கான சபாவில் பணியாற்றி இருக்கின்றார்.

3. ஸ்ரீமுருகன் சங்கீத பொம்மலாட்ட சபாவின் உரிமையாளர் திரு டி.என். சங்கரநாதன் மணி அய்யர் குழுவில் பாடகராக இருந்தவர். தற்போது தனியாக இச்சபாவைத் தொடங்கி நடத்தி வருகின்றார்.

ஸ்ரீமுருகன் சங்கீத பொம்மலாட்ட சபாவானது கும்பகோணம் மங்கள கான சபாவில் பாடகராக இருந்தவர் பிரிந்து வந்து துவக்கியது என்பதாலும், மயிலாடுதுறை கணநாதர் பொம்மலாட்ட நாடக சபா இராமன்குட்டி நாயரால் துவக்கப்பட்டிருப்பினும் இச்சபாவில் தற்போது பொம்மையாட்டிக் கொண்டு இருப்பவர் கும்பகோணம் மங்கள கான சபாவில் பயிற்சி பெற்றவர் மகன் என்பதாலும், தற்போது இருக்கின்ற குழுக்களில் மூத்ததும் பழமையானதுமாகக் கும்பகோணம் மங்கள கான சபாவைக் கருத இடமுண்டு.

பொம்மலாட்டக் கலைஞர்கள்:

ஒரு பொம்மலாட்ட சபாவிற்குத் தேவையான கலைஞர்களின் எண்ணிக்கை, அவர்

களது இனம், அவர்கள் பெறும் ஊதியம், நிகழ்ச்சியின்போது கலைஞர்கள் செய்யும் பணி என்னும் இவை போன்ற செய்திகள் இப்பகுதியில் விளக்கப்படுகின்றன.

கலைஞர்களின் எண்ணிக்கை: ஒரு பொம்மலாட்டச் சபாவிற்குப் பொம்மை களை இயக்குவதற்கு இருவரும், அவர்களின் உதவிக்கு ஒருவரும், உரையாடல்களைப் பேசுவதற்கும் மற்றும் பாடுவதற்கும் இருவரும், ஆர்மோனியம், டோலக் வாசிக்க இருவரும் என மொத்தம் ஏழு பேர் தேவைப் படுகின்றனர். ஏழு பேருக்கும் ஏற்ற ஊதியம் தருமளவு வருவாய் இல்லாத காரணத்தால் உரையாடல் நிகழ்த்துபவரைக் குறைத்து ஆர்மோனியக்காரரையோ பொம்மை ஆட்டுபவரையோ உரையாடல்களை நிகழ்த்தும்படி செய்து ஆறு பேர்கள் கொண்டதாகவும் சபா அமைக்கப்படு கின்றது. சில பொம்மலாட்டச்சபாக்களில் பெண் பாத்திரங்களின் உரையாடல்களை யும் பாடல்களையும் பாடுவதற்கெனப் பெண்களும் இடம் பெற்றிருக்கின்றனர்.

இந்த ஆறுபேர் அடங்கிய அமைப்பு வள்ளி திருமணம், சீதா கல்யாணம் போன்ற மரபு வழியான கதைகளை நடத்துவதற்குத் தான் போதுமானதாகும். இருபது அம்சத் திட்டம், குடும்பக் கட்டுப்பாடு போன்ற வற்றிற்கான விளம்பர நாடகங்கள் போடப் படும்போது பல பொம்மைகளை ஒரே நேரத்தில் மேடையில் காட்டுமாறு தற்போது புதுமையாகக் காட்சிகளை அமைப்பதால் ஆறுபேர் என்ற குழு விரி வடையவும் செய்கின்றது. தோல் பொம்ம லாட்டத்தில் ஒருவரே ஒன்றிற்கு மேற்பட்ட பொம்மைகளை இயக்குகின்றார். கட்டைப் பொம்மலாட்டத்தில் ஒருவர், ஒரு பொம்மை யினைத்தான் இயக்கமுடியும். சில சமயங் களில் ஒரு பொம்மையினை ஆட்ட இருவர் கூடத் தேவைப்படும். ஆகவே, பல பொம்மைகள் மேடையில் தோன்றும் படியான காட்சிகள் அமைக்கப்படும்போது குழுவில் நபர்கள் அதிகமாகின்றனர்.

இனம்: கும்பகோணம் பகுதிகளில் அய்யர், சௌராட்டிரர், நாயர், மழவ ராயர், படையாச்சி, பத்தர் எனப் பல்வேறு இனமக்கள் பொம்மலாட்டக் கலையோடு தொடர்புடையவர்களாக இருக்கின்றனர்.

ஊதியம்: கலைஞர்கள் பலர் இதனையே நிலையான தொழிலாக நம்பி வாழ்வது இல்லை. வேறு தொழில்களில் நிலையாக ஈடுபட்டுள்ளனர். குழுவில் உள்ள அனைவருக்கும் பொம்மலாட்ட நிகழ்ச்சிக்கு ஊதியம் ஒரேமாதிரியாக வழங்கப் படுவதும் இல்லை. குழுவின் உரிமை யாளர் நிகழ்ச்சிக்கான மொத்தப் பணத்தையும் வாங்கிக்கொண்டு பிற கலைஞர்களுக்கு ஊதியத்தினைப் பிரித்து வழங்குகின்றார். பாடகர்களே அதிகமான ஊதியம் பெறுகின்றனர். பிற கலைஞர் களுக்கு உருவா இருபது முதல் உருவா முப்பது வரை வழங்கப்படுகின்றது. பாடகருக்குக் கூட பாடல் அதிகமுள்ள நாடகமாயின் (வள்ளி திருமணம்) அதிக அளவு ஊதியம் உருவா முப்பத்தைந்தும், அய்யப்பன், சீதா கல்யாணம் போன்ற பாடல் குறைவாக உள்ள நாடகமாயின் உருவா முப்பதும் தரப் படுகின்றன.

பணி: பொம்மலாட்டக் கலைஞர்கள் அனைவரும் நிகழ்ச்சியின்போது திரைக்குப் பின்தான் இருக்கின்றனர். பொம்மையாட்டு வோன் பாடகர் பாடும் பாடல்களையும், பேசும் உரையாடல்களையும் மனத்தில் வாங்கிக்கொண்டு அதற்கேற்பப் பொம்மை களில் அசைவுகளைத் தருகின்றான். கும்ப கோணம் பகுதிகளில் பொம்மை ஆட்டு வோன் அவ்வந்நிலைக்கேற்ப உரையாடல் களை மட்டும் பேசுகின்றார்களே தவிர எந்தச் சமயத்திலும் பாடல்கள் பாடுவது இல்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். பொம்மை ஆட்டும் இருவரில் ஒருவர் மட்டுமே காலில் சலங்கையும், சுண்டு கயிற்றின் வளையத்தைத் தலையில் சூடிக் கொள்வதற்கேற்ப உருமாலும் கட்டிக் கொள் கின்றனர்.

மேடையமைப்பு: கும்பகோணப் பகுதியில் பொதுவான அளவுள்ள மேடையமைப்பைக் காணமுடிகிறது. இந்த மேடையின் அளவுகளும், அமைப்பு முறைகளும் இப்பகுதியில் கூறப்படுகின்றன.

மேடையின் மாதிரி அமைப்பு (படம் 1)



பன்னிரண்டு அடி அல்லது பதினாறு அடி நீள அகலமுள்ள மேடையில் எட்டு அடி உயரத்தில் கூரை வேயப்படுகின்றது. மேடையின் முன்புறத்தில் பொம்மைகள் ஆடுவதற்கு ஏற்ப, சுமார் ஒரு முழம் இடைவெளிவிடப்பட்டுக் கருப்புத்திரை ஒன்று விரிக்கப்படுகின்றது. (காண்க படம்-2).

மேடையின் கருப்புத்திரையின் தோற்றம்

(படம் 2)



பொம்மை ஆட்டுவோரின் மார்பு உயரத்தில் ஒரு மூங்கில் மேடையின் முன்புறத்தில் நீளவாக்கில் கட்டப்பட்டு அதில் இந்தக் கருப்புத்திரை தொங்கவிடப்படுகின்றது. கருப்புத் திரையின் நீளம், பன்னிரெண்டு அடிநீள அகலமுள்ள மேடையாக இருப்பின் எட்டு அடியாகவும், பதினாறு அடி நீள அகலமுள்ள மேடையாக இருப்பின் பன்னிரெண்டு அடியாகவும் இருக்கின்றது. பொம்மையாட்டுவோரின் கால்களைக் கருப்புத்திரை மறைத்துக் கொள்கிறது. கருப்புத் திரையின் மேலும், பக்கவாட்டிலும் உள்ள காலியான பகுதிகளை மேடையின் முன்புறக் கூரையில் இருந்து விரிக்கப்படும் நீலத்திரைகள் மறைத்துக் கொள்கின்றன (காண்க படம்-3)

மேடையின் முகப்புத் தோற்றம் (படம் 3)



மேடையின் பின்பகுதியில் நீளவாக்கில் கயிறுகட்டி அதில் அன்றைய நாடக நிகழ்ச்சிக்கு வேண்டிய பொம்மைகள் தொங்கவிடப்படுகின்றன. மேடையில் ஒலிபெருக்கிகளும், வண்ண மின் விளக்குகளும் பயன்படுத்தப்படுகின்றன. ஒவ்வொரு காட்சியின் இறுதியிலும் மூடித் திறக்கும்படி நகரும் திரை வசதியும் செய்து கொள்ளப்படுகின்றது.

திறந்தவெளியில் எதிர்காற்றின் நேராக மேடை அமையுமானால் முகப்புத்திரை, பின்திரை அனைத்தும் உள்ளே வளைந்து ஒருநிலையில் நிற்காமல் ஆடிக் கொண்டே இருக்கும். எனவே, திறந்தவெளி மேடை காற்றுப் போக்கை ஒட்டி அமைக்கப்படுகின்றது.

பொம்மைகள்:

இங்குப் பொம்மைகளின் தயாரிப்பு முறைகளோடு தொடர்புடைய செய்திகளும், சுண்டுகயிறு அமைப்பு முறைகளும் விளக்கப்படுகின்றன.

பொம்மை தயாரிப்புமுறை: — பொம்மலாட்டக் கலைஞர்களே பொம்மைகளைச் செய்து கொள்வதில்லை. இதற்கென்று உள்ள ஒருசில கலைஞர் செய்யும் பொம்மைகளை விலைக்கு வாங்கிக் கொள்கின்றனர்.[5]

பொம்மைகள் பெரும்பாலும் கலியாண முருங்கை மரத்தில் செய்யப்படுகின்றன. இம்மரத்தில் பொம்மைகள் செய்யப்படுவதற்குப் பின்வரும் இரு காரணங்கள் கூறப்படுகின்றன.

1. கலியாண முருங்கை மரம் மற்ற மரக் கட்டைகளைவிட எடை குறைவானது.

2. இம்மரத்தில் செய்யப்பட்ட பொம்மைகளில் சுண்டுகயிறுகளின் ஊக்குகளை அடிப்பதற்காக இடப்படும் துளை நாளடைவில் விரிந்து ஊக்குகள் கழன்று போகாமல் இருக்கின்றன.

பொம்மைகளைச் செய்வதற்காக முதலில் மரக்கட்டைகளை நன்கு தண்ணீரில் ஊறவைத்துப் பின் நிழலில் காய வைக்கின்றனர். மரத்தில் பெரிய வெடிப்புகள் ஏற்படாமல் இருப்பதற்காகவே இந்த நிழல் காய்ச்சல் தரப்படுகின்றது. பிறகு மரக் கட்டைகளைத் துண்டு துண்டாக வெட்டி, பொம்மைக்குரிய தலை, கால், மார்பு முதலிய பகுதிகள் செதுக்கப்படுகின்றன. தலைபோல் உருண்டையாகச் செதுக்கப் பட்ட கட்டைமேல் ''மக்கு'' வைத்து உதடு, கன்னம், மூக்கு முதலிய உறுப்புகள் அமைக்கப்படுகின்றன. மார்புப் பகுதியில் துணிகள் மட்டும் சுற்றப்பட்டு, தைத்துவிடப் படுகின்றன. பொம்மையின் முதுகுப்புறத்தில் ஆறு அங்குலத் துளை ஒன்று உள்ளது. அங்கு, தலை, கை, கால் ஆகிய உறுப்புகள் ஒரு காடியின் மூலம் இழுத்துக் கட்டப்படுகின்றன. கைகள்மட்டும் துணிகளால் செய்யப்படுகின்றன. பொம்மைகளுக்கு ஓவியர்களே வண்ணம் தீட்டுகின்றனர். இவர்கள் பெரும்பாலும் நாட்காட்டியில் உள்ள படங்களை மாதிரியாக வைத்து வண்ணம் தீட்டுவதாக உரைக்கின்றனர்.

பொம்மைகளுக்கு ஆடைகள் அணிவிக்கப்படும்போது இடுப்புப்பகுதி மிகவும் சுருங்கித் தோன்றாமல் இருப்பதற்காக முதலில் பல உள்பாவாடைகள் கட்டி விடப் பட்டு, அதன் மேல் பளபளப்பான பட்டுப் பாவாடைகள் அணிவிக்கப்படுகின்றன.

நெற்றிச்சுட்டி, மூக்குத்தி, கம்மல், சிமிக்கி, நெக்லசு, கைசுத்து என்பன போன்ற நகைகளும் அணிவிக்கப்பெறுகின்றன. பெரும்பாலான பொம்மைகளுக்குத் தலை முடி கருப்பு வண்ணம் கொண்டு வரையப் பட்டுள்ளது.

நாரதர், முருகன், கோமாளி போன்ற சில பொம்மைகளுக்குமட்டும் கால்கள் இருக்கின்றன. இதுபற்றிக் கலைஞர்களிடம் வினவியபோது எல்லாப் பொம்மைகளுக்கும் முன்பு கால்கள் இருந்ததாகவும், போக்குவரத்து வசதி கருதி ஒரு பெட்டியிலேயே பல பொம்மைகளை அடுக்கவேண்டிய கட்டாயத்தால் பல பொம்மைகளின் கால்களை நீக்கிவிட்டதாகவும் உரைத்தனர். பொம்மைகள் அனைத்திற்கும் பாவாடை கட்டினால் நன்றாக இருக்காது என்ற காரணத்தினால் முழுக்காற்சட்டை, புஞ்சகச்சம் போன்ற உடைகள் அணிவிக்கும் பொருட்டுச் சில பொம்மைகளுக்குமட்டும் கால்களைக் கட்டி வைத்திருக்கின்றனர்.

பொம்மைகளின் உயரம் பொதுவாக ஒன்றரை அடிமுதல் மூன்று அடி வரையிலும், எடை மூன்று கிலோ முதல் பத்து கிலோ வரையும் இருக்கின்றன.

ஒரு பொம்மையின் விலை, அதன் உடை, நகைகளைப் பொறுத்து அமைகின்றது. நகை, ஆடையின்றி வெறும் கட்டைப்பொம்மையின் விலை சுமார் நூறு உருவாவிலிருந்து இருநூறு உருவா வரை ஆகும் என்று கூறுகின்றனர். புதிய பொம்மையொன்று மேடையேற்றப்படும்போது எலுமிச்சம் பழம் நறுக்கிக் கண்ணேறு கழிக்கப்படுகின்றது.

பொம்மை சுண்டுகயிறு அமைப்புமுறை:

ஒவ்வொரு பொம்மையின்மூலம் காட்டப்படவேண்டிய அசைவுகளுக்கு ஏற்ப, சுண்டுகயிறுகள் பொம்மையில் பிணைக்கப் பட்டுள்ளன. சுண்டுகயிறுகளின் அமைப்பினை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

1. சுண்டு கயிறுகள் குச்சியில் கட்டப் பட்டுள்ள வகை (இதனைச் சுருக்கமாகக் குச்சிவகை எனலாம்).

2. சுண்டு கயிறுகள் வளையத்தில் கட்டப்பட்டுள்ள வகை (இதனைச் சுருக்க மாக வளையவகை எனலாம்).

குச்சிவகை : பொம்மையின் தலை, கை, முதுகு, கால் ஆகியவற்றில் பிணைக்கப் பட்டுள்ள சுண்டுகயிறுகளின் மற்றொரு முனை ஏறத்தாழ அரை அடி நீளமுள்ள மூங்கில் குச்சிகளில் கட்டப்படுகின்றன. இக்குச்சிகளை, ஆட்டுபவர் தம் கைகளில் பிடித்துக்கொண்டு, கயிறுகளை அசைப்ப தன் வாயிலாகப் பொம்மை ஆட்டப்படு கின்றது. இக்குச்சி வகையிலும் பல வகைகள் காணப்படுகின்றன.

வகை—*1*:— மாதிரிப்படம் வருமாறு:



இப்பொம்மையின் உச்சந்தலையிலும் இரண்டு கைகளிலும் கட்டப்பட்டுள்ள மூன்று சுண்டுகயிறுகளும் ஒரு மூங்கில் குச்சியில் பிணைக்கப்பட்டுள்ளன. இவ்வாறுதான் பிள்ளையார் பொம்மையின் கயிறு அமைப்பு இருக்கின்றது. இப் பொம்மையில் அதிக அசைவுகள் காட்டப் படவேண்டியதில்லையாதலால், ஒரு குச்சி மட்டும் பயன்படுத்தப்படுகின்றது.

வகை — *2*:— மாதிரிப்படம் வருமாறு:



இப்பொம்மையின் முதுகு, உச்சந்தலை, இடதுகை முதலியவற்றில் பிணைக்கப் பட்டுள்ள மூன்று சுண்டு கயிறுகள் ஒரு மூங்கில் குச்சியிலும் வலதுகைக் கயிறுமட்டும் தனிக் குச்சியிலும் கட்டப்பட்டுள்ளன. பொம்மை ஆட்டுபவர் தமது வலது கையில் ஒரு கயிறு உள்ள குச்சியைப் பிடித்துக் கொண்டும், இடது கையில் மூன்று கயிறு கட்டப்பட்டுள்ள குச்சியைப் பிடித்துக் கொண்டும் பொம்மையினை ஆட்டுவார். முருகன், அரசன், கோமாளி போன்ற பொம்மைகளுக்கு இந்த அமைப்பில்தான் கயிறுகள் கட்டப்பட்டுள்ளன. இம்முறையில் சிறிய மாற்றத்துடன் நாரதர் பொம்மையின் கயிறு அமைப்பு காணப்படுகிறது. அதன் மாதிரிப் படம் வருமாறு:



இப்பொம்மையில் தலையின் இரண்டு பக்கமும் இரு சுண்டு கயிறுகள் கட்டப் பட்டு மூங்கில் குச்சியின் நடுப்பகுதியில் பிணைக்கப்பட்டுள்ளன. நாரதர் பொம்மை யின் குல்லாய் உச்சந்தலையில் கயிற்றினைக் கட்டமுடியாதபடி அமைந்திருப்பதால் தலை யின் இருபுறமும் கயிறுகளைக் கட்டி யுள்ளனர். பொம்மையின் முதுகில் கட்டப் படும் சுண்டு கயிறு பொம்மையினைக் குனிந்து நிமிரச் செய்ய உதவுகின்றது.

வகை — *3:*— மாதிரிப்படம் வருமாறு:



இது மந்திரதந்திரக் காட்சியில் இடம் பெறும் ஒரு பெண் பொம்மையின் கயிறு அமைப்பாகும். இப்பொம்மைக்கு மூன்று மூங்கில் குச்சிகள் உண்டு. தலையின் இருபுறமும் கட்டப்பெற்றுள்ள இரு சுண்டு கயிறுகள் ஒரு குச்சியிலும், இரண்டு கைக் கயிறுகளும் தனித்தனியாக இரு குச்சியிலும் பிணைக்கப்பட்டுள்ளன. இரண்டு கைகளிலும் உள்ள கயிறுகளில் அம்மானைக் காய்கள் கோக்கப்பட்டுள்ளன. இப்பொம்மையின் இயக்குமுறை மந்திர தந்திரக் காட்சிபற்றி விளக்கத்தில் கூறப்பட்டுள்ளது.

வகை—*4:*— மாதிரிப்படம் வருமாறு:



கரகப் பொம்மையின் கயிறு அமைப்பு இதுவாகும். பொம்மையின் இரு கால் களுக்கும் இரு தனிக்கயிறுகள் உள்ளன. இவைகள் தனித்தனியாக இரண்டு குச்சி களில் இணைக்கப்பட்டுள்ளன. பொம்மை, கம்பி மேல் ஏறுவதுபோன்ற இயக்கத்திற்கு மட்டும் சிறப்பாகக் கால் கயிறுகள் பயன்படுகின்றன. பிற சமயங்களில் கால் கயிறுகள் உபயோகமற்றே விளங்குகின்றன. பொம்மையின் ஆடை ஏறத்தாழ கரக ஆட்டக்காரர்களைப் போல அணிவிக்கப் படுகிறது. பொம்மையின் தலையில் அட்டையில் செய்த் சட்டி ஒன்று பிணைக்கப்பட்டு அதில் வேப்பிலைகள் செருகப்பட்டுள்ளன.

வளைய வகை; இந்த வகையில் பொம்மையின் தலை, முதுகில் உள்ள சுண்டு கயிறுகள் ஒரு வளையத்தில் கட்டப் பட்டுள்ளன. பொம்மையின் கைகளில் கயிறுகளுக்குப் பதிலாகக் கம்பிகள் இணைக்கப்பட்டுள்ளன.



இது, பரதநாட்டியமாடும் பெண் பொம்மையின் சுண்டு கயிறு அமைப்பு ஆகும். இத்தகைய கயிறு அமைப்பு பொம்மை நடனமாடும்போது தலை, கை அசைவுகளை நன்கு காட்டப் பெரிதும் உதவு கின்றது. வளையத்தில் மட்டும் மொத்தம் ஆறு சுண்டு கயிறுகள் கட்டப்பட்டுள்ளன.

இந்த வகைப் பொம்மையின் கைகள், மனிதர்களின் கை போலவே தோள், முட்டி, மணிக்கட்டு ஆகிய மூன்று இடங்களில் இணைப்புகள் உடையதாகச் செய்யப் பட்டிருக்கின்றன. இதனால் நடனமகளிர் கைகளில் காட்டும் அபிநயங்களை ஓரளவு பொம்மையிலும் செய்து காட்ட முடிகிறது.

பொம்மையாட்டுவோன் தன் தலையில் நீளமான துணியால் பெரிய உருமால் கட்டி, அதில் வளையத்தை மாட்டிக்கொண்டு, தன் இரு கைகளாலும் பொம்மைகளின் கைகளில் உள்ள கம்பிகளைப் பிடித்துக் கொண்டு பொம்மையினை இயக்குகின்றான். பொம்மையின் தலைக்கயிறு அனைத்தும் வளையத்தில் கட்டப்பட்டு இருப்பதால், பொம்மையாட்டுவோன் தன் தலையினை அசைக்கும்போது அதற்கேற்பப் பொம்மை யின் தலையும் அசைகின்றது. திரு மணி அய்யரின் காலத்தில் இப்பொம்மை ''கிஞ்சன் பொம்மை'' என்றும், இது ஆடும் நடனம் ''கிஞ்சன் டேன்சு'' என்றும் அழைக்கப்பட்டிருக்கிறது. 'கிஞ்சன்' என்பதன் பொருள் விளங்கவில்லை.

கும்பகோணம் மங்கள கான சபாவில் உள்ள ஒரு பெண் பொம்மையில் மட்டும் மேற்கண்ட பரத நாட்டிய பொம்மையை விட இரு கயிறுகள் மிகுதியாகக் கட்டப் பட்டுள்ளன. இதன் மாதிரிப் படம் வருமாறு:



இப்பொம்மையில் இரு கண்களையும் அசைப்பதற்கேற்ப இரு கயிறுகள் கூடுத லாகக் கட்டப்பட்டுள்ளதைக் காணலாம். இதுபோன்ற அமைப்புடைய பொம்மை யினை வேறு சபாக்களில் காண்பதரிது.

இசைக் கருவிகள்:

தற்போது பொம்மலாட்ட நிகழ்ச்சி களில் ஆர்மோனியம், தபேலா, டோலக், சால்ரா, சலங்கை ஆகிய இசைக் கருவிகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன். திரு சாமி நாதக் குருக்கள் காலத்தில் துத்திசுதிமத்தளம் ஆகிய இரண்டு இசைக் கருவிகள் மட்டும் மிகுதியும் பயன்படுத்தப்பட்டு வந்ததாகவும் அண்மைக் காலத்தில்தான் ஆர்மோனியம் இடம்பெறத் தொடங்கியதாகவும் கலைஞர் கள் கூறுகின்றனர்.

நிகழ்ச்சி அமைப்பு முறை:

பொம்மலாட்ட நிகழ்ச்சி அமைப்பினை

1. கடவுள் வழிபாடு
2. நகைச்சுவைக் காட்சிகள்
3. கதைப்பகுதி

என்னும் மூன்று பகுதிகளாகப் பிரித்துக் கொள்ளலாம்.

1. **கடவுள் வழிபாடு:** பொம்ம லாட்டம் முதலில் பிள்ளையார் வழி பாட்டிலிருந்துதான் தொடங்குகின்றது. பபூன் பிள்ளையாரிடம் சென்று அன்றைய நிகழ்ச்சி நல்ல முறையில் தங்குதடங்கலின்றி நடைபெற நல்வாழ்த்து பெறுவதாக இக் காட்சி அமைகிறது.

2. **நகைச்சுவைக் காட்சிகள்:** இப்பகுதி யில்,

1. மந்திர தந்திரக் காட்சி[6]
2. பரத நாட்டியக் காட்சி
3. பூசாரி கரகமெடுத்து ஆடும் காட்சி
4. பூசாரி பேயோட்டும் காட்சி

என்னும் நான்கு காட்சிகள் பொம்மலாட்டத் தில் நடத்தப்படுகின்றன. இந்த நான்கு காட்சிகளும் முடிந்த பின்னர்தான் அன்று நடத்தப்போகும் கதை தொடங்கப்படுகிறது. மக்களுக்குச் சோர்வு தட்டாமல் இருக்க, மேலே குறிப்பிட்ட நகைச்சுவைக் காட்சி களில் பூசாரி கரகமெடுத்து ஆடுதல், பூசாரி பேயோட்டும் காட்சி ஆகிய இரண்டு காட்சிகளைமட்டும் கதையின் இடையில் நடத்துவதும் உண்டு.[7]

இந்த நான்கு நகைச்சுவைக் காட்சிகளின் அமைப்புபற்றிக் காண்போம்.

1. மந்திர தந்திரக் காட்சி: ஒரு பெண்ணும், பபூனும் இந்தக் காட்சியில் இடம்பெறுகின்றனர். பெண் பொம்மையின் பெயர் குழுவிற்குக் குழு மாறுபடுகின்றது.

இந்தப் பெண் வடமாநிலங்கள் பல சுற்றி வருவதாகவும், இறுதியாக மலையாள தேசம் சென்று வருவதாகவும் பபூனிடம் சொல்கிறாள். பபூன் ''மலையாள தேசம் மந்திர தந்திரங்களில் சிறந்த ஊர் ஆச்சே, நீ ஏதாவது மந்திரக்கலை கற்று வந்துள்ளாயா?'' என்று கேட்க, அவளும் கூடு விட்டுக் கூடு பாயும் மந்திரம், வானத்திலிருந்து அம்மானைக் காய் வரவழைத்து அம்மானை ஆடும் மந்திரம் ஆகிய இரண்டு மந்திரக் கலைகள் கற்று வந்ததாக உரைத்து, அதனைச் செய்தும் காட்டுகிறாள்.

கூடுவிட்டுக் கூடு பாயும் மந்திர நிகழ்ச்சி: பபூன், இந்தப் பெண் சொல்லித் தரும் மலையாள பகவதி 'திகு' என்பன போன்ற மந்திரத்தைச் சொன்னவுடன் தன் முகத்தை மறைத்து வேறு நிறமுடைய முகத்தைக் காட்டுகிறாள். பபூன் அச்சங் கொண்டு மந்திரத்தைத் திரும்பச் சொன்னவுடன் பழைய நிறமுடைய முகத்தைத் திரும்பவும் கொண்டு வருகிறாள். இதுவே கூடு விட்டுக் கூடுபாயும் மந்திர நிகழ்ச்சியாக நடத்தப்பெறுகிறது.

பெண் பொம்மையின் தலையில் முன்புறமும் பின்புறமுமாக இரண்டு முகங்கள் உண்டு[8]. இவ்விரண்டு முகங்களும் இருவேறு நிறமுடையனவாகும். பொம்மையின் தலை நன்கு சுழலும் முறையில் உடலோடு இணைக்கப்பட்டிருக்கின்றது.

பொம்மையின் தலைக்கும் கைகளுக்கும் தனித்தனியாகச் சுண்டு கயிறுகள் கட்டப்பட்டுள்ளன. ஆகவே, பொம்மையாட்டுவோன் தன் ஒரு கையில் பொம்மைகளின் இரு கைக்கயிறுகளைப் பிடித்துக் கொண்டு, மற்றொரு கையால் பொம்மையின் தலைக் கயிற்றுக் குச்சியினைச் சுழற்றுவதன்மூலம் வேறுவேறு முகங்கள் கொண்டுவரப்படுகின்றன.

அம்மானை ஆடுதல்; பொம்மையின் கைகளில் சுண்டு கயிறுகளில் இரண்டிரண்டு அம்மானைக் காய்களைக் கோத்து, அதனைப் பொம்மையாட்டுபவர் சுண்டு கயிறுகளின் மூங்கில் குச்சியோடு சேர்த்துப் பிடித்திருப்பார். எனவே, அம்மானைக் காய்கள் முதலில் பார்வையாளர்களுக்குத் தெரியாதிருக்கும்.

பபூன் பெண்ணிடம் 'அம்மானைக் காய்கள் இல்லாமல் எப்படி அம்மானை ஆடப்போகின்றாய்?' என்று கேட்கும் போது அவள் ஒன்று இரண்டு என வரிசையாக நான்கு எண்களை அவனைச் சொல்லச் சொல்வாள். அவ்வாறே அவனும் ஒவ்வொரு எண்ணைச் சொல்லும்போதும் பொம்மை யாட்டுபவர் தன் கைகளில் பிடித்திருக்கும் காய்களை ஒவ்வொரு எண்ணுக்கு ஒரு காயாக மேலிருந்து விடுவார். அப்போது காய்கள் கயிறுகளின்மூலம் பொம்மையின் கைகளுக்கு வானத்திலிருந்து கீழே வருவது போல் வருகின்றன. அதன்பின் பொம்மை யாட்டுவோன் தான் பிடித்திருக்கும் சுண்டு கயிற்றின் மூங்கில் குச்சியினை மேலும் கீழுமாகச் சுண்டும்போது கயிறுகளில் கோக்கப்பட்டுள்ள காய்கள் மேலும் கீழுமாக அசைந்து பொம்மையே அம்மானை ஆடுவதுபோல அமைகின்றது. இந்தச் சமயத்தில் பொம்மையின் தலைக்குச்சியினை, ஆட்டுவோன் தன் கழுத்தில் மாட்டிக் கொண்டு அல்லது மற்றொருவரிடம் பிடிக்கச் சொல்லிக் கொடுத்து விட்டுப் பொம்மையின் இரு கைக்கயிறுகளையும் இயக்குகின்றான்.

இந்த மந்திர தந்திரக் காட்சியில் பெண் பொம்மை கூடுவிட்டுக் கூடு பாய்வதாகக் கூறி முகத்தை மாற்றிக் காட்டும்போது பபூன் அச்சங்கொண்டவனாக நடிப்பது, பொம்மை அம்மானை ஆடுவது ஆகியன குழந்தைகளுக்குச் சிரிப்பூட்டும் செயல்களாக அமைகின்றன.

2. பரத நாட்டியக் காட்சி: இந்தக் காட்சியில் வளையவகைப் பொம்மையின் பரத நாட்டியம் சிறப்பான கூறாக விளங்குகின்றது. காட்சியின் தொடக்கத்தில் பாடகர் இராக ஆலாபனை பாடிக் கொண்டிருப்பார். அப்போது பொம்மையினை மேடைக்கு முன்புறமாகக் கொண்டு வராமல், கருப்புத் திரைக்குப் பின்புறமாகவே நிறுத்திப் பொம்மையின் கையாலேயே

கருப்புத் திரையைத் தூக்கி, பொம்மையின் தலையைமட்டும் அசைப்பார்கள். இது பார்வையாளர்களுக்கு நடனமாது ஒருத்தி மாளிகையின் திரையை விலக்கி, இராக ஆலாபனையைச் சுவைத்துத் தலையசைப்பது போலத் தெரிகிறது. பின்பு வாத்திய இசை மட்டும் வாசிக்கப்பட நடனமாது நடனமாடிக்கொண்டே மேடைக்கு வருகிறாள். நடனம் முடிந்தவுடன் அவையோருக்குத் தலை வணங்கி வணக்கம் சொல்கிறாள். அப்போது பாடகர் சுவரம் பாட, அதற்கேற்பப் பொம்மை மீண்டும் நடனமாடத் தொடங்குகிறது. இது முடிந்தவுடன் பொம்மை பாவாடையில் தனியாக இணைக்கப்பட்டுள்ள துணியைத் தன் கையில் எடுத்து வியர்வையைத் துடைப்பதுபோல் முகம், கழுத்து ஆகியவற்றைத் துடைத்துக் கொள்கிறது. இவ்வாறு பொம்மை செய்வது பார்வையாளருக்குச் சிரிப்பூட்டும்படி அமைகிறது. அடுத்து, பாடகர் நடனத்திற்கேற்ற பாடலொன்றை முழுமையாகப் பாட பொம்மை அப்பாடலுக்கு ஏற்ப அபிநயம் பிடித்து நடனமாடுகிறது. இவ்வாறான நடன நிகழ்ச்சிகள் முடிந்தவுடன் இறுதியில் பொம்மை தன் இரு கைகளிலும் மாலை ஏந்தி மேடையின் ஓரத்தில் அமர்த்தப் பட்டிருக்கும் சிறுமிக்கு மாலையிட்டு முத்தம் தருகிறாள். இதோடு காட்சி நிறைவுபெறுகிறது.

3. பூசாரி கரகமெடுத்து ஆடுதல் : பெரும்பாலும் கிராமங்களில் பொம்மலாட்ட நிகழ்ச்சி நடத்தினால் தெய்வக்குறை தீர்ந்து மழை பெய்யும் என்ற ஒரு நம்பிக்கை பரவலாக உண்டு. இந்த நம்பிக்கையின் அடிப்படையில் செழிப்பாக மழை பெய்து விளைச்சல் பெருக வேண்டும் என்பதற்காகப் பூசாரி கரகமெடுத்து ஆடுகிறார்.

''ஒராங்கரகமடி தாயே''
''உலகத்து நாயகியே
எங்கமுத்து மாரியம்மா''
''ஆதிசிவ சக்தியம்மா கருமாரி''

போன்ற பாடல்கள் பாடப்பட அதற்கேற்பப் பூசாரி ஆட்டம் ஆடுகிறார். இந்த ஆட்டங்களில் குறிப்பாகப் பூசாரி தரையில் குப்புறப்படுத்துக் கொண்டு நகர்ந்து நகர்ந்து ஆடுகின்ற ஆட்டமானது அனைவரையும் சிரிக்க வைத்து விடுகின்றது. பெரும்பாலும் உரையாடல்கள் இக்காட்சியில் இடம் பெறுவதில்லை.

4. பூசாரி பேயோட்டும் காட்சி: இந்தக் காட்சியில் பூசாரி, பபூன், பைத்தியம் பிடித்த பெண் ஆகிய மூவர் இடம்பெறுகின்றனர். பபூன் தன் மனத்தில் ஒரு குறை இருப்பதாகக்கூறி, அதைத் தீர்க்கப் பூசாரியை அழைக்கின்றான். இதற்காகப் பூசாரி அவனிடம் ஆயிரத்தொரு தேங்காய், பத்து கிலோ சாம்பிராணி, பத்து கிலோ கற்பூரம்..... எனப் பல பூசைப் பொருட்களைக் கேட்கிறான். பின்பு பூசாரி சாமியாடி அவனுக்கு ஒரு பெண் இருப்பதாகவும், அவளுக்குத் திரைப்படப் பைத்தியம் பிடித்திருப்பதாகவும் உரைத்து, அப்பெண்ணையும் அழைத்து அவளுக்கும் பேயோட்டுகின்றான். இந்தக் காட்சியில் பூசாரி பேயோட்ட அளவுகடந்த பூசைப் பொருட்களைக் கேட்பது, பைத்தியம் பிடித்த பெண் பல திரைப்படப் பாடல்களைப் பாடுவது, பூசாரி வேப்பிலை அடித்துப் பேயோட்டுவது, அப்போது பெண் பொம்மை எம்பி எம்பி உட்காருவது ஆகிய நிகழ்ச்சிகள் பார்வையாளருக்குச் சிரிப்பூட்டும்படி அமைந்துள்ளன. இக்காட்சியில்,

''அமைதியாக இருக்கணும்
அடக்கமாகப் பேசணும்''
''மூந்தி மூந்தி வினாயகனே'

போன்ற பாடல்கள் பாடப் பெறுகின்றன. கும்பகோணம் மங்கள கான சபாவினர் மட்டும் இந்தக் காட்சியினை நாடகத்தின் இறுதிக் காட்சிக்கு முன்பாக நடத்துகின்றனர். இதுதவிர மற்ற மூன்று நகைச் சுவைக் காட்சிகளையும் இங்குக் கூறப்பட்ட முறையிலேயே எல்லாக் குழுவினரும் நடத்துகின்றனர்.

3. கதைப்பகுதி: கும்பகோணம் பகுதியில் தற்போது நடத்தப்பெற்றுவரும் கதைகள், ஒரு கதையினையே இரு சபாவினர் நடத்தும்போது காட்சி அமைப்பு முறையில் வருகின்ற வேறுபாடுகள், கதையில் இடம் பெறுகின்ற பாடல்கள் உரையாடல்கள் ஆகியனபற்றிஇப்பகுதியில்பேசப்படுகின்றன.

கதைகள்: கும்பகோணம் பகுதிகளில் வள்ளி திருமணம், சீதா கல்யாணம்,

பிரகலாதன், அருணகிரிநாதர், அரிச் சந்திரா, அய்யப்பன், பாமா விசயம், கண்ணகி, மார்க்கண்டேயன், நல்லதங்காள், சிறுத்தொண்ட நாயனார், பூகைலாசு, வாய்மையே வெல்லும், ஸ்ரீசங்கீத தியாக பிரும்மம், பக்த ருக்மாங்கதா என்ற நாடகங் கள் பொம்மலாட்ட நிகழ்ச்சிகளில் நடத்தப் பெற்று வருகின்றன.

முன்னர்க் குறிப்பிட்ட மூன்று சபா வினருமே இக்கதைகள் அனைத்தையும் நடத்துவது இல்லை. உதாரணமாக, பக்த மார்க்கண்டேயன் என்னும் நாடகத்தினை மயிலாடுதுறை ஸ்ரீகணநாதர் குழுவினர் மட்டுமே நடத்தி வருகின்றனர். அதேபோது இச்சபாவினர் மற்ற இரு குழுவினரும் நடத்தி வரும் வள்ளி திருமணம் என்னும் நாடகத் தினை நடத்துவது இல்லை. இந்நிலைக்கு இரண்டு காரணங்களைக் கூறலாம்.

1. எல்லாக் கதைகளுக்கும் வேண்டிய பொம்மைகள் அனைவரிடமும் இல்லாதது.

2. எல்லாக் கதைகளின் உரையாடல், பாடல்களையும் பாடகர்கள் அறியாதது.

காட்சி அமைப்பு முறை: கும்ப கோணம் மங்கள கான சபா, ஸ்ரீமுருகன் சங்கீத பொம்மலாட்ட சபா ஆகிய இரு சபாவினரும் நடத்திய வள்ளி திருமண நாடகங்களை[10] ஒப்பிட்டுப் பார்க்கும் போது கதைப்பகுதி சார்ந்த காட்சி அமைப்பில் ஒரு சில வேறுபாடுகளை அறியமுடிகின்றது. இரு சபாவினரும் நடத்திய வள்ளி திருமண நாடகத்தின் காட்சியமைப்பு அட்டவணைப்படுத்தப் பட்டுக் கீழே தரப்பட்டுள்ளது. அட்டவணை யில் இரு நாடகங்களிலும் வேறுபாடுடைய காட்சிகள் குறியிட்டுச் சுட்டப்பட்டுள்ளன.

வள்ளி திருமணம்

கும்பகோணம் மங்கள கான சபா
ஸ்ரீ முருகன் சங்கீத பொம்மலாட்ட சபா

காட்சி எண்	காட்சிகள்	காட்சி எண்	காட்சிகள்
1	நம்பிராசன், பபூன், வள்ளி (அரசன் பபூனிடம் வள்ளியை அழைத்து வரச் சொல்லுதல்; வள்ளி வந்தவுடன் அவளைத் தினைப்புனக் காவலுக்கு பபூன் துணையுடன் அனுப்புதல்)	1	உண்டு
2	வள்ளி, பபூன், நாரதர் (தினைப்புனத்திற்கு நாரதர் வருகை; நாரதர் வள்ளியிடம் முருகனை மணம்புரிந்து கொள்ளும்படி வேண்டுதல்; வள்ளி மறுத்தல் நாரதர் திருமணத்தை நடத்துவேன் எனச் சபதம் புரிதல்.)	2	உண்டு
3	முருகன், நாரதர் (நாரதர் முருகனைச் சந்தித்து, வள்ளியின் அழகை எடுத்துக்கூறி, அவள் மனத்தைச் சிறிது நோகும்படி திருவிளையாடல் புரிந்தபிறகு திருமணம் செய்து கொள்ளும்படி வேண்டுதல். முருகன் சம்மதித்தல்)	3	உண்டு

காட்சி எண்	காட்சிகள்	காட்சி எண்	காட்சிகள்
4	முருகன், வள்ளி, நம்பிராசன் (வேலன் வடிவில் முருகன் வள்ளியைச் சந்தித்துக் காதல் மொழி பேசுதல். வள்ளி சினங்கொண்டு தன் தந்தையை அழைத்தல். நம்பிராசன் வரும்போது முருகன் வேங்கை மரமாக மறைந்து நிற்றல். அரசன் மீண்டும் வள்ளியைச் சந்தித்தல். வள்ளி சினங் கொண்டு மீண்டும் தந்தையை அழைக்கச் செல்லுதல்)	4	உண்டு
*5	கிழவன், நம்பிராசன் (முருகன், மீண்டும் வள்ளியைச் சந்திக்கும் பொருட்டுக் கிழஉருவமெடுத்து நம்பி ராசனிடம் செல்லல். அரசன் கிழவனை வள்ளியிடம் சேர்ப்பித்தல்)		இல்லை
*6	கிழவன், வள்ளி (கிழ வேடத்தில் உள்ள முருகன் வள்ளிக்குச் சோதிடம் பார்த்தல், வள்ளி கிழவனுக்கு உணவு ஊட்டுதல். பிறகு கிழவர், வள்ளி அச்சம் கொள்ளும்படியான விலங்கு எது என்பதனை அவளிடமே நயமாகப் பேசி அறிதல்)	5	கிழவன், வள்ளி, பபூன் (கிழ வேடத்தில் முருகன், வள்ளியைச் சந்தித்தல்,
7	கிழ வேடத்தில் முருகன், பிள்ளையார் (வள்ளியை அச்சுறுத்தும் பொருட்டு பிள்ளையாரை யானை உருவில் வள்ளியின் எதிரில் வரும்படி முரகன் வேண்டுதல்)	6	உண்டு
8	கிழவேடத்தில் முருகன், வள்ளி, யானை (முருகன் வள்ளியிடம் யானையைக் காட்டி அச்சுறுத்தித் திருமணம் செய்து கொள்ளச் சத்தியம் பெறுதல்)	7	உண்டு
9	வள்ளி தனிமொழி (கிழவனை மணக்கவேண்டி வந்ததே என வள்ளி வருந்துதல்)	8	உண்டு
10	முருகன் — வள்ளி திருமணம்	9	உண்டு

அட்டவணையின் மூலம், இரு சபாவினரின் நாடகங்களுக்குமிடையே வேறுபாடுகள் சில இருப்பினும் காட்சியமைப்பில் ஒற்றுமையே மிகுதியாக உள்ளன என்பதனை அறியமுடிகின்றது. இதனால் கும்பகோணம் பகுதியில் ஒரு கதையினையே இருவேறு குழுக்கள் நடத்தும்போது முற்றிலும் மாறுபட்ட காட்சி அமைப்புகளுடன் நாடகத்தை நடத்துவது இல்லை என்ற முடிவுக்கு வர இயலுகின்றது.

பாடல்களும் உரையாடல்களும்: பாடல்கள் கருனாடக மெட்டில் பாடப்படுகின்றன. பாடல்களில் வெண்பாவும் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது.[2] வள்ளி, முருகன் போன்ற சிறப்புப் பாத்திரங்களின் உரையாடலை ஆடவர்களே குரலை மாற்றிப் பெண்போலப் பேசுவதும் உண்டு.

மூலக்கதை:

கும்பகோணத்தில் திரு சாமிநாதக் குருக்களும், திரு மணி அய்யரும் பொம்மலாட்டம் நடத்திய காலங்களில் அரிச்சந்திரன் கதை ஒன்று மட்டுமே நடத்தப்பட்டதாகத் தெரிகிறது. பிற்காலத்தில்தான் பிற கதைகளை நடத்தத் தொடங்கினர். பாடகர்கள், சங்கரதாச சுவாமிகளின் நாடகங்களையே தற்போது பொம்மலாட்டத்தில் நடத்திக் கொண்டிருப்பதாகக் கூறுகின்றனர். தமிழகத்தில் 1885 முதல் 1922 வரை சுவாமிகள் நாடக உலகின் முடிசூடா மன்னனாக விளங்கினார். அக்காலக்கட்டத்திலிருந்த அனைத்து நாடகச் சபாக்களும் இவரோடு தொடர்பு கொண்டிருந்தன. இவரிடம் பயிற்சி பெறாத நடிகர்களே இல்லையென்று கூறுமளவு சுவாமிகள் தமிழ் நாடக உலகில் சிறப்பிடம் பெற்றிருந்தார். சுவாமிகளின் மறைவுக்குப் பின்பும் தமிழகத்தின் பல பகுதிகளில் இவரது நாடக முறையினைப் பின்பற்றியே நாடகங்கள் நடத்தப்பெற்று வந்தன. இந்த வகையான மேடை நாடகங்களில் நடிகர்களாக விளங்கியவர்களே இன்று பொம்மலாட்டத்தில் பாடகர்களாகப் பணியாற்றி வருகின்றனர்.[13] இப்பாடகர்கள் முன்பு மேடைகளில் நடித்துக்கொண்டிருந்த நாடகங்களையே இன்று பொம்மலாட்டத்தில் நடத்திக் கொண்டிருக்கின்றனர் எனத் தெரிகிறது.

ஒப்பாய்வு: பாடகர்கள் சுவாமிகளின் நாடகங்களையே பொம்மலாட்ட நிகழ்ச்சிகளில் பயன்படுத்திக்கொண்டிருப்பதாகக் கூறியதால் சுவாமிகளின் வள்ளி திருமண நாடகமும்[14] பொம்மலாட்ட வள்ளி திருமண நாடகமும்[15] காட்சியமைப்பு, பாடல், உரையாடல் என்ற நோக்கில் ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டன. இந்த ஒப்பீட்டாய்வின் மூலம் இரு நாடகங்களுக்குமிடையே வேறுபாடுகளே மிகுதியாக உள்ளன என்பதனை அறியமுடிகின்றது.

காட்சியமைப்பு: சுவாமிகள் மற்றும் பொம்மலாட்ட நாடகங்களின் காட்சியமைப்புகளும் கதை நிகழ்ச்சிகளும் அட்டவணைப் படுத்தப்பட்டுப் பின் இணைப்பு ஒன்றில் தரப்பட்டுள்ளது. அட்டவணையின் மூலம் சுவாமிகளினுடைய காட்சியமைப்பின்படியே பொம்மலாட்ட நாடகம் நடத்தப் பெறுவதில்லை என்பதனை அறிய முடிகின்றது. சுவாமிகள் நாடகத்தில் உள்ள பல காட்சிகள் பொம்மலாட்ட நாடகத்தில் இடம்பெறுவதில்லை. சுவாமிகளது நாடகத்தில் வருகின்ற மோகினி, அரசனின் ஏழு புத்திரர்கள், குடிமக்கள், வேட்டுவர்கள், சேடிப் பெண்கள் முதலிய பாத்திரங்கள் பொம்மலாட்டத்தில் விடுபட்டுள்ளன. அத்துடன் சங்கரதாச சுவாமிகள் நாடகத்தில் ஒரு காட்சியிலேயே வருகின்ற 'கதை' நிகழ்ச்சிகள் பொம்மலாட்டத்தில் பல தனித்தனிக் காட்சிகளாகவும் நடத்தப்படுவதனைக் காண முடிகின்றது. இவ்வாறு இரு நாடகங்களுக்குமிடையே காட்சி, கதை அமைப்பில் ஏற்படுகின்ற மாற்றங்களுக்கு இரு காரணங்களைக் கூறலாம்.

1. சுவாமிகள் நாடகத்தில் இடம் பெறுகின்ற அனைத்துப் பாத்திரங்களுக்கேற்ற பொம்மைகள் இல்லாத காரணத்தால், பொம்மலாட்டத்தில் சுவாமிகளின் கதை நிகழ்ச்சியில் வருகின்ற பல பாத்திரங்கள் விடுபடுவதுடன் அப்பாத்திரங்கள் இடம் பெறுகின்ற காட்சிகளும் நீக்கப்பட்டு விடுகின்றன.

2. பொம்மலாட்டத்தில் மூன்று கலைஞர்கள் மட்டுமே பொம்மைகளை இயக்குவதில் ஈடுபட்டுள்ளதால், மேடையில் அதிக அளவில் மூன்று பொம்மைகளுக்கு

மேல் ஒரே நேரத்தில் காட்ட இயலாது. இதனால் சுவாமிகள் நாடகத்தில் பல பாத்திரங்கள் இடம்பெறுவதாக அமையும் காட்சியில் முக்கியமான மூன்று பாத்திரங்கள் தவிர மீதமுள்ள பாத்திரங்கள் பொம்மலாட்டத்தில் நீக்கப்பட்டு விடுகின்றன. அல்லது மூன்று பாத்திரங்கள் நடிப்பதற்கு ஏற்றபடிக் கதை நிகழ்ச்சியினையும் உரையாடல்களையும் மாற்றித் தனித் தனிக் காட்சிகளாகப் பொம்மலாட்டத்தில் அமைத்துக் கொள்ளப்படுகின்றது.

பாடல்கள்: சுவாமிகள் நாடகத்தில் உள்ள ஒன்பது பாடல்கள் மட்டுமே பொம்மலாட்டத்தில் பாடப்படுகின்றன.[16] சுவாமிகள் நாடகத்தில் இல்லாத பல பாடல்களும் பொம்மலாட்ட நாடகத்தில் இடம் பெற்றுள்ளன.[17] இதற்குத் தற்கால சினிமா, சுவாமிகள் தவிர்ந்த பிற நாடகாசிரியர்கள் தாக்கம் ஆகியவற்றைக் காரணமாகக் கொள்ளலாம்.

வசனம்: பொம்மலாட்டத்தில் உரையாடல்கள் சுவாமிகள் நாடகத்தில் உள்ள படியே பேசப்படுவதில்லை. பொம்மலாட்டத்தில் மனோதருமப்படி உரையாடல் **(Improvised dialogue)** பேசப்படுகின்றன. எனவே இரு நாடகங்களுக்குமிடையே உரையாடல் பொறுத்தவரை மிகுதியான மாற்றங்கள் ஏற்படுவது இயல்பேயாகும். எனினும் சுவாமிகள் நாடகத்தில் உள்ள ஒருசில உரையாடல்முறை பொம்மலாட்ட நாடகத்தில் இன்றும் பேசப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

சுவாமிகள் நாடகத்தில் நாரதர் வருகின்ற முதல் காட்சியில் தம் வருகையின் காரணத்தையும் தன் பிறப்பு வரலாறு பற்றியும் தாமே எடுத்துக் கூறுவதுபோன்ற ஒரு நீண்ட உரையாடல் இடம்பெறுகின்றது. பொம்மலாட்டத்திலும் நாரதர் வருகையின்போது இதே கருத்துகள் கொண்ட நீண்ட உரையாடல் ஒன்று பேசப்படுகின்றது.[18] முருகன் வருகையின்போதும் தன் தோற்றத்தின் பெருமைபற்றிய நீண்ட உரையாடல் முருகனே கூறுவதாக இரு நாடகங்களிலும் இடம்பெற்றுள்ளன.

இதுவரை கண்டதனின்றும், இரு நாடகங்களுக்குமிடையே வேறுபாடுகள் பல இருப்பதனால் சுவாமிகள் நாடகத்தில் உள்ளதுபோலவே பொம்மலாட்டத்தில் நாடகம் நடத்தப் பெறுவதில்லை என்பதனையும் பொம்மலாட்ட வடிவத்திற்கேற்பவும், காலத்திற்கேற்பவும் சுவாமிகள் நாடகத்தில் பல மாற்றங்கள் செய்யப்பட்டுப் பொம்மலாட்ட நிகழ்ச்சியில் நாடகம் நடத்தப்பெற்று வருகின்றது என்பதனையும் உணரமுடிகின்றது.

II சேலம் பகுதியில் பொம்மலாட்டம்

சேலம் மாவட்டத்தில் சீரகபாடி என்னும் கிராமத்தில் திரு செம்மலை என்னும் பொம்மலாட்டக் கலைஞர் வாழ்ந்து வருகின்றார்.[19] இவர் நடத்தி வரும் பொம்மலாட்டப்பாணி கும்பகோணம் பகுதியினின்று பெரிதும் வேறுபட்டு இருக்கின்றது.

சேலம் பகுதியில் பொம்மலாட்டத்தினைக் கட்டபொம்மக் கூத்து, பொம்மக் கூத்து என்று மக்கள் அழைக்கின்றனர். திரு செம்மலையினுடைய சபாவின் பெயர் ''ஸ்ரீராமவிலாச கட்டபொம்ம நாடக சபா'' என்பதாகும். சேலத்தில் இவருடைய குழு தவிர காரவல்லி, கரட்டூர், கவுண்டாபுரம் என்ற ஊர்களிலும் பொம்மலாட்டக் குழுக்கள் இருப்பதாகவும், அவர்கள் தற்போது ஊர் ஊராகச் சென்று கட்டணம் வசூலித்து நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றனர் எனவும் திரு செம்மலை கூறினார். இவரும் சென்ற ஆண்டுவரை இவ்வாறே ஊர் ஊராகச் சென்று நிகழ்ச்சிகளை நடத்தி வந்திருக்கின்றார். தற்போது வயதாகி விட்டதால் கோயில் நிகழ்ச்சிகளுக்குமட்டும் சென்று வருவதாகக் கூறினார்.

கலைஞர் திரு செம்மலை:

சேலம் மாவட்டத்தில் உள்ள மேச்சேரியில் சின்னுப்படையாச்சி என்பவர் நடத்திக் கொண்டிருந்த பொம்மலாட்ட நிகழ்ச்சிகளைப் பார்த்து, திரு செம்மலை தன் நண்பர்களான திருவாளர்கள் பெரியண்ணன், கோவிந்தன், ஆறுமுகம் ஆகியோருடன் கூட்டுச் சேர்ந்து பொம்மலாட்ட நிகழ்ச்சிகளை நடத்தத் தொடங்கிய திரு செம்மலை ஏறத்தாழ 1951-இல் அக்கூட்டாளிகளிடமிருந்து பொம்மைகள் அனைத்தையும் உரு.450/—க்குத் தானே விலைக்கு வாங்கித் தனியாக நிகழ்ச்சிகளை நடத்தத் தொடங்கியிருக்கின்றார். முதலில் கூட்டாகப் பொம்ம

லாட்டக் குழு தொடங்கியபோது இவர் மிருதங்கம் வாசிப்பவராகவே குழுவில் இருந்திருக்கிறார். தொடக்க காலத்தில் இவர் சில காலம் கூத்து நடிகராகவும் இருந்திருக் கிறார் எனத் தெரிகிறது.

பொம்மலாட்டக்குழு:

பொம்மலாட்டக் குழுவில் பொம்மை களை இயக்க நால்வர், பொம்மைகளை எடுத்துத்தர ஒருவர், இசைக் கருவிகள் வாசிக்க நால்வர் என ஒன்பது பேர் குறைந்த அளவில் தேவைப்படுகின்றனர். மேலும், பின்பாட்டுப் பாடுவதற்கு அந்தந்த ஊர் களில் உள்ள தெருக்கூத்து நடிகர்கள் குழுவில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

திரு செம்மலை தனது மகள், மருமகள், பேரன் பேத்தி ஆகியோருடன் குடும்பத் தாராகச் சென்று நிகழ்ச்சிகளை நடத்து கின்றார். இசைக் கருவிகள் வாசிப்பதற்கு மட்டும் சம்பளத்திற்கு ஆள்களை அமர்த்திக் கொள்கிறார். இவரது மருமகள் பொம்மை களை ஆட்டுவதுடன் உரையாடல்களைக் கூறிப் பாடல்களையும் பாடுகிறார். பொம்மை ஆட்டுபவர்களே பாடல்களை யும் உரையாடல்களையும் பேசுவது இக் கலைஞர்களிடம் உள்ள தனிச் சிறப்பாகும்.

மேடை அமைப்பு:

பொம்மலாட்ட நிகழ்ச்சிகளுக்கு இருபத் தொரு அடி நீளமும், பத்தடி அகலமும் கொண்ட பெரிய மேடை போடப்படு கின்றது. மேடையின் முன்புறம் கோபுரம் போன்ற மிகப்பெரும் அளவிலான கட் அவுட் வைத்து மிகவும் அழகுபடுத்தப்படு கின்றது. மேடையில் உள்ள பின் திரையின் நீளம் பதினெட்டடி ஆகும். சின்னுப் படையாச்சி காலத்தில் ஆறடி நீளமுள்ள சிறிய மேடைதான் பொம்மலாட்டத்திற்குப் போடப்பட்டது என்றும் திரு செம்மலை அவர்கள் பொம்மலாட்டக்குழு கூட்டாகத் தொடங்கியபோதுதான் இவரின் கூட்டாளி திரு ஆறுமுகம் மேடையினை ஏறத்தாழ இருபதடி நீளமுள்ளதாக மாற்றியதாகவும் திரு செம்மலை கூறுகின்றார். ஒவ்வொரு காட்சியின் முடிவிலும் மூடித் திறப்பதற் கேற்ற நகரும் திரை வசதியும் மேடையில் உள்ளது.

பொம்மைகள்:

திரு செம்மலையிடம் உள்ள பொம்மை கள் மிகவும் நேர்த்தியானவைகளாகும். பொம்மை உருவாக்கலைப் பற்றிக் கலைஞர் கூறிய செய்திகள் கும்பகோணம் பகுதியில் செய்யப்படும் பொம்மைகளின் செய்முறை யுடன் ஒத்துள்ளன. பெண்கள் பயன்படுத்து கின்ற நீளமான சவுரிகளையே பொம்மைக் குக் கட்டுவது இப்பகுதிப் பொம்மைகளின் சிறப்பாகும்.

பொம்மையின் கயிறு அமைப்பு

கும்பகோணம் பகுதியில் உள்ளது போலவே இங்கும் சுண்டு கயிறுகள் சிறு மூங்கில் குச்சியில் கட்டப்பட்டு, அதனை பொம்மையாட்டுவோர் தம் கைகளில் பிடித்துக் கொண்டு பொம்மைகளை இயக்கு கின்றார். முன் குறிப்பிட்ட குச்சிவகை 1,2,4 ஆகிய சுண்டுகயிறு அமைப்பு முறைகளில் தான் சேலத்துப் பொம்மைகளும் காணப் படுகின்றன. எனினும் இரு பகுதிகளிலும் சுண்டு கயிறுகளின் அமைப்பு முறையில் வேறுபாடுகளும் உள்ளன. கும்பகோணம் சபாக்களில் இருக்கின்ற நாரதர், மந்திர தந்திரக் காட்சியில் இடம்பெறும் பெண் ஆகிய பொம்மைகளில் உள்ள சுண்டுகயிறு அமைப்பு திரு செம்மலையிடம் உள்ள பொம்மைகளில் காணப்படவில்லை. சுண்டு கயிறுகளை வளையத்தில் கட்டி, அதனை ஆட்டுவோர் தன் தலையில் கட்டியுள்ள உருமாலில் சூடிக் கொண்டு பொம்மை யினை இயக்குகின்ற முறையும் சேலத்தில் இல்லை.

அதே நேரத்தில் கும்பகோணத்தில் இல்லாத குச்சி வகைச் சுண்டு கயிறு அமைப்பு முறையும் திரு செம்மலையிடம் உள்ள பொம்மைகளில் உள்ளன. அதன் மாதிரிப்படம் வருமாறு:



இதில் பொம்மையின் முதுகு, வலதுகைக் கயிறுகள் ஒரு குச்சியிலும், உச்சந்தலை, இடதுகைக் கயிறுகள் மற்றொரு குச்சியிலும் இணைக்கப்பட்டுள்ளன. உச்சந்தலைக் கயிற்றினையும், முதுகுக் கயிற்றினையும் தனித் தனிக் குச்சியில் கட்டும்முறை கும்பகோணம் பகுதியில் காணப்படாததாகும்.

இசைக் கருவிகள்

திரு செம்மலையின் பொம்மலாட்ட நிகழ்ச்சிகளில் சுதிப்பெட்டி, முகவீணை, மிருதங்கம், சால்ரா, காற்சலங்கை ஆகிய இசைக் கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. இப்பகுதிகளில் ஆர்மோனியம் பயன் படுத்தப்பெறுவதில்லை. திரு ஆறுமுகம் காலத்தில் சுதிப்பெட்டி, மிருதங்கம், சலங்கை மட்டும் உபயோகப்படுத்தப்பட்ட தாகவும் திரு செம்மலைதான் முகவீணை யினைப் பொம்மலாட்டத்தில் சேர்த்த தாகவும் தெரிவிக்கின்றார். தற்போது கூத்து நடிகர்கள் கிடைப்பதரிதாகிவிட்டதால் முகவீணையினைமட்டும் பின்பாட்டிற்கென வைத்துக் கொள்வதாகவும் உரைத்தார்.

நிகழ்ச்சி அமைப்பு முறை

பொம்மலாட்ட நிகழ்ச்சி இரவு ஒன்பது மணியளவில் தொடங்கி விடியும்வரை நடத்தப்படுகின்றது. ஒரு கதையினையே இரண்டு மூன்று இரவுகள்கூடத் திரு செம்மலை நடத்துகின்றார்.

கடவுள் வழிபாடு நிகழ்ச்சி பிள்ளையார் வழிபாட்டுடன்தான் தொடங்குகின்றது. திரை விலகியதும் பிள்ளையார் காட்சியளிக்கின்றார். பிறகு இரு பக்கமிருந்து இரு அந்தணர்கள் வரு கின்றனர். ஓர் அந்தணர் மணி ஏந்தியும், மற்றொருவர் பழம், தேங்காயும் கொண்டு வந்து கற்பூர ஆலத்தி எடுத்துப்பூசை செய் கின்றனர். பூசை செய்யும்போது பிள்ளை யாரின் எலி மேடையில் தோன்றித் தேங்காயை எடுத்துச் சென்று விடுகிறது. தேங்காய் காணாததால், இரு அந்தணர்க்கு மிடையே சண்டை ஏற்படுகிறது. இது முடிந்தவுடன் நிகழ்ச்சியில் ஏற்படப்போகும் குற்றங்குறைகளைப் பொறுத்தருளும்படி பார்வையாளரைக் கேட்டுக்கொண்டு, இன்ன கதை நடத்தப் போகிறேன் என்று கூறி நாடகத்தைத் தொடங்குகின்றார்கள்.

இந்த முதல் காட்சிமட்டும் திரு செம்மலை நடத்தும் எல்லா நாடகங்களிலும் ஒன்றுபோலவே இருக்கின்றது. கும்ப கோணத்தில் முதல் காட்சி பிள்ளையாரிடம் பபூன் நல்வாழ்த்துப் பெறுவதாக மட்டும் அமைகின்றது. சேலத்தில் நடத்துகின்ற முதல் காட்சியினைத் திரு இராதாகிருட்டிண மழவராயரிடம்[20] விளக்கியபோது, கும்பகோணம் பகுதியிலும் இவ்வாறுதான் தொடக்க காலத்தில் முதல்காட்சி இருந்த தாகவும், தானே இவ்வாறு நடத்தி இருப்ப தாகவும் அண்மைக் காலத்தில்தான் முதல் காட்சி மாற்றப்பட்டு மேற்கண்டவாறு நடத்தி வருவதாகவும் உரைத்தார். கும்ப கோணம் பகுதியில் அய்யர்கள் பொம்ம லாட்டம் நடத்தி வருவதால் அந்தணர்கள் சண்டை போடுவது போன்ற காட்சியினை அவர்கள் விலக்கி இருக்கக்கூடும்.

நகைச்சுவைக் காட்சிகள் பிள்ளையார் வழிபாட்டிற்குப் பின்பு நேராகக் கதைப் பகுதி தொடங்கப்படுகின்றது. சேலம் பகுதி யில் மருதாயி, வண்ணான் வண்ணாத்தி, நரிக்குறவன், கரகாட்டம் ஆகிய நகைச் சுவைக் காட்சிகள் நடத்தப்படுகின்றன.

திரு செம்மலையின் நாடகங்களில் குட்டையன் எனும் பாத்திரம் நகைச்சுவைப் பாத்திரமாக இடம்பெறுகின்றது. பெயருக்கு ஏற்றாற்போல இப்பொம்மையும் குள்ளமாகவே இருக்கின்றது. நாடகத்தில் பபூனின் பணியினைக் குட்டையன் செய் கின்றான். திரு செம்மலை முன்பு கூட்டாக நிகழ்ச்சிகளை நடத்திய காலங்களில் கோமாளிதான் நாடகத்தில் இருந்ததாகவும், இவர்தான் குட்டையன் பாத்திரத்தை நாடகத்தில் சேர்த்ததாகவும் உரைக்கின்றார். இவரது இல்லத்தில் முன்பு நாடகங்களில் பயன்படுத்தப்பட்ட கோமாளி பொம்மை களையும் காட்டினார்.

கதைகள் சேலம் பகுதியில் சின்னுப் படையாச்சி காலத்தில் குசல நாடகம் என்ற பெயரில் லவகுசா கதைமட்டும் நடத்தப் பட்டு வந்திருக்கின்றது. திரு செம்மலை கூட்டாகப் பொம்மலாட்டக்குழு தொடங்கியபோது நல்லதங்காள், லவகுசா, அரிச்சந்திரன், மார்க்கண்டேயன் என்னும் கதைகளைமட்டுமே மிகுதியாக நடத்தியிருக் கின்றனர். தற்போது, விராட பருவம்

என்னும் கீசகன் வதை, பாஞ்சாலி சபதம் (சயந்தவன் கர்வ பங்கம்), நச்சுப் பொய்கை, பாஞ்சால குறவஞ்சி (துரியோதனன் செந் நெல் விதைத்தல்), கர்ணன், மாடுபிடி சண்டை, பவளக்கொடி, தாடகை சம்காரம், வலகுசா, சகுந்தலா திருமணம், ஆரவல்லி, சிறுத்தொண்டன், ருக்மாங்கதன், கண்ணன் பிறப்பு (கம்சன்வதை), இரணியன்—பிரக லாதன் ஆகிய கதைகளை நடத்தி வருவதாக திரு செம்மலை உரைக்கின்றார். இன்னும் ஒட்ட நாடகம், ஞான சௌந்தரி ஆகிய நாடகங்களை இரத்தின நாயகர் அண்டு சன்சு புத்தகங்களைப் படித்து நடத்துவ தாகவும் உரைத்தார்.

திரு செம்மலை தெருக்கூத்தில் நடத்தப் பெற்று வரும் கதைகளை, அம்முறையி லேயே பொம்மலாட்டத்தில் நடத்திக் கொண்டிருப்பதாகக் கூறுகின்றார். பாடல் களும் கூத்து மெட்டில்தான் உள்ளன. இவர் *30-4-83* அன்று பெரிச்சானூர் என்ற கிராமத்தில் நல்லதங்காள் நாடகத்தினை நடத்தினார். அந்நிகழ்ச்சியினை ஒலிப்பதிவு செய்யும் வாய்ப்பு கிடைக்கவில்லை. எனினும் அந்நாடகத்தின் காட்சி அமைப்பு குறித்துக் கொள்ளப்பட்டது.[21]

பார்வையாளர் பங்கு: இவரது நிகழ்ச் சிகளில் பார்வையாளர்களின் பங்கும் சிறப்பாகக் குறிப்பிடும்படி இருக்கின்றது. முழு இரவும் கூட்டம் கலையாமல் இருந்து நிகழ்ச்சியினைச் சுவைக்கின்றனர். ஒரு காட்சி பார்வையாளர்களுக்கு மிகவும் பிடித்து விட்டால் அக்காட்சியில் இடம் பெறும் பொம்மையில் பணம் குத்தி மீண்டும் மீண்டும் அதனையே நடத்தச் செய்கின்றனர். பெண்கள் நிகழ்ச்சியின் இடையே நல்ல தங்காள் போன்ற பெண் பொம்மையின் கூந்தலில் பூ வைத்து மகிழ்கின்றனர். நல்ல தங்காள், குளத்தில் தன் குழந்தைகளைப் போட்டுவிட்டுத் தானும் விழுந்து இறக்கின்ற காட்சி யின்போது பல பெண்கள் அழுது கொண்டிருந்ததை நேரில் காணமுடிந்தது.

சேலம், கும்பகோணம் பகுதி பொம்மலாட்டம் — வேறுபாடுகள்:

கும்பகோணம் பகுதியில் உள்ள பொம்மலாட்ட முறைக்கும் திரு செம்மலையின் பொம்மலாட்ட நிகழ்ச்சிக்கும் உள்ள வேறுபாடுகள் பின்வருமாறு:

வ.எ.	கும்பகோணம்	சேலம்
1.	மேடை 12' × 12' அல்லது 16' × 16' அளவில் போடப்படுகின்றது.	மேடை 21' × 10'-உள்ள பெரிய மேடை போடப்படுகின்றது.
2.	பொம்மைகளில் பெரும்பாலும் தலைமுடி வரையப்படுகின்றது.	பொம்மைகளில் உண்மையான சவுரி முடிகள் கட்டப்படுகின்றன.
3.	வளையத்தில் சுண்டு கயிறுகளைக் கட்டிப் பொம்மைகளை இயக்கும் முறை உண்டு.	இத்தகைய சுண்டுகயிறு அமைப்பு முறை இல்லை.
4.	இசைக்கருவிகளில் ஆர்மோனியம் இடம் பெற்றிருக்கின்றது. முக வீணை பயன் படுத்தப்படுவதில்லை.	இசைக்கருவிகளில் முகவீணை பயன் படுத்தப்படுகின்றது. ஆர்மோனியம் இடம் பெறுவதில்லை.
5.	அய்யர், சௌராட்டிரர் போன்ற உயர்ந்த இனமக்கள், பிற்படுத்தப்பட்ட வகுப்பினரும் பொம்மலாட்டக் கலை ஞர்களாக விளங்குகின்றனர்.	உயர்ந்த இன மக்கள் இக்கலையோடு தொடர்பு கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. பிற்படுத்தப்பட்ட வகுப்பினரும், தாழ்த்தப்பட்ட வகுப் பினருமே பொம்மலாட்டக் கலைஞர் களாக விளங்குகின்றனர்.

6.	பொம்மலாட்டக் குழுவில் அதிக அளவில் ஆறுபேர்தான் இடம்பெறுகின்றனர்.	ஒன்பது பேருக்கு மேல் தேவைப்படுகின்றனர்.
7.	தற்காலத் திரைப்படம், மேடை நாடகங்களைப்போல மூன்று மணிநேரம் மட்டுமே பொம்மலாட்ட நிகழ்ச்சிகளை நடத்துகின்றனர்.	தெருக்கூத்தைப்போல இரவு முழுவதும் தொடர்ந்து நிகழ்ச்சி நடத்துகின்றனர்.
8.	காட்சி அமைப்பில் பிள்ளையார் வழிபாடு, அம்மானைக் காட்சி, பரத நாட்டியக் காட்சிக்குப் பின்தான் கதைப் பகுதி தொடங்கப்படுகின்றது.	பிள்ளையார் வழிபாட்டிற்குப் பின் நேராகக் கதைப் பகுதிக்குச் சென்று விடுகின்றனர். நாடகத்தின் இடையில் தான் கரகாட்டம்போன்ற சிரிப்புக் காட்சிகள் நடத்தப்படுகின்றன. கூடவும் கும்பகோணம் பகுதியில் உள்ள அம்மானைக் காட்சி, பரத நாட்டியக் காட்சி சேலம் பகுதியில் நடத்தப் பெறுவதில்லை.
9.	பாடல்கள் வருண மெட்டில் பாடப் படுகின்றன. இப்பகுதியில் பின்பாட்டுப் பாடும் முறையும் இருந்ததாகத் தெரியவில்லை.	சேலம் பகுதியில் கருனாடகத்து இசைப் பாங்கு கிடையாது. பாடல்கள் கூத்து மெட்டில்தான் பாடப்படுகின்றன. பின்பாட்டுபாடும்முறை இருந்திருக்கின்றது. தற்போது பின்பாட்டிற்கு ஆள்கள் இல்லாத காரணத்தால் முக வீணையைப் பயன்படுத்தி வருகின்றனர்.
10.	பொம்மலாட்ட நாடகத்திற்கு, சங்கரதாச சுவாமிகளின் நாடகப்பாங்கு அடிப்படையாக உள்ளன.	நாடகம் கூத்து அடிப்படையில் நடத்தப்படுகிறது.

தமிழக பொம்மலாட்டம்பற்றிய இந்த ஆய்வில் மேற்கொண்டு செய்யவேண்டிய பணிகள்:

கும்பகோணம் பகுதியில் சந்தித்த பொம்மலாட்டக் கலைஞர்களில் சிலர், கட்டுரையில் குறிப்பிடப்பட்ட மூன்று சபாக்கள் தவிர பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த ஒருசிலர் பொம்மலாட்டம் நடத்தி வருவதாகவும் உரைக்கின்றனர். அவர்களைப்பற்றி ஆழமான கேள்விகள் கேட்கப்படும்போதெல்லாம், கட்டுரையில் கூறப்பட்டுள்ள மூன்று சபாக்கள் மட்டுமே கும்பகோணம் பகுதியில் சரியான முறையில் பொம்மலாட்ட நிகழ்ச்சிகளை நடத்தி வருவதாகவும், பிறர் பொம்மலாட்டத்தைக் கெடுத்து வருவதாகவும், பிழைப்பிற்காகமட்டும் அவர்கள் பொம்மலாட்ட நிகழ்ச்சிகளைச் செய்து வருவதாகவும் கூறி அவர்களின் இருப்பிடத்தைக் கூறாமல் மறைத்து விடுகின்றனர். ஒவ்வொரு சபாவினரும் தங்கள் சபாவின் நிகழ்ச்சிகள் மட்டும் ஆராய்ச்சி செய்யப்பட வேண்டும் என்ற அவாவின் காரணமாகப் பிற குழுவினரின் முகவரியினைத் தரத் தயங்குகின்றனர். இவர்களைப்பற்றிய செய்திகள் திரட்டப்படவேண்டும்.

இதுவரை கள ஆய்வில் கண்ட மூன்று சபாக்களில் மூத்த சபாவாகக் கருதப்படும் கும்பகோண மங்களகான சபா ஏறத்தாழ ஐம்பது ஆண்டு கால வரலாறு மட்டுமே உடையதாக இருக்கின்றது. எனவே கும்பகோணம் பகுதியில் பழைய மரபில் வந்த பொம்மலாட்டமுறை ஒருவேளை பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட வகுப்பினர் நடத்திவரும் பொம்மலாட்ட நிகழ்ச்சிகளில் இன்னும் இருக்கின்றதா அல்லது அவர்களும் பெரிய சபாக்களின் பொம்மலாட்ட முறையினைப் பின்பற்றி வருமானத்திற்காகமட்டும் நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றனரா என்பது ஆராயப்படவேண்டும்.

கும்பகோணத்தில் தொடக்க காலங்களில் பொம்மலாட்ட நிகழ்ச்சிகளை நடத்திய வராகக் கூறப்படும் 'தளுக்கு' சாமிநாதக் குருக்கள் காலத்தில் கலைஞர்கள் பாடிக் கொண்டே பொம்மையாட்டினர் என்றும், பிறர் பாடல்களைப் பாட அதற்கேற்ப பொம்மை தனிக் கலைஞர்களால் ஆட்டப் பெற்றது என்றும் குழப்பமான செய்திகள் கிடைக்கின்றன. சேலம் பகுதியில் கலைஞர்கள் பாடல்களைப் பாடிக் கொண்டும் உரையாடல்களைப் பேசிக்கொண்டும் பொம்மைகளை ஆட்டுகின்றனர். இதுதான் நமது பழைய மரபாக இருந்திருக்குமோ என்ற ஐயம் எழுகின்றது.

கும்பகோணம் மங்களகான சபாவில் மணி அய்யர் காலத்தில் பயன்படுத்தப்பட்ட பொம்மைகளில் தெருக்கூத்து நடிகர்கள் தோளில் கட்டிக்கொள்வது பொன்ற புசக் கட்டைகள் உள்ளன. எனவே கும்பகோணம் பகுதியிலும் சேலம் பகுதியைப் போலத் தெருக்கூத்து முறையில் பொம்மலாட்ட நிகழ்ச்சிகளை நடத்தியிருப்பார்களோ என்ற ஐயமும் எழுகின்றது.

மார்க் **(MARG)** இதழில் மெகர் கான்டிராக்டர் **(MEHER R. CONTRACTOR)** தமிழக பொம்மலாட்டம்பற்றிப் எழுதியுள்ள **"Various Types of Traditional puppets of India"** கட்டுரையில் கும்பகோணம் மங்களகான சபாவினர் 1960-களில் பயன்படுத்திய பொம்மைகள் சிலவற்றின் புகைப்படங்களைத் தந்துள்ளார்கள். **(Marg: Vol: XXI No.3. Bombay, June 1968)** அப்பொம்மைகளின் அணிகலன்கள் அனைத்தும் அட்டையிலேயே செய்யப்பட்டு இருக்கின்றன என்பது தெரிய வருகின்றது. தற்போது இச்சபாவில் பயன்படுத்தப்பட்டு வரும் பொம்மைகளுக்கும் அக்கட்டுரையின் புகைப்படத்தில் உள்ள பொம்மைகளுக்கும் வேறுபாடுகள் நிறைய உள்ளன. இந்த மாற்றங்களுக்கான காரணங்கள் ஆராயப்படவேண்டும்.

இப்பகுதிகளில் பரதநாட்டியமாடும் பொம்மைகளில் உள்ள வளையவகைச் சுண்டு கயிறுகளின் அமைப்புமுறை தனித்த முறையாக இருக்கின்றது. இதில் சுண்டுகயிறுகள் வளையத்தில் கட்டப்படுவது போல பொம்மலாட்ட முறையிலும் சுண்டுகயிறுகளை முக்கோண வடிவத்தில் செய்யப்பட்ட மூங்கில் சட்டத்தில் கட்டிப் பொம்மைகளை இயக்குமுறை உள்ளது. எனவே, சுண்டு கயிறுகளைத் தாங்கியில் (வளையம் அல்லது முக்கோணவடிவ மூங்கில் சட்டம்) கட்டி இயக்குமுறை பற்றியும் ஆய்வு செய்யப்பட வேண்டும்.

கும்பகோணப் பகுதியில் பொம்மலாட்ட நிகழ்ச்சி முறை ஒன்றுபோலவே இருக்கின்றது என்பதனை இரு சபாக்கள் நடத்துகின்ற வள்ளி திருமண நாடகங்களை ஒப்பிட்டுக் காண்பதன்மூலமாக அறிய முடிந்தது (காண்க பக்.). கும்பகோணப் பகுதியில் இருக்கின்ற அனைத்துக் குழுவினரும் நடத்துகின்ற ஒரு நாடகத்தைப் பதிவு செய்து ஒப்பிட்டுக் காணும்போது இக் கருத்து மேலும் உறுதிப்படக்கூடும்.

பொம்மலாட்டத்தில் ஒவ்வொரு செய்திக்கும் அல்லது உணர்ச்சிக்கும் ஏற்றவகையில் பொம்மையின் கருத்து வெளிப்பாட்டு அசைவு என்பதனைக் காண்பதும் அவசியமாகும். கும்பகோணம் பகுதியில் சுவாமிகள் நாடகப் பாணியில் பொம்மலாட்ட நிகழ்ச்சி நடத்தப்பெறுவதால் கருநாடக இசைக்கு மட்டுமே அதிகச் சிறப்பிடம் தரப்படுகின்றது. ஆய்வாளர் பொம்மலாட்டப் பயிற்சி பெற்ற அளவில் கும்பகோணப் பகுதியில் பொம்மலாட்டத்தில் கதை நிகழ்ச்சிகளுக்கு ஏற்ப, கருத்து வெளிப்பாட்டு அசைவே இல்லை என்ற முடிவுக்குத் தான் வர இயலுகின்றது. எனினும் உடையார் பாளையம் இராதாகிருட்டிண மழவராயர் போன்ற பழம் கலைஞர்களில் நிகழ்ச்சிகளை ஆழமாகப் பார்த்தபின்தான் இத்தகைய முடிவுக்கு வருவது ஒழுங்கானதாக அமையும்.

சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், திரு செம்மலை நடத்திய இரு நிகழ்ச்சிகள்மட்டுமே பார்க்கப்பட்டுள்ளன. திரு செம்மலை, சேலம் பகுதியில் தம்மைத்தவிர பிற பொம்மலாட்டக் குழுக்கள் இருப்பதாகவும் அவர்களின் இருப்பிடத்தையும் உரைத்துள்ளார். எனினும் சேலம் மாவட்டத்தில் கோடை காலங்களில்மட்டுமே நிகழ்ச்சிகள் அதிகமாக நடத்தப் பெறுவதால் உடனடியாகப் பெரும்பாலான குழுக்களின் நிகழ்ச்சிகளைப் பார்க்க இயலவில்லை. இப்பகுதியில் குறைந்தது மூன்று வேறுபட்ட குழுக்களின்

நிகழ்ச்சிகளைக் காணும் போதுதான் சேலம் பகுதியின் ஒட்டுமொத்தமான பொம்ம லாட்டமுறையை ஒழுங்காக விளக்க இயலும்.

திரு செம்மலை பொம்மலாட்டத்தில் மேடையினை அகலப்படுத்தியது, பொம்மை யினை அழகுபடுத்தியது, முகவீணையினை அறிமுகப்படுத்தியதுபோன்ற பலமாற்றங்கள் தன் காலத்தில் ஏற்பட்டதாக உரைக்கிறார் என்பது கட்டுரையில் குறிப்பிடப்பட்டது (காண்க பக்.) இவர் கூட்டாகப் பொம்மலாட்டம் தொடங்கியபோது இவருடன் கூட்டாளியாக இருந்த திரு ஆறுமுகம் என்பவர் தற்பொது உயிரோடு இருப்பதாகத் தெரிகின்றது. அவரைக் கலந்து பேசி இவர்களால் செய்யப்பட்ட மாற்றங்கள் உண்மையா என்றும் அறிய வேண்டும்.

சேலத்தில் தெருக்கூத்துப் பாங்கில்தான் பொம்மலாட்டம் நடத்தப்படுகின்றது என்பது தெளிவாகத் தெரிகிறது. தெருக்கூத்தில் நடத்தப்பெற்றுவரும் பாரதக்கதைகள் பல, சேலத்தில் பொம்மலாட்டத்தில் தற்போதும் நடத்தப்பெற்று வருகின்றன. தெருக்கூத்து வடிவம் பொம்மலாட்டத்தில் எவ்வாறு அமைந்து வருகின்றது என்று காண்பதும் முக்கியமான ஆய்வாக அமையும். சேலம் பகுதியில் தொடக்க காலத்தில் குசல நாடகம் என்ற பெயரில் இராமாயணக் கதையினையும், கும்ப கோணம் பகுதியில் அரிச்சந்திரன் கதையி னையும் நடத்தியதாகக் கள ஆய்வினால் அறியமுடிகின்றது. இதன் காரணமும் தற்போது விளங்கவில்லை.

பொம்மலாட்டம் சிறுவர்களுக்கு உரிய கலைவடிவம் என்ற கருத்தும் உள்ளது. ஆனால், சேலத்தில் பொம்மலாட்ட நிகழ்ச்சி யின்போது சிறுவர்களைவிட முதிய பெரியோர்களின் ஈடுபாடு அதிகமாகக் காணப்படுகின்றது. இந்த முரண்பாடும் ஆராயப்படவேண்டிய ஒன்றாகும்.

பின்னிணைப்பு — 1

டி.டி. சங்கரதாச சுவாமிகள் — வள்ளி திருமணம்		கும்பகோணம் மங்களகான பொம்மலாட்டசபா-வள்ளி திருமணம்		இரு நாடகங்களுக்கு மிடையே உள்ள வேறு பாடுகள்.
காட்சி எண்	காட்சிகள்	காட்சி எண்	காட்சிகள்	
1	நம்பிராசன், அரசனின் ஏழு குமாரர்கள் ஏவலன் குடிமக்கள் (நம்பிராசன் வருகை. தொடர்ந்து அவனுடைய ஏழு குமாரர்கள் வருகை. அரசனிடம், குடிமக்கள் கொடிய விலங்குகள் முறையீடு. அரசன் வேட்டைக்குப் புறப்படுதல்)		இல்லை	சுவாமிகள் நாடகத்தில் உள்ள இந்தக் காட்சி பொம்மலாட்டத்தில் இடம்பெறவில்லை.

காட்சி எண்	காட்சிகள்	காட்சி எண்	காட்சிகள்	
2	நம்பிராசன், வேடன் (வேட்டையாடுமிடத்தில் நம்பிராசனிடம் ஒரு வேடன் வள்ளிக் கிழங்கு தோண்டிய இடத்தில் ஒரு பெண் குழந்தையைக் கண்டதாக அறிவித்தல்)		இல்லை	சுவாமிகள் நாடகத்தில் உள்ள இந்தக் காட்சி பொம்மலாட்டத்தில் இடம்பெறவில்லை.
3	நம்பிராசன், வேடன், குழந்தை (நம்பிராசன் சென்று குழந்தையைப் பார்த்தல்)		இல்லை	சுவாமிகள் நாடகத்தில் உள்ள இந்தக் காட்சி பொம்மலாட்டத்தில் இடம்பெறவில்லை.
4	நம்பிராசன், மோகினி, சேடிப்பெண்கள், குமாரர்கள் (நம்பிராசன் தன் மனைவி மோகினியிடம் குழந்தையைத் தந்து வளர்க்கச் சொல்லுதல். தைக்கு வள்ளி என்று பெயரிடுதல்)		இல்லை	சுவாமிகள் நாடகத்தில் உள்ள இந்தக் காட்சி பொம்மலாட்டத்தில் இடம்பெறவில்லை.
5	நம்பிராசன், குமாரர்கள், வள்ளி (அரசன், தினைப்புனத்தில் பறவைகள் பயிர்களை அழிக்கின்ற செய்தியை அறிதல், வள்ளியைத் தினைப் புனத்திற்கு அண்ணன்மார்கள் துணையுடன் அனுப்புதல்)	1	நம்பிராசன், பபூன், வள்ளி (அரசன் பபூன்டம் வள்ளியை அழைத்துவரச் சொல்லுதல். அவளைத் தினைப் புனக்காவலுக்குப் பபூன் துணையுடன் அனுப்புதல்)	வள்ளியின் துணைக்குச் செல்லும் பாத்திரத்தில் வேறுபாடு காணப்படுகிறது.
6	வள்ளி, தோழிகள், அண்ணன்மார்கள், நாரதர் (தினைப்புனத்திற்கு நாரதர் வருகை. வள்ளியிடம் முருகனைத் திருமணம் செய்து கொள்ளும்படி வேண்டுதல். வள்ளி மறுத்தல். நாரதர் திருமணத்தை நடத்துவதாக சபதம் செய்தல்)	2	நாரதர், வள்ளி, பபூன் (பெரும்பாலும் அதே நிகழ்ச்சிகள்தான் நடத்தப்படுகின்றன)	தோழிகள், அண்ணன்மார்கள் ஆகிய பாத்திரங்கள் பொம்மலாட்டத்தில் மட்டும் நீக்கப்பட்டு, விதூஷன் பாத்திரம் மட்டும் இணைக்கப்பட்டுள்ளது.

காட்சி எண்	காட்சிகள்	காட்சி எண்	காட்சிகள்
7	முருகன், நாரதர் (நாரதர் முருகனைக் கண்டு வள்ளியின் மனத்தைச் சிறிது நோகும்படி செய்து பிறகு மணம்புரியும்படி வேண்டுதல்)	3	உண்டு
8	முருகன் (அவ்வாறே முருகன் வேட உருவத்தில் தினைப்புனம் வந்து, வள்ளியின் பாடலைக் கேட்டு மெய்மறந்து நிற்றல். அவளைச் சந்திக்கச் செல்லுதல்)	4	முருகன், வள்ளி, நம்பிராசன் (வேண்டுவன் வடிவில் முருகன் தினைப்புனம் வருதல். பாடலைக் கேட்டல். வள்ளியைச் சந்தித்துக் காதல் மொழி பேசுதல். இருவரின் சொல் வள்ளி உதவிக்குத் தந்தையை அழைத்த போது வேங்கை மரமாக மறைந்து நிற்றல்) சுவாமிகள் நாடகத்தில் உள்ள எட்டு, ஒன்பதாவது காட்சிகளை இணைத்துப் பொம்மலாட்டத்தில் நான்காவது காட்சியாக நடத்தப்படுகின்றன.
9	முருகன், வள்ளி, தோழிகள், அண்ணன்மார் (வேடுவனாகிய முருகன் மான் ஒன்றைத் துரத்தி வந்ததாக உரைத்து வள்ளியைச் சந்தித்தல். முருகன் வள்ளி சொல்லாடல். வள்ளி உதவிக்கு அண்ணன்மாரை அழைக்கும்போது முருகன் வேங்கை மரமாக மறைந்து நிற்றல். கிழவேடம் கொண்டு நம்பிராசனைச் சந்திக்க முருகன் முடிவு செய்தல்)		
10	கிழவன், நம்பிராசன், குமாரர்கள் (கிழவேடத்தில் வந்த முருகனை அரசன் வள்ளியிடன் சேர்ப்பித்தல்)	5	உண்டு

காட்சி எண்	காட்சிகள்	காட்சி எண்	காட்சிகள்	
11	வள்ளி, கிழவன், நம்பி ராசன் (வள்ளி தந்த தினை மாவினைக் கிழவர் உண்ணும்போது விக்கிக் கொள்ள அவரைச் சுனைக்கு வள்ளி அழைத்துச் செல்லல்)	6	கிழவன், வள்ளி (கிழவேடத்தில் வரும் முருகன் வள்ளிக்குச் சோதிடம் பார்த்தல். வள்ளி கிழவனுக்கு உணவூட்டல். கிழ வருக்கு விக்கிக் கொள்ள சுனைக்கு அழைத்துச் செல்லல் பிறகு கிழவர்வள்ளி அச்சப்படும்படியான விலங்கு எது என்ப தனை அவளிடமே கேட்டு அறிதல்)	
12	வள்ளி, கிழவன், பிள்ளையார், நம்பி ராசன், குமாரர்கள் வேடர்கள் (கிழவர் தண்ணீர் அருந்தியபின் வள்ளி யிடம் காதல் மொழி பேசுதல். வள்ளி சினம். பிறகு கிழவர் அச்சப் படும்படியான விலங்கின் தின் பெயரை அவளிடமே கேட்டு அறிதல். யானையை (விநாயகன்) அழைத்து அவளை அச்சுறுத்தித் திருமணம் செய்து கொள்ளச் சத்தியம் பெறுதல். வள்ளி வருத்தம். அப்போது முருகனாக வந்து வள்ளி யைக் கந்தர்வமணம் புரிதல். அப்போதுவரும் வேடுவர்களுடன் முருகன் போர் புரிதல். இறுதியில் அனைவருக் கும் முருகன் உயிர்தந்து அருளுதல்)	7	கிழவன், விநாயகர் (வள்ளியை அச்சுறுத்தும் பொருட்டு பிள்ளையாரை யானை உருவில் வள்ளியின் எதிரில் வரும்படி வேண்டுதல்)	சுவாமிகள் நாடகத்தில் பதினொன்று, பனிரெண்டாவது காட்சிகளில் உள்ள நிகழ்ச்சிகள் பொம்ம லாட்டத்தில் நான்கு காட்சிகளாக (6,7,8,9) தனித்தனியாக நடத்தப் படுகின்றன.
		8	கிழவன், வள்ளி, யானை (முருகன் வள்ளியிடம் யானையைக் காட்டி அச்சுறுத்தித் திருமணம் செய்து கொள்ள உறுதி மொழி பெறுதல்)	
		9	வள்ளி தனிமொழி (கிழவனை மணக்க வேண்டி வந்ததே என வள்ளி வருந்து தல்)	

காட்சி எண்	காட்சிகள்	காட்சி எண்	காட்சிகள்	
13	முருகன், வள்ளி, நாரதர் (முருகன், வள்ளி திருமணம் காண நாரதர் வருகை)	10	முருகன் வள்ளி (திருமணம்)	பொம்மலாட்டத்தில் வள்ளி திருமணக் காட்சியில் நாரதர் இடம் பெறுவதில்லை.

பின்னிணைப்பு — II

டி.டி. சங்கரதாச சுவாமிகளின் வள்ளி திருமண நாடகத்தில் இடம்பெறும் தினைப்புனத்தில் நாரதர் வருகின்றபோது பேசுகின்ற உரையாடல்:

''சுவர்க்க சாம்ராஜ்ய இந்திராதி, தேவரும் என்னை எதிர்காணில் இருந்தநிலை கலங்கி எழுந்து வணங்குவார். ஏன்? தமக்கு எப்பொழுதும் என்னால் உத்தரபாகத்தில் நன்மையுண்டாவதாக விருந்தாலும் பூர்வத்தில் அகோரயுத்தமோ, அல்லது வேறு எவ்விதக் கலகமோ பார்க்கும்படியாக நேரிடுமே என்ற ஏக்கமேயல்லாது வேறில்லை. எனது பிதாவாகிய பிரம தேவன் என்னைச் சிருஷ்டித்து இவ்வுலகில் துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனம் நடத்தும் பொருட்டு அதற்குக் காரணகர்த்தாவாக என்னை நியமிக்கப்பட்டிருக்கிறார். இல்லாது போனால் ''நாரதா கலகப் பிரியா'' என்ற வாக்கியம் எங்கும் நிலை பெறுமா? நிற்க, நானின்று இத்தினைப் புனம் பக்கமாக வந்து கொண்டிருக்கும் பொழுது ''சோ'' வென்னும் மிருதுவாகிய குரல் எனது யாழின் நரம்பின் இனிமையைப் பின்படுத்தி இரு செவி வழியாகப் புகுந்து என்னைப் பரவசப்படுத்தி இங்கு இழுத்துக் கொண்டு வந்துவிட்டது. நல்லது. இந்தத் தினைச் சோலையைக் கவனிக்கிறேன்.

கும்பகோணம் மங்களகான சபாவினரின் வள்ளி திருமண நாடகம் — நாரதர் தினைப்புனத்தில் தோன்றும்போது பேசப்படுகின்ற உரையாடல்:

''நாராயண, நாராயண, நான் இன்று அதிகாலையிலே எழுந்து நித்திய கர்மான நித்தியங்களையெல்லாம் முடித்துக் கொண்டு நேராகச் சத்யலோகம் சென்று என்னுடைய தந்தையாரைக் கண்டு சேவித்து அவர் அருள் பெற்று, வைகுண்டம் சென்று ஸ்ரீநாராயண மூர்த்தியைச் சேவித்து அவர் இன்னருளைப் பெற்று, இந்த மண்ணுலகிற்கு வந்திருக்கின்றேன். ஏன்? என்றால், என்னுடைய தந்தையார் எனக்கிட்ட சாபத்தின் பிரகாரம் அனுதினமும் நான் ஒரு கலகம் செய்யாவிடில் என்னுடைய சிரசானது ஆயிரம் சுக்கலாகப் போய்விடும் என்று எனக்குச் சாபம் இட்டிருக்கின்றார். அதனால் முதற்கொண்டு நேற்றுவரை அவ்வாறு செய்து முடித்து வந்திருக்கின்றேன். ஆனால் இந்த மண்ணுலகிலே..... மானிடர்களாய்ப் பிறந்தவர்கள் அவரவர்கள் செய்யக்கூடிய பாவங்களுக்கும் புண்ணியங்களுக்கும் தக்கவாறு பிறப்பதும் இறப்பதும், இறப்பதும் பிறப்பதுமாய் அவர்கள் இருந்து வருகின்றனர். ஜீவாத்மா என்ற அந்த என்னமே இல்லாமல் அவர்கள் எங்கிருந்து வந்தோம். எதற்காக வந்தோம். நாம் என்ன செய்ய வேண்டும் என்ற அந்த முக்கியத்துவத்தை அவர்கள் மறந்து, கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்ற முறையில் அவர்கள் வாழ்ந்து நசிந்து வருகின்றார்கள். அத்தகைய மனிதர்களை மென்மேலும் அவர்கள் ஆண்டவன் திருவடியில் சேர்வதற்கு என்ன காரியமோ அதைச் செய்து வருகிறேன். அதுதான் கலகம் என்று தெரிவிப்பார்கள். என்னுடைய கலகம் முதலில் துன்பகரமாக இருந்தாலும் முடிவில் இன்பமாகவே முடியும். சரி இருக்கட்டும். நம்முடைய கவனத்திற்கு இந்த இடத்தில் ஏதாவது மார்க்கம் ஏற்படுகின்றதா என்பதைக் கண்டு....

பின்னிணைப்பு — III

சேலத்தில் நிகழ்த்தப்பெற்ற நல்லதங்காள் நாடகத்தின் காட்சியமைப்பு:

காட்சி 1: பிள்ளையார், இருபார்ப்பனர்.
(பிள்ளையார் வழிபாடு நடைபெறுகிறது)

காட்சி 2: காசிராசன், குட்டையன்
(தேச விசாரணை)

காட்சி 3: காசிராசன், குட்டையன், இரு குடிமக்கள்
(நாட்டில பன்னிரெண்டு ஆண்டுபஞ்சம்பற்றிக் குடிமக்கள் முறையிடுதல்)

காட்சி 4: காசிராசன், குட்டையன், நல்லதங்கை
(காசிராசன், தன் மனைவி நல்லதங்கையை அழைத்து வரும்படி குட்டையனிடம் கூறுகிறான். நல்லதங்கை வருகிறாள். நல்லதங்கை பஞ்சத்தின் காரணமாகத் தனது அண்ணன் வீட்டிற்குச் செல்கிறேன் என்று கூறுகிறாள். அரசன் முதலில் மறுத்துப் பின் சகுனம் சரியாய் இருந்தால் போகச் சொல்கிறான்.)

காட்சி 5: அரசன் நல்லதங்கையை வழியனுப்புதல்
(பூனை இடையே வருதல்)

காட்சி 6: காசிராசன், குட்டையன், நல்லதங்கை, ஒருபெண்
(ஒரு தனிப்பெண் அழுது கொண்டிருப்பதைக் காணுதல்)

காட்சி 7: நல்லதங்கை, குழந்தைகள்
(நல்லதங்கை தனது அண்ணன் வீட்டிற்கு வரும் வழியில் வனத்தில் தங்குகிறாள். குழந்தைகளுக்குக் காய் கனி பறித்துத் தருகிறாள். குளத்தில் (தோண்டி) தண்ணீர் குடித்தபின் அனைவரும் ஓய்வெடுக்கின்றனர். குழந்தைகள் உறங்குவதற்காக நல்லதங்கை தாலாட்டுப் பாடுகிறாள்.)

காட்சி 8: நல்லதங்கை, குழந்தைகள், பாம்பு
(மலைப்பாம்பு ஒன்று அனைவரும் உறங்கிக் கொண்டிருக்கும்போது வருகின்றது. அதனை அனைவரும் வழிபடவே தீங்குபுரியாமல் சென்றுவிடுகிறது.)

காட்சி 9: நல்லதங்கை, குழந்தைகள், வேடர் இருவர்
(வனத்தில் வேடர் இருவர் நல்லதங்கையைக் கெடுக்க நெருங்குகின்றனர். நல்லதங்கை தனது கற்பின் திறத்தால் அவர்களை எரித்து விடுகிறாள்.)

காட்சி 10: நல்லதங்கை, குழந்தைகள்
(வேடர் துன்பத்தின் காரணமாக அனைவரும் வேறு வனத்திற்குச் செல்கின்றனர். அங்கு நான்கு வழிகள் பிரிகின்றன. எனவே, மதுரைக்கு எவ்வழியில் செல்வது எனப் புரியாமல் நல்லதங்கை அங்கேயே மீண்டும் தங்குகிறாள்.)

காட்சி 11: கரகாட்டம்
(நகைச்சுவைக் காட்சி)

காட்சி 12: நல்லண்ணன், குட்டையன்
(தேச விசாரணை)

காட்சி 13: அலங்காரி வருகை

காட்சி 14: நல்லண்ணன், அலங்காரி, குடிமக்கள்
(நல்லண்ணன் தான் உறங்கிக் கொண்டிருக்கும்போது தன் தங்கை துன்பப்பட்டுக் கொண்டிருப்பதாகக் கனவு கண்டதாக அலங்காரியிடம் கூறுகிறான். அரசனிடம் குடிமக்கள் விலங்குகள் துன்பம் தருவதாக முறையிடுகின்றனர்.

எனவே, அரசன் வேட்டைக்குப் புறப்படுகின்றான். அப்போது, தனது கனவின்படி தன் தங்கை துன்ப மிகுதியால் மதுரைக்கு வந்தாலும் வருவாள் என்றும் அவ்வாறு வந்தால் நன்கு கவனித்துக் கொள்ளும்படியும் அரசன் அலங்காரியிடம் கூறுகிறான்.)

காட்சி 15: நல்லண்ணன், குட்டையன்
(அரசன் வேட்டைக்குச் செல்ல குதிரை ஏறுகின்றான்.)

காட்சி 16: அரசன், நல்லதங்கை, குழந்தைகள்
(அரசன், புலி, யானை, மான் ஆகிய மிருகங்களைக் கொல்கிறான். தன் தங்கையை வனத்திலேயே சந்திக்கின்றான். அவளிடம் மதுரைக்குச் செல்லும் வழியும், தனது மாளிகையின் அடையாளமும் சொல்லித் தனது வீட்டிற்கு அனுப்புகிறான்.)

காட்சி 17: அலங்காரி, தாதி
(அரசனின் கனவின்படி நல்லதங்கை வந்தாலும் வருவாள் என்று எண்ணிக் கதவைத் தாளிட்டு, உடல்நிலை சரியில்லாததுபோல் தாதியின் மடியில் அலங்காரி படுத்துக் கொள்கிறாள்.)

காட்சி 18: நல்லதங்கை, குழந்தைகள், அலங்காரி, தாதி
(நல்லதங்கை அண்ணன் வீட்டிற்கு வருகிறாள். அலங்காரி அவளுக்குக் கொடுமைகள் பல செய்கிறாள்.)

காட்சி 19: நல்லதங்கை, குழந்தைகள், தாதி
(அண்ணியின் கொடுமை காரணமாக, நல்லதங்கை தான் போகும் வழியினைத் தாதியிடம் கூறிவிட்டு, மாளிகையை விட்டு வெளியேறு கிறாள்.)

காட்சி 20: நல்லதங்கை, குழந்தைகள்
(நல்லதங்கை தன் தந்தை வெட்டிய குளத்தில் குழந்தைகளைப் போட்டுக் கொன்றுவிட்டு, தன் மாங்கல்யத்தை அண்ணன் கண்ணுக்கு மட்டும் தெரியும் படி சபித்துக் குளக்கரையில் வைத்துவிட்டுத் தானும் இறந்துவிடுகிறாள்)

காட்சி 21: நல்லண்ணன், குட்டையன், தாதி
(அரசன் வேட்டையிலிருந்து வீடு திரும்புகிறான். அலங்காரி அன்புடன் வரவேற்கிறாள். இவள் நல்லதங்கைக்குச் செய்த கொடுமைகளைத் தாதி இரகசியமாக அரசரிடம் கூறிவிடுகிறாள்.)

காட்சி 22: நல்லண்ணன், நல்லதங்கை
(நல்லண்ணன் தங்கையைத் தேடிச் செல்கிறான். குளக்கரையில் தன் தங்கை யின் மாங்கல்யத்தைக் கண்டு, அவர்கள் இறந்ததை அறிகிறான். குளத்தில் இறங்கி, அவள் உடலை எடுத்து வந்து தனது மடியில் போட்டு அழுகிறான்.)

காட்சி 23: நல்லண்ணன், குட்டையன்
(நல்லண்ணன், அலங்காரியின் குடும்பத்தையே பழிவாங்கத் திட்டமிடுதல்)

காட்சி 24: நல்லண்ணன், குட்டையன், அலங்காரியும் அவள் குடும்பத்தாரும்
(நல்லண்ணன், தனது மகனை அலங்காரியின் தங்கைக்குத் திருமணம் செய்து வைப்பதாகக் கூறி அனைவரையும் திருமண விழாவிற்கு அழைக்கிறான். திருமண விழாவிற்குப் பொய்ப் பந்தல் போட்டு அனைவரையும் அழிக் கிறான்.)

காட்சி 25: அரசன், அலங்காரி, குட்டையன், நாவிதன்
(அலங்காரிக்கு மொட்டையடித்து, கரும்புள்ளி செம்புள்ளி முகத்தில் வைத்துக் கழுதைமேல் ஏற்றுகின்றனர்.)

காட்சி 26: காசிராசன், நல்லண்ணன், சிவன், நாராயணன், நல்லதங்கை
(காசிராசன் வருகிறான். நல்லண்ணனிடம் செய்தி அறிந்து அவனும் இறந்து

போகிறான். அப்போது சிவன், நாராயணன் தோன்றி இது சனி பகவானின விளைவு என்றுகூறி அனைவருக்கும் உயிர் தருகின்றார்கள். அனைவரையும் கடவுளர் வாழ்த்துகின்றனர்.)

---

1 மூன்று சபாக்களின் முகவரி வருமாறு:

1. கும்பகோணம் மங்கள கான பொம்மலாட்ட சபா,
29, இராகோசி பண்டிதர் தெரு
கும்பகோணம்.

2. ஸ்ரீகணநாதர் பொம்மை நாடக சபா,
52, இராசா தெரு,
திருவளந்தூர்,
மயிலாடுதுறை — 609 001.

3. ஸ்ரீமுருகன் சங்கீத பொம்மலாட்ட சபா,
60, பழனியாண்டவர் சன்னதித் தெரு,
கும்பகோணம்.

2 கும்பகோணம், மயிலாடுதுறை ஆகிய இருபகுதிகளும் அருகருகே உள்ள ஊர்களாகையால் கும்பகோணம் பகுதியென்றே இருபகுதிகளும் சுட்டப்படுகின்றன.

3 திரு ஏ.பி. சொன்னப்பன்; வயது-51; சௌராட்டிரர்; திரு மணி அய்யரிடம் பாடகராக இருந்தவர்.

திரு டி.கே. இராமன்; வயது-42; சௌராட்டிரர்; கும்பகோணம் மங்கள கான சபாவில் தற்போது பாடகராக இருப்பவர்.

4 **Mcher carntractor, "Indian Puppets", marg, Vol. XXI, No.3, 1968.**

5 கும்பகோணப் பகுதியில், சௌராட்டிரர் இனத்தைச் சேர்ந்த திரு இலட்சுமணன் என்பவர் பொம்மைகள் செய்துவந்ததாகவும், அண்மையில் இவர் இறந்துவிட்டதாகவும் திரு சீனிவாசன் தெரிவித்தார்.

6 இக்காட்சியினை அம்மானைக் காட்சி என்றும் பொம்மலாட்டக் கலைஞர்கள் அழைக்கின்றனர்.

7 ஸ்ரீகணநாதர் பொம்மை நாடக சபாவினர் பூசாரி கரகமெடுத்து ஆடும் காட்சியினை நிகழ்ச்சியின் தொடக்கத்தில், அம்மானைக் காட்சிக்கு அடுத்ததாக நடத்துகின்றனர். கும்பகோண மங்கள கான சபாவினர் இந்தக் காட்சியினைக் கதைப் பகுதியின் இடையில் நடத்துகின்றனர்.

8 இந்தப் பொம்மையின் சுண்டுகயிறு அமைப்பினைப் பக்கம் -இல் காண்க.

9 வளையவகைப் பொம்மையின் சுண்டுகயிறு அமைப்பினைப் பக்கம் -இல் காண்க.

10 கும்பகோணம் மங்களகான சபாவினரின் வள்ளி திருமண நாடகம் வடமட்டத்தில் 13-5-83 அன்றும், ஸ்ரீமுருகன் சங்கீத பொம்மலாட்ட சபாவினரின் வள்ளி திருமண நாடகம் கும்பகோணத்தில் 8-5-83 அன்றும் ஒலிப்பதிவு செய்யப்பட்டன.

11 அட்டவணையில் பிள்ளையார் வழிபாடும் நகைச்சுவைக் காட்சிகளும் நீக்கப்பட்டுள்ளன.

12 ''மாங்கனிக்கும் தேன்கதலி வண்கனிக்கும் மேலினிக்கும்
பூங்கனியைக் கண்டுமனம் பூரித்தேன் — ஈங்கதனல்
ஐயா முருகையா அக்கனியை இக்கணமே
கொய்யாமற் கொய்தணைத்துக் கொள்''

13 கும்பகோணம் மங்களகான சபாவில் உள்ள பாடகர் கே.எல். சொர்ணம், மாயூரம் கணநாதர் பொம்மை நாடக சபாவில் உள்ள பாடகர்களாகிய திரு வாசன், திரு ஆர்.ஆர். பலராமன் ஆகியோர் ஃச்பெசல் நாடகங்களில், கும்பகோணம் வாணி விலாசம் புகழ்பெற்ற நடிகர்களாக விளங்கியவர்கள்.

14 சங்கரதாச சுவாமி டி.டி. ''வள்ளி திருமணம்'', மதுரை புக் சாப் மு. கிருட்டிணபிள்ளை பதிப்பித்தது, 1937.

15 13-5-83 அன்று வடமட்டத்தில் கும்பகோணம் மங்களகான சபாவினர் நடத்திய வள்ளி திருமண நாடகம்.

16 1. ஆலோலம் ஆலோலம்
2. பருவகாலத்தை வீணாய்ப் பாழாக்கி விடலாமா — தாயே
3. சொல்லுமென் வார்த்தை கேளம்மா தள்ளாதே அம்மா
4. மார்க்கத்தில் கண்டகனி தனக்குற்ற சிலாக்கிய மென்ன — முனியே

5. வலைதப்பிய இளமான்களே — இங்கு
மான்வரக் கண்டீரோ
நீங்களே

6. காயாத கானகத்தே நின்றுலாவும் —
நற்காரிகையே

7. எந்த மானிட வேடர் நீர்காண்

8. ஆயலோட்டும் பெண்ணே — அடி
ஆவியே என்னுயிர் சஞ்சீவியே

9. மாங்கனிக்கும் தேன் கதலி
வண்கனிக்கும்...

[17] பொம்மலாட்டத்தில் உள்ள முருகன் பாடுகின்ற "பசியால் உடல் மெலிந்தேன் கொஞ்சம் ருசியாய் அமுதளிப்பாய்" என்னும் பாடல் ச.சு. சங்கரலிங்கக் கவிராயரின் மாணவர் கே. குற்றாலம் பிள்ளை எழுதிய வள்ளி திருமண நாடகத்தில் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

[18] இரு நாடகங்களிலும் இடம்பெறுகின்ற நாரதரின் நீண்ட உரையாடல் பின் இணைப்பு II இல் தரப்பட்டுள்ளது.

[19] திரு செம்மலையின் வயது-65; இனம் வன்னியர்(?); தமிழ் படிக்கத் தெரியும். முகவரி: திரு செம்மலை, ஸ்ரீராமவிலாச கட்டபொம்மை நாடக ஆசிரியர், சீரகபாபு, சேலம்.

[20] மயிலாடுதுறை ஸ்ரீகணநாதர் பொம்மை நாடக சபாவில் பொம்மை ஆட்டுபவர்.

[21] காண்க — பின்னிணைப்பு — III

கருவூரார் பலதிரட்டு

பதிப்பாசிரியர்: இரா. நிர்மலாதேவி
உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை.

பதிப்பு ஆண்டு 1982.

விலை உ ரூ. 12/—

மதிப்புரை: க.சு. உத்தமராயன்

கருவூரார் பலதிரட்டுப் பதிப்பாசிரியர் திருமதி இரா. நிர்மலாதேவி மிகவும் முயன்று நூலைப் பதிப்பித்திருக்கிறார். பெருன்பான்மை இலக்கண, இலக்கிய அமைதியைக் காப்பதற்குத் தக்கவாறு திருத்தி இருக்கிறார்.

பதிப்பாசிரியர் மருத்துவர் அல்லாதார் ஆகையால் அவ்வழியில் ஆய்ந்து கூற இயலவில்லை என்று நான் எண்ணுகிறேன்.

''கருவூரார் பலதிரட்டு'' என்னும் நூல் எனக்குத் தெரிந்து மூன்று அல்லது நான்கு முறை வெளியிடப்பட்டுள்ளது. ஆனால், திருமதி இரா. நிர்மலாதேவி இது பாபநாசம் என்னும் ஊரிலிருந்து கிடைத்ததாகக் கூறுகிறார். மேலும் திருவனந்தபுரம் கேரளப் பல்கலைக் கழகச் சுவடிகள், ஆவணக் காப்பகத்துச் சுவடி எண் 7933 (கருவூரார் பலதிரட்டு) பெற்றதாகக் குறிப்பிட்டுள்ளார்.

பதிப்பாசிரியர் முகவுரை- பக்கம் 10இ 2-ஆவது பத்தி, நூலுள் செய்த ஒழுங்கு களைக் கூறும்போது முதல் பகுதியில், தாண்டவமூர்த்தி வாத்தியாரால் 'கருவூர் பல கதம்பத்திரட்டு' எழுதி முடிந்தது என்றும் இரண்டாம் பகுதியில், இவ்வேடு தாண்டவ மூர்த்தி வாத்தியாரால் படி எடுக்கப்பட்டது என்றும் காணப்படுகிறது. முன்பகுதியில் முடிந்துவிட்டதென்றும் இரண்டாம் பகுதி யில் படி எடுக்கப்பட்டதென்றும் உள்ள செய்தி தெளிவற்றிருக்கிறது.

பக்கம்-22: செய்யுள் இரண்டில் இரண்டாவது அடியில் கூகைக்கண்ணர் என்று கூறப்பட்டிருக்கிறது. பல சித்தர் நூல்களில் கூனர் கண்ணர் என்று கூறப் பட்டிருப்பது இங்கு நோக்கத்தக்கது. அதே பாட்டில் 'கொண்கணர்' என்ற சொல் ''கொங்கணையர்'' என்றிருக்கிறது. இதுவரை நான் படித்த சித்தர் நூலில் இப்பெயர் இவ்வாறு திரிந்திருப்பதைப் பார்த்ததில்லை.

பக்கம்-24: யோகம்-என்ற விளக்கத்தில் 'பிரதியாகாரம்' என்று குறிக்கப்படுகிறது. இச்சொல் 'பிரத்தியாகாரம்' என்றிருக்க வேண்டும். தேகம் எத்துணை வகை? விளக்க மில்லை.

பக்கம் - 25: பூ நீற்றைப் பற்றிய விளக்கப் பகுதியில் வரும் முப்பு பற்றிப் பல்வேறு பட்ட கருத்துகள் உள்ளன. ஆனால், ஆசிரியர் திரு சண்முகவேலனும் திரு பலராமையாவும் கூறிய விளக்கங்களை மட்டும் அடிக்குறிப்பில் கூறுகிறார். அது பொருந்துமா என்பது ஐயத்திற்குரியது.

''கண்டவர் விண்டதில்லை—
விண்டவர் கண்டதில்லை''

என்பதற்குப் பார்ப்பதாகிய கண் பேசாது — பேசுவதாகிய வாய் பொருள்களைக் காண முடியாது என்றுதான் பொருள். இங்கு இவர் எண்ணிக் கூறும் பொருள் பொருந்தாது.

பல இடங்களில் இரண்டு மெய் எழுத்துக்கள் சேர்ந்து வருவதைப் பார்க்க லாம். எடுத்துக்காட்டு — 'காட்டுமல்லிகை' செய்யுள்-25 ஈற்றடியில் ''பூமிதன்னில்ப்''- இது பிழை.

4-ஆம் பாட்டு: கழங்கு என்ற சொல் 4-ஆம் அடியில் உள்ளது. இது களங்கு என இருக்க வேண்டும். கிராவணம்-சொல் விளங்கவில்லை.

பக்கம் 96-97: விந்து கட்ட.... தம்பனக் குளிகை, வாதவித்தை தாழ்ந்த லோகத்தை உயர்ந்த லோகமாகிய பொன்னாக்குதல்.

97-ஆம் பக்கம் மூன்றாம் பத்தி: விந்து கீழ் நோக்காமல் மேல் நோக்கச் செய்தல் — இதனால் யோகம் சித்திக்கும். மேற்கூறிய யோகத்தின் வகைகளிலொன்று. அநேக இடங்களில் சரக்குகளின் பெருமைகளைக் கருவூரார் கூறுவதின் உண்மையைப் பதார்த்த குண விளக்கத்தின் பாக்களை மேற்கோள் காட்டி மெய்ப்பிக்கிறார். **(Synthetic Liquid)**சாரநீர், செய்நீர், செயநீர் என்றும் கூறுவதுண்டு.

பக்கம் 155 வரைபடம் சக்கரம்: இது இன்றைய தமிழகக் கோயில்களில் தெய்வங்களை அமைத்துள்ள முறையோடு ஒத்துப்போவதைத் தெளிவாகக் காண முடிகின்றது.

பக்கம் - 158: பிராணாயாமம் விளக்கம் — கருவூரார் உரைத்தபடி பிராணாயாமம் என்பது 'வாசி' என,திரு ஏ. டபிள்யு. சுப்பிரமணியம் விளக்குகிறார்.

பக்கம் - 17: அட்டகர்ம விளக்கப்படம். பார்த்துத் தெரிய வேண்டிய ஒன்று — தம்பனம், மோகனம் மற்றும்.

தம்பனம் என்ற தலைப்பில் அமைந் துள்ள செய்திகள் குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டத்திற்கு ஏற்புடையதென்று கூறுகிறார். இதை நடைமுறைக் கொத்ததாக எடுத்துரைப் பது சாலக்கடினம் என்பது என் கருத்து.

இந்நூலில் பெரும்பாலும் வாதப் போக்கு **(Alchemy)** கூறப்பட்டிருக்கிறது. புதையல் எடுத்தல் கண் கட்டுவித்தை ஆகியவையும் கூறப்பட்டிருக்கின்றன.

வாதப் போக்கு முறைகளை அம்மையார் இலக்கியப் பொருள் கூறி விளக்கி இருக் கிறார். ஆனால், அதில் கூறியபடி எதைச் செய்தாலும் சரியாக வராது என்பது என் கருத்து.

''தொட்டுக்காட்டாத வித்தை சுட்டுப் போட்டாலும் வராது''. ஆகவே, அவ் வித்தையைத் தெரிந்தவர் உள்ளபடி செய்து காட்டினால்தான் கைவரப்பெறும்.